# சங்க காலச் சோழநாட்டுப் புலவர்கள்

பாரதிதாசன் பல்கலைக்கழக முனைவர் பட்டத்திற்காக
அளிக்கப்பெறும் ஆய்வேடு


பகுதிநேர ஆய்வாளர் :

**ப.செந்தில்குமாரி,** எம்.ஏ., எம்.ஃபில்.,

பதிவு எண்:038621/Ph.D.2/Tamil/Part-Time/July 2007

நெறியாளர்:

முனைவர் **க.துரையரசன்,** எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்., பிஎச்.டி.,
இணைப்பேராசிரியர்

**தமிழ்த்துறை,**
**அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி),**
**கும்பகோணம்-612 001.**


**ஜூலை 2012**

# நெறியாளர் சான்றிதழ்


**முனைவர் க.துரையரசன், எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்., பிஎச்.டி.,**
*இணைப்பேராசிரியர்,*
*தமிழ்த்துறை,*
*அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி),*
*கும்பகோணம் - 612 001.*


**சங்க காலச் சோழநாட்டுப் புலவர்கள்** *என்னும் தலைப்பில் அமைந்த இந்த ஆய்வேடு கும்பகோணம் அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி), தமிழ்த்துறையில் 2007 முதல் 2012 வரை என் மேற்பார்வையில் பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளரான திருமதி* **ப.செந்தில்குமாரி** *என்பாரால் ஆய்வு செய்து அவரது சொந்த முயற்சியால் உருவாக்கப்பட்டது என்றும், இந்த ஆய்வின் மீது வேறு எந்தப் பட்டமும் ஆய்வாளருக்கு வழங்கவில்லை என்றும் சான்றளிக்கிறேன்.*

*இடம் : கும்பகோணம்,*
*நாள் : 30 .07.2012.*

*ஆய்வு நெறியாளர்*

முனைவர் க.துரையரசன்
எம்.ஏ.,எம்.எட்.,எம்.ஃபில்.,பிஎச்.டி.,
தமிழ் இணைப்பேராசிரியர்
அரசினர் கலைக்கல்லூரி (தன்னாட்சி)
கும்பகோணம் - 612 001.

# ஆய்வாளர் உறுதிமொழி

**ப.செந்தில்குமாரி, எம்.ஏ., எம்.ஃபில்.,**
*பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழ்த்துறை,*
*அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி),*
*கும்பகோணம் - 612 001.*

**சங்க காலச் சோழநாட்டுப் புலவர்கள்** *என்னும் தலைப்பில் அமைந்த இந்த ஆய்வேடு, கும்பகோணம் அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி), தமிழ்த்துறையில் 2007 முதல் 2012 வரை பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளராக ஆய்வு செய்த காலத்தில் என் சொந்த முயற்சியால் உருவானது என்றும் இதற்குமுன் வேறு எந்தப் பட்டத்திற்கும் இந்த ஆய்வேடு அளிக்கப் பெறவில்லை என்றும் உறுதியளிக்கிறேன்.*

*இடம் : கும்பகோணம்,*

*நாள் : 30.07.2012.*

ப. செந்தில்குமாரி
*ஆய்வாளர் கையொப்பம்*

# நன்றியுரை

**சங்க காலச் சோழநாட்டுப் புலவர்கள்** என்னும் தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்ள அனுமதியளித்த பாரதிதாசன் பல்கலைக் கழகத்திற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கும்பகோணம், அரசினர் கலைக் கல்லூரித் தமிழ்த்துறையில் முனைவர் பட்டப் பகுதிநேர ஆய்வு மேற்கொள்ள அனுமதி அளித்த கல்லூரி முதல்வர் **முனைவர் ஜெ.கோவிந்ததாஸ்** அவர்களுக்கும், என் ஆய்வுப்பணிக்கு ஆதரவு நல்கிய தமிழ்த்துறைத் தலைவர் **முனைவர் அ.குணசேகரன்** அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆய்வேடு நல்லமுறையில் அமைய ஆக்கமும் ஊக்கமும் அளித்து அறிவுரைகள் பல நல்கிய என் நெறியாளர் **முனைவர் க.துரையரசன், எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்., பிஎச்.டி.,** அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை சரஸ்வதிமகால் நூல் நிலையப் பொறுப்பாளர்களுக்கும், கும்பகோணம் சிவகுருநாதன் செந்தமிழ் நூல்நிலையப் பொறுப்பாளர்களுக்கும், கும்பகோணம் அரசு மகளிர் கல்லூரி மற்றும் கும்பகோணம் அரசினர் கலைக் கல்லூரித் தமிழ்த்துறை நூலகப் பொறுப்பாளர்களுக்கும், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக நூலகப் பொறுப்பாளர்களுக்கும் என் நன்றியினை உரித்தாக்குகிறேன்.

என்னை ஈன்று ஆளாக்கிய என் பெற்றோருக்கும் இவ்வாய்வுப் பணிக்கு உறுதுணையாக இருந்த கணவர் **முனைவர் ப.வீரபாண்டியன்** அவர்களுக்கும், மகன்கள் **காரி, பாரி, தரணி** அவர்களுக்கும், குடும்பப் பொறுப்பில் பல நேரங்களிலும் உதவிய **திருமதி லெட்சுமி அம்மாள்** அவர்களுக்கும், மற்றும் சகோதரி **ஆ.ராஜலெட்சுமி** உள்ளிட்ட குடும்பத்தினர் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆய்வேட்டைக் கணினியில் உருவாக்கம் செய்த தஞ்சை நாகு கம்ப்யூட்டர்ஸ் நிறுவனத்தாருக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ப.செந்தில்குமாரி**

# உள்ளடக்கம்


| இயல் | | பக்கம் |
|---|---|---|
| | சுருக்கக் குறியீட்டு விளக்கம் | |
| | முன்னுரை | 1 |
| 1. | சங்க காலச் சோழநாடும் சோழ மன்னர்களும் | 5 |
| 2. | சோழநாட்டுப் புலவர்கள் | 54 |
| 3. | வரலாற்றுச் செய்திகள் | 106 |
| 4. | சமுதாயச் செய்திகள் | 148 |
| 5. | இலக்கியத் திறன் | 203 |
| | முடிவுரை | 248 |
| | துணைநூற் பட்டியல் | vii |
| | பின்னிணைப்புகள் | |
| | 1. சங்க காலச் சோழநாடு - வரைபடம் | xvi |
| | 2. சங்க காலச் சோழர் குலவழித் தோன்றல் - விளக்கப்படம் | xvii |
| | 3. சோழநாட்டுப் புலவர்களின் வகைப்பாடுகள் குறித்த வரைபடங்கள் | xviii |
| | 4. சோழநாட்டுப் புலவர்கள் பாடிய பாடல்களின் எண்ணிக்கை | xx |
| | 5. அகம் பாடியோர் | xxv |
| | 6. புறம் பாடியோர் | xxvii |
| | 7. அகமும் புறமும் பாடியோர் | xxviii |
| | 8. புலவர்களால் பாடப்பட்ட அரசர்கள் | xxx |

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| அகம். | - | அகநானூறு |
| இ.ப. | - | இரண்டாம் பதிப்பு |
| உ.ஆ. | - | உரையாசிரியர் |
| க.ஆ. | - | கட்டுரை ஆசிரியர் |
| கு.எ. | - | குறள் எண் |
| சிலம்பு. | - | சிலப்பதிகாரம் |
| தொல். சொல். | - | தொல்காப்பியம், சொல்லதிகாரம் |
| தொல். பொருள். | - | தொல்காப்பியம், பொருளதிகாரம் |
| நூ. | - | நூற்பா |
| ப. | - | பக்கம் |
| ப.ஆ. | - | பதிப்பாசிரியர் |
| பக். | - | பக்கங்கள் |
| பா. | - | பாடல் |
| புறம். | - | புறநானூறு |
| ம.ப. | - | மறுபதிப்பு |
| மு.ப. | - | முதற்பதிப்பு |
| மூ.ப. | - | மூன்றாம் பதிப்பு |

# முன்னுரை

# முன்னுரை

சங்க காலப் புலவர் பெருமக்கள் வாழ்தல் வேண்டி பொய்கூறாது மெய்கூறல் என்னும் திண்ணிய நெஞ்சோடு வாழ்ந்தவர்கள். நாடாளும் மன்னன் தவறு செய்யினும் அஞ்சாது இடித்துரைத்து அவர்களைச் செம்மைப்படுத்தியுள்ளனர். பழியெனின் உலகமே கிட்டினும் அதனை ஏற்காமல் புகழ் எனின் உயிரும் கொடுக்கும் சான்றோர்களாக விளங்கியுள்ளனர். இந்நிலையில் சங்க காலத்தில் வாழ்ந்த மக்களின் வரலாற்றை அறிதல் இன்றியமையாததாகும். இவ்வகையில் மூவேந்தர்களால் ஆட்சி செய்யப்பட்ட சங்க காலத்தில் சோழநாட்டுப் பகுதியைச் சார்ந்த புலவர்களின் வாழ்வியல் கூறுகளையும் அவர்தம் சிந்தனைகளையும் வெளிக்கொணரும் வகையில் ‘சங்க காலச் சோழநாட்டுப் புலவர்கள்’ என்னும் தலைப்பில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

## ஆய்வு நோக்கம்

சங்கப் புலவர்களில் சோழநாட்டுப் புலவர்களாக அறுபத்தொரு பேர் அடையாளப்படுத்தப் பெற்றுள்ளனர். அப்புலவர்களின் வரலாறு, அறிவாற்றல், புலமைத்திறன், சமுதாய நோக்கு போன்றவற்றைத் தமிழுலகிற்கு வெளிப்படுத்துவது இவ்வாய்வின் நோக்கமாகும்.

## ஆய்வு மூலங்கள்

சங்க காலச் சோழநாட்டுப் புலவர்கள் என்னும் இவ்வாய்வேட்டுக்கானத் தரவுகள் முதன்மை ஆதாரங்கள், துணைமை ஆதாரங்கள் என இருவகைப்படுத்தப்பட்டுள்ளன.

## முதன்மை ஆதாரங்கள்

ந.சஞ்சீவியின் சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகளில் சுட்டிக்காட்டப்பட்ட சோழநாட்டுப் புலவர்களின் வரிசையை முதன்மையாகக் கொண்டு இவ்வாய்வு தொடங்கப்பட்டது. நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு,

புறநானூறு, கலித்தொகை, பதிற்றுப்பத்து ஆகிய ஆறு நூல்களில் இடம்பெற்றுள்ள சோழநாட்டுப் புலவர்கள் பாடிய 262 பாடல்களும், பத்துப்பாட்டில் மதுரைக்காஞ்சி, முல்லைப்பாட்டு ஆகிய இருநூல்களும் இவ்வாய்வின் மூலங்களாகும். இவ்வாய்விற்கு முனைவர் அ.மா.பரிமணம், முனைவர் கு.வெ.பாலசுப்ரமணியன் ஆகியோரைப் பதிப்பாசிரியர்களாகக் கொண்டு நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தாரால் வெளியிடப்பட்ட நூல்கள் முதன்மை ஆதாரங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன.

**துணைமை ஆதாரங்கள்**

சங்க இலக்கியங்கள் குறித்து வெளியான பிறநூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், திறனாய்வு நூல்கள் போன்றவை துணைமை ஆதாரங்களாகும்.

**ஆய்வு முன்னோடிகள்**

டாக்டர் பத்மஜாரமேஷ் மற்றும் வி.பி.புருஷோத்தமனின் சங்க கால மன்னர்களின் காலநிலை (தொகுதி - I, தொகுதி - II), முனைவர் வ.குருநாதனின் சங்க கால அரச வரலாறு, அ.ஜம்புலிங்கத்தின் சங்க கால வேந்தர்களின் சமுதாயப்பணி, அரங்க.இராமலிங்கத்தின் சங்க கால வேந்தர் ஆகியவை இந்த ஆய்வுக்கு முன்னோடிகளாகும்.

**கருதுகோள்**

சங்க காலத்தில் வாழ்ந்த புலவர்கள் பல நாட்டைச் சேர்ந்தவர்கள்; பல்வேறு காலங்களில் வாழ்ந்தவர்கள். அவர்களுள் பலர் சோழநாட்டுப் புலவர் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள், சோழநாட்டு வாழ்வியல், வரலாறு, சமுதாயச் செய்திகள் போன்றவற்றைத் தம் பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளனர் என்பது இவ்வாய்வின் கருதுகோளாகும்.

**ஆய்வு அணுகுமுறைகள்**

இவ்வாய்வில் பகுப்புமுறை, விளக்கமுறை, திறனாய்வு முறை, ஒப்பாய்வு முறை ஆகிய அணுகுமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

**ஆய்வுப் பகுப்பு**

இந்த ஆய்வானது முன்னுரை, முடிவுரை நீங்கலாக ஐந்து இயல்களாக அமைக்கப்பட்டுள்ளது. அவை:

1. சங்க காலச் சோழநாடும் சோழ மன்னர்களும்
2. சோழநாட்டுப் புலவர்கள்
3. வரலாற்றுச் செய்திகள்
4. சமுதாயச் செய்திகள்
5. இலக்கியத் திறன்

என்பனவாகும்.

**இயல் - 1: சங்க காலச் சோழநாடும் சோழமன்னர்களும்**

சங்க காலத்தைச் சேர, சோழ, பாண்டியர்களும், குறுநில மன்னர்களும் ஆட்சி செய்துள்ளனர். இவ்வகையில் சங்க காலச் சோழநாட்டின் எல்லைகள், தலைநகரங்கள், துறைமுகங்கள், வாணிக முறைகள், சோழமன்னர்களின் குலப்பெயர், குடிப்பெயர், காரணப் பெயர், சிறப்புப் பெயர், அவர்தம் முன்னோர்கள், சோழர் குலவழித் தோன்றல், அடையாளச் சின்னங்கள், போர்த்திறம், கொடைத்திறம் ஆகியவற்றை இவ்வியல் விளக்கிக் கூறுகின்றது.

**இயல் - 2: சோழநாட்டுப் புலவர்கள்**

சங்க காலப் புலவர்களுள் சோழநாட்டைச் சேர்ந்த அறுபத்தொரு புலவர்களின் வாழ்க்கை குறித்த செய்திகள், அவர்கள் பாடிய பாடல்களின் எண்ணிக்கை, பாடிய நூல்கள், திணை மற்றும் துறைப்பாகுபாடு, ஆண்பாற் புலவர்கள், பெண்பாற் புலவர்கள், அரசப் புலவர்கள், அவர்களால் பாடப்பட்ட அரசர்களின் பெயர்கள், புலவர்களின் பெயர் குறித்த வகைப்பாடு ஆகியவை குறித்து இவ்வியல் ஆய்வு செய்கின்றது.

**இயல் - 3: வரலாற்றுச் செய்திகள்**

இலக்கியத்தைப் படைக்கும் புலவர்கள் தாம் வாழ்ந்த காலத்தில் அமைந்திருந்த நாட்டின் இயற்கை அமைப்பு, புகழ்மிக்க ஊர்கள் போன்றவற்றைத் தாம் பாடிய

இலக்கியங்களின் வழி படைத்துள்ளனர். இவ்வகையில் சோழநாட்டுப் புலவர்களின் பாடல்களில் காணலாகும் சோழநாட்டின் நிலப்பரப்பு, சங்க காலத்தில் அமைந்திருந்த மலைத்தொடர்கள், ஆறுகள், சோழநாட்டு ஊர்கள், பிறநாட்டு ஊர்கள், துறைமுகங்கள், அவ்வக்காலத்தில் வாழ்ந்த குறுநில மன்னர்கள், படைத்தலைவர்கள் ஆகியோரின் வரலாறுகள் குறித்து இவ்வியல் ஆய்ந்துரைக்கிறது.

**இயல் - 4: சமுதாயச் செய்திகள்**

ஒரு சமுதாயம் சிறப்புற அமைவதற்கு அந்நாட்டின் வளமும், மக்களின் வாழ்க்கைக் கூறுகளும் முதன்மைக் காரணங்களாகும். இந்நோக்கில் சங்க காலத்தில் இருந்த சமுதாய வாழ்வியல் கூறுகளான சோழநாட்டு மக்களின் சால்பு, இல்லறம், விருந்தோம்பல், மக்கட்பேறு, பரத்தையர் நிலை, பழக்க வழக்கம், நம்பிக்கைகள், நிமித்தங்கள், மணமுறை, மகளிர் நிலை, அரசர், அந்தணர், புலவர் தம் வாழ்வியல் கூறுகள், பல்வேறு இனத்தாரின் வாழ்க்கை முறைகள், பல்வேறு தொழில்கள், உணவு, உடை, அணிகலன்கள், பொழுதுபோக்கு விளையாட்டுகள் போன்றவற்றை இவ்வியல் ஆய்வு செய்கின்றது.

**இயல் - 5: இலக்கியத்திறன்**

சங்கப் புலவர்கள் தாம் பாடிய பாடல்களில் பல இலக்கிய உத்திகளைக் கையாண்டுள்ளனர். இவ்வகையில் சோழநாட்டுப் புலவர்களின் பாடல் வழி காணப்படுகின்ற உவமை, உள்ளுறை, இறைச்சி, பொருள் நயம், தொன்மம், உளவியல் திறன் ஆகிய இலக்கிய உத்திகள் குறித்து இவ்வியல் ஆய்ந்து வெளிப்படுத்துகின்றது.

மேற்சுட்டிய இயல்களின் வழி கண்டறியப்பட்ட செய்திகள் முடிவுரையில் தொகுத்துரைக்கப்படுகின்றன.

இயல் ஒன்று

# சங்க காலச் சோழநாடும் சோழ மன்னர்களும்

# இயல் – 1

# சங்க காலச் சோழநாடும் சோழ மன்னர்களும்

ஒரு மொழியில் உள்ள இலக்கியங்கள் அம்மொழி பேசுவோரின் வாழ்வையும் கலாச்சாரச் சிறப்பையும் எடுத்துக்காட்டும் காலக் கண்ணாடியாகத் திகழ்கிறது. அவ்வகையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியங்கள் சங்க கால வரலாற்றை எடுத்துக்காட்டுவனவாக அமைந்துள்ளன. எனவே, அவை தரும் செய்திகளைக் கொண்டு அக்கால வரலாற்றினை ஆராயலாம். சங்க காலத் தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியர்கள் என்ற மூவேந்தர்கள் ஆட்சி செய்தனர். இக்கருத்தைத் தொல்காப்பியம், வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு என்று கூறுகிறது.

மூவேந்தர்களின் தோற்றம் பற்றிக் கூறுவது எளிதன்று. எனினும் அவர்கள் பழமையான அரச மரபினர் என்று மட்டும் கூறஇயலும். வால்மீகி இராமாயணம், மகாபாரதம், அர்த்தசாத்திரம், அசோகர் கல்வெட்டு ஆகியவை கிறித்துவுக்குப் பன்னெடுங்காலம் முற்பட்டவர்கள் என்று கூறுகின்றன. இத்தகு தொன்மைமிக்க மூவேந்தர்களில் நடுநாயகமாகத் திகழ்ந்த சோழமன்னர்கள் தமிழகத்தில் நிலவளம், நீர்வளம் பெருகச் செய்து வளம் கொழிக்கும் திருநாடாக மாற்றிய பெருமைக்குரியவர்கள். இவர்தம் நாட்டு எல்லைகள், தலைநகரங்கள், துறைமுகங்கள், வாணிக முறைகள், சோழர் குலப்பெயர், குடிப்பெயர், காரணப் பெயர், சிறப்புப் பெயர், சோழர்குல முன்னோர்கள், குலவழித்தோன்றல், அடையாளச் சின்னங்கள், போர்த்திறம், கொடைத்திறம் ஆகியவற்றை இவ்வியல் ஆய்வு செய்கிறது.

### சோழநாட்டு எல்லைகள்

கடலைக் கிழக்கு எல்லையாகவும், கோட்டைக்கரையை மேற்கு எல்லையாகவும், வெள்ளாற்றைத் தெற்கு எல்லையாகவும், ஏணாட்டுப் பண்ணையை வடக்கு எல்லையாகவும் கொண்டு இருபத்து நான்கு காதம் சோழநாடு விரிந்து இருந்தது என்பதை,

கடல்கிழக்குத் தெற்குக் கரைபொரு வெள்ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம் – வடதிசையில்
ஏணாட்டுப் பண்ணை இருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லை யெனச் சொல்[1]

என்று கம்பரின் பாடல் தெரிவிக்கின்றது.

சோழநாட்டின் கிழக்கு எல்லையாகிய கடல் இக்காலத்தில் வங்காளக்குடாக் கடல் என்று பெயர் பெற்றிருக்கிறது. இந்தக் கடல் சங்க காலத்தில் குணக்கடல் என்ற பெயரில் இருந்தது. "கடைச் சங்க காலத்தின் இறுதியில் கி.பி.முதலாம் நூற்றாண்டு இரண்டாம் நூற்றாண்டுகளில் தமிழகத்தோடு வாணிகம் செய்த யவனர் குடகடலை எரித்திரையக் கடல் என்று கூறியுள்ளார்கள்"[2] என்பர் வரலாற்றாய்வாளர்.

வெள்ளாறு என்பது புதுக்கோட்டைப் பகுதியில் ஓடும் ஆறாகும். இந்த வெள்ளாறு புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான் மலைக்கு மேற்கில் தொடங்கி அறந்தாங்கிக்குத் தென்மேற்குப் பகுதியில் ஓடி மணல்மேல்குடி என்னும் ஊருக்கு வடபால் கடலில் கலக்கிறது. இம்மாவட்டத்தில் கொடும்பாளூர் என்னும் ஊர் சோழ பாண்டிய நாட்டு எல்லையில் அமைந்துள்ளது. "கோட்டைக்கரை (பேட்டைவாய்த்தலை) ஏணாடு பற்றித் தெளிவாகத் தெரியவில்லை. மேலும் இந்த எல்லை கூறும் பாடல் சங்க காலத்திற்குப் பிந்தியது. எனவே சங்க கால சோழநாட்டின் எல்லை இது என்று அறுதியிட்டு கூறுவதற்குப் போதிய சான்று இல்லை. எனினும் இப்போதுள்ள குளித்தலை வட்டம் வரை சங்க காலச் சோழநாடு மேற்கில் பரவியிருந்தது என்று கொள்ள இடமுண்டு."[3]

கிள்ளிவளவன் என்ற சோழ அரசன் ஆட்சிக் காலத்தில் இப்போதுள்ள தான்தோன்றி மலைப்பகுதி தாமான் தோன்றிக்கோன் என்னும் அரசனால் ஆளப்பட்டது[4] என்பதைப் புறநானூற்றுப் பாடல் எடுத்துரைக்கின்றது. "வையையாற்றின் வடக்கும் மருதயாற்றின் தெற்கும் கருவூரின் கிழக்கும் மருவூரின் மேற்கும் ஆகிய நான்கு எல்லைக்குட்பட்டதைச் சோணாடு என்பர். இதனையே 'செந்தமிழ் நிலம்' என இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், மயிலைநாதர், யாப்பருங்கலக்காரிகை உரைகாரர் ஆகிய அனைவரும்"[5] என்பார் கு.சுந்தரமூர்த்தி.

சங்க காலத் தமிழக நாடுகளுக்குத் தெளிவான எல்லை வரையறைகள் இல்லை என்றாலும் முக்கோண வடிவில் அமைந்த தமிழகத்தின் மேற்குப்பகுதி சேரநாடாகவும், தெற்குப்பகுதி பாண்டிய நாடாகவும், கிழக்குப்பகுதி சோழநாடாகவும் கூறப்பட்டன. இம்முறையே குடபுலம், தென்புலம், குணபுலம் என்று குறிக்கப்பெற்றன. இதனை,

தென்பாண்டி குட்டம் குடம் கற்கா வேண்பூழி
பன்றி அருவா அதன் வடக்கு நன்றாய
சீத மலாடு புனல்நாடு செந்தமிழ் சேர்
ஏதமில் பன்னிரு நாட்டு எண்[6]

என்ற பாடல் எடுத்துரைத்துள்ளது.

செந்தமிழ் சேர் பன்னிரு நாடுகளுள் வேணாடு, குட்டநாடு, சீதநாடு, கற்காநாடு, குடநாடு, பூழிநாடு முதலியன சேரநாட்டுள் அடங்கும். பாண்டிய நாட்டுள் தென்பாண்டிநாடும் செந்தமிழ்நாடும் அமையும். "பன்றிநாடு, புனல்நாடு, அருவாநாடு, அருவா வடதலைநாடு ஆகிய நால்நாடுகளும் அடங்கிய பெருநாடு சோழநாடு"[7] என்பர். இம்மூன்று நாடுகளுக்கும் இடைப்பட்ட எல்லைகள் அவ்வக்காலத்து மாறி மாறி இருந்திருத்தல் கூடும்.

சோழர்கள் ஆண்ட பகுதி காவிரி, பெண்ணை, பாலாறு, வெள்ளாறு, கொள்ளிடம் ஆகிய ஆறுகள் பாயும் பகுதியாகும். சோழநாடு, "வேங்கடம் முதல் புதுக்கோட்டைக்கருகிலுள்ள வெள்ளாறு வரையிலுள்ள பகுதி ஆகும் என்று குறிப்பிடுவர்"[8] அ.சுவாமிநாதன்.

சோழமண்டல சதகம்,

செல்லும் குணபால் திரைவோலை
தென்பால் செழித்த வெள்ளாறு
வெல்லும் கோட்டைக்கரை விளங்கும்
மேல் வடபால் வெள்ளாறே
எல்லை ஒருநான்கினும் காதம்
இருபானான்கும் இடம் பெரிதாம்
மல்லல் வாழ்வு தழைத்தோங்கும்
வளம் சேர்சோழ மண்டலமே[9]

என்று சோழநாட்டின் எல்லையையும், சிறப்பையும் குறிப்பிடுகிறது.

பொறிஞர் புருடோத்தமன் என்னும் வரலாற்றறிஞர் இவ்வெல்லையை,

மேற்கே கோட்டைக் கரையெனும் மேல்நிலம்
தெற்கும் வடக்கும் தீதிலாது ஓடிடும்
வினையில் குன்றா வெள்ளாறுகளும்
முத்திசை எல்லையாய் அமைய முதுபெரும்
நாட்டின் இடையில் நாணற் கரையும்
ஒத்தல் இலாது ஓடிடும் காவிரி
கலக்கும் வங்கக் கடலே கீழ்த்திசை[10]

என்னும் பாடலில் குறிப்பிடுகிறார்.

மேற்கண்ட சான்றுகளை நோக்குமிடத்து சங்க காலச் சோழநாடானது இன்றைய தென்னார்க்காடு, தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள் அடங்கிய பகுதியாக இருந்தமையை அறிய முடிகிறது.

**தலைநகரங்கள்**

சோழநாட்டின் தலைநகரம் உறையூராகும். இந்நகரம் 'உறந்தை' என்றும் வழங்கப்பட்டுள்ளது. இந்நகரைச் சுற்றி மதிலும், அதன் வெளியே அகழியும், அகழியைச் சுற்றி மிளைக்காடும் (காவற்காடு - நால்வகை அரணினொன்று) இருந்துள்ளது. இவ்வூருக்குக் 'கோழி' என்றும் ஒரு பெயர் வழங்கியமையை அறிய முடிகிறது. "ஒரு கோழி யானையைப் போரில் வென்ற இடமாதலின் இப்பெயர் பெற்றது எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது. இந்நகர் பார்வைக்குச் சிறையும் கழுத்துமாக அமைந்திருப்பதால் சிறையையுடைய கோழி எனப் பெயர் பெற்றது என்ற கருத்தும் உள்ளது"[11] என்பர்.

பண்டைக் காலத்தில் சிறந்து விளங்கிய நகரங்களும் துறைமுகங்களும் ஆற்றை அடுத்து உருவாயின. சோழநாட்டின் பண்டைய தலைநகரமான உறையூர் காவிரியாற்றின் கரையில் அமைந்திருந்தது. "உறப்பு என்ற சொல் செறிவு என்று பொருள்படுவதைக் காணும் பொழுது மக்கள் நெருங்கி வாழ்ந்த இடமாக இருந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது"[12] என்பர்.

உறையூரில் ஏணிச்சேரி, கதுவாய்ச்சேரி என்னும் சேரிகள் இருந்துள்ளன. முடமோசியார் என்னும் புலவர் உறையூரில் உள்ள ஏணிச்சேரியில் வாழ்ந்தமையால் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்றழைக்கப்பட்டார். அதுபோல் கதுவாய்ச்சேரியையும் தம் பெயரோடு இணைத்துக் கொண்டு உறையூர்க்கதுவாய் சாத்தனார் என்னும் புலவரும் உறையூரில் வாழ்ந்தமையை அறிய முடிகிறது. "உறையூருக்குக் கிழக்கே திருச்சிராப்பள்ளி மலை இருந்தது. தாலமி என்னும் யவனர் 'ஓர்தொவுர' என்று குறிப்பிடுவது இந்த உறையூர்தான். ஓர் தொவுர சோர்நகரின் (சோழநகரின்) தலைநகரம் என்று தாலமி கூறுவது சிந்திக்கத்தக்கது. சோழர் நாகர் இனத்தைச் சேர்ந்தவர் என்று அவர் கருதுகின்றார். உறையூரை உரகபுரம் என்று வடமொழியாளர் கூறியுள்ளனர்"[13] என்பர். உறையூர் என்பது இன்று திருச்சிராப்பள்ளி நகரின் ஒருபகுதியாக இருக்கிறது. சங்க காலத்தில் சோழ மன்னர்களின் தலைநகரான உறையூருடன் புகாரும் தலைநகரமாக சிறப்புற்று இருந்தது என்பதை,

சோழன் மூதூர்ப் பேராச் சிறப்பின் புகார்[14]

என்றும்,

மாட மதுரையும் பீடாருறந்தையும்
கலிகெழு வஞ்சியுமொலி புனற் புகாரும்[15]

என்றும் இளங்கோவடிகள் சுட்டுகிறார். புகார் நகரம் பின்னர் காவிரிப்பூம்பட்டினம் என்று அழைக்கப்பெற்றது. இருப்பினும் சோழர் தலைநகரங்களுள் உறையூரே பழமையானதாக இருந்துள்ளது. ஒய்மா நாட்டு நல்லியக்கோடனைப் பாராட்டும் இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார், ஓடாப் பூட்கை உறந்தை[16] என்று சோழரின் தலைநகரான உறந்தையைக் குறிப்பிடுகிறார்.

## உறையூரின் பெருமை

உயர்ந்த மாடங்களை உடையது உறையூர் என்பதை, பிறங்கு நிலை மாடத்து உறந்தையோனே[17] என்று சோழன்குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை ஆலத்தூர்கிழார் பாராட்டும்பொழுது குறிப்பிட்டுள்ளதை அறிய முடிகிறது.

உறந்தை நீதிக்குப் பெயர் போனது. உறையூரில் அறங்கூறும் அவையங்கள் இருந்து, அறம் நிலைபெற்றது என்பதை,

மறம்கெழு சோழர் உறந்தை அவையத்து
அறம்நின்று நிலையற்று ஆகலின்[18]

என்றும்

மறம்கெழு சோழர் உறந்தை அவையத்து

அறம் கெட அறியாதாங்கு[19]

என்று புறநானூறும் நற்றிணையும் சான்று பகர்கின்றன. உறையூரில் ஓசைமிக்க விழாக்கள் நடைபெற்றன என்பதை, கறங்கு இசை விழவின் உறந்தைக்குணாது[20] என்னும் அடி உணர்த்துகிறது.

உறையூரின் வளத்தினை, வளம்கெழு சோழர் உறந்தைப் பெருந்துறை[21] என்று குறுந்தொகை சுட்டுகிறது.

தொன்மையும் பெருமையும் மிக்க உறையூர் சங்க இலக்கியங்களில் 'உறந்தை' என்றே அழைக்கப்பட்டுள்ளது. "சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் மட்டும் உறந்தையை 'உறையூர்' என்று ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளார்."[22] இவ்வூரைச் சேர்ந்த புலவர்களின் பெயர்களுடன் 'உறையூர்' என்றே இணைத்துக் கூறப்பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கதாம்.

மூவேந்தர்களின் வரலாற்றினைப் பாடும் முத்தொள்ளாயிரமும் இவ்வுறையூரை, செங்கான் மடநாராய்! தென்றுறந்தை சேறியேல்[23] என்னும் தொடரில் 'உறந்தை' என்றே குறிப்பிடுகிறது.

வாழ்வும் தாழ்வும் நாட்டிற்கும் நகரத்திற்கும் கூட உண்டு. பண்டைய நாளில் சிறந்திருந்த சில ஊர்கள் இந்நாளில் சிறப்பிழந்து காணப்படுகின்றன. சங்க காலத்தில் சோழநாட்டின் தலைநகராகச் சிறந்து விளங்கிய உறந்தையின் அருகே ஒரு சிற்றூராக இருந்த சிராப்பள்ளி, இன்று மாநகர் நிலையைப் பெற்றுள்ளது. ஆனால் பழம்பெருமை வாய்ந்த உறந்தையின் சிறப்பினைச் சமணர் அழித்தனர் என்னும் வரலாற்றினை,

மலை கொண்டெழுவார் கடல் கொண்டெழுவார்

மிசை வந்து சிலா வருடஞ் சொரிவார்

நிலை கொண்டெழுவார் கொலை கொண்டெழுவார்

இவரிற் பிறர் யாவர் நிசாசரரே[24]

என்று தக்கயாகப்பரணி, உறையூரைச் சமணர்கள் மந்திர வலிமையினாலும் தவ வலிமையினாலும் கல்மழை, மண் மழை பொழியச் செய்து அழித்தார்கள் என்று கூறுகிறது.

உறையூர் சோழ மன்னர்களின் முக்கிய தலைநகராகச் சிறந்து விளங்கிய போதும், சோழமன்னர்கள் பரம்பரையில் சங்க காலத்தில் ஒன்பது தாயாதிகளாகப் பிரிந்து இருந்துள்ளனர் என்றும் அவர்கள் முடிமன்னனாகிய சோழ அரசனுக்குக் கீழ் சிற்சில ஊர்களை அரசாண்டுள்ளனர் என்றும் அறிய முடிகிறது. அவ்வகையில் அழுந்தூர், ஆமூர், போஓர் என்னும் ஊர்களும் சோழர்களின் ஆட்சிப்பகுதியாக இருந்ததை சங்க இலக்கியங்களின் வழி உணரமுடிகிறது.

**அழுந்தூர்**

முதலாம் கரிகால் வளவனின் தந்தையாகிய பெரும்பூட்சென்னி என்னும் சென்னிவழிச் சோழன் 'அழும்பில்' எனப்படும் அழுந்தூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்துள்ளான். இவ்வூரைக் குடவாயிற்கீரத்தனார் என்னும் சோழநாட்டுப் புலவர் அகநானூற்றுப் பாடலில்,

> பிணை அல் அம்கண்ணிப் பெரும்பூட் சென்னி
> அழும்பில் அன்ன அறாஅ யாணர்[25]

என்று குறிப்பிட்டுள்ளார். பெரும்பூட்சென்னியின் அழும்பில் எனப்படும் ஊரினைப் போன்றது குளிர்ந்த குடவாயில் என்று அழும்பில் நகரின் சிறப்பினைச் சுட்டுகிறார்.

**ஆமூர்**

கிள்ளிவழிச் சோழனான தித்தனின் மகன் 'தித்தன் வெளியன்' என இயற்பெயர் கொண்ட, போர்வைக் கோப்பெருநற்கிள்ளி என்னும் சோழன் மற்போரில் விருப்பம் அதிகம் உடையவன். இவன் ஆமூர் மல்லனை மற்போரில் வென்று ஆமூரைச் சோழரின் ஆட்சிப் பகுதியாக்கினான். இதனை, வெல்போர்ச் சோழர் ஆமூர் அன்ன இவள்[26] என்று ஐங்குறுநூறு குறிப்பிடுகிறது. மேலும் ஆமூர் மல்லனை எதிர்த்து அஞ்சாது வெற்றிகண்ட பெருநற்கிள்ளியைச் சாத்தந்தையார் என்னும் புலவர் பாடும்பொழுது 'இனிய கடுமையான கள்ளினை உடையது ஆமூர்' என்று சிறப்பிப்பதை, இன் கடுங்கள்ளின் ஆமூர் ஆங்கண்[27] என்னும் வரி உணர்த்துகிறது.

**போஓர் (போர்வை)**

சோழநாட்டில் காவிரிக்கரையில் போஓர் என்னும் ஊர் அமைந்திருந்தது. அவ்வூரின் தலைவன் பழையன் ஆவான். அவன் போஓர் எனப்படும் போர்வையை ஆட்சி செய்ததால் போஓர் கிழவோன் பழையன் என்று அழைக்கப்பட்டான்.

*சோழர்க்குப் படைத்தலைவனான இவன் குறி தவறாது வேலெறிந்து போர் செய்து வெற்றி காணும் சிறப்புடையோன் என்பதை,*

........................................ வென்வேல்

**இழை அணி யானைச் சோழர் மறவன்**

**கழை அளந்து அறியாக் காவிரிப் படப்பை**

**புனல்மலி புதவின், போஓர் கிழவோன்**

**பழையன் ஓக்கிய வேல்போல்,**

**பிழையலகண் அவள் நோக்கியோர் திறத்தே**[28]

*என்னும் பரணர் பாடல் விளக்குகிறது.*

*சோழர் கொங்கரை அடக்குதற் பொருட்டு செய்த போரிலே பழையனின் வேலெறியும் திறத்தினை,*

**கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர்**

**வெண்கோட்டு யானைப் போஓர் கிழவோன்**

**பழையன் வேல்வாய்த்தன்ன நின்**

**பிழையா நன்மொழி**[29]

*என்னும் நற்றிணைப் பாடல் பழையனின் வீரத்தினைப் பாராட்டுகிறது. மேலும் போரிலே மழைத்தாரைபோல் நிறைந்த அம்புகளை விரைந்து எய்துவதிலும் சிறந்து விளங்கினான் என்பதை,*

**மாரி அம்பின் மழைத்தோற் பழையன்**

**காவிரி வைப்பின் போஓர் அன்ன**[30]

*என்று அகநானூறு கூறுகிறது.*

*இதுகாறும் கண்ட ஆதாரங்களின் அடிப்படையில் சங்க காலத்தில் உறையூர், காவிரிப்பூம்பட்டினம் சோழரின் தலைநகரங்களாக விளங்கியதையும் அழுந்தூர், ஆமூர், போஓர் என்னும் ஊர்கள் சோழர்களின் சிறந்த ஆட்சிப்பகுதியாக விளங்கியன என்பதைச் சங்க இலக்கியங்களின் வாயிலாக அறியமுடிகிறது.*

**துறைமுகங்கள்**

*சங்க காலச் சோழநாட்டின் முக்கியத் துறைமுகமாகக் காவிரிப்பூம்பட்டினம் விளங்கியது. காவிரியாறு கடலில் புகுமிடத்தில் வடகரையின்மேல் காவிரிப்பூம்பட்டினம் அமைந்திருந்தது. உலகப் புகழ்பெற்ற இப்பட்டினம் 'புகார்'*

என்ற பெயர் பெற்றிருந்தது. இதனைப் பௌத்த நூல்கள் ‘கவீரப்பட்டினம்’ என்று கூறுகின்றன. இது பட்டினப்பாக்கம், மருவூர்ப்பாக்கம் என இரண்டு பிரிவாக இருந்தன.

மருவூர்ப்பாக்கம் கடற்கரையை அடுத்து அமைந்திருந்தது. அப்பாக்கத்தில் மீன் பிடிக்கும் பரதவர், கொல்லர், கருமார், கண்ணார், தச்சர், பொற்கொல்லர், இசைவாணர் முதலான தொழிலாளரும் நடுத்தர மக்களும் வாழ்ந்தனர். பல பொருள்களை விற்கும் கடைவீதிகள் மருவூர்ப்பாக்கத்திற்கும் பட்டினப்பாக்கத்திற்கும் இடையில் இருந்தன. பட்டினப்பாக்கத்தைச் சூழ்ந்து நாற்புறமும் கோட்டை மதில்களும், மதில்களுக்கு வெளியே அகழியும் இருந்தது. கோட்டைக்குள் இருந்தப் பட்டினப்பாக்கத்தில் செல்வரும் பெருங்குடி மக்களும் வாழ்ந்தனர். சோழ அரசருடைய அரண்மனை ஆற்றங்கரைப் பக்கமாகப் பட்டினப்பாக்கத்தில் காணப்பட்டது. காவிரிப்பூம்பட்டினத்தின் மருவூர்பாக்கத்துக்குத் தெற்கே காவிரி ஆறு கடலில் கலக்கிற புகார் முகத்திலே பூம்புகார்த் துறைமுகம் இருந்தது. அந்தத் துறைமுகம் ஆழமும் அகலமும் உடையதாக மரக்கலங்கள் பாய்களைச் சுருட்டாமல் உள்ளே வந்து தங்குவதற்கு ஏற்ற துறைமுகமாக விளங்கியது என்பதனை,

..................... கூம்பொடு  
மீப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது  
புகாஅர்ப் புகுந்த பெருங்கலம் தகாஅர்  
இடைப் புலப் பெருவழிச் சொரியும்  
கடற் ப.்.றாரத்த நாடு கிழவோயே[31]

என்று உறையூர் முதுகண்ணன் சாத்தனார் புகார்த் துறைமுகத்தைப் பாடுகிறார். இத்துறைமுகத்தில் வந்து தங்கிய நாவாய்கள் கம்பங்களில் கட்டப்பட்ட யானைகள் அசைந்து கொண்டிருப்பது போல துறைமுகத்தில் அசைந்து கொண்டிருந்தன என்று உருத்திரங்கண்ணனார்,

வெளில் இளக்கும் களிறு போலத்  
தீம்புகார்த் திரைமுன் துறை  
தூங்கு நாவாய்த் துவன்றிருக்கை  
மிசைக் கொம்பின் அசைக் கொடியும்[32]

என்று பாடியுள்ளார்.

**ஏற்றுமதி இறக்குமதிப் பண்டங்கள்**

*மருவூர்ப்பாக்கத்தின் தெற்கு ஆற்றங்கரைத் துறைமுகத்தின் அருகில் பண்டகசாலை இருந்தது. இங்கு ஏற்றுமதி இறக்குமதிப் பண்டங்கள் வைக்கப்பட்டிருந்தன என்பதை,*

நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
.....................................................
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்[33]

*என்று புகார்த் துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதிப் பண்டங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததைப் பட்டினப்பாலை குறிப்பிடுகிறது.*

**சோழர்களின் இலச்சினை**

*ஏற்றுமதி இறக்குமதிப் பண்டங்களில் சோழ மன்னனுடைய புலிச் சின்னம் பொறிக்கப்பட்டு சுங்கம் பெறப்பட்டது. இதனை,*

அளந்தறியாப் பல பண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லங்கிணோர்
புலி பொறித்துப் புறம் போக்கி[34]

*என்னும் வரிகள் உணர்த்துகின்றன.*

**வெள்ளிடை மன்றம்**

*துறைமுகத்துக்கு அருகே வெள்ளிடை மன்றம் என்னும் கோவில் இருந்தது. இம்மன்றத்துத் தெய்வம் துறைமுகத்துப் பண்டக சாலையில் இருந்த பொருள்களை யாரும் களவு செய்யாதபடி காவல் காத்தது என்பதனை,*

கட்போர் உளரெனிற் கடுப்ப தலையேற்றிக்
கொட்பி னல்லது கொடுத்த வீயாது
உள்ளுநர்ப் பணிக்கும் வெள்ளிடை மன்றம்[35]

*என்று சிலம்பு கூறுகின்றது.*

**கலங்கரை விளக்கம்**

துறைமுகத்துக்கு அருகிலே கலங்கரை விளக்கம் அமைந்திருந்தது. வெளிநாடுகளிலிருந்து வரும் கப்பல்கள் இரவுக் காலத்தில் கடலிலே திசைமாறிப் போகாமல் துறைமுகத்தைக் காட்டுவதற்குக் கலங்கரை விளக்கம் உதவியாக இருந்தது. இதனை, **இலங்கு நீர் வரைப்பின் கலங்கரை விளக்கம்**[36] என்று சிலம்பு சுட்டுகிறது.

**பெருந்துறை**

சங்க காலத்திலேயே உலகப் புகழ் பெற்றிருந்த புகார் என்னும் பெயருடைய காவிரிப்பூம்பட்டினம் கரிகால் வளவன் காலத்தில் சிறந்த துறைமுகமாக விளங்கியதைப் பட்டினப்பாலையால் அறியமுடிகிறது. ஆனால் தித்தன் வெளியன் காலத்தில் 'பெருந்துறை' சோழரின் துறைமுகமாக இருந்தமையைக் காணமுடிகிறது.

தித்தன் வெளியனின் பெருந்துறையில் பொன்னைக் கொண்டுவரும் கப்பல்கள் சிதையும்படி சிறு இறாக்களின் கூட்டம் தாக்கும் என்பதனை,

**சினங்கெழு தானைத் தித்தன் வெளியன்**
**இரங்கு நீர்ப்பரப்பின் கானலம் பெருந்துறை**
**தனம் தருநன்கலம் சிதையத் தாக்கும்**
**சிறுவெள் இரவின் குப்பை**[37]

என்னும் அகநானூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது.

காவிரி கடலோடு கலக்கும் இடத்தில் 'பெருந்துறை' உள்ளது. அது சோழருடையது. அங்குக் கடல் அலைகள் இறா மீன்களைக் கொண்டு வந்து மாலையோடு திரும்பிச் செல்லும் என்னும் செய்தியினை,

**மழைமருள் பல்தோல் மாவண் சோழர்**
**கழைமாய் காவிரிக் கடல்மண்டு பெருந்துறை**
**இறவொடு வந்து கோதையொடு பெயரும்**
**பெருங்கடல் ஓதம் போல**[38]

என்ற பாடல் விளக்கும். மேற்கண்ட சான்றுகளால் சோழர்களின் துறைமுகமாக பெருந்துறை இருந்த செய்தியையும் அறியமுடிகிறது.

**வாணிக முறைகள்**

காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்திற்குப் பாரதநாட்டின் பல திசைகளிலிருந்தும் கடல் வணிகரும் யவன வணிகரும் வந்தனர். "பெரிபுளூஸ் என்னும் கடற்பயண நூல் இத்துறைமுகத்தைக் கமரா என்று கூறுகிறது. தாலமி என்னும் யவனர் இதனை சபரிஸ் என்று கூறுகிறார்"[39] என்பர் மயிலை சீனி.வேங்கடசாமி.

காவிரிப்பூம்பட்டினத்தைப் பற்றி சங்கப் பாடல்கள் கூறுகின்றன. இங்கு நடந்த ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களையும் வாணிகத்தையும் பற்றிப் பட்டனப்பாலை கூறுகிறது. மணிமேகலையிலும் சிலப்பதிகாரத்திலும் இதன் சிறப்புக் கூறப்படுகிறது. கடல் வணிகர்களும், தரை வணிகர்களும் இந்த நகரத்தில் வணிகம் செய்தார்கள். சங்க காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் தலையாய துறைமுகமாகவும் பெரிய வணிக நகரமாகவும் இருந்து வந்துள்ளது.

**உள் நாட்டு வாணிகம்**

உள்ளூர் வாணிகம் பொருள்களைப் பரிமாறிக் கொள்வதன் மூலம் நடைபெற்றது. ஒன்றைக் கொடுத்து மற்றொன்றைப் பெறும் முறை 'பண்டமாற்று' எனப்படும். நெல்லைக் கொடுத்து உப்பு பெற்றதை,

> **நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச்**
> **சேரிவிலை மாறு கூறலின்**[40]

என்ற அகநானூறு எடுத்துக்காட்டுகிறது. தயிரும் மோரும் மாற்றித் தானியம் கொண்டு வந்து சோறாக்கிச் சுற்றத்துடன் உண்ட செய்தியையும், நெய்விலையாட்டி ஒருத்தி காசுகளைச் சேர்த்து எருமையினையும், நல்ல பசுவினையும் வாங்கித் தனது குடியை முன்னேற்றும் செய்தியையும் பெரும்பாணாற்றுப்படை தெரிவிக்கிறது.

கரிகாலனின் சோழ பூமியில் வேடர்கள் தேனுக்கும் கிழங்கிற்கும், மதுவையும் இறைச்சியையும் மாற்றி உண்டனர். உழவர்கள் கரும்பும் அவலும் தந்து மது மற்றும் ஊனைப் பரிமாறிக் கொண்டனர். இதனை,

தேன் நெய்யோடு கிழங்கு மாறியோர்
மீன் நெய்யோடு நறவு மறுகவும்
தீங்கரும்பொடு அவல் வகுத்தோர்
மான்குறையோடு மது மறுகவும்[41]

என்று கூறுகின்றது பொருநராற்றுப்படை.

**கடல் வாணிகம்**

திரைகடல் ஓடித் திரவியம் தேடியவர் தமிழர். தோணி முதல் பெரிய மரக்கலங்களான நாவாய் வரையிலான கப்பல் கட்டும் தொழிலைப் பண்டே கற்றவர்கள். புனை, பரிசில், கட்டுமரம், தோணி, திமில், ஓடம், படகு, பஃறி, அம்பி, வங்கம், கப்பல், நாவாய் என்று அவர்கள் வழங்கும் சொற்களே அவர்களது கடல் வாணிகத்தைப் பறைசாற்றும். "அனைத்து விதமான கப்பல்களையும் நம்மவர்கள் கட்டத் தெரிந்திருந்தனர் என்பதைப் பழைய யுக்தி கல்பதரு நூல் விளக்கும் என்பார் பூவராகமூர்த்தி."[42] மேலும் அவர் மேனாட்டார் குறிப்புகளேயன்றி, பழைய புராணங்கள், பிருகத்கதை, ஜாதக் கதைகள், யுக்தி கல்பதரு, அர்த்த சாஸ்திரம், பழந்தமிழ் இலக்கியங்கள் போன்றவை சங்க காலத் தமிழகத்தின் கடல் வாணிகம் பற்றிக் குறிப்பிடுகின்றன என்கிறார்.

தமிழர் கிழக்குக் கடற்கரையிலும், மேற்குக் கடற்கரையிலும் அமைந்திருந்த துறைமுகங்களிலிருந்து கடல் வாணிகத்தைச் சிறப்பாகச் செய்தனர். சோழநாட்டில் சங்க காலத்தில் சிறப்பாகச் செயல்பட்ட துறைமுகம் காவிரிப்பூம்பட்டினமாகும். இது தவிர சேரர்களின் துறைமுகமான தொண்டி, பாண்டிய நாட்டுத் துறைமுகமான கொற்கை போன்ற துறைமுகங்களிலும் கடல் வாணிகம் சிறப்பாக நடைபெற்றது. கிறித்துவுக்கு முற்பட்ட காலத்திலேயே பிறநாடுகளுடன் தமிழரின் கடல் வாணிகம் தழைத்திருந்தது.

கி.மு. பத்தாம் நூற்றாண்டில் அரசாண்ட சாலமனுக்குத் தமிழகத்திலிருந்து கப்பல்களில் யானைத் தந்தம், மயில் தோகை, நறுமணப் பொருள்கள் ஆகியவை சென்றன. பொனீசிருடைய கப்பல்களில் மிளகு மிகுதியாக ஏற்றுமதி செய்யப்பட்டது. "கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் பாபிலோன் நகரத்திற்குக் கடல் வழியாக அனுப்பப்பட்ட அரிசி, மயில், சந்தனம் முதலிய பொருள்களின் பெயர்கள் திராவிட

மொழிப் பெயர்களாகவே காணப்பட்டுள்ளமை பண்டைக் காலத்தில் தமிழகத்தின் கடல் வாணிகச் சிறப்பை உணர்த்தவல்ல சான்றுகளாகும்"[43] என்று நீலகண்ட சாஸ்திரியார் குறிப்பிடுவதாக அ.ஐம்புலிங்கம் சுட்டிக்காட்டியுள்ளார். ரோமப் பேரரசனான அகஸ்டர் ஏறத்தாழ கி.மு.30இல் எகிப்தைக் கைப்பற்றினான். அவன் ரோமப் பேரரசுக்கும் தமிழகத்துக்கும் இடையே வணிக உறவை வளர்க்க முயன்றான். மேலும் பர்மா, மலேயா, சீனம் முதலிய நாடுகளுடனும் தமிழகம், வாணிகம் செய்துவந்துள்ளது. "உரோமர்கள் தமிழகத்து முத்துக்கள், யானைத் தந்தம், மிளகு ஆகியவற்றை மிகுந்த விலை கொடுத்து வாங்கியதால் ரோம்நாடு ஆண்டொன்றுக்குத் தமிழகத்திற்கு சற்றே ஆறு இலட்சம் பவுன் கொடுக்க வேண்டியிருந்தது. இதனால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்று அஞ்சிய ரோம் அரசியல் சபைத் தலைவர்கள் முத்துக்களை அதிகமாகப் பயன்படுத்திய பெண்மணிகளைக் கண்டித்தனர்"[44] என்று வரலாற்றுக் குறிப்பு கூறுகிறது.

தமிழகத்திலிருந்து தேக்கு, அகில், சந்தனமரங்கள், தேங்காய், நெய், வாழை, அரிசி, சோளம், கம்பு, ஏலம், இலவங்கம், வெல்லப்பாகு, வெற்றிலை, மூலிகைமருந்து வகைகள் முதலியவை ரோம் நகருக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இவற்றுக்குப் பதிலாக பொன், வெள்ளி நாணயங்கள், மது வகைகள், பவளம், ஈயம், எந்திரப் பொருள்கள், கைவினைப் பொருள்கள் ஆகியவற்றைத் தமிழ்நாட்டுக்கு இறக்குமதி செய்தனர். பிளைனி, பெரிப்புளூஸ் ஆகிய மேனாட்டு யாத்திரிகர்களின் குறிப்புகள் இவற்றைத் தெளிவுறுத்துகின்றன.

கரிகால்வளவனின் முன்னோர்கள், மரக்கலம் செலுத்துவதில் வல்லவர்கள் என்பதை,

நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக
களிஇயல் யானைக் கரிகால் வளவ[45]

என்ற புறநானூற்றுப் பாடலானது விளக்குகின்றது. மேலும் காற்றின் இயக்கம் கண்டறிந்து கப்பலைத் தமிழர் செலுத்தியுள்ளனர். இதனை, வளிதிரிதரு திசை என்ற பாடலடியானது எடுத்துக்காட்டுகின்றது. காற்றினையும் ஆடல் கொண்ட சோழர் திறத்தால் கடல் வாணிகம் பூம்புகார்த் துறைமுகத்தில் செழித்திருந்தது. புகார் நகரின் வணிக வீதிகளில் நாளங்காடியும் அல்லங்காடியும் விளங்கின. கணக்கற்ற கப்பல்கள்

வந்து ஒய்வற்ற ஏற்றுமதி இறக்குமதிகள் நடைபெற்றன. அங்கே சுங்கவரியும் பெறப்பட்டது. புலி இலச்சினைகள் பண்ட மூட்டைகளில் பொறிக்கப்பட்டன.

**சோழர் குலப் பெயர் விளக்கம்**

சோழர் என்பது பன்மைப் பெயர் ஆகும். 'சோழன்' என்னும் சொல்லிற்கு விளக்கம் பன்னிருபாட்டியலில் கூறப்பெற்றுள்ளது. "சோழன் என்பது ஒருகுடிக்கண் பிறந்தாரைச் சுட்டும் குடிப்பெயர்"[47] என்பது அந்நூலினால் அறியப்படுகிறது. சோழர் என்னும் பெயர் எவ்வாறு வந்தது என்பதை அறியமுடியவில்லை. எனினும் பல வரலாற்று அறிஞர்கள் இதனை இயற்பெயராகவேக் கருதினர். ஆனால் இக்கால அறிஞர்கள் இச்சொல்லின் பொருளைக் காண பலவாறு முயன்றுள்ளமையைக் காணலாம்.

வடமொழியில் 'கருமை' எனப் பொருள்படும் காள, கோல என்னும் சொல்லோடு தொடர்புப்படுத்தி கர்னல் ஜெரினி என்னும் அறிஞர் சோழர் என்ற சொல்லின் பொருள் விளக்கத்தைக் காணமுற்படுகிறார். "திராவிடருக்கு முற்பட்ட பழங்குடி மக்கள் கோலர் என்பவராவார். அவர்கள் கரிய நிறம் வாய்ந்தவர்கள். அவர்களுடைய ஒரு கிளையினரே சோழராக இருந்திருக்கலாம் என்பது அவருடைய கருத்தாகும்."[48] இவர் கூறிய கருத்து மொழியியல், மானிடவியல் அடிப்படையில் பொருத்தமானதாக இல்லை என்பர்.

சோழர் என்னும் குலப்பெயரை ஆராய்ச்சி செய்கின்ற அறிஞர்களில் ஒரு பகுதியினர் சோளம் மிகுதியாக விளைந்த சோளநாட்டினை ஆண்டவருக்கு இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்று கருதுகின்றனர். மேலும் சோளர் என்னும் பெயரில் உள்ள 'ளகரம் ழகரமாக திரிந்து இப்பெயர் தோன்றியிருக்க வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளனர்.' டி.ஆர்.பந்தர்க்கர் என்ற அறிஞர் 'திருடன்' என்னும் பொருளைத் தரும் சோரன் என்ற வடமொழிச் சொல்லின் திரிபாக சோழர் தோன்றி இருக்கலாம் என்று கூறுகின்றார். இக்கருத்திற்கு மயிலை சீனி.வேங்கடசாமி, "திருடன் என்று பொருள் கூறுவது தமிழினத்தவரை இழித்துப் பேச நினைப்போரின் இழிந்த தன்மையாகும். மேலும் வல்லின 'றகரம்'தான் 'ழகரமாகத்' திரியும். இடையின

'ரகரம்' ழகரமாகத் திரியாது. இது தமிழ் மொழியின் இயல்பினை அறியாதவரின் விழைவார்ந்த விருப்பமாகத் தோன்றுகிறது"[49] என்று மறுத்துரைக்கின்றார்.

உறையூருக்கு வேறொரு பெயர் கோழியூராகும். கோழியூரை ஆண்டவர் கோழியர் எனப்பட்டனர். புறநானூற்றுப் பழைய உரையாசிரியர் 'கோழி' என்னும் சொல்லிற்கு உறையூர் என்று உரை எழுதியுள்ளதை ஒப்புநோக்கலாம். ஆகவே கோழியர் என்னும் சொல்லில் உள்ள ககர ஒலி சகரமாகத் திரியும் இயல்பு திராவிட மொழிகளில் காணப்படுவதால் சோழியர், சோழர் என்ற சொற்கள் ஏற்பட்டிருக்கலாம் என்று அறிஞர்தாம் கருதியதற்குச் சான்றாக மேற்கூறிய சொற்களுக்கு இணையாகத் திரிந்து வழங்கும் வேறுசொற்களை எடுத்துக்காட்டி இருந்தால், இக்கருத்தை ஓரளவிற்கு ஒப்புக்கொள்ள இயலும்.

சோழர் பெயரைக் குறித்து மற்றொரு மொழியியல் அறிஞர் தரும் விளக்கம் சிந்தனையைத் தூண்டுவதாக உள்ளது. "திராவிட மொழிகளில் 'உகரம்' ஒகரமாகத் திரிவது இயற்கை. இவ்வொலித் திரிபினையே அடிப்படையாகக் கொண்டு 'சூழ்' என்னும் வேர்ச்சொல்லிலிருந்து சோழர் என்ற சொல் தோன்றி இருக்கலாம்"[50] என்று கூறியுள்ளதை நோக்கும்பொழுது சூழ்வோர் என்பதற்குச் சுற்றியிருப்பவர், ஆராய்வோர், கருதுவோர் என்று பல பொருள்கள் இருப்பதால் இக்கருத்தும் ஏற்புடையதாக இல்லை.

சோழர் என்னும் குலப்பெயரைக் குறித்து மேற்கூறிய கருத்துக்களை நோக்குமிடத்து சோழர் என்னும் குலப்பெயரை இடுகுறிப்பெயராகவே கொள்ள வேண்டியமையை அறியமுடிகிறது.

**சோழ வேந்தர்களின் குடிப்பெயர்கள்**

சோழர் என்னும் குலப்பெயர் விளங்கியதைப்போல அவர்களுக்கு செம்பியன், சென்னி, கிள்ளி, வளவன் என்று குடிப்பெயர்களும் வழங்கி வந்தமையை அறியலாம்.

**செம்பியன்**

சிபி சக்கரவர்த்தியின் மரபிலே வந்தவர்கள் செம்பியன் என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டனர். இருப்பினும் செம்பியன் என்பது சோழமன்னர்களுக்கு

வழங்கிய பொதுப்பெயராகவே தோன்றுகிறது. சோழரைச் சிபி வழியினராகப் போற்றும் கொள்கை சங்க காலத்திற்கு முன்பே தோன்றிவிட்டது. அதனால்தான், "சிபியின் வழிமுறையினர் என்று பொருள்படும். சைபிய என்ற வடசொல்லின் திரிபான 'செம்பியர்' என்னும் சொல் சோழர்குடிக்குரிய வேறு பெயராகச் சங்க நூல்களில் பயிலப்பெறுகிறது."[51] சிபி என்பது ஒருவருக்கு இட்டு வழங்கிய பெயரன்று. சிபி குலத்தினர் எவரும் சிபியே. எனவேதான் சிபிகுல வழித்தோன்றல்கள் தம்மை செம்பியன் எனக் கூறிக்கொண்டதை உணரமுடிகிறது.

**சென்னி**

சென்னி என்னும் பெயர் சோழர்க்குரிய குடிப்பெயராக வழங்கி வந்துள்ளது. சென்னி என்பதற்குத் தலை அல்லது முடி என்பது பொருள். சோழர் குடியில் முடிசூட்டிக் கொண்டு நாடாளும் உரிமைபெற்ற மூத்தமகன் வழிவந்த கிளைக்குடியைக் குறித்திருக்கலாம்.

சென்னி என்னும் சோழமரபின் வழிவந்தவராக பன்னிருசோழ மன்னர்கள் கூறப்பட்டாலும் சென்னி என்ற குடிப்பெயரைப் பெற்றவராக, உருவப்பல்தேர் இளஞ்சேட்சென்னி, பெரும்பூண் சென்னி என இருவரும், கிள்ளி-சென்னி என இருவழியிலும் குடிப்பெயர் பெற்றவராக, சோழன் சேட்சென்னி நலங்கிள்ளி, சோழன் இலவந்திகைப்பள்ளி துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி ஆகிய இருவரும் காணப்படுகின்றனர்.

**3. கிள்ளி வழியினர்**

கிள்ளி என்னும் பெயர் பகைவரை முளையிலேயே கிள்ளி எறிவதில் வல்லவர் என்னும் பொருளில் வழங்கப்பட்ட சிறப்புப் பெயராகலாம். மற்றும் நிலத்தைக் கிள்ளி (உழவு) செய்யப்படும் பயிர்த்தொழிலைச் சிறப்புற செய்தவர்கள் என்றும் பொருள் கொள்ளலாம். இப்பெயரும் ஒரு கிளைக்குடிக்குரிய பெயராகும். இப்பெயரைத் தம் பெயரோடு இணைத்துப் பெற்றவர்களாகக் கீழ்க்கண்ட ஆறு சோழ மன்னர்கள் காணப்படுகின்றனர்.

1. சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி
2. சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி
3. சோழன் வேல்பல் தடக்கைப் பெருநற்கிள்ளி

4. காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி

5. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்

6. சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி

## 4. வளவன் வழியினர்

வளவன் என்னும் பட்டப்பெயர் நிலவளமும் நீர்வளமும் மிக்க நாட்டின் தலைவர் என்னும் காரணத்தால் வழங்கிய பெயராகலாம். அவ்வகையில் தமிழ்நாட்டினை 'காடுகொன்று நாடாக்கி' வளமிக்க நாடாகச் செய்தவன் கரிகால் பெருவளத்தான். இச்செயலால் புலவர்கள் கரிகாலனைப் பெருவளத்தான் என்று போற்றினார்கள். வளவன் என்னும் பெயரைத் தம் பெயரோடு இணைத்துப் பெற்றவர்களாக ஐவர் காணப்படுகின்றனர். அவர்கள்,

1. சோழன் கரிகால் பெருவளத்தான் எனப் பெயர்பெற்ற இருவர்

2. மாவளத்தன்

3. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்

4. சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன்

என்பவர்களாவர்.

சோழர்குடி, படைப்புக் காலந்தொட்டே தமிழகத்தை ஆண்டு வரும் குடி என முன்னோர்கள் போற்றியமையால் தொன்மையான குடி என்பது அறியப்படுகின்றது. சோழன் என்பது ஒரு குலத்தில் பிறந்தவரைச் சுட்டும் சொல்லாகும். இருப்பினும் சோழர்கள் செம்பியன், சென்னி, கிள்ளி, வளவன் என்னும் குடிப்பெயர்களால் அழைக்கப்பட்டதை இலக்கியங்களின் வாயிலாக அறியமுடிகிறது.

## காரணப்பெயர்கள்

சோழ மன்னர்களின் பெயர்கள் காரண காரியத் தொடர்போடு வழங்கியுள்ளமையைக் காணமுடிகிறது.

### (அ) உருவப் பல்தேர் இளஞ்சேட்சென்னி

அழகிய தேர்களை ஏராளமாக வைத்திருந்ததாலும் அவற்றை மிக வேகமாக ஓட்டுவதில் தனித்திறமை பெற்றிருந்ததாலும் இம்மன்னன் உருவப் பல்தேர் இளஞ்சேட்சென்னி என அழைக்கப்பட்டான். மேலும் நெய்தலங்கானல், செருப்பாழி,

பாமூளூர் போன்ற இடங்களைக் கைப்பற்றியதால் அவ்விடங்களின் பெயரோடும் சேர்த்து இம்மன்னன் அழைக்கப்பட்டதை இலக்கியங்கள் எடுத்துக் கூறுகின்றன.

**(ஆ) கரிகாலன்**

தந்தையைப் போன்றே கரிகாலனுக்கும் காரணப்பெயர் வழங்கியுள்ளது. கரிகாலன் என்ற பெயர் வரக் காரணம் என்ன என்பது பற்றிக் கருத்து வேற்றுமைகள் உண்டு. இவன் இளமைக்காலத்தில் அரசைக் கைப்பற்ற எண்ணிய தாயத்தார்களால் சிறையில் இடப்பட்டான். சிறையில் இட்டதோடு அவன் இருந்த சிறைக்கும் அவர்கள் தீயிட்டனர். இவன் சிறைக்காவலைக் கடந்து மதில் ஏறிக் குதித்து உயிர் தப்பினான். இம்முயற்சியில் இவனது கால் கருகிப்போயிற்று. கால் கரிந்தமையால் 'கரிகாலன்' என்ற பெயர் நிலைத்துவிட்டது. இதுவே பெரும்பான்மையாக வழங்கி வரும் காரணம் ஆகும். இதனை,

> **முச்சக்கரமும் அளப்பதற்கு நீட்டிய கால்**
> **இச்சக்கரமே அளந்ததால் - செயச்செய்**
> **அரிகான் மேல் தேன் தொடுக்கும் ஆய்புனல்நீர் நாடன்**
> **கரிகாலன் கால் நெருப்புற்று**[52]

என்னும் வெண்பா இதற்குச் சான்றாக அமைகிறது.

கரிகாலன் சிறையிலிருந்து தப்பவும், அவன் பகைவர்களை வென்று தன் அரசுரிமையைப் பெறவும் அவனது மாமனான இரும்பிடர்த் தலையார் பெரிதும் உதவினார்[53] என்பதைப் பழமொழி நானூறு தெரிவிக்கின்றது.

கரி-யானை, காலன்-காலை உடையவன் என்று பொருள் கொண்டு யானையின் கால் போன்ற வலிமையான கால்களை உடையவன் என்றும், மற்றும் கரிகாலன்-யானைகளுக்கு எமன் போன்றவன். அதாவது, போர்க்களத்தில் யானைகளுக்கு அஞ்சாது எதிர்த்து நின்று அழிப்பவன் என்றும் அறிஞர்கள் இவனின் பெயரைக் குறித்த காரணங்களை எடுத்துரைக்கின்றனர். "கருமை+கால் = கரிகால். கருமை என்பது வலிமையைக் குறிக்கும். 'கருங்கைக் கொல்லன்' என்ற தொடரின் கருமை வலிமையை உணர்த்தி நின்றதை அறியலாம். எனவே வலிமையான கால்களை உடையவன் என்ற பொருளில் கரிகாலன் என்ற பெயர் வழங்கியது என்று பொருள் கொள்வதே சிறப்பானதாகும்."[54]

**(இ) இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளி**

சங்க காலத்தில் தமிழகத்தை ஆண்ட முடியுடை மூவேந்தர்களும் ஆரியர்களை ஆதரித்துப் பெருவேள்விகளைச் செய்து வந்தனர் என்பது வரலாற்றால் அறியப்படும் செய்தியாகும். அவர்களில் 'இராசசூயம்' என்ற யாகத்தை மிகச் சிறப்பாகச் செய்தவன் சோழன் என்பதால் 'அவன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி' என்று அழைக்கப்பட்டான்.

**(ஈ) துஞ்சிய இடத்தால் பெயர் பெற்றோர்**

சோழ மன்னர்களில் சிலர் காரண காரியத் தொடர்போடு பெயர் பெற்றதைப் போலவே சில சோழ மன்னர்களின் பெயர்களோடு, அவர்கள் உயிர் துறந்த இடங்களைச் சேர்த்து வழங்குவது மரபாக இருந்து வந்துள்ளது. இந்நிலையில், நால்வர் காணப்படுகின்றனர். அவர்கள்,

1. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்
2. காரியாற்று துஞ்சிய நெடுங்கிள்ளி
3. சோழன் குராப்பள்ளித் துஞ்சிய திருமாவளவன்
4. சோழன் இலவந்திகை பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி

என்பவர்களாவர்.

**சிறப்புப் பெயர்கள்**

சோழர்களின் பெயர்கள் குடிப்பெயர், காரணப்பெயர் என வழங்கியதைப் போலவே சிறப்புப் பெயர்களாலும் அழைக்கப்பட்டமையை இலக்கியங்களின் வழி காணமுடிகிறது.

**தொடித்தோள் செம்பியன்**

செம்பியன் என்னும் சோழமன்னன் வானத்தில் அசைந்து கொண்டிருந்த பகைவரது மதிலை அழித்த வீர வளை அணிந்த தோளையுடையவன் ஆதலின் "தூங்கு எயில் எறிந்த தொடித்தோள் செம்பியன் எனப் பெயர் பெற்றான்"[55] என்று மா.இராசமாணிக்கனார் குறிப்பிடுகின்றார்.

**சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி**

*சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி உறையூரை ஆட்சி செய்த சோழருள் மூன்றாமவன். இவனே சோழ அரசர்களில் முடியணிந்தாண்ட மன்னனாகக் கருதப்படுகிறான். இதன் காரணமாக இவன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி என்ற சிறப்புப் பெயரைப் பெற்றுள்ளான்.*

**கோப்பெருஞ்சோழன்**

*சோழர் வரலாற்றில் கோப்பெருஞ்சோழன் தனித்துக் காணப்படுகின்றான். கிள்ளி வழியில் வாழ்ந்த இவன் தம் அரசை விரிவாக்கம் செய்யாமல் போரை வெறுத்துத் தம் அவையில் பல புலவர்களின் துணைகொண்டு தத்துவ அறிஞனாக விளங்கினான். அடக்கமுடையவனாகவும் நட்பிற்கு இலக்கணமாகவும் திகழ்ந்தான். இவனுக்குப் பல சிறப்புப் பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. பெருஞ்சோழன், பெருங்கோக்கிள்ளி, பொலந்தார்த் தேர்வண்கிள்ளி, அடுமான் தோன்றல் என்பவையாகும்.*

**கரிகால் பெருவளத்தான்**

*கரிகால் பெருவளத்தான் பெயர் சங்க இலக்கியங்களில் 'கரிகாலன்' என அன் விகுதி பெறாமல் கரிகால் என்றே வழங்கப்பெற்றுள்ளது. "அவன் தன் நாட்டை வளப்படுத்திய சிறப்பால் அவன் பெயரோடு 'வளவ', 'வளவன்' என்பது இணைய 'கரிகால்வளவன்', 'பெருவளக் கரிக்கால்' என்று பெயர் பெற்றான் என்பதை அகநானூறு மற்றும் புறநானூறு தெரிவிக்கின்றன."[56] மேலும் கரிகால் பெருவளத்தான் வயல் வளத்தோடு வாணிப செல்வத் திருவையும் சேர்த்து திருமாவளவன் என்று சிறப்பிக்கப் பெற்றதைப் பட்டினப்பாலை உணர்த்துகிறது.*

**குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன்**

*பெருந்திருமாவளவன் 'காவிரிக்கிழவன்', 'அறம் துஞ்சும் உறந்தைப் பொருநன்' என்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டதைப் பாடல்களின் வழி உணரமுடிகிறது.*

### குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்

கிள்ளி வளவனும் பல சிறப்புப் பெயர்களால் அழைக்கப் பெற்றுள்ளான். "'பசும்பூண் கிள்ளி வளவன்', 'பொன்னியல் பெரும்பூண் வளவன்', 'பலகோள் செய்தார் மார்ப' என்பன அணிகலன்களோடு கூடிய அவனது தோற்றப் பொலிவினையும் 'வாய்வாள் வளவன்', 'திண்தேர்வளவன்', 'நெடுங்கொடி நுடங்கும் யானை நெடுமாவளவன்' என்பன போர்க்கோலத்தையும் காட்டுகின்றன."[57] இவனது மரபினர் மறங்கெழுசோழர் என்று குறிப்பிடப்படுகின்றனர்.

### சோழர் குல முன்னோர்கள்

வரலாற்றுக் காலச் சோழர்களுக்கு முற்பட்ட சோழ மன்னர்களைச் 'சோழர் குடியின் மூதாதையர்' என்று இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. இச்சோழ அரசர்கள் தெய்வீகத்தன்மை உடையவர்களாகவும், அற்புதச் செயல்கள் பலவற்றைப் புரிந்தவர்களாகவும் போற்றப்பெற்றுள்ளனர். இவர்களைப் பற்றிய புராண பழங்கதைகளைச் சிலப்பதிகாரம், மணிமேகலை, பாரதம், இராமாயணம், மூவருலா போன்ற இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. எட்டுத்தொகை நூல்களுள் இவர்களைப் பற்றிய செய்திகள் குறைந்த வழக்குடையனவாகவே உள்ளன.

சோழர்குல முன்னோர்களாக ஐவர் காணப்படுகின்றனர். அவர்கள்,

1. செம்பியன்
2. முதுகாந்தன்
3. காந்தன்
4. தூங்கெயில் எறிந்த தொடித்தோள் செம்பியன்
5. மனுச்சோழன்

ஆகியோர் ஆவர்.

### செம்பியன்

சங்க காலப் பிற்காலப் புலவர்களால், சோழ மரபின் முன்னோனாக செம்பியன் குறிக்கப்பெறுகிறான். இவன் வரலாறு, பாரதம், இராமாயணம் முதலிய நூல்களில் கூறப்பட்டுள்ளன. பருந்திற்கு அஞ்சித் தன்னிடம் அடைக்கலம் புகுந்த புறாவினைக் காக்கத் தன் தசையை அரிந்துக் கொடுத்த சிபிச் சக்கரவர்த்தியே செம்பியன் ஆவான். இவனது வள்ளல் தன்மையினை,

புள்ளுறு புன்கண் தீர்த்த வெள்வேல்

சினங்கெழு தானைச் செம்பியன் மருக[58]

*எனவும்,*

தன்னகம் புக்க குறுநடைப் புறவின்

தபுதி யஞ்சிச் சீரை புக்க

வரையா ஈகை உரவோன் மருக[59]

*எனவும் புறநானூறு எடுத்தியம்புகின்றது. விக்கிரமசோழனுலா,*

................................ உலகறியக்

காக்கும் சிறபுறாவுக்காகக் களிகூர்ந்து

நூக்கும் துலை புக்க தூயோன்[60]

*என்று அவன் சிறப்பினை உணர்த்துகின்றது.*

**முதுகாந்தன்**

*இம்மன்னனுக்கு 'முசுகுந்தன்' என்ற சிறப்புப் பெயரும் உண்டு. இவன் குரங்கு முகத்துடனும் மனித உடலுடனும் இருந்து ஆட்சி செய்தவன் என்பதைக் கந்தபுராணம், விஷ்ணுபுராணம் ஆகியவை குறிப்பிடுகின்றன. இச்சோழ மன்னன் இந்திரன் என்னும் தேவலோகப் பேரரசனுக்குப் போரில் உதவி செய்ததால் இவனுக்கு இந்திரன் நாளங்காடிப் பூதம் ஒன்றை வழங்கினான் என்பதைச் சிலம்பு சுட்டுகிறது.*

*இவன் சிறந்த சிவபக்தனாகவும் இருந்த செய்தியை அறியமுடிகிறது. இந்திரன் வழிபட்ட சிவலிங்கம் உட்பட ஏழு லிங்கங்களை இந்திரனிடம் பெற்று அவற்றைத் திருவாரூர், திருநாகைக்காரோணம், திருக்காறாயில், திருக்கோளிலி, திருமறைக்காடு, திருநள்ளாறு, திருவாய்மூர் ஆகிய ஏழு இடங்களில் எழுந்தருளச் செய்தான். ஆதலால் இந்த ஏழு தலங்களும் 'சப்தவிடங்கத்தலம்' என்றழைக்கப்படுகின்றன.*

**3. காந்தன்**

*காந்தன் என்னும் இம்மன்னன் மைசூர் நாட்டில் உள்ள மலையை வெட்டி, கிழக்கே சென்ற காவிரியைத் தெற்கே திருப்பிச் சோழநாட்டை நெற்களஞ்சியம் ஆக்கியவன். இச்சோழ மன்னன் காவிரி கொண்டு வந்த வரலாற்றினை,*

மலைகொன்று பொன்னிக்கு வழிகண்ட சோழன்[61]

*எனவும்,*

கொள்ளுங் குடகக் குவடூ டறுத்திழியத்

தள்ளுந் திரைப்பொன்னி தந்தோனும்[62]

எனவும் கூறப்பட்டுள்ளன.

**4. தூங்கெயில் எறிந்த தொடித்தோள் செம்பியன்**

வானம் என்பது ஓர் ஊர். அவ்வூரில் கடவுள் அஞ்சி என்பவன் ஒரு கோட்டை கட்டியிருந்தான். அந்தக் கோட்டையின் கதவு மேலிருந்து தொங்கும்படி அமைக்கப்பட்டிருந்தது. அதனால் அது தூங்கு எயிற் கதவம் எனப்பட்டது. இக்கருத்தினை,

கடவுள் அஞ்சி வானத்து இழைத்த

தூங்கு எயிற் கதவம் காவல்கொண்ட

எழூஉ நிவந்தன்ன[63]

என்று பதிற்றுப்பத்து உரைக்கின்றது.

இக்கோட்டையினை வண்டன் என்னும் பெருஞ்செல்வன் காவல் புரிந்து வந்தான். இதனை அழித்த செம்பியன் பேராற்றலை,

ஒன்னார் உட்கும் துன்னருங் கடுந்திறல்

தூங்கெயில் எறிந்த ஊங்கணோர் நினைப்பின்

அடுதல் நின்புகழும் அன்றே[64]

என்று புறநானூற்றுப் பாடலும்,

தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்[65]

என்று சிலம்பும் சான்று பகர்கின்றன.

இவனது இந்த வீரச்செயலைப் புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை, சிறுபாணாற்றுப்படை, பழமொழி, கலிங்கத்துப்பரணி, மூவருலா ஆகிய நூல்கள் தெரிவிக்கின்றன.

உறையூரை தலைநகராகக் கொண்டு செம்பியன் என்னும் அரசன் கழுமலம் என்னும் ஊரைத் தாக்கி வென்றான்[66] என நற்றிணை கூறுகிறது.

அகப்பா என்னும் கோட்டையை அழித்துப் பகற்பொழுதிலேயே தீக்கரையாக்கிய சோழன் ஒருவன் செம்பியன்[67] என்று நற்றிணை எடுத்துரைக்கின்றது.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனிடம் தோற்றுப்போன எழுவருள் ஒருவன் செம்பியன்[68] என்று அகநானூறு குறிப்பிடுகிறது.

கழுமலப்போரில் சேரனை வென்ற சோழனது பெயரும் செம்பியன் என்று களவழிநாற்பது பாடல்கள் தெரிவிக்கின்றன. இவற்றையெல்லாம் தொகுத்து நோக்குமிடத்து,

1. புறாவுக்காகத் துலைபுக்க செம்பியன்
2. தூங்கெயில் எறிந்த தொடித்தோள் செம்பியன்
3. அகப்பா எறிந்த செம்பியன்
4. கழுமலம் எறிந்த செம்பியன்
5. களவழித் தலைவன் செம்பியன்

என்று சோழர்களின் முன்னோனான செம்பியன் ஐந்து நிலைகளில் காணப்படுகிறான். இது எத்தனை அரசர்களைக் குறித்து நிற்கிறது என்பதை அறிய இயலவில்லை.

**மனுச்சோழன்**

திருவாரூரில் இருந்து சோழநாட்டை ஆண்டு வந்தவன். இவன் சிறந்த சிவபக்தன். இவனுக்கு வீதி விடங்கன் என்றொரு மகன் இருந்தான். அவன் தேரூர்ந்து செல்லும்பொழுது குறுக்கே வந்து விழுந்த ஒரு பசுங்கன்றை அறியாது கொன்றதற்காகத் தன் ஒரே மகனைத் தரையில் கிடத்தி அவன்மீது அத்தேரை ஏற்றிக் கொன்ற செங்கோலினன். இவனை,

> **வாயில் கடைமணி நடுநா நடுங்க**
> **ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுடத்தான் தன்**
> **அரும்பெறல் புதல்வனை ஆழியில் மடித்தோன்**[69]

என்று சிலம்பு சுட்டுகிறது.

ஏழாரன் என்னும் சோழமன்னன் ஒருவன், அசேலன் என்னும் இலங்கை அரசனை வென்று 45 ஆண்டுகள் இலங்கையை ஆட்சி செய்தான். இச்சோழ மன்னனும் மகனை முறை செய்தனன் எனவும் துத்தகாமணி என்பான் அவ்வேழாரனை வென்று இலங்கையை மீட்டுக் கொண்டான் எனவும் மகாவம்சம் என்னும் இலங்கை வரலாற்று நூல் கூறுகிறது. ஆதலால் வரலாற்று அறிஞர்கள் மகனை முறைசெய்த மனுச்சோழனே

ஏழாரனாக இருக்கலாம் என்று கருத்துரைக்கின்றனர். சங்க இலக்கியங்களில் இம்மன்னனைப் பற்றிய குறிப்பு எதுவும் காணப்படவில்லை.

**சூல வழித்தோன்றல்**

சங்க கால மூவேந்தர்கள் கி.மு.நான்காம் நூற்றாண்டிலிருந்து கி.மு.முதல் நூற்றாண்டு வரை வாழ்ந்திருக்கலாம் என்ற கருத்து நிலவுகிறது. இக்கருத்திற்குச் சான்றாக,

1. "கி.மு.மூன்றாம் நூற்றாண்டில் வெளியிடப்பட்ட முதுகுடுமிப் பெருவழுதியின் நாணயங்கள்.
2. கி.மு.இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் காணப்படும் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பெயர்.
3. கி.மு.நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த 'தனநந்தன்' பெருஞ்செல்வத்தைக் கங்கையாற்றில் ஒளித்து வைத்த வரலாறு (அகம்.257, 265)
4. கி.மு.மூன்றாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த மௌரியப் பேரரசன் அசோகனுடைய கல்வெட்டுகள்"[70]

ஆகியவை மூவேந்தர்களின் ஆட்சிக்கால வரையறைக்கு சான்று பகர்கின்றன.

அசோகர் கல்வெட்டுகளில் காணப்படும் தமிழக வேந்தர்களைப் பற்றிய குறிப்புகளில் சோழ அரசு முதலாவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுச் சான்றினால் கி.மு.மூன்றாம் நூற்றாண்டு அளவிலேயே சோழப் பெருவேந்தரின் குடி, வட இந்திய மக்களின் கருத்தைக் கவரத்தக்க நிலையில் பெருவாழ்வு பெற்றிருந்தமையைக் காணமுடிகிறது. ஆதலால் சோழவேந்தர்களின் காலநிலை கி.மு. நான்காம் நூற்றாண்டிலிருந்து கி.மு. முதல் நூற்றாண்டு வரை இருந்திருக்கலாம் என்று அறியமுடிகிறது. "சங்கப்பாக்களின் வழி 20 சேரர்களும், 18 சோழர்களும், 14 பாண்டியர்களும் பாடப்பட்டுள்ளனர்."[71] இந்த ஐம்பத்திரண்டு மூவேந்தர்களில் சோழர்கள் சிறப்பிடம் பெற்றிருந்தனர் என்பதை,

முடியுடை வேந்தர் மூவருள்ளும்
தொடிவிளங்கு தடக்கைச் சோழர்[72]

என்று சிலம்பு சுட்டுகிறது.

சங்கம் வைத்துத் தமிழைப் புரந்தவர் பாண்டியர் எனின் சங்கத்தமிழ்ப் புலவர் பலரை ஆதரித்து இனிய தமிழ்மொழியை வளர்த்தப் பெருமை சோழர்க்குரியதாகும். வரலாற்றாசிரியர்கள் சோழர்களைச் சங்க காலச் சோழர்கள், பிற்காலச் சோழர்கள் என இருவகையாகப் பாகுபடுத்தியுள்ளனர். பிற்காலச் சோழர்களின் வரலாற்றினை அறிவதற்குக் கல்வெட்டுகளும் அவர்தம் மெய்க்கீர்த்திகளும் உதவுகின்றன. ஆனால் சங்க காலச் சோழர்களின் வரலாற்றினை விரிவாக அறிந்து கொள்வதற்கு இத்தகைய சான்றுகள் இல்லையெனினும் சங்க இலக்கியங்களில் ஆங்காங்குக் காணப்படும் குறிப்புகளைக் கொண்டு அறியமுடிகிறது.

சேரர், பாண்டியர் முழு அதிகாரம் படைத்த வேந்தராக இருந்துள்ளனர். ஆனால் சோழர், கூட்டுக் குடும்பங்கள் பல சேர்ந்த குடியாட்சி முறையைத் தொடக்கத்தில் கொண்டிருந்தனர். இக்கருத்திற்குச் சோழர் ஒன்பது தாயாதிகளாகப் பிரிந்து போரிட்டுக் கொண்டிருந்த நிலையினை, “சங்க இலக்கியங்களை ஆராய்ந்து பார்க்கிறபோது சோழ அரசர்களைப் பற்றி ஒரு செய்தி தெரிகிறது. சோழ மன்னர் பரம்பரையில் ஒன்பது தாயாதிகள் இருந்தனர். அவர்கள் முடி மன்னனாகிய பெரிய சோழ அரசனுக்குக் கீழடங்கிச் சிற்சில நாடுகளை அரசாண்டனர். ஆனால் அவர்கள் அடிக்கடி தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். சோழர்குலத்து அரசர் தங்களுக்குள்ளே போரிட்டுக் கொண்டதைச் சங்க நூல்களில் காண்கிறோம். தாயாதிகள், சமயம் நேர்ந்தபோதெல்லாம் முடியரசனுடன் போர்செய்து கலகம் உண்டாக்கினார்கள். கரிகாற்சோழன் அரச கட்டில் ஏறியபோது ஒன்பது தாயாதிகள் அவனுக்கு எதிராகக் கலகஞ் செய்து போரிட்டார்கள். அவர்களை எல்லாம் அவன் வென்று அடக்கிய பிறகு முடிசூடினான். தாயாதிப்போர் ஒருபுறமிருக்க சோழ அரசர்களில் அண்ணன் தம்பிகளும் சில வேளைகளில் ஒருவருக்கொருவர் போர் செய்தனர்”[73] என்று அரங்க.இராமலிங்கம் சுட்டுகிறார்.

சங்க கால மன்னர்களின் காலநிலையை ஆராய்ச்சி செய்த வரலாற்றாசிரியர்களான பத்மஜா ரமேஷ், வி.பி.புருஷோத்தமன் ஆகியோர், சங்க காலத்தில் பதினெட்டு சோழவேந்தர்கள் இருந்தனர். அவர்கள் கிள்ளி, சென்னி என இருகுடி வழியாகப் பிரிந்து சங்க காலத்தை ஆட்சி செய்துள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளனர்.

கி.மு.நான்காம் நூற்றாண்டுக்கு முன் சோழர் குடியைச் சேர்ந்த பல கிளையினர் அழுந்தூர், ஆமூர், கழார், குடந்தை, பெருந்துறை, போஓர், வல்லம் முதலிய இடங்களில் சிறுசிறு குடியாட்சிகளை அமைத்துக் கொண்டு வாழ்ந்தார்கள். ஒவ்வொரு கிளையினரும் தங்களுக்குள் ஒரு தலைவனைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு, அத்தலைவனைச் சோழர் பெருமகன் என்று அழைத்துள்ளனர். பல சங்கப் பாடல்கள் சோழர்களைப் பன்மையிலேயே குறிப்பிடுவதைக் காணமுடிகிறது. காலப்போக்கில் சோழர் குடியில் இரு கிளையினர் தம் படைபலத்தால் சிறப்புற்று கிள்ளி, சென்னி என இரு வழியாகப் பிரிந்துள்ளனர். கிள்ளி வழியினர் உறையூரைக் கைப்பற்றி அங்கிருந்து ஒரு பேரரசை அமைக்கத் தொடங்கினார்கள். இவ்வழியினர் தம்மைப் பெருநற்கிள்ளி என்று அழைத்துக் கொண்டனர். சென்னி வழியினர் அழுந்தூரில் ஆட்சி தொடங்கி காவிரிப்பூம்பட்டினம் வரை தம் ஆட்சியை விரிவாக்கி ஆளத் தொடங்கினார்கள் என்பதை அறியமுடிகிறது.

### சோழர்களின் குலவழிமுறை

சங்க காலச் சோழர்களில் கிள்ளிவழிச் சோழராக அறுவரும், சென்னி வழிச் சோழராக பன்னிருவரும் காணப்படுகின்றனர்.

சங்க காலச் சோழர்கள்

↓

| கிள்ளி வழியினர் | சென்னி வழியினர் |
|---|---|
| 1. தித்தன் | 1. பெரும்பூண் சென்னி |
| 2. சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி | 2. சோழன் கரிகால் பெருவளத்தான் (1) |
| 3. சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி | 3. சோழன் உருவப் பல்தேர் இளஞ்சேட்சென்னி |
| 4. சோழன் வேல்பல் தடக்கைப் பெருநற்கிள்ளி | 4. சோழன் கரிகால் பெருவளத்தான் (2) |
| 5. கோப்பெருஞ்சோழன் | 5. சோழன் சேட்சென்னி நலங்கிள்ளி |
| 6. காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி | 6. மாவளத்தன் |
| | 7. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் |

8. *சோழன் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளி வளவன்*

9. *சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி*

10. *சோழன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி*

11. *சோழன் நல்லுருத்திரன்*

12. *சோழன் கோச்செங்கணான்*

**1. தித்தன் (கி.மு.325-300)**

*ஆர்க்காட்டுத் தலைவர்களான அழிசியும், அவன் மகனான சேந்தனும் உறையூர்ப் பகுதியை ஆண்டு வந்தார்கள். இவர்களின் பிரதிநிதியாகப் பெருங்கோழி நாய்கன் உறையூரை நிர்வாகம் செய்தான். இவனிடமிருந்த உறையூரை வென்று சோழ அரசை நிறுவியவன் தித்தன் ஆவான். இவனது முழுப்பெயர் வீரைவேண்மான் வெளியன் தித்தன் என்பதாகும். இவன் கடற்கரைப் பட்டினமாகிய வீரையை ஆட்சி செய்தான் என்பதை,*

அடுப்போர் வெளிவீரை முன்துறை
நெடுவேள் உப்பின் நிரம்பாக் குப்பை
பெரும் பெயற்கு உருகியாங்கு அங்கு[74]

*என்னும் பாடல் உணர்த்துகிறது. தொல்காப்பியம் அகத்திணையியல் 30வது நூற்பா 'மன்னர் பாங்கின் பின்னோர் ஆகுப' என்பதற்கு உரைசெய்த நச்சினார்க்கினியர், பிற்காலத்தில் சோழன் உருவப்பல்தேர் இளஞ்சேட்சென்னியும், அவன் மகன் கரிகால் வளவனும் வேளிர்குடி மகளை மணந்ததாக உரைவிளக்கம் தருகிறார். இக்கருத்தினை நோக்கும்பொழுது, வேளிர் குடியில் பிறந்த தித்தன் சோழர் மகளை மணந்து சோழர் குடியோடு ஒன்றிவிட்டான் என்று கருத வாய்ப்பிருக்கிறது. உறையூரைக் கைப்பற்றி சோழ அரசை நிலைக்கச் செய்த தித்தன் உறையூரைச் சுற்றி காவல்காடு அமைத்துக் காப்புடையதாக்கினான். தித்தனுக்குப் பிறகும் உறையூர், "**தித்தன் உறந்தை**"[75] என்றே அழைக்கப்படலாயிற்று. தித்தனுக்கு ஐயை என்றொரு மகளும், தித்தன் வெளியன் என்றொரு மகனும் இருந்துள்ளனர். இம்மன்னன் சிறந்த புலவனாகவும் திகழ்ந்துள்ளதை அறியமுடிகிறது.*

## 2. சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி (கி.மு.300-275)

தித்தன் மகனான இவன் இயற்பெயர் தித்தன் வெளியன் என்பதாகும். பழையன் என்பவனுடைய ஊர் 'போஓர்' எனப்படும் போர்வை ஆகும். இவ்வூரை வென்றதால் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி என்று அழைக்கப்பட்டான். மற்போரில் பெரும் விருப்பமுடையவன். ஆமூர் மல்லனோடு மற்போர் செய்து வென்றான். அரசனான பிறகும் மற்போர் நிகழ்வதைக் கண்டு களித்தான். இவனது அவையில் மற்போர் செய்வதில் வலிமை மிகுந்த பாணன் ஒருவன் இருந்தான். இப்பாணனோடு மற்போர் செய்வதற்கு வந்த கட்டி என்பவன் மற்போர் தொடங்குவதற்கு முன்னரே உறையூர் நாளவையில் கொட்டப்பட்ட கிணைப்பறை ஓசையைக் கேட்டு அஞ்சி மற்போர் செய்யாமலே பின்வாங்கி ஓடினான் என்பதை,

> வலிமிகு முன்பின் பாணனொடு மலிதார்த்
> தித்தன் வெளியன் உறந்தை நாளவைப்
> பாடுஇன் தென்கிணைப் பாடுகேட்டு அஞ்சிப்
> போரடு தன்னைக் கட்டி
> பொரா அது ஒடிய ஆர்ப்பினும் பெரிதே[76]

என்னும் பாடல் எடுத்தியம்புகிறது. போர்வைக் கோப்பெருநற்கிள்ளியை, பெருங்கோழி நாய்கன் மகளான நக்கண்ணையார் காதலித்துள்ளார். ஆனால் இவர்கள் திருமணம் செய்து கொண்டனர் என்பதற்குப் போதிய சான்று இல்லை. எனினும் தித்தன் வெளியனுக்கு நல்லினி என்ற மகள் இருந்துள்ளாள். அவள் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனுக்கு மணம் செய்து வைக்கப்பட்டுள்ளாள். நல்லினிக்கும், உதியஞ்சேரலாதனுக்கும் பிறந்த மகனே இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்று பதிற்றுப்பத்தின் இரண்டாம் பதிகம் கூறுகிறது.

## 3. சோழன் முடித்தலைக் கோப்பெரு நற்கிள்ளி (கி.மு.275-250)

சோழன் போர்வைக் கோப்பெரு நற்கிள்ளிக்குப் பிறகு அவன் மகன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி உறையூர்ச் சோழன் ஆனான். தலையில் முடிசூடிக்கொண்டு ஆட்சி செய்தான் என்பதை அவன் பெயரிலுள்ள 'முடித்தலைக்கோ' என்ற பெயர் சுட்டிக்காட்டுகிறது. வளம்மிக்க நாடுடைய இச்சோழமன்னன் நல்ல வீரன். நாற்படை உடையவன். அதனால் செருக்குற்று அந்துவஞ்சேரலுக்குரிய கருவூரை முற்றுகையிட்டான். 'ஒருநாள் அவன் ஏறியிருந்த யானை மதம் கொண்டு, சோழர் படையைக் கடந்து சேரர் படைக்குள் புகுந்துவிட்டது.

அப்பொழுது கருவூர் வேண்மாடத்தில் அந்துவஞ்சேரலோடு அமர்ந்திருந்த புலவர் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், மதங்கொண்ட யானை மீது பகைப்படையுள் நுழைந்துவிட்ட சோழன் தீங்கேதுமின்றித் திரும்ப வழிசெய்க என அந்துவஞ்சேரல் இரும்பொறையை வேண்டிக்கொண்டார்.'[77] இந்தக் காலநிலையில் அந்துவஞ்சேரலின் தம்பி நெடுஞ்சேரலாதனுக்குத் தன் மகள் நற்சோணையை மணம்முடிக்க வந்த முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளியே 'மணக்கிள்ளி' என்று பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பதிகம் கூறுகிறது. சோழன் மகள் நற்சோணை சேரன் செங்குட்டுவனைப் பெற்றெடுத்தாள்.

## 4. சோழன் வேல்பல் தடக்கைப் பெருநற்கிள்ளி (கி.மு.250-225)

சோழன் முடித்தலைக் கோப்பெருநற் கிள்ளிக்குப் பிறகு அவன் மகன் வேல்பல் தடக்கைப் பெருநற்கிள்ளி உறையூர்ப் பகுதியை ஆண்டு வந்தான். சேரன் செங்குட்டுவன் தாயும் நெடுஞ்சேரலாதன் மனைவியுமான நற்சோணை இவன் தங்கையாவாள். என்ன காரணத்திலோ மைத்துனர்களுக்கிடையே போர் மூண்டது. இந்தப் போரில் இருதரப்புப் படைகளும் எதுவும் இல்லாமல் அழிந்துபோனது. இறுதியில் இரு மன்னர்களும் போரில் மாண்டார்கள். இவர்கள் இருவரும் போர்க்களத்திலேயே இறந்து கிடந்த நிலையைக் கண்டு வருந்தி கழாத்தலையாரும் பரணரும் பாடியுள்ளார்கள்.

## 5. கோப்பெருஞ்சோழன் (கி.மு.225-200)

கிள்ளி வழிச் சோழனான இவன் உறையூரிலிருந்து ஆட்சிபுரிந்தான். இவன் பெருங்கோக்கிள்ளி, தேர்வண்கிள்ளி, கோழியோன், பொத்தியாண்ட பெருஞ்சோழன், பேதைச் சோழன் என்று புறநானூற்றுப் பாடல்களிலும், பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பதிகத்திலும் குறிப்பிடப்படுகிறான். இவன் ஆட்சியைச் சரிவர கவனிக்காமல் தத்துவ ஞானத்தில் ஈடுபட்டு, அறிஞர்களோடு அளவளாவியதால் இவன் நாட்டின் பெரும்பகுதியைச் சென்னி வழிச் சோழர்களான உருவப்பல்தேர் இளஞ்சேட்சென்னியும், அவன்மகன் இரண்டாம் கரிகால்வளவனும் கைப்பற்றிக் கொண்டார்கள். சேரமான் இளஞ்சேரல் இரும்பொறையும் இவனைத் தோற்கடித்தான். தந்தையின் திறமையற்ற நிர்வாகத்தைக் கண்டித்து அவனது இரு புதல்வர்களும் இவனுக்கு எதிராக கலகம் விளைவித்தார்கள். புதல்வர்கள் மேல் போருக்கெழுந்த கோப்பெருஞ்சோழனைப் புல்லாற்றூர் எயிற்றியனார் என்னும்

புலவர் நல்வழிப்படுத்தினார். கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர்விடத் துணிந்தான். பாண்டிய நாட்டில் பிசிர் என்ற ஊரில் வாழ்ந்த ஆந்தையார் இவனைக் காணாமலேயே இவனுடன் நட்பு கொண்டிருந்தார். அவரும் சோழநாடு வந்து கோப்பெருஞ்சோழனோடு வடக்கிருந்தார். அவனது அவைக்களப் புலவரான பொத்தியாரும் புதல்வன் பிறந்த பிறகு வடக்கிருந்து உயிர்விட்டார்.

## 6. காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி (கி.மு.200-175)

கோப்பெருஞ்சோழனின் மகனான இவன், கிள்ளி வழியினரின் ஊர்களை மெல்ல மெல்லச் சென்னி வழியினர் கைப்பற்றுவதைப் பொறுக்காமல் தந்தையை எதிர்த்துக் கலகம் விளைவித்தான். மனம் வெறுத்த கோப்பெருஞ்சோழன் அரசைத் துறந்து வடக்கிருந்து உயிர்விட்டதும், இரண்டாம் கரிகால் வளவன் உறையூரைக் கைப்பற்றி அங்கிருந்த சோழநாடு முழுவதையும் தானே ஆட்சிபுரிந்தான். அவனுக்குப்பின் சேட்சென்னி நலங்கிள்ளி சோழ மன்னனானான். அதுவரை ஒடுங்கியிருந்த நெடுங்கிள்ளி ஆவூர்க்கோட்டையையும் அதன் பிறகு உறையூர்க் கோட்டையையும் கைப்பற்றினான். நலங்கிள்ளி இக்கோட்டைகளை முற்றுகையிட்டான். கோவூர் கிழார் என்னும் புலவர் இருவருக்கும் சமாதானம் செய்துவிக்க முயன்றும் பயனில்லை. இறுதியில் நெடுங்கிள்ளி காரியாறு என்னுமிடத்தில் இறந்துபோனான். அவனோடு கிள்ளி-சென்னி வழியினர் உட்பூசல் மறைந்ததோடு கிள்ளி வழி ஆட்சியும் முடிவுற்றது. "மணிமேகலையில் நெடுமுடிக்கிள்ளி என்பவன் தன் இளங்கோனால் சேர, பாண்டியரைக் காரியாற்றில் வென்றான் என்று ஒரு பகுதி வருகிறது. இதன் அடிப்படையில் நெடுமுடிக்கிள்ளியே நெடுங்கிள்ளி என்றும் அவன் இளங்கோன் நலங்கிள்ளி என்றும், இருவரும் கரிகால் வளவனின் புதல்வர்கள் என்றும் ஓர் அறிஞர் கூறுவது பொருந்தாது"[78] என்கிறார் பத்மஜா ரமேஷ்.

## 7. பெரும்பூண்சென்னி (கி.மு.300-375)

முதலாம் கரிகால் வளவனின் தந்தையான இவனிலிருந்து சென்னி வழிச்சோழர் ஆட்சி துவங்குகிறது. கிள்ளி-சென்னி வழிச் சோழர்கள் தங்கள் ஆட்சிப் பகுதியை விரிவாக்கப் பகைவர்களோடு போரிட்டக் காலத்தில் ஒருங்கிணைந்து செயல்பட்டுள்ளதை அறியமுடிகிறது. 'சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி தன் அரசை விரிவாக்க முயன்றபோது அதற்குத் தடையாக இருந்த கொண்கானத்துத்

தலைவன் நன்னனை வெல்வதற்குத் தன் படைத்தலைவனான பழையனை அனுப்பினான். நன்னன், கட்டி முதலிய ஐவரோடு சேர்ந்து பழையனைக் கொன்றான். போர்வைக்கோப்பெருநற்கிள்ளி மீண்டும் நன்னன்மேல் போர்செய்ய பெரும்பூண்சென்னியை அனுப்பினான். பெரும்பூண் சென்னியும் நன்னனின் மீது போர்தொடுத்துச் சென்று, அப்போரில் நன்னனின் நண்பனான கணையனைச் சிறைப்பிடித்து அவனுடைய 'கழுமலம்' என்ற நகரை கைப்பற்றினான்'[79] என்பதை அகநானூற்றுப் பாடல் கூறுகிறது.

## 8. சோழன் கரிகால் பெருவளத்தான் (கி.மு.275-250)

பதினொரு சங்கப் பாடல்களில் கரிகால் வளவனைப் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. இவற்றைக் கொண்டு சங்க காலத்தில் வாழ்ந்த கரிகால்சோழன் ஒருவர் என்றும் இருவர் என்றும் வேறுபட்ட கருத்துகள் வரலாற்று அறிஞர்களிடையே நிலவி வருகின்றன.

கே.என்.சிவராசபிள்ளை, 1932இல் வெளியிட்ட 'முற்காலத் தமிழர் நிலை' என்ற ஆங்கில நூலில் கரிகால் வளவன் என்ற பெயரில் பாட்டனும் பேரனுமாக இருவர் இருந்தனர் என்றும், அவர்களுள் முதலாம் கரிகாலன் உருவப் பல்தேர் இளஞ்சேட்சென்னியின் தந்தை என்றும் இரண்டாம் கரிகாலன் இளஞ்சேட் சென்னியின் மகன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

முதலாம் கரிகாலன் பெரும்பூண்சென்னியின் மகன் ஆவான். இவன் வெண்ணி என்னுமிடத்தில் பதினொரு வேளிர்களோடும் வேந்தர்களோடும் போர் செய்து அவர்களைத் தோற்கடித்தான்[80] என்று அகநானூற்றுப் பாடல் உணர்த்துகிறது.

வாகைப் பறந்தலையில் ஒன்பது மன்னர்களைத் தோற்கடித்தான்[81] என்னும் செய்தியினை அகநானூற்றுப் பாடல் தெரிவிக்கிறது.

வெண்ணியில் சேரமன்னன் பெருஞ்சேரலாதனைத் தோற்கடித்து பெரும்போர் செய்தான். அப்போரில் ஏற்பட்ட புறப்புண்ணுக்கு நாணி சேரமன்னன் உயிர்துறந்ததையும் அதனைக் கேள்வியுற்ற வெண்ணிக் குயத்தியார் என்னும் புலவர் கரிகாலனது வன்மையினையும் சேரமானது மான உணர்வினையும் பாராட்டினார்.

*கரிகால் வளவன் நாடோடிகளாகத் திரிந்த ஒரு குடியினரைப் பாதுகாத்து பிறநாட்டிற்குச் செல்லாமல் பாதுகாத்தான் என்பதை,*

செல்குடி நிறுத்த பெரும் பெயர்க் கரிகால்
வெல்போர்ச் சோழன்[82]

*என்னும் அகநானூற்றுப் பாடல் உரைக்கின்றது. இவன் ஆட்டனத்தி, ஆதிமந்தி போன்ற கலைஞர்களை ஆதரித்துள்ளான்.*

## 9. சோழன் உருவப்பல்தேர் இளஞ்சேட் சென்னி (கி.மு.250-225)

*முதல் கரிகால் சோழனின் மகனான இவன் இரண்டாம் கரிகால் வளவனின் தந்தை ஆவான். இச்செய்தியினை,* உருவப் ப்.:றேர் இளையோன் சிறுவன்[83] என்று *முடத்தாமக் கண்ணியார் பாடுவதிலிருந்து அறியலாம். இவன் சேரமானின் பாமூளூரையும், நன்னனின் பாழி நகரையும் வென்றான். மேலும் ஆரியர் தமிழ்நாட்டின்மேல் படையெடுத்தபொழுது அவர்களுக்குத் துணையாக வந்த வடுகரை முறியடித்தான். தென்பரதவரை அழித்தான். இவனால் ஆதரிக்கப்பெற்ற புலவரான ஊன்பொதி பசுங்குடையார் இவன் குணநலச் சிறப்பினைக் கூறும்பொழுது எந்தச் செயலையும் செம்மையாக செய்பவன். இவனை வழிபட்டு வருவோரை முன்னதாக அறிந்து அருள் செய்வான். பிறரைப் பற்றி குற்றம் கேளாதவன். விருந்தினர்களுக்கு அமிழ்தத்தை விட சுவையான உணவைத் தருபவன். குற்றங்களைத் தக்க முறையில் ஆராய்ந்து நீதி வழங்குபவன். பகைவீரர்களை வெல்லும் வலிய மார்பினை உடையவன் என்று அவனது பல குணங்களையும் வியந்து பாராட்டுகின்றார்.*

## 10. சோழன் கரிகால் பெருவளத்தான் (2) (கி.மு.225-200)

*முதலாம் கரிகால் வளவனின் பேரனான இவன் தாய்வயிற்றில் இருந்தபோதே அரசுரிமையைப் பெற்றான். இதனை,*

முருகெழு சீற்றத்து உருகெழு குரிசில்
தாய் வயிற்றிலிருந்து தாயம் எய்தி[84]

*என்று பொருநராற்றுப்படை குறிப்பிடுகின்றது. கரிகால் வளவன் சிறுவனாக இருந்தபோதே இவன் தாயாதி குடியினர் இவனைச் சிறையிலிட்டனர். தன் திறமையால் சிறையிலிருந்து வெளியேறி ஆட்சியைக் கைப்பற்றினான். சேர, பாண்டியரை வெண்ணியில் தோற்கடித்தான். இவ்வரலாற்றினை,*

**இருபெரு வேந்தரும் ஒரு களத்தவிய**
**வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்தாள்**
**கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்**[85]

என்று இவனது வெற்றிச் சிறப்பினை முடத்தாமக் கண்ணியார் பாடுகிறார்.

மேலும் ஒளியர், அருவாளர், வடவர், குடவர், தென்னவன், இளங்கோவேள் முதலியோரையும் இவன் அடக்கி செங்கோல் ஆட்சி செலுத்தினான். முதலில் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து ஆட்சி செய்த இவன் கோப்பெருஞ்சோழன் இறந்த பிறகு தனது தலைநகரை உறையூருக்கு மாற்றினான் என்பதைப் பிறங்கு நிலை மாடத்து உறந்தை போக்கி[86] என்று பட்டினப்பாலை தெரிவிக்கிறது.

## 11. சோழன் சேட்சென்னி நலங்கிள்ளி (கி.மு.200-175)

உருவப் பல்தேர் இளஞ்சேட் சென்னியின் பேரனான இவன் இரண்டாம் கரிகால் வளவனின் மகனாவான். இரண்டாம் கரிகால் வளவன் கிள்ளி வழியினருக்குரிய உறையூர்ப்பகுதியைக் கைப்பற்றிய பிறகு இருவழியினரின் பெயரையும் இணைத்துத் தன் மகனுக்குச் சேட்சென்னி நலங்கிள்ளி என்ற பெயரை வைத்தான். இவன் தந்தை ஆட்சி செய்த வரையில் கோப்பெருஞ்சோழன் மகனான நெடுங்கிள்ளி அடங்கியிருந்தான். கரிகால் வளவன் இறந்தபிறகு நெடுங்கிள்ளி, நலங்கிள்ளியை எதிர்த்து கலகம் விளைவித்தான். நலங்கிள்ளியின் ஆவூர்க்கோட்டையினை முற்றுகையிட்டான். இவனின் செயலைக் கண்டு சினங்கொண்ட நலங்கிள்ளி, ‘என் ஆற்றலை மதிக்காமல் என் உள்ளத்தை நோகச் செய்த நெடுங்கிள்ளி அறிவில்லாதவன். தூங்கும் புலியை இடறிய குருடனைப்போல பிழைத்து போவது அரிதாகும். மெல்ல வந்து என் காலில் விழுந்து அரசுரிமை வேண்டும் என்று இரந்திருந்தால் அரசுரிமையோடு, என் உயிரையும் கொடுத்திருப்பேன் என்று வீரசபதம் செய்தான்.’[87] நெடுங்கிள்ளி இறந்தபிறகு நலங்கிள்ளி உட்பகை இன்றிச் சோழநாட்டை ஆட்சிபுரிந்தான். அவன் பெற்ற மற்றொரு வெற்றி ‘ஏழெயில் கதவம்’ ஆகும். பாண்டி நாட்டில் ஏழு கோட்டைகள் கட்டிக்கொண்டு ஆட்சிசெய்த குறுநிலத் தலைவன்மேல் படையெடுத்து, அப்பகுதியைக் கைப்பற்றி, அக்கோட்டையின் மதில் கதவுகளில் சோழரின் புலிச் சின்னத்தைப் பொறித்தான் என்னும் செய்தியினை,

தென்னம் பொருப்பன் நல்நாட்டுள்ளும்
ஏழெயில் கதவம் எறிந்து கைக்கொண்டு, நின்
பேழ்வாய் உழுவை பொறிக்கும் ஆற்றலை[88]

என்ற அடிகள் எடுத்துக்காட்டுகின்றன. பாண்டியன் நெடுஞ்செழியன் தலையாலங்கானப் போரில் இம்மன்னனைக் கொன்றான்.

## 12. மாவளத்தன் (கி.மு.200-175)

இம்மன்னன் சோழன் நலங்கிள்ளியின் தம்பியாவான். 'மாவளத்தனும், தாமப்பல்கண்ணனார் என்ற புலவரும் ஒரு சமயம் வட்டாடிக் கொண்டிருந்தனர். வட்டுக்களில் ஒன்று தாமப்பல்கண்ணனாரை அறியாமல் அவர்க்கீழ் விழுந்துவிட்டது. அதனை உணர்ந்த மாவளத்தன் வெகுண்டு அவரை அவ்வட்டினால் எறிந்தான். இவனின் செய்கையை இகழ்ந்த இப்புலவர் நின்சோழர்குடிக்கு நின் செயல் பொருந்துவது இயல்பன்று. நின் பிறப்பின்கண் ஐயமுறுகின்றேன் என்று வருந்தி உரைத்தார். அதனைக்கேட்ட மாவளத்தன் தன் தவறினை உணர்ந்து நாணி தலைகுனிந்தான். புலவரும் அவனை மன்னித்து வாழ்த்திச் சென்றார்'[89] என்று புறநானூற்றுப் பாடல் எடுத்துரைக்கிறது.

## 13. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் (கி.மு.175-150)

சோழன் நலங்கிள்ளியின் மகனான இவன் சோழநாடு முழுவதற்கும் அரசனானான். அவ்வமயம் மூவேந்தர்களில் யாராவது ஒருவருக்குப் போரில் படைத்துணை புரிந்துவந்த மலையமான் குடியினர் முள்ளூர் மலைப்பகுதியில் வாழ்ந்து வந்தனர். அக்குடியினர் சோழருக்கு மட்டுமே துணைபுரிய வேண்டும் என்று கிள்ளிவளவன் விரும்பினான். 'தேர்வண்மலையன்' என்பவனைத் தன்னுடைய நிரந்தர படைத்தலைவனாக இருக்கும்படி கேட்டுக்கொண்டான். மலையன் மறுக்கவே, கிள்ளிவளவன் அவனை வென்று, அவன் மக்களை உறையூருக்குக் கொண்டுவந்து யானையை ஏவி அவர்களைக் கொல்லும்படிச் செய்தான். கோவூர் கிழார் கிள்ளிவளவனுக்கு அறிவுரை கூறி மலையமான் மக்களைக் காப்பாற்றினார். இதன் பிறகு 'தேர்வண்மலையன்' சோழருக்கு மட்டும் படைத்துணை புரிந்தான். இறுதியாக கிள்ளிவளவன் கூடலின்மேல் படையெடுத்தான். பாண்டியன் படைத்தலைவனான 'பழையன் மாறன்' கிள்ளி வளவனைத் தோற்கடித்தான். இதைக் கேள்வியுற்ற 'கிள்ளிவளவனிடம் பகைமை கொண்ட 'கோக்கோதை மார்பன்' மகிழ்ச்சிக்

கொண்டான் என்னும் செய்தியை அகநானூற்றுப் பாடல் எடுத்துரைக்கின்றது.'[90] கூடல் போருக்குப் பிறகு கிள்ளி வளவன் இறந்து போனான். அவன் உடல் பெரிய தாழியில் புதைக்கப்பட்டது.

### 14. குராப்பள்ளி துஞ்சிய பெருந்திருமாவளவன் (கி.மு.150-125)

சோழன் கிள்ளி வளவனின் மகனான இவன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு திருச்சி மாவட்டப் பகுதியை ஆண்டு வந்தான். பாண்டியன் இலவந்திகைப் பள்ளி துஞ்சிய நன்மாறனால் தோற்கடிக்கப்பட்டு, சோழநாட்டை விட்டு ஓடி, மலையமானின் முள்ளூரில் தஞ்சம் புகுந்தான். மலையமான், சோழிய ஏனாதி திருக்கண்ணன் ஆகிய இருவரின் படைத்துணையோடு மீண்டும் உறையூர் அரசனானான். நன்மாறன் மகனான பாண்டியன் வெள்ளி அம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியோடு சமாதான உடன்படிக்கை செய்துகொண்டான். காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார், உறையூர் மருத்துவன் தாமோதரனார், கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக்குமரனார் ஆகிய மூன்று புலவர்களும் இவனைப் பாடியுள்ளனர். காவிரிபூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்,

> நீயே தண்புனல் காவிரிக் கிழவனை
>
> ........................................................
>
> அறம் துஞ்சு உறந்தைப் பொருநனை[91]

என்று புகழ்ந்து பாடுகிறார்.

### 15. இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி (கி.மு.150-125)

கிள்ளிவளவனின் இரண்டாவது மகனான இவன் தஞ்சாவூர் மாவட்டப் பகுதியை ஆட்சி செய்தான். சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியைப் பாடிய உலோச்சனார் என்ற புலவர்,

> நாடு என மொழிவோர்; அவன் நாடுஎன மொழிவோர்
>
> வேந்து என மொழிவோர் அவன் வேந்து என மொழிவோர்[92]

என்று பாடுகிறார்.

அருவந்தையின் அம்பர் என்ற ஊரை இவன் கைப்பற்றினான். பெரியன் என்பவன் இவன் படைத்தலைவன் ஆவான். இவன் இராசசூய யாகம் செய்தபோது 'சேரமான் மாரிவெண்கோவும், பாண்டியன் கானப்பேர் தந்தை உக்கிரப்

பெருவழுதியும் வேள்விக்கு வந்து சிறப்பித்தனர். ஒன்றாக வீற்றிருந்த மூவேந்தர்களையும் ஔவையார் வாழ்த்திப் பாடியதைப் புறநானூற்றுப் பாடல் குறிப்பிடுகின்றது.'[93]

## 16. சோழன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி (கி.மு.150-125)

கிள்ளி வளவனின் மூன்றாவது மகனான இவன் புதுக்கோட்டை மாவட்டப் பகுதியை ஆட்சி செய்தான். இவன் வீரத்தில் சிறந்து விளங்கியுள்ளான். 'நலங்கிள்ளி சேட்சென்னியோடுப் போருக்கு வருபவர் யாராவது இருந்தால் அதன் விளைவு அவர்களுக்கேத் தெரியும். அவனோடு போர்செய்தவர் வாழ்ந்ததை நாங்கள் கண்டதில்லை. காலம் தாழ்த்தாமல் அவன் அடியை வணங்கியவர்கள் வருந்தக் கண்டதும், இல்லை'[94] என்று அவனது வலிமையை, மதுரைக் குமரனார் என்னும் புலவர் புறநானூற்றுப் பாடலில் தெரிவிக்கின்றார்.

## 17. சோழன் நல்லுருத்திரன் (கி.மு.125-100)

சிவபெருமான் பெயரைத் தாங்கிய சோழ மன்னனான இவனுக்கு முன்பு வாழ்ந்த சோழர்கள் கிள்ளி, சென்னி, வளவன் என்ற பெயருடையவர்களாக திகழ்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். சோழநாட்டின் சின்னஞ்சிறு பகுதியை இவன் ஆட்சி செய்ததால் நாட்டை விரிவாக்கப் பெருமுயற்சியுடைய நல்ல நண்பர்கள் தனக்குத் தேவை என்பதை,

> புலி பசித்தன்ன மெலிவுஇல் உள்ளத்து
> உரனுடையாளர் கேண்மையோடு
> இயைந்த வைகல் உள ஆகியரோ[95]

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

## 18. சோழன் கோச்செங்கணான் (கி.மு.100-75)

இம்மன்னன் சேரமான் கணைக்கால் இரும்பொறையைப் போரில் வென்று குடவாயில் சிறைச்சாலையில் வைத்தான். 'சிறைக்காவலர் சேரனை அலட்சியப்படுத்தி, தாமதமாகத் தண்ணீர் கொண்டு வந்ததால் அதை அருந்தாமல் உண்ணா நோன்பிருந்து உயிர்விட்டான்'[96] என்று புறநானூற்றுப் பாடல் தெரிவிக்கின்றது. இதைத் தவிர சங்க காலத்தில் வாழ்ந்த செங்கணானைப் பற்றி

வேறொன்றும் அறியமுடியவில்லை. சங்கப் பாடலில் வரும் செங்கணான் வேறு; தேவாரப் பாடல்களிலும், திருமங்கையாழ்வார் பாடல்களிலும் போற்றப்படுபவனும், சிவபிரானுக்கும் திருமாலுக்கும் கோயில்கட்டியவனும், அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவனாகவும் திகழும் கோச்செங்கணான் வேறு. "சங்க கால கோச்செங்கணான் கி.மு. முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவன். சிவபக்தன் கோச்செங்கணான் கி.பி.ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவன். இவர்கள் இருவரையும் ஒருவர் என்று கருத இயலாது"[97] என்கிறார் வி.பி.புருஷோத்தமன்.

**அடையாளச் சின்னங்கள்**

தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களும் தங்களுக்கென்று தனித்தனி அடையாளச் சின்னங்களைக் கொண்டிருந்தனர். இந்த அடையாளச் சின்னங்கள் மரபாகவே கடைப்பிடிக்கப்பட்டு வந்தன. தொல்காப்பியரும் இந்த அடையாளச் சின்னங்களைப் பற்றி,

> .............................. உறுபகை
> வேந்திடைத் தெரிதல் வேண்டி ஏந்து புகழ்ப்
> போந்தை வேம்பே ஆர்என வரூஉம்
> மாபெருந் தானையர் மலைந்த பூவும்[98]

என்னும் நூற்பாவில் சேரர்க்குரியது பனை மாலை; பாண்டியர்க்குரியது வேப்ப மாலை; சோழர்க்குரியது அத்தி மாலையென்று குறிப்பிட்டுள்ளார். இதுபோன்றே இலச்சினையும் மூவேந்தர்களுக்கு வெவ்வேறானதாக இருந்துள்ளது. சோழர்களுக்குரிய இலச்சினை புலி இலச்சினையாகும். அது அவர்களின் கொடியில் பொறிக்கப்பட்டது. இப்புலிச் சின்னத்தைப் பற்றி கூறும் தமிழ் இலக்கியங்கள் இதன் தோற்றத்தைப் பற்றி ஒன்றும் கூறவில்லை. "இடைக்காலத்தில் தெலுங்கு நாட்டில் ஒரு பகுதியை ஆண்ட சோழர் சிங்க இலச்சினையைப் பெற்றிருந்தனர்"[99] என்று இராசமாணிக்கனார் குறித்துள்ளார்.

சோழர்களின் அடையாளச் சின்னமான புலிச்சின்னம் திறந்த வாயமைப்பு உடையதாக பொறிக்கப்பட்டிருந்தது என்பதனை, "சோழர்களின் அடையாளச் சின்னம் புலி. இது 'பேழ்வாய் உழுவை' என்று கூறப்படுவதால் திறந்த வாயமைப்பு உடையதாகப் பொறிக்கப்பட்டிருந்தது என்பது தெரியவருகிறது"[100] என்ற கருத்தும் சோழரின் புலிச் சின்னத்தை உணர்த்தி நிற்கின்றன.

**சோழர்களின் போர்த்திறம்**

சங்க காலத் தமிழகத்தின் ஆட்சி, மூவேந்தர்கள் குறுநிலமன்னர்களின் நிர்வாகத்தில் இருந்துள்ளது. மூவேந்தர்களுக்கிடையில் அடிக்கடி போர்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. போரின்றி இவர்கள் ஒற்றுமையுடன் ஆட்சி செய்த நிலை மிகவும் குறைவு. எனினும் ஒற்றுமையுடன் கூடியிருந்த நிலையையும் புலவர்கள் பாராட்டியுள்ளனர் என்பதைச் சங்க இலக்கியங்களின் வழி அறியமுடிகின்றது. சங்க காலச் சோழ மன்னர்கள் சிறந்த போர்த்திறம் உடையவராய் விளங்கியுள்ளனர். சங்க காலச் சோழ அரசர்கள் செய்த போர்களுள் குறிப்பிடத்தகுந்த போர்கள், படைச்சிறப்பு, போர்த்திறன்கள் ஆகியவை பின்வருமாறு சுட்டப்பட்டுள்ளன.

**திருப்போர்ப்புறப்போர்**

சோழன் வேல்பல் தடக்கைப் பெருவிறற்கிள்ளியும், குடக்கோ நெடுஞ்சேரலாதனும் பகைமை மேற்கொண்டு தும்பைசூடி இருபெரு வேந்தரும் ‘திருப்போர்ப்புறம்’ என்னுமிடத்தில் கடுமையாகப் போரிட்டனர். “திருப்போர்ப்புறம் என்பது இப்போது தஞ்சை மாவட்டத்தில் கோவிலடி என வழங்குகிறது. இதனைக் கல்வெட்டுகள் ‘திருப்பேர்த் திருப்புறம்’ எனக் குறித்துள்ளன”[101] என்பர்.

**வடநாட்டுப் படையெடுப்பு**

சங்க காலச் சோழமன்னர்களில் கரிகாலன் குறிப்பிடத்தக்கவனாவான். வீரத்திலும் ஈரத்திலும், நாட்டு நலனைக் காப்பதிலும் நற்றமிழை வளர்ப்பதிலும் தலைசிறந்து விளங்கினான். இமயம் வரை உள்ள மன்னர்களை வென்று வாகை சூடினான். கரிகாலனின் வடபுலப் படையெடுப்பினைப் பட்டினப்பாலை மிகச் சுருக்கமாக ‘வடவர் வாட’ என்று குறிப்பிடுகிறது. இவன் இமயத்தில் சென்று புலிச்சின்னத்தைப் பொறித்து மீண்டு வருகையில் வச்சிரநாட்டு வேந்தன் முத்துப்பந்தரைத் திறையாகவும், மகத நாட்டு வேந்தன் பட்டிமண்டபத்தினைத் திறையாகவும், அவந்தி நாட்டு வேந்தன் உயர்ந்த வேலைப்பாடுகளால் நிறைந்த தோரண வாயிலொன்றைத் திறையாகவும் செலுத்தியுள்ளார்கள். இவற்றையெல்லாம் கொண்டுவந்து புகார் நகரத்தினை அழகுற அமைத்தான் என்ற வரலாற்றினைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. பகைவர் மீது பாய்ச்சப் பெறுகின்ற இவன் கைவேல்,

அவரை வென்றழித்தலால் மிக்க வெம்மையுடையதாகவே இருக்கும் என்று அவனின் போர்திறத்தினைப் பொருநராற்றுப்படை எடுத்துரைக்கின்றது.

**படைச்சிறப்பு**

சோழன் சேட்சென்னி நலங்கிள்ளியானவன் எப்பொழுதும் போர்க்களத்திலேயே இருந்து வந்தவன். பகைவர் அஞ்சத்தக்க போர்களில் பெருங்களிப்புக் கொண்டவன். இவனிடம் சிறந்த கடற்படை, குதிரைப்படை, காலாட் படைகள் இருந்ததைப் புறநானூறு குறிப்பிடுகின்றது. இவனது காலாட்படை மூவகைப்படும். அவை தூசிப்படை, இடையணிப்படை, இறுதியணிப்படை என்பனவாகும்.போருக்கு முதல் செல்லுகின்ற தூசிப்படை பனைநுங்கைத்தின்னும், இடையணிப்படை பனம்பழத்தின் கனியை நுகரும். இறுதியணிப்படை சுடப்பட்ட பனங்கிழங்கைத் தின்னும் என்று ஆலத்தூர் கிழார் குறிப்பிடுவதன் மூலம் நலங்கிள்ளியின் காலாட்படையானது மிக நெடிய படையாக இருந்தது எனவும், அவை பகை மன்னரின் வலிமையை முறியடித்தது என்பதையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

**கருவூர் முற்றுகை**

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் செய்த போர்களில் கருவூர் முற்றுகை ஒன்றாகும். இவன்தன் படைகளுடன் கருவூரை முற்றுகையிட்டான். சேர மன்னனோ கருவூர் கோட்டைக்குள் இன்பமாக காலங்கழித்து வந்தான். வீர மானமற்ற அவனிடம் கிள்ளிவளவன் போரிடுவதைக் கண்ட ஆலத்தூர் கிழார் வளவனை நோக்கி, நின் படைகள் செய்யும் கேட்டை நன்கு உணர்ந்தும், சேரமன்னன் கோட்டைக்குள் இருந்துகொண்டு போருக்கு வரவில்லை. மானமற்ற அவனிடம் போரிடுவதில் என்ன சிறப்பு உண்டாகும்? அவனை வென்றாலும், கொன்றாலும் ஒன்றே என்று கூறுமிடத்து கிள்ளிவளவனின் வீரச்சிறப்பு புலனாகின்றது. மேலும் ‘அருஞ்சமம் கடக்கும் ஆற்றலன்’ என்று இவனைத் தாயங்கண்ணனார் பாடியுள்ளது ஒப்புநோக்கத் தக்கது.

சங்க காலச் சோழ வேந்தருள் சிறப்புமிக்க மன்னனாக திகழ்ந்தவன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியாவான். ‘இவன் எல்லை இல்லாத படையினையும், புலால் நாறும் வாளினையும், பூசிப்புலர்ந்த சாந்தினையும் உடையவன். இவன் பகைவரது நன்னீர்துறைகளைத் தன் யானைகளை விட்டுப் பாழாக்கினான். விளைந்த

வயல்களைக் கவர்ந்தான்'[102] என்று புறநானூற்றுப் பாடல் தெரிவிக்கின்றது. இவனிடம் இருந்த 'யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, மறவர்படை என நால்படைகளும் சேர்ந்து கடல்போல் ஒலி முழங்கும் என்றும் அது வரம்பில்லாப் பெரிய படை'[103] என்றும் புறநானூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது.

தமிழகத்தை ஆட்சிசெய்த முடியுடை வேந்தர்கள் அவ்வப்போது தம்முள் போரிட்டு வந்தனர் என்பது உண்மையே. ஆயினும், எப்பொழுதும் போரிட்டே வந்தனர் என்று கூறுவதற்கு இல்லை. மூவேந்தர்களும் நண்பர்களாய் இருந்து ஒருவருக்கொருவர் உதவியாய் வாழ்ந்தனர் என்பதையும் சங்க இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

'சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனும், பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் நட்புடன் கூடி மகிழ்ந்து உரையாடி ஒருங்கிருந்ததைக் கண்ணுற்றுக் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் என்னும் புலவர் மகிழ்ந்துப் பாடியதைப் புறநானூற்றுப் பாடல் தெரிவிக்கிறது.'[104] மேற்குறிப்பிட்ட சோழ மன்னர்கள் மட்டுமல்லாது, பிற சோழ மன்னர்களும் தங்கள் ஆட்சிப்பகுதியை விரிவாக்கம் செய்வதற்கும், தங்கள் உரிமையை மீட்டுக் கொள்வதற்கும் போர் செய்ததைச் சங்க இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன.

**சோழர்களின் கொடைத்திறம்**

சங்க காலச் சோழ மன்னர்கள் வீர உணர்வில் சிறந்து விளங்கியதைப் போன்று ஈகை உணர்விலும் புகழ்பெற்றவர்களாக விளங்கியுள்ளமையைக் காணமுடிகிறது. சோழர்களின் முன்னோனான கொடையில் சிறந்து விளங்கிய சிபிச் சக்கரவர்த்தியின் வழிவந்த சோழர்களின் கொடைத்திறன் போற்றற்குரியது.

சோழர்குல கிள்ளிவழிச் சோழனான தித்தன் தன்பால் வரும் இரவலர்களுக்கு மழையைப் போன்று கொடையளித்துள்ளான். கோப்பெருஞ்சோழன் 'பாணர் பசிப்பகையாளன்' என்று புறநானூற்றுப் பாடலால் போற்றப்பெறுகிறான். பாடுநர், ஆடுநர், புலவர் முதலானோர்க்கும் இவன் கொடை வழங்கியுள்ளான். நண்பனிடமிருந்து வருவதாக அறிந்தால் பறவைகள் ஆயினும் மக்கள்போல் மதித்து

அணிகலன்கள் வழங்குவான் என்று பிசிராந்தையார் இவனது கொடைச் சிறப்பினையும் நட்பின் மாண்பினையும் எடுத்துக்காட்டுகிறார்.

கரிகாலன் பாணர்களுக்கு உணவு, உடை, யானை, தேர் முதலானவற்றைக் கொடையாக வழங்கியுள்ளான். மேலும் பாணர்க்குப் பொன்தாமரை செய்து அணிவித்தும், நான்கு குதிரைகள் பூட்டிய தேரை நல்கி, அத்தேரில் அவர்களை ஏழடி பின்சென்று மரியாதை செலுத்தி அனுப்பி வைத்துள்ளான். பொருநரின் வறுமை நிலையைப் போக்கி, பொருநர்கள், தாம் செல்ல வேண்டிய விருப்பத்தைத் தெரிவித்த பொழுது, இப்போதே செல்ல வேண்டுமா? இன்னும் சில நாளேனும் என்னுடன் தங்க வேண்டும் என்னும் பொருள்பட 'அகறிரோ' என்று அன்புடன் அருள்கனியக் கூறும் இவனது கொடைத்தன்மையினைப் பொருநராற்றுப்படை, புறநானூற்றுப் பாடல்கள் ஆகியவை உணர்த்துகின்றன.

பாணர், கூத்தர், விறலியர் முதலியோரைப் பாதுகாத்து அவர் வாயிலாக இசைத்தமிழையும், நாடகத் தமிழையும் நலனுற வளர்த்த சோழ மன்னன் சேட்சென்னி நலங்கிள்ளியாவான்.

'கலைஞர்களின் சுற்றத்தினரது சமையல் கலங்கள் நிரம்பும்படி வஞ்சிமாநகரைத் தருவான். விறலியர் பூவிற்கு விலையாக மாடங்களை உடைய மதுரை நகரத்தினை, அளிப்பான்'[105] என்று இவனது கொடைத்திறத்தினைக் கோவூர் கிழார் எடுத்துரைக்கிறார்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் 'தன்னைத் தேடிவரும் இரவலருக்கு நெய்யில் பொறித்த இறைச்சியும், மணி இழைத்த கலத்தில் மணம் வீசுகின்ற கள்ளினையும், பாம்பின் தோல் போன்ற ஆடையினையும், மழைபோன்ற வள்ளன்மை உடையவனாக வழங்கி வேனிற்காலத்து வெம்மைப்போல இருக்கக்கூடிய என் வறுமையாகிய வெம்மை நீங்குமாறு பெறற்கரிய அணிகலன்கள் பலவும் கொடுத்தருளினான்'[106] என்று தாயங்கண்ணனார் நலங்கிள்ளியின் கொடை மாண்பினைக் குறிப்பிடுகிறார்.

சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியின் அரண்மனையின் வழியே உலோச்சனார் என்னும் புலவர் கிணைப்பறையை முழக்கிக் கொண்டு வைகறை

நேரத்தில் சென்றார். அப்பொழுது 'அவன் அறநெஞ்சத்தோன் வாழ்க என்று இடையிடையே அவர் வாழ்த்திச் சென்றதைக் கண்ட இம்மன்னன் அந்த வாழ்த்து தனக்குத்தான் என்று புலவரைத் தடுத்து அழைத்துச் சென்று அந்தப் புலவர் கனவு காண்பதுபோல் வியப்பு அடையும்படி முத்தும், நல்ல உடைகளும், காலையில் பருகும் 'தசும்பு' என்னும் மதுக்குடங்களும் அளித்தான் என்று அவனைப் பாராட்டினார்.'[107]

உருவப் பல்தேர் இளஞ்சேட்சென்னி தன்னை நாடி வரும் இரவலர்களுக்குப் பகைவர் கோட்டைகளைப் பரிசலாக அளித்துள்ளான். பகைவர்களின் கோட்டை அவர் வசமிருக்கும் பொழுதே அவன் கைப்பற்றப் போகும் உறுதி நோக்கிப் பாணர்கள் பரிசிலாக அவனிடம் வேண்டுவதை ஊன்பொதி பசுங்குடையார் எடுத்துரைக்கின்றார்.

**தொகுப்புரை**

சங்க காலத்தில் சோழநாடானது தஞ்சாவூர், திருச்சி, தென்னார்க்காடு, புதுக்கோட்டை உள்ளிட்ட பகுதியாக விளங்கியுள்ளது.

சங்க காலத்தில் தமிழ்நாட்டை நீர்வளமும் நிலவளமும் பெருகச் செய்து செல்வம் கொழிக்கும் திருநாடாக்கியப் பெருமை சோழர்களுக்கு உரியது என்பதை அறியமுடிகிறது.

சோழ நாட்டின் தலைநகரங்களாக உறையூர், காவிரிப்பூம்பட்டினம் ஆகியவை இருந்துள்ளன.

கரிகால் பெருவளத்தான் காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் துறைமுகமாகவும், தித்தன் வெளியன் காலத்தில் பெருந்துறை துறைமுகமாகவும் விளங்கியுள்ளன.

கரிகால் வளவனின் முன்னோர்கள் மரக்கலம் செலுத்துவதில் திறமையானவர்களாக இருந்தமையையும், புகார் துறைமுகத்தில் தடையின்றி ஏற்றுமதி இறக்குமதிகள் நடைபெற்றதையும், பண்ட மூட்டைகளில் புலிச்சின்னம் பொறிக்கப்பட்டதையும் அறியமுடிகிறது.

சோழர்கள் தம் பெயரோடு குடிப்பெயர், காரணப்பெயர், சிறப்புப்பெயர் போன்றவற்றை இணைத்துக் கொண்டுள்ளனர்.

சோழர் குடியின் முன்னோர்களாக செம்பியன், முதுகாந்தன், காந்தன், தூங்கெயில் எறிந்த தொடித்தோள் செம்பியன், மனுச்சோழன் என ஐவர் காணப்படுகின்றனர்.

சங்க காலச் சோழ மன்னர்கள் பதினெட்டுப்பேர். அவர்கள் கிள்ளி, சென்னி என்னும் இரு மரபினரைச் சார்ந்தவராக இருந்துள்ளனர்.

சங்க காலச் சோழர்கள் சிறந்த போர்த்திறம், கொடைத்திறம் மிக்கவர்களாக விளங்கியுள்ளனர்.

## அடிக்குறிப்புகள்

1. தனிப்பாடல் திரட்டு, பா.1.
2. மயிலை சீனி.வேங்கடசாமி (க.ஆ.), தமிழ்நாட்டு வரலாறு, சங்க காலம் - அரசியல், ப.250.
3. மயிலை சீனி.வேங்கடசாமி, சேர சோழ பாண்டியன், ப.113.
4. காண்க, புறம்., பா.399.
5. கு.சுந்தரமூர்த்தி (உ.ஆ.), தொல்.சொல்., ப.527.
6. நன்னூல், நூ.15 மேற்கோள் பாடல்.
7. வ.குருநாதன், சங்க கால அரச வரலாறு, ப.43.
8. அ.சுவாமிநாதன், தமிழக வரலாறு 1987 வரை, ப.57.
9. வேளூர் ஆத்மநாத தேசிகர், சோழ மண்டல சதகம், பா.11.
10. பொறிஞர் புருடோத்தமன், தமிழ் கூறும் நல்லுலகம், ப.64.
11. ஆர்.ஆளவந்தார், இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள், தொகுதி I, ப.81.
12. மேலது., ப.80.
13. மயிலை சீனி.வேங்கடசாமி, சங்க காலத் தமிழக வரலாறு, ப.41.
14. சிலம்பு., பதிகம், வரி.12.
15. மேலது., வரிகள் 3-4.
16. சிறுபாணாற்றுப்படை, அடி.83.
17. புறம்., பா.69: 12.
18. மேலது., பா.39: 8-9.
19. நற்றிணை, பா.400: 7-8.
20. அகம்., பா.4: 14.
21. குறுந்தொகை, பா.116: 2.
22. காண்க, சிலம்பு., நாடுகாண்காதை, வரிகள்: 241-242.
23. முத்தொள்ளாயிரம், பா.58: 1.
24. ஒட்டக்கூத்தர், தக்கயாகப்பரணி, பா.69.
25. அகம்., பா.44: 14-15.
26. ஐங்குறுநூறு, பா.133: 1-2.
27. புறம்., பா.80: 1.
28. அகம்., பா.326: 8-13.

29. நற்றிணை, பா.10: 6-9.

30. அகம்., பா.186: 15-16.

31. புறம்., பா.30: 10-14.

32. பட்டினப்பாலை, அடிகள் 172-175.

33. மேலது., அடிகள் 185-191.

34. மேலது., அடிகள் 131-135.

35. சிலம்பு., இந்திரவிழாவூரெடுத்த காதை, வரிகள் 115-117.

36. மேலது., வரி.141.

37. அகம்., பா.152: 5-8.

38. மேலது., பா.123: 10-13.

39. மயிலை சீனி.வேங்கடசாமி, சங்க காலத் தமிழக வரலாறு, ப.42.

40. அகம்., பா.140: 7-8.

41. பொருநராற்றுப்படை, அடிகள் 214-217.

42. வி.பூவராகமூர்த்தி, அலைகடலுக்கு அப்பால் இந்தியப் பண்பாடு, ப.9.

43. அ.ஜம்புலிங்கம், சங்க கால வேந்தர்களின் சமுதாயப் பணி, ப.32.

44. மேலது., ப.33.

45. புறம்., பா.66: 1-3.

46. மேலது., பா.30: 3.

47. மயிலை சீனி.வேங்கடசாமி, சங்க காலத் தமிழக வரலாறு, ப.56.

48. மேலது., ப.127.

49. மயிலை சீனி.வேங்கடசாமி, சேர சோழ பாண்டியன், ப.126.

50. மேலது., ப.127.

51. எஸ்.இராமகிருஷ்ணன், இந்தியப் பண்பாடும் தமிழரும், ப.230.

52. பொருநராற்றுப்படை, ஈற்று வெண்பா.

53. காண்க, பழமொழி நானூறு, பா.239.

54. அ.ஜம்புலிங்கம், சங்க கால வேந்தர்களின் சமுதாயப்பணி, ப.109.

55. மா.இராசமாணிக்கனார், சோழர் வரலாறு, ப.23.

56. காண்க, அகம்., பா.125, 246, புறம்., பா.66.

57. மயிலை சீனி.வேங்கடசாமி (க.ஆ.), தமிழ் நாட்டு வரலாறு, சங்க காலம் - அரசியல், ப.317.

58. புறம்., பா.37: 5-6.

59. மேலது., பா.43: 6-8.

60. ஒட்டக்கூத்தர், **விக்கிரமசோழனுலா**, கண்ணி 1.

61. ஒட்டக்கூத்தர், **தக்கயாகப் பரணி**, பா.304: 3.

62. ஒட்டக்கூத்தர், **விக்கிரமசோழனுலா**, கண்ணி 12.

63. **பதிற்றுப்பத்து**, பா.31: 18-20.

64. புறம்., பா.39: 5-7.

65. **சிலம்பு.**, வாழ்த்துக்காதை, வரி.16.

66. காண்க, **நற்றிணை**, பா.234:7.

67. காண்க, மேலது., பா.14:4.

68. காண்க, அகம்., பா.36:15.

69. **சிலம்பு.**, வழக்குரைகாதை, வரிகள் 53-55.

70. பத்மஜா ரமேஷ், வி.பி.புருஷோத்தமன், **சங்க கால மன்னர்களின் காலநிலை, தொகுதி I**, ப.42.

71. மேலது., ப.50.

72. **சிலம்பு.**, நாடுகாண் காதை, கட்டுரை வரிகள் 1-2.

73. அரங்க.இராமலிங்கம், **சங்க இலக்கியத்தில் வேந்தர்**, பக்.41-42.

74. **அகம்.**, பா.206: 13-15.

75. மேலது., பா.122: 21.

76. மேலது., பா.226: 13-17.

77. புறம்., பா.13: 8-9.

78. பத்மஜா ரமேஷ், வி.பி.புருஷோத்தமன், **சங்க கால மன்னர்களின் காலநிலை, தொகுதி I**, ப.201.

79. காண்க, **அகம்.**, பா.44: 13-14.

80. காண்க, மேலது., பா.246: 8-12.

81. காண்க, மேலது., பா.125: 18-20.

82. காண்க, மேலது., பா.141: 22-23.

83. **பொருநராற்றுப்படை**, அடி 130.

84. மேலது., அடிகள் 131-132.

85. மேலது., அடிகள் 143-145.

86. பட்டினப்பாலை, அடி 285.

87. காண்க, புறம்., பா.73: 1-7.

88. புறம்., பா.33: 7-9.

89. காண்க, மேலது., பா.43: 12-23.

90. காண்க, அகம்., பா.346: 20-25.

91. மேலது., பா.58: 1-9.

92. மேலது., பா.322: 21-22.

93. காண்க, மேலது., பா.367: 13-18.

94. காண்க, மேலது., பா.61: 16-19.

95. மேலது., பா.190: 10-12.

96. காண்க, மேலது., பா.74: 5-7.

97. பத்மஜாரமேஷ், வி.பி.புருஷோத்தமன், **சங்க கால மன்னர்களின் காலநிலை, தொகுதி I**, ப.210.

98. **தொல்.பொருள்.புறத்திணையியல்**, நூ.5.

99. மா.இராசமாணிக்கனார், **சோழர் வரலாறு**, ப.89.

100. மயிலை சீனி.வேங்கடசாமி (க.ஆ.), **தமிழ்நாட்டு வரலாறு, சங்க காலம்-அரசியல்**, ப.305.

101. அ.ஐம்புலிங்கம், **சங்க கால வேந்தர்களின் சமுதாயப் பணி**, ப.131.

102. காண்க, புறம்., பா.16: 11-16.

103. காண்க, மேலது., பா.377: 26-30.

104. காண்க, மேலது., பா.58: 20-24.

105. காண்க, மேலது., பா.32: 5-6.

106. காண்க, மேலது., பா.397: 13-16.

107. காண்க, மேலது., பா.377: 16-20.

இயல் இரண்டு

# சோழநாட்டுப் புலவர்கள்

## இயல் – 2

# சோழநாட்டுப் புலவர்கள்

*சங்க காலத் தமிழகம் அரசியலால் மூன்று பெரு நாடுகளாகவும், பல சிறுகுறு நிலங்களாகவும் பிரிவுண்டு கிடந்தது. எனினும் புலவர் பெருமக்களால் மொழியாலும் பண்பாட்டாலும் ஒன்றுபட்டிருந்தது. புலவர் பெருமக்கள் உயரிய பண்புகள் நிறைந்தவராக வாழ்ந்துள்ளனர். நிறை ஒழுக்கம், பரந்த மனப்பான்மை, தொண்டுள்ளம், செய்ந்நன்றி முதலிய பண்புகளைப் போற்றிய செம்மையாளர்களாக திகழ்ந்த இவர்கள் நட்பின் பெருமையை நிலைநாட்டியதோடு வறுமையிலும் நற்பண்பைக் கடைப்பிடித்து, கல்வி கேள்விகளில் சிறந்த புலவர் பெருமக்களாகவும் அரசனை இடித்துரைக்கும் சான்றோராகவும் வாழ்ந்துள்ளனர். இத்தகைய இயல்புகளை உடைய சங்க காலப் புலவர்களில் சோழநாட்டைச் சேர்ந்த புலவர்களின் வாழ்வியலை இவ்வியல் ஆய்வு செய்கிறது.*

**புலவர்கள்**

*புலவர் என்ற சொல்லுக்குப் பொருள் 'அறிவுடையோர்' என்பதாகும். இவர்கள் நல்லிசைப் புலவரென்றும் சான்றோரென்றும் அழைக்கப்பட்டுள்ளனர். இத்தகைய சான்றோர் இயற்றிய சங்கப் பாடல்கள் மிக உயர்வுப் பெற்று விளங்குகின்றன. அழியும் பொருட்களின் இடையே அழியாப் புகழ் பெற்று விளங்கும் இப்பாடல்களின் சிறப்பினைக் குமரகுருபரர்,*

> கலைமகள் வாழ்க்கை முகத்ததெனினும்
> மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான் - மலரவன்செய்
> வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ் கொண்டு
> மற்றிவர் செய்யு முடம்பு[1]

*என்று எடுத்துக்காட்டுகிறார்.*

*இத்தகைய சங்க இலக்கியத்தைப் பாடிய புலவர்களுள் பெயர் தெரிந்த மொத்தப் புலவர்கள் 473 பேர். இவர்களுள் "சேர நாட்டுப் புலவர்கள் 24 பேர்; சோழநாட்டுப் புலவர்கள் 55 பேர்; பாண்டி நாட்டுப் புலவர்கள் 90 பேர்; தொண்டை*

நாட்டுப் புலவர்கள் 9 பேர்;"[2] இதுதவிர புலவர்களுக்கு உரிய நாடு மற்றும் பெயர் தெரியாத புலவர்களும் காணப்படுகின்றனர்.

நாடுகள் வெவ்வேறாக இருந்தாலும் புலவர்களுக்குள் வேறுபாடு இல்லை. அவர்கள் மூன்று நாடுகளுக்கும் சென்று மூவேந்தர்களையும் பாடியுள்ளனர். சோழநாட்டுப் புலவரான மாங்குடி மருதனார், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடிய மதுரைக் காஞ்சியும், பாண்டி நாட்டுப் புலவரான கடியலூர் உருத்திரங்கண்ணனார் கரிகாற்பெருவளத்தானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடிய பட்டினப்பாலையும், நாடு பற்றிய குறிப்பு கிடைக்கப்பெறாத முடத்தாமக் கண்ணியார் கரிகால் பெருவளத்தானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடிய பொருநராற்றுப்படையும் குறிப்பிடத்தக்கவையாகும்.

இப்புலவர் பெருமக்களுக்கு மூவேந்தர்களும் உரிய மதிப்பினையும், பெருமையினையும் அளித்துள்ளனர். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் 'ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி', 'மாங்குடி மருதன் தலைவனாக' என்று வீரவஞ்சினம் கூறுவதிலிருந்து இதனை அறியலாம். இவ்வாறு சங்க காலப் புலவர்கள் அனைவரும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பொதுநோக்குடன் மூவேந்தர்களையும் பாடி வாழ்ந்தமையை அறியமுடிகிறது.

**சோழ நாட்டுப் புலவர்களின் வரிசை**

ந.சஞ்சீவி, சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணையில் ஐம்பத்தைந்து புலவர்களைச் சோழநாட்டுப் புலவர்கள் என்று சுட்டியுள்ளார். அவர்கள்:

1. அரிசில்கிழார்
2. ஆடுதுறை மாசாத்தனார்
3. ஆதிமந்தி
4. ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார்
5. ஆலங்குடி வங்கனார்
6. ஆலியார்
7. ஆவூர்கிழார்
8. ஆவூர்கிழார் மகனார் கண்ணனார்

9. ஆவூர்க்காவிதிகள் சாதேவனார்
10. ஆவூர் மூலங்கிழார்
11. இடைக்காடனார்
12. இரும்பிடர்த்தலையார்
13. உறையூர் இளம்பொன் வணிகனார்
14. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்
15. உறையூர்க் கதுவாய்ச் சாத்தனார்
16. உறையூர்ச் சல்லியங்குமரனார்
17. உறையூர்ச் சிறுகந்தனார்
18. உறையூர்ப் பல்காயனார்
19. உறையூர் மருத்துவன் தாமோதரனார்
20. உறையூர் முதுகண்ணன் சாத்தனார்
21. உறையூர் முதுகூத்தனார்
22. ஐயூர் முடவனார்
23. ஐயூர் மூலங்கிழார்
24. கடலூரர்ப் பல்கண்ணனார்
25. காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார்
26. காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்
27. காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்
28. காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தன் கண்ணன்
29. காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார்
30. கிடங்கில் காவிதிக் கீரங்கண்ணனார்
31. கிடங்கில் காவிதிப் பெருங்கொற்றனார்
32. கிடங்கில் குலபதி நக்கண்ணனார்
33. குடவாயிற்கீரத்தனார்
34. கொள்ளம்பக்கனார்
35. கோக்குள முற்றனார்
36. கோப்பெருஞ்சோழன்
37. கோவூர் கிழார்
38. சல்லியங்குமரனார்
39. செம்பியனார்

40. செல்லூர்கிழார் மகனார் பெரும்பூதங்கொற்றனார்
41. செல்லூர்க் கோசிகன் கண்ணனார்
42. சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்
43. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்
44. சோழன் நலங்கிள்ளி
45. சோழன் நல்லுருத்திரன்
46. தாயங்கண்ணனார்
47. தாயங்கண்ணியார்
48. துறையூர் ஓடைகிழார்
49. நல்லாவூர் கிழார்
50. நெய்தல் சாய்த்துய்த்த ஆவூர்கிழார்
51. பெருந்தலைச் சாத்தனார்
52. பேரெயில் முறுவலார்
53. பொத்தியார்
54. மாங்குடி மருதனார்
55. வெள்ளைக்குடி நாகனார்

ந.சஞ்சீவி சுட்டிய மேற்கண்ட சோழநாட்டுப் புலவர்களோடு ஆய்வுக்குக் கிடைத்த தரவுகளின் அடிப்படையில் மேலும் ஆறு புலவர்கள் சோழநாட்டுப் புலவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள்:

1. மாவளத்தன்
2. வீரை வெளியன் தித்தனார்
3. கயத்தூர் கிழார்
4. கழார்க்கீரன் எயிற்றியார்
5. பூங்கணுத்திரையார்
6. வெண்ணிக் குயத்தியார்

ஆகியோர் ஆவர். இவர்களையும் சேர்த்து சோழநாட்டுப் புலவர்கள் 61 பேர் என்னும் அடிப்படையில் இவ்வாய்வு அமைகிறது.

**பாடிய பாடல்கள்**

சங்க இலக்கியப் பாடல்கள் பல்வேறு புலவர்களால் பல்வேறு நிலைகளில் பாடப்பெற்ற தொகுப்பாகும். பாட்டும் தொகையும் இணைந்த சங்க இலக்கியப் பாடல்கள் 2387. இவற்றுள் அகப்பாடல்கள் 1877; புறப்பாடல்கள் 510 ஆகும்.

இத்தொகுப்பில் சோழநாட்டுப் புலவர்கள் பாடியன 262 பாடல்களும் இரண்டு நூல்களும் ஆகும். இவை தவிர அரிசில்கிழாரின் பெயரில் தகடூர் யாத்திரை, திருவள்ளுவமாலை ஆகிய இரு நூல்களிலும் ஒவ்வொரு பாடல் காணப்படுகிறது. இதனைப் போலவே உறையூர் முதுகொற்றனார், ஆலங்குடி வங்கனார், உறையூர் மருத்துவன் தாமோதரனார், இடைக்காடனார், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், கோவூர் கிழார், மாங்குடி மருதனார், சோணாட்டு முகையலூர்ச் சிறுகறுந்தும்பியார் ஆகியோர்களின் பெயரில் திருவள்ளுவமாலையில் மட்டும் ஒவ்வொரு பாடல் காணப்படுகிறது என்பதையும் அறியமுடிகிறது. ஆனால் இவை ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை.

இவர்கள் பாடிய பாடல்கள் பற்றிய விவரங்கள் பின்னிணைப்பு-4இல் தரப்பட்டுள்ளன.

**பாடிய நூல்கள்**

சோழநாட்டுப் புலவர்கள் பாடிய பாடல்கள் எட்டுத்தொகையில் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய நூல்களில் மட்டும் இடம்பெற்றுள்ளது. பத்துப்பாட்டில் மதுரைக்காஞ்சியும் முல்லைப்பாட்டும் சோழநாட்டுப் புலவர்களால் இயற்றப்பட்டனவாகும்.

**திணை, துறை, கூற்று**

சங்க காலத்தில் காதலும் போரும் ஆகிய இரண்டும் வாழ்வின் தலையாய கூறுகளாகத் திகழ்ந்தன. எனவே தமிழர் தம் வாழ்வை அகம், புறம் எனக் கண்டனர் எனலாம். தொல்காப்பியப் பொருளியலில் அகம், புறம் என்னும் இரண்டு ஒழுக்கங்களின் இலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன. அக்காலத்து ஆண், பெண் என்ற இருபால் மக்களின் மணமுறைகளையும் அவர் தம் இல்லற ஒழுக்கங்களையும் கூறுவது

அகம் எனப்பட்டது. அக்காலத்து அரசர் செய்த போர், கொடை முதலானவற்றைக் கூறுவது புறம் எனப்பட்டது.

அகத்திணையை எழுவகைப் படுத்தியுள்ளார் தொல்காப்பியர். அவை கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என்பனவாகும். இவற்றுள் கைக்கிளை என்பது ஒருதலைக்காதலாகும். அகத்திணை என்பது ஒத்த தன்மையுடைய தலைவனும் தலைவியும் இணைந்து வாழும் வாழ்க்கையாகும். சங்கச் செய்யுள்களில் உள்ள அகத்திணைப் பாடல்கள் பெரும்பாலும் அன்பின் ஐந்திணையாகவே அமைந்துள்ளன. பெருந்திணை என்பது பொருந்தாக் காமமாகும்.

தொல்காப்பியர் அகத்திணைப் போன்றே புறத்திணையையும் ஏழுவகையாகப் பிரித்துள்ளார். புறத்திணையை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என அவர் வகுத்துக் கூறியுள்ளார். பிற்காலத்தவர் கரந்தை, நொச்சி முதலிய பல திணைகளைக் கூட்டி இதனையே பன்னிரெண்டு திணைகளாகக் கூறியுள்ளனர். இந்த ஏழனுள் காஞ்சி உலக நிலையாமையையும், பாடாண் தலைவனைப் புகழ்தலும் பற்றிக் கூறுகிறது. ஏனைய ஐந்திணையும் அக்காலப் போர்முறையை விளக்குவனவாகும். இத்திணைகள், சூடும் பூக்களால் பெயர்பெற்றுள்ளன. "பண்டையத் தமிழ் மக்கள் போர் செய்தற்கு சம்பந்தமான வெவ்வேறு பூக்களைச் சூடிப் பொருதல் வழக்கமாயிருந்தமையின் அவ்வப் பூக்களின் பெயரானே ஒழுக்கத்தையும் கூறினர் தொல்காப்பியர்"[3] என்பர் கந்தையா.

சங்கப் பாடல்களில் அகப்பாடல்கள் திணை, துறை, கூற்று அமைப்பிலும், புறப்பாடல்கள் திணை, துறை அமைப்பிலும் பாடப்பெற்றுள்ளன. புறத்திணைப் பாடல்களில் துறைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆனால் அகத்திணைப் பாடல்களில் துறையைவிட கூற்றுகளே சிறந்தவையாகக் கருதப்படுகின்றன. இவ்வகையில் சோழநாட்டுப் புலவர்களை அகம் பாடியோர் 28 பேர்; புறம் பாடியோர் 14 பேர்; அகமும் புறமும் பாடியோர் 19 பேர் என்று வகைப்படுத்த இயலும். இவ்வகைப்பாட்டைக் காட்டும் வகையிலான அட்டவணைகள் பின்னிணைப்பு-5லிருந்து-7 வரை தரப்பட்டுள்ளன.

**சோழநாட்டுப் புலவர்கள்**

சங்க காலச் சோழநாட்டு மக்கள் வேளாண்மை, சான்றாண்மை இரண்டிலும் சிறப்புப் பெற்றவராக இருந்துள்ளனர். காவிரி நதி நீர்ப்பாசனத்தால் சோழநாடு வேளாண்மையில் சிறப்புற்று விளங்கியதுபோல், கல்வி கேள்விகளில் சிறந்து சான்றாண்மையுடன் சோழநாட்டு மக்கள் விளங்கினர் என்பதற்குச் சோழ நாட்டுப் புலவர்களே சான்றாகும். இப்பெருமைமிக்க புலவர் பெருமக்களை ஆண்பாற் புலவர்கள், பெண்பாற் புலவர்கள், அரசப் புலவர்கள் என்ற வகைப்பாட்டில் அவர்களின் வாழ்க்கை வரலாறு விளக்கப்படுகின்றது.

**ஆண்பாற் புலவர்கள்**

சோழநாட்டுப் புலவர்களில் ஆண்பாற் புலவர்களாக ஐம்பது பேர் காணப்படுகின்றனர். அவர்கள்:

1. அரிசில்கிழார்
2. ஆடுதுறை மாசாத்தனார்
3. ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார்
4. ஆலங்குடி வங்கனார்
5. ஆலியார்
6. ஆவூர்கிழார்
7. ஆவூர்கிழார் மகனார் கண்ணனார்
8. ஆவூர்க்காவிதிகள் சாதேவனார்
9. ஆவூர் மூலங்கிழார்
10. இடைக்காடனார்
11. இரும்பிடர்த்தலையார்
12. உறையூர் இளம்பொன் வணிகனார்
13. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்
14. உறையூர்க் கதுவாய்ச் சாத்தனார்
15. உறையூர்ச் சல்லியங்குமரனார்
16. உறையூர்ச் சிறுகந்தனார்
17. உறையூர்ப் பல்காயனார்
18. உறையூர் மருத்துவன் தாமோதரனார்
19. உறையூர் முதுகண்ணன் சாத்தனார்

20. உறையூர் முதுகூத்தனார்
21. ஐயூர் முடவனார்
22. ஐயூர் மூலங்கிழார்
23. கடலூரர்ப் பல்கண்ணனார்
24. கயத்தூர் கிழார்
25. காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார்
26. காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்
27. காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்
28. காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தன் கண்ணன்
29. காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார்
30. கிடங்கில் காவிதிக் கீரங்கண்ணனார்
31. கிடங்கில் காவிதிப் பெருங்கொற்றனார்
32. கிடங்கில் குலபதி நக்கண்ணனார்
33. குடவாயிற்கீரத்தனார்
34. கொள்ளம்பக்கனார்
35. கோக்குள முற்றனார்
36. கோவூர் கிழார்
37. சல்லியங்குமரனார்
38. செம்பியனார்
39. செல்லூர் கிழார் மகனார் பெரும்பூதங்கொற்றனார்
40. செல்லூர்க் கோசிகன் கண்ணனார்
41. சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்
42. தாயங்கண்ணனார்
43. துறையூர் ஓடைகிழார்
44. நல்லாவூர் கிழார்
45. நெய்தல் சாய்த்துய்த்த ஆவூர்கிழார்
46. பெருந்தலைச் சாத்தனார்
47. பேரெயில் முறுவலார்
48. பொத்தியார்
49. மாங்குடி மருதனார்
50. வெள்ளைக்குடி நாகனார்

**1. அரிசில் கிழார்**

அரிசில் கிழார் என்பது பிறந்த ஊர்ப்பெயரைக் குறித்து நிற்கிறது. 'அரிசில்' என்பது அரிசிலாற்றங்கரையில் அமைந்த ஓர் ஊராகும். இவர் வேளாண்குடியில் தோன்றியவர். கிழார் என்பது வேளாளர்க்குரிய சிறப்புப் பெயராகும். இவர் பதிற்றுப்பத்தில் எட்டாம் பத்தை பாடியவர். இப்பத்தின் பாட்டுடைத் தலைவனான தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையைப் பாடி ஒன்பது நூறாயிரங்காணம் பரிசில் பெற்றதோடு அமைச்சராகவும் விளங்கினார். மேலும் குறுந்தொகை, புறநானூற்றில் எட்டுப் பாடல்களைப் பாடியுள்ளார்.

சுடர் விளக்காயினும் நன்றாய் விளங்கிட தூண்டுகோல் ஒன்று வேண்டும் என்பர் சான்றோர். ஓர் அரசனுக்கு நற்குடிப்பிறப்பும், நாடாளும் அறிவும் நன்கு இருந்தாலும் அரசர்க்கு என்றும் நல்லவற்றையே எண்ணக்கூடிய பண்புடைய அமைச்சர்கள் இருந்துவிட்டால் அவ்வரசானது பல காலம் நிலைத்து வாழும் என்பதை வள்ளுவர்,

> பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வூர்
> எழுபது கோடி யுறும்[4]

என்ற குறளில் குறிப்பிடுகிறார்.

இக்கருத்தையே அரிசில்கிழாரும் அரசன் நல்ல அமைச்சர்களைப் பெறுவதோடு அவ்வரசின் நற்குணங்களை அரசனும் பெற்றுவிட்டால் அவ்வரசின் பெருமை அளவிடற்கரியதாகும். தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையும் உயர்ந்த அமைச்சரின் பண்புகள் எல்லாவற்றையும் பெற்று விளங்கினான் என்பதை,

> நின்முன்திணை முதல்வர்க்கு ஓம்பினர் உறைந்து
> மண்பதை காப்ப அறிவு வலியுறுத்து
> நன்றறி உள்ளத்துச் சான்றோர் அன்னநின்
> பண்பு அறியார்.................[5]

என்று பதிற்றுப்பத்து குறிப்பிடுகிறது.

**இல்லறத்தின் மேன்மை**

வையாவிக் கோப்பெரும்பேகன் தன் மனைவியான கண்ணகியைப் பிரிந்து வாழ்ந்து வந்தான். இதனைக் கேள்வியுற்ற அரிசில்கிழார் அவன்பால் சென்றார்.

அவனும் இவருக்குப் பரிசில் வழங்க முற்பட்டபொழுது, நீ மகிழ்ந்து பரிசாக அளிக்கும் அணிகலன்களை யான் விரும்பவில்லை. உண்மையில் பரிசளிக்க விரும்புவாயாயின் கண்ணகி கூந்தலை முடித்து பூச்சூடுமாறு அவள் மனைக்குச் செல்ல வேண்டும். இதுவே யான் வேண்டும் பரிசில் என்பதை,

> ................................... என்னை நயந்து
> பரிசில் நல்குவையாயின் குரிசில்! நீ
> நல்காமையின் நைவரச் சாஅய்
> அருந்துயர் உழக்கும் நின் திருந்திழை அரிவை
> ........................................................
> ஒலிமென் கூந்தல் கமழ்புகை கொளீஇத்
> தண் கமழ் கோதை புனைய
> வண்பரி நெடுந்தேர் பூண்கநின் மாவே[6]

என்னும் புறநானூற்றுப் பாடல் விளக்குகிறது. இப்பாடலின் மூலம் அரிசில் கிழாரின் பண்பு நலனும், கணவனும் மனைவியும் சேர்ந்து வாழும் வாழ்வே இல்லறத்தின் மேன்மை என்பதை உணர்த்தியதையும் விளங்கிக்கொள்ள முடிகிறது.

### 2. ஆடுதுறை மாசாத்தனார்

மாசாத்தனார் என்பது இவரது இயற்பெயராகும். தெய்வப் பெயரை மக்களுக்கு இட்டு வழங்கும் வழக்கம் மரபாதலின் இப்புலவருக்கு ஐயனாரின் பெயரால் மாசாத்தனார் என்னும் பெயர் அமைந்துள்ளதை அறியமுடிகிறது. இப்புலவர் பிறந்த ஊரான ஆடுதுறை என்னும் பெயரில் சோழநாட்டில் பல ஊர்கள் காணப்படுவதால் இவர் எந்த ஆடுதுறையைச் சார்ந்தவர் என்பதை அறியமுடியவில்லை. இப்புலவர் புறநானூற்றில் மூன்றாவது பாடலை மட்டும் பாடியுள்ளார்.

### 3. ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார்

வெள்ளைக் கண்ணத்தனார் என்பது இப்புலவரின் இயற்பெயர் ஆகும். இவர் கண் இடத்து ஏதோ வெண்மை இருந்து இவருக்கு இப்பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று கருதமுடிகிறது. இவர் தந்தையார் ஆர்க்காடு கிழார் ஆவார். இப்புலவர் பிறந்த ஊரான ஆர்க்காடு வடவார்க்காடு மாவட்டத் தலைநகராகிய வேலூருக்குக் கிழக்கே பாலாற்றங்கரையில் அமைந்துள்ளது. இந்த 'ஆர்க்காடு சங்க காலத்தில் சேந்தனின்

தந்தையாகிய அழிசி என்பானுக்குச் சொந்தமானதாகும்.'[7] இவர் அகநானூற்றில் அறுபத்து நான்காவது பாடலை மட்டும் பாடியுள்ளார்.

### 4. ஆலங்குடி வங்கனார்

வங்கனார் என்பது இவரின் இயற்பெயராகும். இப்பெயரை நோக்குமிடத்து பண்டைய நாளில் கடலில் கலம் செலுத்தி வாணிகம் புரிந்தொழுகும் குடியில் இவர் தோன்றியிருக்க வேண்டும் என்ற கருத்துப் புலனாகின்றது. இவர் பாடிய அகத்துறைப் பாடல்கள் அனைத்துமே மருதத்திணையாகும்.

இப்புலவரின் ஊரான ஆலங்குடி என்னும் பெயருள்ள ஊர்கள் பல காணப்படுவதால் இவர் எந்த ஆலங்குடி என்பதில் வேறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. எனினும் இவர் 'மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து அறங்கெட அறியாது' எனச் சோழருடைய உறையூரையும் அவ்வூரில் உள்ள அறங்கூர் அவையினையும் சிறப்பித்துள்ளாராதலின் இவர் சோழநாட்டு ஆலங்குடியினர் என்று கருதமுடிகிறது. இவர் ஏழு பாடல்களைப் பாடியுள்ளார்.

### பாடுபொருள்

ஆலங்குடி வங்கனார் பாடிய அகம் சார்ந்த பாடல் முழுவதும் பரத்தமை ஒழுக்கமே பாடுபொருளாக அமைந்துள்ளது. தலைவனை ஆடிப்பாவை போன்றவன் என்று இகழும் பரத்தையையும் தம் தலைவர் கொடுமை செய்யினும் அதனை மறந்து அவன் மீது அன்பு பாராட்டும் கற்புடை மகளிரான இல்லறத் தலைவியையும் பாடி இரு மகளிர்க்கும் உள்ள வேற்றுமையை நன்கு புலப்படுத்தியுள்ளார்.

### 5. ஆலியார்

ஆலி என்னும் ஊரில் பிறந்தமையால் இவர் இப்பெயர் பெற்றுள்ளார். ஆலி என்பது சோழநாட்டின் உள் நாடுகளில் ஒன்று. ஆலி என்பது ஆலிநாட்டின் தலைநகரமாகும். திருமங்கை ஆழ்வார் அவதரித்த இவ்வூர் சீர்காழியிலிருந்து திருவெண்காட்டிற்குச் செல்லும் வழியில் அமைந்துள்ளது.

இப்புலவர் பாடிய புறப்பாடலில் வீரன் ஒருவன் தலைவன் தனக்குச் சிறந்த உணவை அளிக்கின்றானே அன்றி போர் செய்வதற்குத் தன்னை முந்திச் செல்க என்று

கூறவில்லை எனக் கூறும் கருத்து வீரத்தின் மேன்மையைக் காட்டுகிறது. புறநானூற்றில் 298-வது பாடலை மட்டும் பாடியுள்ளார்.

### ஆவூர்ப் புலவர்கள்

ஆவூர் மக்கள் புலமையில் சிறந்து விளங்கினர் என்பதற்கு ஆவூரைச் சேர்ந்த புலவர்களே சான்றாவார். மேலும் ஆவூர்ப் புலவர்களில் தந்தையும் மகனும் பாடல் இயற்றும் திறன் பெற்றிருந்தனர். ஆவூரைச் சேர்ந்தவர்களாக அறுவர் காணப்படுகின்றனர். அவர்கள்:

1. ஆவூர்கிழார்
2. ஆவூர்கிழார் மகனார் கண்ணனார்
3. ஆவூர்க் காவிதிகள் சாதேவனார்
4. ஆவூர் மூலங்கிழார்
5. நெய்தல் சாய்த்துய்த்த ஆவூர்கிழார்
6. பெருந்தலைச் சாத்தனார்

ஆகியோர் ஆவர். இப்புலவர்களில் பெருந்தலைச் சாத்தனார், ஆவூர் மூலங்கிழாரின் மகனாவார். ஆதலால் அவரும் ஆவூர்ப்புலவர் ஆவார். இவர்களில் ஆவூர்கிழாரும் அவரது மகன் கண்ணனாரும், ஆவூர் மூலங்கிழாரும், அவரது மகன் பெருந்தலைச் சாத்தனாரும் தந்தை மகன் உறவினராவர்.

### 6. ஆவூர் கிழார்

இவர், ஆவூரைச் சேர்ந்தவர். வேளாண் மரபினர். இவர் பாடிய பாடலில் மருத நிலத்தின் வளம் காணப்படுகிறது. புறநானூற்றில் 322-வது பாடலை மட்டும் பாடியுள்ளார்.

### 7. ஆவூர் கிழார் மகனார் கண்ணனார்

இவர், ஆவூர் கிழார் என்பாரின் மகன். இவரது இயற்பெயர் கண்ணனார் என்பதாகும். இவர் பாடியது அகநானூற்று 202-வது பாடல் மட்டுமேயாகும்.

**பாடல் சிறப்பு**

இப்புலவர் பாடிய பாடலில் புலியைக் கொன்ற யானை தம் புண்ணுற்ற கையினை உயரத் தூக்கி பெருமூச்சு விடும்பொழுது, வேங்கை மரத்தின் மலர்கள், கொல்லன் துருத்தியிலிருந்து எழும் தீப்பொறிப் போல சிதறி எழுந்து மின்மினி பூச்சிகளைப் போல் கீழே படர்ந்திருக்கும் புதர்மீது பரவி விழும் என்று குறிஞ்சி நிலத்தின் வருணனையை எடுத்துரைக்கிறார்.

**8. ஆவூர்க் காவிதிகள் சாதேவனார்**

ஆவூர் சோழநாட்டில் உள்ளது. இப்புலவர் அரசர்க்கு அறிவுரை வழங்கும் அமைச்சராக இருந்து காவிதிப் பட்டத்தைப் பெற்றுள்ளார். சாதேவனார் என்பது இவரின் இயற்பெயராகும். சாதேவன் என்பது சஹதேவன் என்னும் வடசொல்லின் திரிபாக இருக்கலாம். இப்புலவர் அகநானூற்றில் ஒன்றும் நற்றிணையில் ஒன்றுமாக இரண்டு பாடல்களைப் பாடியுள்ளார்.

இப்புலவரின் பெயர் இவர் பாடிய அகநானூற்று 159-வது பாடலில் ஆமூர்க் கவுதமன் சாதேவன் என்று காணப்படுகிறது. ஆதலால் இப்புலவரின் ஊர் ஆவூரா, ஆமூரா என்ற ஐயப்பாடு தோன்றுகிறது.

இப்புலவர் தாம் பாடிய அகநானூற்றுப் பாடலில் தொண்டி நகரை அடுத்துள்ள ஆமூரைச் சிறப்பித்துள்ளார். ஆமூர் உயர்ந்த மலையை உடையது. சேரனை அழித்த கொடுமுடி என்பானால் காக்கப்பெறுவது என்று குறிப்பிட்டுள்ளார். இக்கருத்திற்கிணங்க பின்னத்தூரார் "புலவர் பெரும்பாலோர் தத்தம் ஊரைச் சிறப்பித்துக் கூறும் வழக்கின்படியே ஆமூர்க்கௌதமன் சாதேவனார் என்றிருக்க வேண்டிய இவர் பெயர் ஏடு எழுதுவோரின் மிகையால் ஆவூர்க்காவிதிகள் சாதேவனார் என்று எழுதப்பட்டது போலும். ஆமூர் குறும்பொறை மலையின்கீழ் உள்ள பாலைநிலத்தின் கண்ணது. அதற்கேற்ப இவர் பாடல்கள் பாலைத்திணையை வருணிப்பனவாகும்"[8] என்கிறார். ஆனால் ஆமூர் என்ற பெயரில் ஊர்கள் பல இருந்துள்ளன. 'முக்காவல் நாட்டு ஆமூர் மல்லனைச் சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி வென்றதைப் புறநானூறு மற்றும் அகநானூற்றுப் பாடல்கள் தெரிவிக்கின்றன.'[9] முக்காவல் நாட்டில் உள்ள ஆமூர் இன்றைய மாமல்லபுரம் இருக்கும் பகுதி என்று அறியமுடிகிறது.

வேலூரிலிருந்து கிடங்கிலை நோக்கிச் செல்லும் வழியில் ஆமூர் இருப்பதாக சிறுபாணாற்றுப்படை எடுத்துரைக்கிறது. வேலூருக்கு வடமேற்கில் கொண்டாமூர், சிற்றாமூர், நல்லாமூர் என மூன்று ஊர்கள் உள்ளன. "நல்லாமூருக்குச் சிறிது வடகிழக்கில் ஆறு மைல் தொலைவில் கிடங்கில் அமைந்துள்ளது 'ஆமூர்' என்ற பெயருடன் ஊர் இல்லாமலையாலும், சிறுபாணன் கூறியபடி இந்த நல்லாமூரே கிடங்கிலுக்கு அண்மையில் இருப்பதாலும், அந்தப் பாணன் கூற்றுப்படி வேலூருக்கும் இந்த நல்லாமூர்க்கும் இடையில் மருதவனம் காணப்படுவதாலும் இந்த நல்லாமூரே சங்க கால ஆமூராய் இருந்திருக்கலாம் என்று கொள்வது பொருத்தமாகும்"[10] என்று ஆளவந்தார் குறிப்பிடுகிறார்.

சங்க காலப் புலவர்கள் பல்வேறு நாடுகளுக்கும் சென்று பாடல்களைப் பாடி வாழ்ந்துள்ளனர். அவ்வாறு அவர்கள் பாடும்பொழுது தாம் கண்ட நாடு, நகரம், ஊர் போன்ற இயற்கைக் கூறுகளைத் தம் பாடலின் வழியே பதிவு செய்துள்ளனர். ஆவூர்க் காவிதிகள் சாதேவனார் தான் கண்ட தொண்டி நகர் ஆமூரின் சிறப்பினைப் பாடியிருத்தல் வேண்டும் எனலாம்.

### 9. ஆவூர் மூலங்கிழார்

"ஆவூரென்னும் பதியில் மூல நட்சத்திரத்தில் தோன்றியவர். அதனால் இவர் இப்பெயர் பெற்றார் என்பர்."[11] சோழநாட்டில் பிறந்த இவர் வேளாண் மரபினர். புகழ்மிக்க பெருந்தலைச் சாத்தனார் இவர் மகனாவார். "ஆவூர் உறையூர்க்கருகிலுள்ளது. அது இப்பொழுது பசுபதீச்சுரம் என வழங்கும்."[12] ஆவூர் மூலங்கிழார் கௌணியன் விண்ணந்தாயன் என்ற பார்ப்பானைப் பாடும்பொழுது தன் ஊரான ஆவூர் காவிரிக் கரையில் அமைந்துள்ளது என்பதை,

பூவிரி புதுநீர்க் காவிரி புரக்கும்
தண் புனற் படப்பை எம்ஊர் ஆங்கண்[13]

என்று குறிப்பிடுகிறார். இவர் கல்விச் செல்வத்தோடு வறுமை நிலை எய்தி வள்ளல்களை நாடிச்சென்று பொருள் பெற்று வந்து இல்லறத்தை நடத்தினார்.

#### பாடல் சிறப்பு

'செங்கோலினனாகிய ஓரரசனது நாடு சுவர்க்கத்திலும் சிறந்தது' என்றும், பல நாள் தேகம் உலரக் காத்திருந்து பெருஞ்செல்வரிடத்துப் பெற்ற யானை முதலிய

பெரும் பரிசில்களைக் காட்டிலும் ஒருவன் அன்புடன் அளிக்கும் உணவைக் காலையில் பனம்பட்டையில் உண்ணல் மிகச் சிறந்தது என்னும் கருத்துகள் இவரது புலமைத் திறனை எடுத்துரைக்கின்றன. ஆவூர் மூலங்கிழார் எட்டுத்தொகையில் பதினொரு பாடல்களைப் பாடியுள்ளார்.

## 10. இடைக்காடனார்

இடைக்காடு என்னும் ஊரினைச் சேர்ந்தவராதலால் இவர் இப்பெயர் பெற்றார். ஊர் அமைப்பு முறையில் 'இடை' என்னும் அடைமொழியுடன் அமைந்த ஊர்ப்பெயர்களுள் இடைக்காடும் ஒன்றாகும். இடைக்காடு என்பது பட்டுக்கோட்டை வட்டத்தில் உள்ளது. சாதியில் இடையரான இவர் கபிலரின் தோழர் ஆவார்.

### பாடுபொருள்

இப்புலவரின் செய்யுட்கள் பெரும்பான்மையாக முல்லைத்திணை, மழை, இடைச்சாதி என்பனவற்றின் இயல்புகளும், சிறுபான்மை மருதத்திணையின் வளமும் பற்றியனவாக உள்ளன. இவரால் பாடப்பட்டவை பதினொரு பாடல்கள் ஆகும்.

### பாடல் சிறப்பு

இவர்தம் பாடல்களில் தக்க உவமைகளை அமைத்துப் பொருள்களை விளக்குவதில் சிறந்தவர். முயற்கண்ணுக்கு நெல்லிக்காயை உவமித்துள்ளார். குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை நோக்கி 'மலையிலிருந்து பிரிந்து ஆறுகள் கடலை நோக்குவது போல, புலவர்கள் உன்னையே நோக்கினர். ஆனால் நீயோ பகைவேந்தனுடைய மண்ணையே நோக்கினாய்'[14] என்று அவனின் வீரச்சிறப்பினை எடுத்துரைத்துள்ளார்.

### புராண வரலாறு

இடைக்காடனார் இலக்கண, இலக்கிய கரைகண்ட குலேச பாண்டியன் மீது சில பாடல்களைப் பாடினார். அவற்றை அவன் கேட்டு மதியாது இருந்ததைக் கண்டு மானம் புறத்தே தள்ள சோமசுந்தரர் திருக்கோயிலை அடைந்து, 'தமிழறியும் பெருமானே திருஆலவாய் முதல்வரே என்று இறைவனிடம் முறையிட்டு அவன் என்னை இகழவில்லை. தாங்கள் இடப்பாகத்தில் குடிகொண்டிருக்கும்

அம்மையாரையும் தங்களையும் இகழ்ந்தான் என்று கூறி வெளியேறினார். அதைக்கேட்ட சிவபெருமான் அவருடன் செல்லவே சங்கப் புலவர்களும் அவருடன் சென்றனர். இந்நிகழ்ச்சியை அறிந்த பாண்டியன் மனம் கலங்கி இடைக்காடரை அடைந்து குறையிரந்து அவர் மனவருத்தத்தைப் போக்கி அவருக்கும் உடனிருந்த புலவர்களுக்கும் பொன்னும் பொருளும் வழங்கி, தானும் ஏழடி பின்சென்று அவரை வழி அனுப்பினான்'[15] என்று இடைக்காடரின் பெருமையினைத் திருவிளையாடல் புராணம் திருஆலவாய்க் கண்டம் தெரிவிக்கின்றது.

**11. இரும்பிடர்த் தலையார்**

யானையின் பெரிய கழுத்தை இரும்பிடர்த்தலை என்ற தொடரால் உவமித்தமையால் இப்புலவர் இரும்பிடர்த்தலையார் என்ற பெயர் பெற்றார். இவர் கரிகால் வளவன் பகை மன்னரிடம் சிறையிருந்த வழி பகையை அழித்து வெளியேறி வெற்றிபெற அவனுக்குத் துணை புரிந்தவர் ஆவார். இதனை,

> **அடப்பட்டு இருந்த சோழன் மகனும்**
> **பிடர்த்தலைப் பேரானைப் பெற்றுக் - கடைக்கால்**
> **செயிரறு செங்கோல் செலீஇயினான்- இல்லை**
> **உயிருடையார் எய்தா வினை[16]**

என்னும் பழமொழி வெண்பாவால் அறியமுடிகிறது. புறநானூற்றில் மூன்றாவது பாடலை மட்டும் இயற்றியுள்ளார்.

**உறையூர்ப் புலவர்கள்**

சங்கச் சான்றோர் புகழ்ந்துபாடும் சிறப்பையும் புகழையும் உடையது உறையூர். பண்டைக் காலத்தில் உறையூர் சிறந்திருந்தது என்பதற்கு அவ்வூரில் விளங்கிய புலவர்களே சான்றாவார். உறையூரைச் சார்ந்தவர்களாக ஒன்பது புலவர்கள் காணப்படுகின்றனர். அவர்கள்:

1. உறையூர் இளம்பொன் வணிகனார்
2. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்
3. உறையூர்க் கதுவாய் சாத்தனார்
4. உறையூர்ச் சல்லியங்குமரனார்
5. உறையூர்ச் சிறுகந்தனார்
6. உறையூர்ப் பல்காயனார்

7. உறையூர் மருத்துவன் தாமோதரனார்
8. உறையூர் முதுகண்ணன் சாத்தனார்
9. உறையூர் முதுகூத்தனார்

ஆகியோர் ஆவர்.

## 12. உறையூர் இளம்பொன் வணிகனார்

உறையூர் வாணிகத்தில் வளம்பெற்று இருந்தது. அங்கே பல்வேறு வணிகக் குழுவினர்கள் வாழ்ந்துள்ளனர். அவருள் பொன் வணிகர் குழுவினரும் இருந்தனர். பொன், ஆடகம், சாம்பூநதம், கிளிச்சிறை, சாதரூபம் என்று பொன் வகைகள் பல உண்டு. இவற்றுள் ஆடகமும், சாம்பூநதமும் மாற்றுக்குறைதல் இல்லாத பெருமை வாய்ந்தது. ஆதலால் அவற்றைப் பெரும்பொன் என்றும், கிளிச்சிறையும், சாதரூபமும் மாற்றுக் குறைந்தன ஆதலின் அவற்றை இளம்பொன் என்றும் பிரித்து வாணிகம் செய்துள்ளனர்.

### பெயர்க்காரணம்

இப்புலவர் இளம்பொன் வாணிகத்தை மேற்கொண்டு வாழ்ந்தமையால் இளம்பொன் வணிகனார் என்று அழைக்கப் பெற்றார். இவர் பாடிய புறநானூற்றுப் பாடலில் வீரனின் கொடைச்சிறப்பு, அவன் இறந்த பிறகு இரவலர்கள் படும் துன்பம் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. இளம்பொன் வணிகனார் புறநானூற்றில் 264-வது பாடலை மட்டும் பாடியுள்ளார்.

## 13. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்

இப்புலவரின் இயற்பெயர் மோசி ஆகும். இவர் மோசியார் என்றும் வழங்கப் பெற்றார். உறையூரில் ஏணிச்சேரி என்னுமிடத்தில் பிறந்து முடம்பட்டவராதலால் இவர் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்றழைக்கப்பட்டார். இவர் அந்தணர் குலத்தவர்.

சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி, ஆய் அண்டிரன் ஆகியோர் மீது மிகுந்த அன்பு கொண்டவர். ஆய் அண்டிரனின் கொடைச்சிறப்பினையும், வீரச்சிறப்பையும் வியந்துப் பாடியுள்ளார். இதனால் இவரைப் பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் 'திருந்துமொழி மோசிபாடி ஆய்' என்று பாராட்டியுள்ளார்.

இதிலுள்ள திருந்துமொழி என்னும் அடைமொழி இவருடைய சிறந்த புலமையை வெளிப்படுத்துகின்றது. புறநானூற்றில் மட்டும் பதின்மூன்று பாடல்களைப் பாடியுள்ளார்.

### 14. உறையூர்க் கதுவாய்ச் சாத்தனார்

உறையூரில் பிறந்தவரான இவர் சாத்தனார் என்னும் இயற்பெயரை உடையவர். உறையூரில் கதுவாய்ச்சேரியில் பிறந்தமையால் உறையூர்க் கதுவாய்ச் சாத்தனார் என்றழைக்கப்பட்டார். கதுவாய் என்பது முரிந்தவாய் என்றும் பொருள்படும். "கதுவாய் என்பது உறையூரின் பகுதிகளுள் ஒன்று. இச்சாத்தனார் அங்கு வாழ்ந்தமை பற்றி உறையூர்க் கதுவாய்ச் சாத்தனார் எனப்பட்டனராதல் வேண்டும். கதுவாய்கள் மேற்கதுவாய், கீழ்க்கதுவாய் எனவும் வழங்கும். சோழர் தலைநகராகிய உறையூர் ஏணிச்சேரி, கதுவாய்ச்சேரி எனப் பல சேரிகள் கொண்டு காவிரியின் தென்கரையில் பரந்து விளங்கினமையால் 'ஊரெனப்படுவது உறையூர்' என்ற பழமொழிக்கு இலக்காய் நின்றது. இங்கே இருந்த அறங்கூறு அவையம் தமிழகம் முழுவதும் பரவி விளங்கிற்று. அது பற்றிச் சான்றோர் அறம் துஞ்சும் உறந்தை எனச் சிறப்பித்தனர் என்று உறையூர்க் கதுவாய்ச் சாத்தனார் பற்றிக் குறிப்பிடும்போது ஔவை துரைசாமிப்பிள்ளை தெளிவுறுத்துகின்றார் என்பார் வேனிலா ஸ்டாலின்."[17] இவர் பாடிய பாடலில் இல்லறச் சிறப்பின் முக்கியக் கூறான மக்கட்பேற்றினை இல்லறம் அடைந்தால் அவ்வில்லறம் அளவற்ற மகிழ்ச்சியை அடையும் என்பதைச் சுட்டி நிற்கிறது. இப்புலவர் பாடியது நற்றிணையில் 370-வது பாடல் மட்டுமேயாகும்.

### 15. உறையூர்ச் சல்லியங்குமரனார்

இவர், உறையூரைச் சார்ந்தவர். இவர் இயற்பெயர் சல்லியங்குமரனார் என்பதாகும். இவரைப் பற்றி பிற செய்திகள் தெரியவில்லை.

#### பாடல் சிறப்பு

பரத்தையின்கண் சென்ற தலைவன் மீண்டு வந்து வாயில் நேர்ந்தபொழுது தோழி தலைவனிடம், 'உழவர் தங்கள் வயல்களில் அறுவடை செய்யும்பொழுது அங்கே இருக்கின்ற நெய்தல் மலரைப் பறித்து வரப்பிலே வீசி எறிவர். அவ்வாறு வீசி எறியினும், தன்னை வெறுத்த நிலத்தை மீண்டும் அடைந்து நெய்தல் மலர் மலரும். அதுபோல் கணவன் எவ்வளவு துன்பங்கள் செய்தாலும் இல்லற மகளிர் தம் கணவரை

வெறுக்காமல் அவருடன் கூடி வாழும் வாழ்க்கையையே விரும்புவர்' என்று இப்புலவர் கூறும் பாங்கு சிந்திக்கத்தக்கது. உறையூர் சல்லியங்குமரனார் குறுந்தொகையில் 309-வது பாடலைப் பாடியுள்ளார்.

## 16. உறையூர்ச் சிறுகந்தனார்

இவர், கந்தன் என்னும் கடவுள் பெயரை இயற்பெயராக உடையவர். சிறுகந்தனார் என்னும் புலவர் உறையூரில் வாழ்ந்திருந்தமையால், பெருங்கந்தனார் என்ற ஒருவரும் உறையூரில் வாழ்ந்திருக்கலாம் எனக் கருத இடமளிக்கிறது. சங்க காலப் புலவர்களில் பெருங்கந்தனார் என்னும் பெயர் காணப்படவில்லை.

### பாடல் சிறப்பு

நீரின் தண்மையும், தீயின் வெம்மையும் அவற்றைத் தீண்டியவழி துன்பம் தந்தும், அவற்றை விட்டவழி அகன்றும் செல்லும். ஆனால் காமநோயோ, அவர் உற்ற வழித்தோன்றி, அவர் அற்ற வழியும் அகலாது உறுதுயரைத் தரும் என்று காதல்நோயின் தன்மையினைக் கூறும் பாங்கு சிறப்புடையது. இவர் பாடியது குறுந்தொகையில் 257-வது பாடல் மட்டுமேயாகும்.

## 17. உறையூர்ப் பல்காயனார்

இப்புலவரின் இயற்பெயர் பல்காயனார் என்பதாகும். உறையூரைச் சார்ந்தவர். இவர் தம் பாடலில் தலைவியின் ஒழுக்கத்தைக் கண்டு ஊரார் அடையும் மயக்க நிலையினைத் தூக்கணங்குருவி பனைமேல் தொடுத்த கூட்டின் மயக்கத்திற்கு உவமை கூறும் பாங்கு போற்றத்தக்கது. இவர் குறுந்தொகையில் 374-வது பாடலை மட்டும் இயற்றியுள்ளார்.

## 18. உறையூர் மருத்துவன் தாமோதரனார்

தாமோதரனார் என்பது திருமாலின் நாமமாகிய தெய்வப் பெயராகும். இதனால் இவர் குடும்பத்தினர் திருமாலின் அடியவராகக் கருதப்படுகின்றனர்.

**தொழில்**

மருந்தளித்து நோய் தீர்க்கும் மருத்துவ முறையினைத் தமிழ்மக்கள் பண்டே அறிந்திருந்தனர். அத்தகைய மருத்துவர்கள் தமிழகத்தின் ஊர்கள் தோறும் சென்று மக்களின் பிணியைப் போக்கியுள்ளனர். இம்மருத்துவர்களுள் உறையூரில் வாழ்ந்த தாமோதரனாரும் ஒருவராகத் திகழ்ந்து, மக்களைக் காத்ததோடு சிறந்த புலவராகவும் விளங்கியதை அறியமுடிகிறது. உறையூர் மருத்துவன் தாமோதரன் பாடியவையாக ஐந்து பாடல்கள் காணப்படுகின்றன.

**19. உறையூர் முதுகண்ணன் சாத்தனார்**

சாத்தனார் என்பது இவர் இயற்பெயராகும். இவர் உறையூரில் வாழ்ந்த முதுகண்ணன் என்பாரின் மகனாவார். ஆதலால் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் எனப்பட்டார்.

ஆண்டாலும் அறிவாலும் முதிர்ந்து அரசர்க்கும் பிறர்க்கும் அறிவுரை கூறும் வல்லார்க்கு உரிய பெயராக 'முதுகண்ணன்' என்ற சொல் வழங்கப்பெற்றது என்பதை 'முற்றிழை மகளிர்க்கு முதுகணாமென' என்று பெருங்கதை குறிப்பிடுகிறது. இக்கருத்தை நோக்குமிடத்து இப்புலவரும், இவர் தந்தையாரும் மற்றவர்க்கு அறிவுறுத்தும் நிலையில் இப்பெயர் பெற்றிருக்கலாம் என்பதை அறியமுடிகிறது.

இவர் காலத்துப் புலவராக ஆலத்தூர் கிழாரும் கோவூர் கிழாரும் காணப்படுகின்றனர். இவர்தம் பாடலில் உலக நிலையாமையையும் அறம், பொருள் இன்பங்களின் சிறப்பினையும் விளக்கியுள்ளார். இப்புலவர் ஆறு பாடல்களைப் பாடியுள்ளார்.

**20. உறையூர் முதுகூத்தனார்**

உறையூர் முதுகூத்தனார் எனவும், உறையூர் முதுகூற்றனார் எனவும், உறையூர் முதுகொற்றனார் எனவும் வழங்கப்பெறும் பெயர்கள் மூன்றும் ஒருவரையே குறிக்கும். "உறையூர் வாழ்வினரான இவர் ஆரியக் கூத்து, தமிழ்க்கூத்து என்ற கூத்து வகைகள் அனைத்திலும் சிறந்த பெரியோராக விளங்கியமையால் இவரை அக்கால மக்கள் உறையூர் முதுகூத்தனார் எனச் சிறப்புப் பெயரிட்டு அழைத்தனர் எனவும், கூத்தனார் என்ற அப்பெயர் பின்னர்க் கூற்றனார் எனவும் கொற்றனார் எனவும் மருவி வந்துற்றது

எனவும் ஆராய்ச்சியாளர் கூறுவர்."[18] உறையூர் முதுகூத்தனார் எட்டுத்தொகையில் ஒன்பது பாடல்களைப் பாடியுள்ளார்.

**ஐயூர்ப் புலவர்கள்**

சோழநாட்டுப் புலவர்களில் ஐயூரைச் சேர்ந்தவர்களாக இருவர் காணப்படுகின்றனர். அவர்கள்:

1. ஐயூர் முடவனார்
2. ஐயூர் மூலங்கிழார்

ஆகியோராவர்.

**21. ஐயூர் முடவனார்**

முடவனார் என்பது இப்புலவரின் இயற்பெயராகும். இப்புலவர் கால் முடம்பட்டவர். ஆதலால் இவர் இப்பெயரைப் பெற்றார். ஐயூர் என்னும் பெயரில் சோழநாட்டிலும் பாண்டி நாட்டிலும் ஊர்கள் உண்டு. "ஐயூர் என்பது சோழநாட்டகத்து ஊர்."[19] இப்புலவர் முடமாதலால் எங்குச் செல்ல வேண்டுமாயினும் எருதுகள் இழுத்துச் செல்லும் வண்டியூர்ந்தே செல்வார். இவர் தாமான் தோன்றிக்கோன் என்னும் குறுநில மன்னனை அடைந்து வண்டி இழுத்தற்குப் பகடு வேண்டுமென்று பாடினார். அம்மன்னனும் பகடுகளும், பல பசு நிரைகளும் இப்புலவருக்கு அளித்தான்.

இறந்தோர் உடம்பைத் தாழியால் கவித்தல் முறையும், வீரச்சிறப்பும் கொடைச்சிறப்பும் இவரது பாடல்களில் காணப்படுகின்றன. அகம்.216இல் தந்தை கள் குடித்த மயக்கத்தால் கடமை மறந்து இருக்க அவன் மகள் அவர் மீது காட்டும் அன்பு வாழ்வினை வகுத்துக் காட்டியுள்ளார். ஐயூர் முடவனாரால் இயற்றப்பட்டவை பத்துப் பாடல்கள் ஆகும்.

**22. ஐயூர் மூலங்கிழார்**

இப்புலவர் மூல நட்சத்திரத்தில் பிறந்ததால் மூலங்கிழார் என்னும் பெயரை பெற்றுள்ளார். இப்புலவர் உக்கிரப்பெருவழுதி என்னும் பாண்டிய மன்னன் கானப்பேர் என்னுமிடத்தில் இருந்த வேங்கை மார்பன் என்னும் சிற்றரசனை வென்று அவன் கோட்டையைக் கைப்பற்றிய வரலாற்றினைத் தம் பாடலில் எடுத்துரைக்கிறார்.

கானப்பேரென்பது ‘காளையார் கோவில்’ என்று இப்பொழுது வழங்குகிறது. புறநானூற்றில் 21-வது பாடலை மட்டும் பாடியுள்ளார்.

## 23. கடலூர்ப் பல்கண்ணனார்

இப்புலவரின் இயற்பெயர் பல்கண்ணனார் என்பதாகும். இவர் பெயர் கூடலூர்ப் பல்கண்ணனார் எனவும் ஏடுகளில் காணப்படுகிறது. இவர்க்கு உரிய கூடலூர் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ளது. ஊரில் திருவிழா நடைபெறப்போகும் நிகழ்ச்சியினை வள்ளுவக்குடி வந்த முதியோன், யானை மீது ஏற்றி முரசினை முழக்கி ஊரையும், ஊராள் அரசனையும் வாழ்விக்கும் வழக்கத்தைப் போன்றே, அவ்வூர்க்குயவர் குடி வந்தோன், நொச்சிமாலை அணிந்துக்கொண்டு ஆறுபோல் பரந்த தெருவின் வழியே சென்று நிகழ்ச்சியினை விளங்க உரைக்கும் வழக்கம் இருந்துள்ளதை இவர் பாடலால் அறியமுடிகிறது. இதனை,

> கண்ணி கட்டிய கதிர அன்ன
> ஒண்குரல் நொச்சித் தெரியல்குடி
> ஆறு கிடந்தன்ன அகல் நெடுந் தெருவில்
> சாறெனெ நுவலும் முதுவாய் குயவ![20]

என்னும் வரிகள் உணர்த்துகின்றன. இவர் நற்றிணையில் மட்டும் இரண்டு பாடல்களைப் பாடியுள்ளார்.

## 24. கயத்தூர் கிழார்

கயத்தூர் கிழார் என்னும் பெயர் பிறந்த ஊர்ப் பெயரைக் குறித்து நிற்கிறது. இவர் வேளாண்குடியில் பிறந்தவர். இப்புலவரைச் சோழநாட்டுப் புலவர்கள் என்ற வரிசையில் சஞ்சீவி சுட்டவில்லை. எனினும் அவரே சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணையில் புலவர் பெயரால் அறியப்படும் ஊர்ப்பெயர்கள் என்ற வகைப்பாட்டில் “கயத்தூர் சோழநாட்டின்கண் உள்ளதோர் ஊர்”[21] என்று குறிப்பிட்டுள்ளார். இவரின் கருத்திற்கிணங்க கா.கோவிந்தன் என்பாரும் சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை என்னும் நூலில் கயத்தூர் என்பது சோழநாட்டில் உள்ள ஊர் என்றே குறிப்பிடுகிறார். இப்புலவர் ஒரு பாடலை மட்டும் பாடியுள்ளார். அது குறுந்தொகையில் மருதத்திணைப் பாடலாக அமைந்துள்ளது. ஆதலால் இவர் சோழநாட்டைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

**பாடல் சிறப்பு**

கயத்தூர் கிழாரின் பாடலில் மனித வாழ்விற்குத் தேவையான சிந்தனைகள் இடம்பெற்றுள்ளன. நீரில் நீண்ட நேரம் விளையாடினால் கண் சிவந்துவிடும். இனிப்பையே விரும்பி உண்டால் தேன்கூட புளிக்கும் என்று பாடியுள்ளார். இக்கருத்துகள் மனிதன் அளவோடு வாழவேண்டும் என்பதை உணர்த்துகிறது. 'பழகப் பழக பாலும் புளிக்கும்', 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும்' என்னும் முதுமொழிகள் இங்கு ஒப்புநோக்கத்தக்கன.

**காவிரிப்பூம்பட்டினப் புலவர்கள்**

வற்றாத வளமும், பழம்பெருமையும் வாய்ந்த காவிரிப்பூம்பட்டினத்தில் புலவர்கள் பலர் வாழ்ந்துள்ளனர். அவர்கள்:

1. காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார்
2. காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்
3. காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்
4. காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தன் கண்ணன்
5. காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார்

என ஐவர் ஆவர்.

## 25. காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார்

கந்தரத்தனார் என்பது இப்புலவரின் இயற்பெயராகும். காவிரிப்பூம் பட்டினத்தில் பிறந்த புலவர்களுள் இவரும் ஒருவர் ஆவார். இதைத் தவிர இவர் வரலாறு குறித்துப் பிற செய்திகளை அறிய முடியவில்லை. இப்புலவர் பாடியது குறுந்தொகையில் **342**-வது பாடல் மட்டுமேயாகும்.

## 26. காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார்

காரிக்கண்ணனார் என்பது இப்புலவரின் இயற்பெயராகும். இப்பெயர் உறுப்பால் அமைந்ததாகும். 'காரிக்கண்' என்றால் அழகுதரும் கண் என்பது பொருளாகும். கருமை நிறம் கண்ணிற்குப் பேரழகு தருவதாகும். காரி என்றால் கரிக்குருவி என்றும் பொருள்படும். கரிக்குருவியின் கண்போன்ற கண்களை உடையமையால் இவர் இப்பெயர் பெற்றுள்ளார் என்பதையும் அறியமுடிகிறது. இவர்

வணிக மரபினர். அகம்.123இல் 'கழைமாய் காவிரிக் கடல்மண்டு பெருந்துறை' எனத் தம்மூர் துறைமுகத்தைச் சிறப்பித்துள்ளார். இப்புலவர் பத்துப் பாடல்களை இயற்றியுள்ளார்.

**சமயப்பற்று**

சோழன் பெருந்திருமாவளவனையும், பாண்டியன் பெருவழுதியையும் இவர் ஒரு சேர வாழ்த்திய போது பாண்டியனுக்குத் திருமாலையும், அவர்கள் இருவரும் சேர்ந்திருந்தபொழுது கண்ணன், பலதேவன் இருவரையும் உவமையாகக் கூறியிருத்தலால் இவர் திருமால் அடியவராகக் கருதப்படுகின்றார்.

**பாடல் சிறப்பு**

அகம்.107இல் தேக்கிலையில் வடுகர் தயிர்ச் சோறுண்ணும் வழக்கத்தைக் குறித்துள்ளார். புறம்.57இல் பாண்டியன் இலவந்திகைப் பள்ளிதுஞ்சிய நன்மாறனை நோக்கிப் பகைவர் நாட்டுக் காவல் மரங்களை வெட்டுதல் கூடாது என்று வற்புறுத்துவதால் அக்காலத்தில் அரசனின் காவல் மரங்கள் புனிதமாகக் கருதப்பட்டதை உணரமுடிகிறது.

### 27. காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்

இப்புலவரின் இயற்பெயர் கண்ணனார் என்பதாகும். இவருக்கு இப்பெயர் ஊராலும் உறுப்பாலும் பெற்று வந்துள்ளது. நீர்வேட்கை மிகுந்து வருந்தி வருவார்க்கு, அவர் உயிர்காக்கும் மருந்தாய்த் துணைபுரிவது நெல்லிக்கனி என்று அதன் இனிமையினை,

நெடுஞ்சேரன் வந்த நீர்நசை வம்பலர்
செல்லுயிர் நிறுத்த சுவைக்காய் நெல்லி[22]

எனப் பாராட்டுகிறார். இப்புலவர் மூன்று பாடல்களைப் பாடியுள்ளார்.

### 28. காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தன் கண்ணன்

இவர் இயற்பெயர் சேந்தன் கண்ணன் என்பதாகும். இவர்தம் பாடலில் இளவாகையைக் குமரிவாகை என்று குறிப்பிடுகிறார். இதைத்தவிர இவரைப் பற்றி பிற செய்திகள் தெரியவில்லை. இவர் பாடியது குறுந்தொகையில் 347-வது பாடல் மட்டுமே ஆகும்.

### 29. காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார்

இப்புலவரின் இயற்பெயர் நப்பூதனார் என்பதாகும். இவர் பொன் வாணிகர் குடியில் தோன்றியவர். காவிரிப்பூம்பட்டினத்தில் புடைத்துண்ணும் பூதச்சதுக்கம் ஒன்று இருந்தது. புகார் நகரத்து மக்கள் அப்பூதத்தைத் தெய்வமாகப் போற்றி, அதன் பெயரைத் தங்கள் மக்களுக்கு இட்டு வழங்கியுள்ளனர். பூதனார் என்ற பெயரும் அவ்வழியே வழங்கப் பெற்றிருக்க வேண்டும் என்று கருதலாம். "பூதனார் அவ்வூரில் வாழ்ந்த அப்பெயர் கொண்ட அனைவரினும் சிறந்து விளங்கினமையால் அச்சிறப்பைக் குறிக்கும் 'ந' என்னும் அடையினைப் பெற்று நப்பூதனார் என வழங்கப்பெற்றார்"[23] என்று கா.கோவிந்தன் குறிப்பிடுகிறார்.

### நூலின் சிறப்பு

இப்புலவர் பாடிய முல்லைப்பாட்டு என்னும் நூலில் முல்லை நிலத்தின் சிறப்பினையும், அரசன் முதல் ஆயர் வரையுள்ள மக்கள் பண்டைக் காலத்தில் மேற்கொண்டிருந்த வாழ்க்கை முறைகளையும் நன்கு எடுத்துக் காட்டியுள்ளார். இந்நூல் அளவால் சிறிதாயினும் பொருட்சிறப்பால் உயர்புகழ் பெற்று விளங்குகிறது. இப்புலவர் பாடியது முல்லைப்பாட்டு நூல் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

### கிடங்கில் புலவர்கள்

சோழநாட்டுப் புலவர்களில் கிடங்கில் என்னும் ஊரைச் சேர்ந்தவர்களாக மூன்று புலவர்கள் காணப்படுகின்றனர். அவர்கள்:

1. கிடங்கில் காவிதிக் கீரங்கண்ணனார்
2. கிடங்கில் காவிதிப் பெருங்கொற்றனார்
3. கிடங்கில் குலபதி நக்கண்ணனார்

ஆகியோர் ஆவர். இம்மூவரில் இருவர் அமைச்சர்; ஒருவர் ஆசிரியர்.

### 30. கிடங்கில் காவிதிக் கீரங்கண்ணனார்

இப்புலவரின் இயற்பெயர் கண்ணனார் என்பதாகும். இவர் தந்தையார் கீரன் ஆவார். அரசருக்குச் சிறந்த ஆலோசனைகளை வழங்கும் அமைச்சர் தொழிலை மேற்கொண்டு, காவிதி என்னும் பட்டத்தைப் பெற்று வாழ்ந்துள்ளார்.

**கிடங்கில் நகரின் சிறப்பு**

இப்புலவர் வாழ்ந்த கிடங்கில் என்னும் ஊர் தென்னார்க்காடு மாவட்டம் திண்டிவனம் வட்டத்தில் உள்ளது. சங்க காலத்தில் ஓய்மா நாட்டில் இவ்வூர் இருந்துள்ளது. ஒய்மாநாடு நல்லியக்கோடன் என்பானுக்கு உரியது. நல்லியக்கோடனைப் பாடிய நல்லூர் நத்தத்தனார் கிடங்கில் நகரை 'கிளைமலர்ப் படப்பைக் கிடங்கில்' என்று பாராட்டியுள்ளார்.

**பாடல் சிறப்பு**

இவர் பாடிய பாடலில் ஞாயிறு மறைந்த இரவுக் காலத்தை,

ஞாயிறு ஞான்று கதிர் மழுங்கின்றே
எல்லியும் பூங்கொடியிற் புலம்படைந்தன்றே[24]

என்னும் அடிகளில், சூரியனின் ஒளியைப் பெறாத இரவுக்காலம் பூவுதிர்ந்த கொடிபோல் அழகிழந்து காணப்பட்டது என்று விளக்கியுள்ளார். இவர் நற்றிணையில் 218-வது பாடலை மட்டும் பாடியுள்ளார்.

**31. கிடங்கில் காவிதிப் பெருங்கொற்றனார்**

இப்புலவரின் இயற்பெயர் பெருங்கொற்றனார் என்பதாகும். கிடங்கில் நகரில் தோன்றிய மற்றொரு புலவரான இவர் அமைச்சர் குடியில் வந்தவராவர். "பழந்தமிழ் மன்னர்கள் தங்கள் நாட்டின் சிறந்த வணிகர்க்கு எட்டி என்ற பட்டத்தையும், அதற்குரிய மோதிரத்தையும் அளித்துப் பெருமை செய்வதும், தங்கள் படையாளருள் சிறந்தார்க்கு ஏனாதிப் பட்டத்தையும் அதற்குரிய மோதிரத்தையும் அளித்துப் பாராட்டுவதும் வழக்கமாகும். அதைப்போலவே தம்மோடு வாழ்ந்து தமக்கு அரசியல் நெறியில் அறிவுரை வழங்கி வரும் அமைச்சர்க்குக் காவிதிப் பட்டம் அளித்துப் போற்றுவர்"[25] என்கிறார் கா.கோவிந்தன். இத்தகு காவிதிப் பட்டம் பெற்ற அமைச்சர்கள், மன்னர்க்கு நன்மை, தீமைகளை ஆராய்ந்து கூறியும், தீய வழியில் செல்லாது நல்ல வழியில் போகச் செய்தும், தம் சுற்றத்தாரிடத்து அன்பும் அறமும் நீங்காது நாடுகாத்தும், பழிதரும் செயல் தம்மை அடையாத வண்ணம் உயர்ந்த புகழ் பெற்று வாழும் பெருமையுடையவர் என்பதை,

நன்றும் தீதும் கண்டு ஆய்ந்து அடக்கி
அன்பும் அறனும் ஒழியாது காத்துப்

பழிஒரீஇ, உயர்ந்து பாய்புகழ் நிறைந்த

செம்மை சான்ற காவிதி மாக்கள்[26]

*என்று மாங்குடி மருதனார் குறிப்பிடுகிறார்.*

*இத்தகைய சிறப்புமிக்க குடியில் தோன்றிய பெருங்கொற்றனார் நற்றிணையில் 364-வது பாடலை மட்டும் பாடியுள்ளார்.*

## 32. கிடங்கில் குலபதி நக்கண்ணனார்

*இப்புலவரின் இயற்பெயர் கண்ணன் என்பதாகும். 'ந' என்னும் அடை சிறப்புப் பற்றி வந்தது. ஆயிரம் மாணவர்களை ஆதரித்துக் கல்வி கற்பிப்போர் குலபதியாவர். இப்பட்டத்தை இவர் பெற்றுள்ளமையால் இவர் சிறந்த ஆசிரியர் என்று அறியமுடிகிறது.*

### சான்றோர் பெருமை

*பிறர் தம்மைப் புகழும்போது சான்றோர் நாணுவர்; பிறர் தம் மீது பழிகூறின் உயிர் வாழார் என்று சான்றோரின் இவ்வியல்பினை,*

...................................... சான்றோர்

புகழும் முன்னர் நாணுப,

பழியாங் கொல்பவோ காணுங்காலே[27]

*என்று தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார். இவர் குறுந்தொகையில் 252-வது பாடலை மட்டுமே பாடியுள்ளார்.*

## 33. குட வாயிற்கீரத்தனார்

*இப்புலவரின் இயற்பெயர் கீரத்தனார் என்பதாகும். இப்புலவர் வாழ்ந்த குடவாயில் சோழ நாட்டில் உள்ள பேரூராகும். இது திருவாரூர் மாவட்டம் நன்னிலம் வட்டத்தில் உள்ளது. சோழர்களின் நகராக இருந்த இவ்வூர் நாயன்மார்களால் பாடப்பெற்றது. இவ்வூர் குறையாத புதுப்புது வருவாய்களை உடையது. நெல் விளைத்துப் பயன் கொள்ளும் குடிப்பரப்பினை உடையது என்றெல்லாம் குடவாயிலின் சிறப்பினை,*

அறாஅ யாணர்ப்

பழம்பல் நெல்லின் பல்குடிப் பரவைப்

பொங்கடி படிகயம் மண்டிய பசுமிளைத்

தண் குட வாயில்[28]

என்று குறிப்பிடுகிறார்.

கீரத்தனார் பல நாடுகளுக்கும் சென்று வந்தவர். சேர, சோழ, பாண்டிய நாடுகள் முழுவதும் சென்று அங்கேயுள்ள ஊர்களையும் அவற்றின் சிறப்புக்களையும் தம் பாடலில் வெளியிட்டுள்ளார். சேரனுடைய தொண்டி, பாண்டியரின் கூடல் நகர், சோழரின் உறையூர் என மூன்றையும் இவர் பாடலில் பாடியிருத்தலால் இவர் மூவராலும் ஆதரிக்கப் பெற்றவர் என்பதை அறியமுடிகிறது. மேலும் அங்கே வாழும் ஒருசார் இனத்தினரான கொங்கர், மழவர், வடுகர் போன்றோரின் வாழ்வியல் முறைகளையும் தம் பாடலில் விளக்கியுள்ளார். இவர் எட்டுத்தொகை நூல்களில் பதினேழு பாடல்களைப் பாடியுள்ளார்.

## 34. கொள்ளம் பக்கனார்

இப்புலவர் கோளம்பக்கனார் என்றும் வழங்கப்பட்டுள்ளார். கோளம் என்பது திருக்கோழம்பத்தைக் குறிக்கும். இவர் அவ்வூரில் வாழ்ந்தவர் என்று அறியமுடிகிறது. இதைத்தவிர இவர் வரலாறு பற்றி வேறு செய்திகளை அறியமுடியவில்லை. இவர் நற்றிணையில் 147-வது பாடலை மட்டும் பாடியுள்ளார்.

## 35. கோக்குள முற்றனார்

இப்புலவரின் பெயர் ஊர் பற்றி வந்ததாகும். குளமுற்றம் என்பது ஊர்ப்பெயராகும். இவர் 'கோ' என்னும் உரிமை பெற்று உழுவித்து வாழும் வேளாண் மரபினர் ஆவர். ஆதலால் கோக்குளமுற்றனார் என்றழைக்கப்பட்டார். இவர் பெயரில் உள்ள 'கோ' என்னும் அடைமொழியைச் சேர்த்து கோக்குளம் என்பது ஓர் ஊர் என்ற கருத்துகளும் நிலவியுள்ளன. கோக்குளம் என்பது ஓர் ஊராகும். அது வெண்காடாக இருந்தது. ஆதலால் கோக்குளமுற்றம் என்ற சொல்லே ஓர் ஊரின் பெயர் என்று கொள்ளலாம் என்று அறிஞர் ஒருவர் கருதுகிறார். இவ்வூரினை வெண்காடு என்று அறிஞர் கூறுவதனை மறுத்து, "கோக்குளம் என்பதே ஓர் ஊர். அது வெண்காடு என்று கொள்வது பொருந்தாது"[29] என்பர். இப்புலவர் பாடிய இரண்டு பாடல்களிலும் தலைவனைப் பிரிந்த தலைவியின் பசலை நோய்க் கொடுமையினை விரித்துக் கூறுகிறார்.

### 36. கோவூர் கிழார்

*இப்புலவரின் பெயர் ஊர்பற்றி வந்ததாகும். இவர் வேளாண் மரபினர். சோழர் பரம்பரையினால் ஆதரிக்கப் பெற்றவர்.*

#### குணநலன்கள்

*இவர் நன்றியுள்ளவர்; பிறருடைய சீற்றத்தைத் தணிப்பதில் கண்ணும் கருத்துமாக வாழ்ந்தவர்; அனைவரும் மனஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்பது இவரது விருப்பமாகும். வள்ளல்களின் குணநலன்களைப் பாராட்டுவதிலும் வீரச் செயல்களை வெளிப்படுத்துவதிலும் மிக்க ஆற்றல் வாய்ந்தவர்; அஞ்சாத நெஞ்சினர். இத்தகைய குணநலன்கள் வாய்ந்த கோவூர் கிழார் தொண்டை நாட்டைச் சேர்ந்தவர் என்ற கருத்தும் நிலவுகிறது. "தொண்டை நாட்டில் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள கோவூரே கிழார் பிறந்த பேரூராம்"[30] என்பர். எனினும் இவர் சோழநாட்டையும், சோழ மன்னர்களின் கொடைத் தன்மையினையுமே வியந்து பாடியுள்ளார். ஆதலால் இவர் சோழ நாட்டைச் சேர்ந்தவர் என்று உறுதிப்படுத்தலாம்.*

*சோழன் நலங்கிள்ளியைக் காண புகார்க்குச் சென்ற பொழுது அவன் புலவரைப் போற்றி பொன்னும் பொருளும் அளித்தான். அளித்த பொருளின் மிகுதியைக் கண்ட கோவூர் கிழார் அப்பொருளானது தன்வாழ்நாளுக்கு மேலும் வரும் என்பதை அறிந்து, இனி நான் பொருள்தேடிப் பிறரைப் பாட மாட்டேன் என்று கூறி சோழன் நலங்கிள்ளியின் கொடைத்தன்மையினை,*

நலங்கிள்ளி நசைப் பொருநரேம்
பிறர் பாடிப் பெறல் வேண்டேம்
அவற் பாடுவதும் அவன்தாள் வாழிய என[31]

*என்று பாராட்டினார். இப்புலவர் பதினேழு பாடல்களைப் பாடியுள்ளார்.*

### 37. சல்லியங்குமரனார்

*இவர் இயற்பெயர் குமரன்; சல்லியன் என்பது இவரது தந்தையின் பெயர் ஆகும். சல்லியனுடைய குமரனார் சல்லியங்குமரன் எனப் பெயர் பெற்றார். இவர்தம் பாடலில் சோழநாட்டு அரிசிலாற்றையும், அதனருகிலுள்ள அம்பர் என்னும்*

ஊரையும், கிள்ளிவளவனையும் சிறப்பித்துக் கூறியுள்ளார். இப்புலவர் நற்றிணையில் 141-வது பாடலை மட்டும் பாடியுள்ளார்.

### 38. செம்பியனார்

செம்பியன் என்பது சோழர் குடிக்குரிய பெயராகும். இதனால் இவர் சோழ மரபினர் என்பதை அறிய முடிகிறது. இவர் கிள்ளை விடு தூதாகப் பாடிய நற்றிணைப்பாட்டு மிகவும் சிறப்புடையதாகும். இவர் பாடியது நற்றிணையில் 102-வது பாடல் மட்டுமேயாகும்.

### 39. செல்லூர் கிழார் மகனார் பெரும்பூதங்கொற்றனார்

கொற்றனார் என்பது இப்புலவரின் இயற்பெயரே ஆகும். இவர் தந்தையார் பெரும்பூதனார் ஆவார். இப்புலவர் செல்லூர்க் கொற்றனார் எனவும் அழைக்கப்பட்டுள்ளார். இவர் மருதம், நெய்தல், பாலைத் திணைகளைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இப்புலவரால் பாடப்பட்டவை ஐந்து பாடல்களாகும்.

### 40. செல்லூர்க் கோசிகன் கண்ணனார்

கண்ணனார் என்பது இப்புலவரின் இயற்பெயராகும். இவர் செல்லூரில் பிறந்தவர். அந்தணர் குலத்தவர். இவர்தம் பாடலில் மக்கட்பேற்றின் மாண்பு குறித்துக் கூறுவது சிறப்புடையது. இவர் அகநானூற்றில் 66-வது பாடல் மட்டும் பாடியுள்ளார்.

### 41. சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்

தும்பியின் சிறிய வடிவினையும் கரிய நிறத்தினையும் சிறப்பித்துப் பாடி சிறு கருந்தும்பியார் எனப் பெயர் பெற்றுள்ளார். இப்புலவர் சோழ நாட்டிலுள்ள முகையலூர் என்னும் ஊரில் பிறந்தவர் ஆவர். இவர் புறநானூற்றில் இரண்டு பாடல்களைப் பாடியுள்ளார். இப்பாடல்களின்வழி இப்புலவர் பெயரில் அமைந்திருக்கும் உவமை காணப்படவில்லை. இதைத்தவிர இவர்பற்றிய குறிப்பு வேறொன்றும் அறியமுடியவில்லை.

**42. தாயங்கண்ணனார்**

*கண்ணனார் என்பது இப்புலவரின் இயற்பெயராகும். தாயம் என்பது உரிமை எனப் பொருள்படும். இப்புலவர் எருக்காட்டூர் தாயங்கண்ணனார் எனவும் அழைக்கப் பெற்றுள்ளார். சங்க காலத்தில் 'எருக்காட்டூர்' இவருக்குத் தாயமாக கிடைக்கப்பெற்று இப்புலவரின் பெயர் இவ்வாறு வழங்கப்பெற்றதை அறியமுடிகிறது. புறம்.397இல் 'தீயோடு விளங்கு நாடன்' என அந்தணரின் வேள்வித்தீயைப் பாராட்டியிருத்தலால் இவர் அந்தணர் குலத்தவர் எனக் கருத முடிகிறது. எருக்காட்டூர் திருவாரூர்க்குத் தென்மேற்கில், "நன்னிலம் தாலுக்காவில் காவாலகுடிக்குக் கீழ்பாலுள்ளது எருக்காட்டூர்"[32] என்பர். சங்க காலப் பழமை வாய்ந்த தொண்டையரின் வேங்கடமலை, சேரரின் கொல்லிமலை, சோழரின் காவிரியாற்றின் சிறப்பு, உறையூர் நகரம் முதலானவை இப்புலவரால் பாடப்பெற்றுள்ளது. எட்டுத்தொகை நூல்களில் பதினொரு பாடல்களைப் பாடியுள்ளார்.*

**43. துறையூர் ஓடைகிழார்**

*இப்புலவர் ஓடைகிழார் என்னும் இயற்பெயரினர். துறையூர் என்னும் ஊரினைச் சேர்ந்தவர். துறையூர் திருச்சி மாவட்டத்தில் காவிரியாற்றின் கரையில் அமைந்துள்ளது. வேளாண் மரபினர். இப்புலவரின் பெயரில் 'ஓடை' என்னும் 'அடை' எதனால் வந்தது என்பதை அறியமுடியவில்லை. இவர் வறுமையால் வாடினார். ஆய்மன்னனைப் பாடி பரிசில் பெற்றார்.*

**கொடையின் தன்மை**

*இப்புலவர் தம் பாடலில் கொடைத்தன்மைப் பற்றி விளக்கியுள்ளார். வறுமையில் வாடும் புலவர்களுக்குப் பொன்னும் பொருளும் கொடுப்பவன் கொடையாளன். எங்களைத் தவிர பிறர்க்குக் கொடுக்கும் பொருள் கொடையாகாது. அவ்வாறு கொடுப்போர் அவர் தமக்கே கொடுத்துக் கொள்வது போல என்று கொடையின் தன்மையினை,*

எமக்கு ஈவோர் பிறர்க்கீவோர்
பிறர்க்கீவோர் தமக்கீப என[33]

*என்னும் வரிகளில் வலியுறுத்துகிறார். இவர் புறநானூற்றில் 136-வது பாடல் மட்டும் பாடியுள்ளார்.*

### 44. நல்லாவூர் கிழார்

இப்புலவர் பற்றிய வரலாறு ஒன்றும் அறியமுடியவில்லை. நல்லாவூர் என்னும் ஊரினைச் சோர்ந்தவர். வேளாண் மரபினர் என்பது அவரின் பெயரால் விளங்குகிறது.

#### பாடல் சிறப்பு

இப்புலவர் பாடிய அகம்-86வது பாட்டு மிகச் சிறப்பினை உடையது. பழந்தமிழர் மேற்கொண்ட திருமண முறையினை இப்பாடல் எடுத்துக் காட்டுகிறது. முதிர்ந்த மங்கல மகளிர் நால்வர் கூடி, மணமகளைக் கற்பில் வழுவாது, கணவனின் கையை விடாது பேறுபல பெற்று பெருக வாழவேண்டும் என்று வாழ்த்தி மணம் செய்விப்பதை,

> கற்பினின் வழாஅ நற்பல உதவிப்
> பெற்றோர் பெட்கும் பிணையை யாகென[34]

என்னும் அடிகள் சுட்டுகிறது. இவர் பாடியது இரண்டுப் பாடல்கள் மட்டுமேயாகும்.

### 45. நெய்தல் சாய்த்துய்த்த ஆவூர்கிழார்

ஆவூர்கிழார் என்று பெயருடைய புலவர்கள் பலர் இருக்கின்றனர். ஆதலால் அவரின் இருந்து பிரித்து அறிவதற்கு இவர் நெய்தல் சாய்த்துய்த்த ஆவூர் கிழார் எனப்பட்டார். இவர் பெயர்க்கு முன்வந்துள்ள நெய்தல் சாய்த்துய்த்த என்னும் அடை எதனால் வந்தது என்பதை அறியமுடியவில்லை.

#### புலமை

இவரது பாடலின் வழி சங்க காலத் தோழியின் அறிவுகூர்மைத் திறன் வெளிப்படுகிறது. தலைவியைத் திருமணம் செய்துகொள்ளாமல் துன்பங்கள் நிறைந்த வழியில் வந்து தலைவன் தலைவியைப் பார்த்து செல்கிறான். இதனையறிந்த தோழி தலைவனிடம், நீ வருவதைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சி அடையவில்லை. மாறாக துன்பம் அடைகிறோம். சான்றோர்கள் பழியொடு வரும் இன்பத்தினை விரும்பார். ஆனால் நீயோ, நீவரும் வழி கண்டு நாங்கள் வருந்தவதை எண்ணாமல் உன் இன்பத்திலேயே குறியாக உள்ளாய். ஆகவே இதனைக் கைவிட்டுத் தலைவியை விரைவாகத் திருமணம் செய்துகொள் என்று தோழி தலைவனைச் சான்றோன் அல்லன் என இடித்துக் கூறி இல்லறம் நிகழ வேண்டும் என்று கூறும் அவளின்

அறிவுடைமையைப் புலவர் மிக அழகாக எடுத்தியம்புகின்றார். இவர் அகநானூற்றில் 112-வது பாடலை மட்டும் பாடியுள்ளார்.

### 46. பெருந்தலைச் சாத்தனார்

சாத்தனார் என்பது இவர் இயற்பெயராகும். இப்பெயர் ஐயனாரைக் குறித்து வழங்கும் தெய்வப் பெயராகும். இவர் ஆவூர் மூலங்கிழாரின் மகனாவார். வேளாண் மரபினர். “பெரிய தலையை உடையவராதலின் பெருந்தலைச் சாத்தனார் எனப்பட்டார். எத்தகைய இடர் வந்து நிகழ்ந்தாலும் சிறிதும் உளம் கலங்காது உறுதியுடையாரை இரும்புத் தலையார் என்பதும், பேரறிவும் பெருஞ்சூழ்ச்சியும் வல்லாரை இரட்டைத் தலையர் என்பதும் உலக வழக்காம்.”[35] அதைப் போன்றே சாத்தனார் பால்காணலாகும் அறிவின் பெருமை கண்ட அக்காலத்தார் இவரைப் பெருந்தலையார் என வழங்கினர். மேலும் குமணனுடைய தலையைக் காத்த பெருமையால் பெருந்தலைச் சாத்தனார் என அழைக்கப்பட்டார் என்று பெருந்தலைச் சாத்தனாரின் பெயர் குறித்து பல கருத்துகள் நிலவியதை உணரமுடிகிறது. எனினும் சாத்தனாரின் பெயர் அறிவால் பெற்றதே என்பதை அறியமுடிகிறது. இவர் குமண வள்ளலால் ஆதரிக்கப் பெற்றார். வறுமையுற்றபோதும் தன்மானம் தவறாது மன்னர்களின் தவறுகளை இடித்துரைத்து பின் அவர்களிடம் பரிசில் பெற்றார். இவர் பாலையையும் முல்லையையும் புனைந்து பாடியுள்ளார். இப்புலவர் பாடியதாக ஒன்பது பாடல்கள் காணப்படுகின்றன.

### 47. பேரெயின் முறுவலார்

‘முறுவலார்’ என்பது இயற்பெயராகும். இவர் பேரெயிலில் பிறந்து புன்னகை தவழும் இன்முகம் கொண்டு வாழ்ந்தமையால் இவர் பேரெயில் முறுவலார் என அழைக்கப்பெற்றுள்ளார். பேரெயின் முறுவலார் என்ற பெயர் “ஊராலும் உறுப்பாலும் வந்ததன்று. முப்புரங்களாகிய பேரெயில்களைத் தமது முறுவலால் எரித்துப் பேரெயில் முறுவலார் என்று பெயர் பூண்ட சிவபெருமானின் பெயரையே தமக்கும் பூண்டவர் எனவும் கூறுவர் உளர்.”[36] இவ்வாறு இவர் பெயர் குறித்து வேறுபட்டக் கருத்துகள் நிலவி வருவதை அறியமுடிகிறது. இப்புலவர் இரண்டு பாடல்களைப் பாடியுள்ளார்.

### 48. பொத்தியார்

பொத்தி என்பது இப்புலவரின் இயற்பெயராகும். "பொத்தியென்னும் வினையெச்சச் சொல்லைக் கலைநயம்படப் பயன்படுத்தினமையால் இப்புலவர் இப்பெயர் பெற்றார் எனக் கருத வேண்டியுள்ளது."[37] சோழர்களின் பழைய நகரங்களில் ஒன்றாகிய பொத்தி என்னும் ஊரில் இப்புலவர் பிறந்தமையால் பொத்தியார் எனப் பெயர் பெற்றார். இக்கருத்திற்கிணங்க 'பொத்தி ஆண்ட பெருஞ்சோழன்' என்று பதிற்றுப்பத்தில் ஒன்பதாம் பத்து பதிகம் குறிப்பிடுகிறது. இப்புலவரின் பெயர் பொத்தி என்னும் ஊரால் பெற்று வந்ததை அறியமுடிகிறது.

**நட்பு**

கோப்பெருஞ்சோழனின் உயிரொத்தத் தோழர்களுள் பொத்தியாரும் ஒருவர். கோப்பெருஞ்சோழனிடம் நட்பு பூண்டு அவன் புகழையும், அவன் தன் ஆருயிர் நண்பராகிய பிசிராந்தையாரின் பெருமையினையும் போற்றிப் பாராட்டி, அவர்கள் வடக்கிருந்து உயிர்விட, இவரும் அவர்கள் இறந்து நடுகல்லான இடத்திற்குச் சென்று வடக்கிருந்து உயிர்விட்ட உயர்ந்தோராவார். பிசிராந்தையார் பொத்தில் நண்பின் பொத்தி[38] என்று பாராட்டுவதன் மூலம் பொத்தியாரின் புகழினை அறிந்துகொள்ள முடிகிறது. இப்புலவர் புறநானூற்றில் ஐந்து பாடல்களை மட்டும் பாடியுள்ளார்.

### 49. மாங்குடி மருதனார்

மருதனார் என்பது இவரது இயற்பெயராகும். இவர் பிறந்த ஊரான மாங்குடியைச் சேர்த்து மாங்குடி மருதனார் என்று அழைக்கப்பெற்றுள்ளார். இப்பெயரைத் தவிர, மதுரைக்காஞ்சிப்புலவர், மாங்குடிக்கிழார், காஞ்சிப் புலவர் என்ற பெயர்கள் இவருக்கு வழங்கப்பட்டு வந்தமையை அவர் பாடிய பாடல்களின் வழி அறியமுடிகிறது.

நற்றிணை 123-ஆம் செய்யுளில் காஞ்சிப்புலவன் என்னும் பெயரோடும் அகநானூறு 89-ஆம் செய்யுளில் மதுரைக்காஞ்சிப் புலவர் என்னும் பெயரோடும் குறுந்தொகை 302-ஆம் செய்யுளிலும் புறநானூற்று ஆறு பாடல்களிலும் மாங்குடிக்கிழார் என்ற பெயரில் வழங்கப்படுகிறார். கிழார் என்னும் பெயரோடு வழங்கியமையால் இவர் வேளாண் மரபினர் ஆவார். "மாங்குடிக்கிழார் பாண்டியன்

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பல பாட்டுகளில் பாராட்டிப் பாடி மாங்குடியென்னும் ஊர்க்குக் கிழாராயினர்"[39] என்பர் ஒளவை துரைசாமிப்பிள்ளை.

பாண்டியன் நெடுஞ்செழியனுக்குப் பல்வேறு நிலையாமையை வலியுறுத்தி இவர் பாடிய மதுரைக்காஞ்சியின் பெருஞ்சிறப்பை அறிந்த யாவரும் இவரைக் காஞ்சிப்புலவன், மதுரைக்காஞ்சிப் புலவன் என்னும் பெயர்களால் அழைத்துள்ளனர். ஆதலால் மாங்குடிக்கிழார், மாங்குடி மருதனார், மதுரைக்காஞ்சிப் புலவர், காஞ்சிப்புலவர் என்ற பெயர்கள் எல்லாம் இவர் ஒருவரைக் குறித்துள்ளது என்பதை அறியமுடிகிறது.

**பாடல் சிறப்பு**

இப்புலவர் பாடிய அகத்திணை செய்யுட்களில் இல்லறம் நடத்தும் மகள் ஒருத்தி விருந்தினர்க்கு உணவு சமைக்கும் பாங்கும், வேடர்கள் தாம் கொள்ளையிட்டுப் பெற்ற பொருள்களைப் பாறையின்மேல் வைத்துப் பங்கிட்டுக் கொள்ளும் செயலும் நயம்படக் கூறப்பெற்றுள்ளன.

பத்துப்பாட்டில் நீண்ட அடிகளை உடைய மதுரைக்காஞ்சி என்னும் நூலைப் பாடிய பெருமைக்குரியவராவர். இவர் எட்டுத்தொகையில் பன்னிரெண்டு பாடல்களைப் பாடியுள்ளார்.

## 50. வெள்ளைக்குடி நாகனார்

நாகனார் என்ற இயற்பெயருடையவர். சோழநாட்டில் வெள்ளைக்குடி என்ற ஊரில் பிறந்தவர். உழவுத்தொழிலை மேற்கொண்டு வாழ்ந்தவர். நன்செய் நிலங்களை நிறையப் பெற்றவர். நாட்டுப்பற்று அதிகம் கொண்டவர். பிற நாடுகளின் துணையினை நாடாத நாடே நாடாம் என்று நாட்டின் நல்லியல்புணர்ந்த புலவர். தாம் 'பிறந்த சோழவள நாட்டினை வாழ்த்துகிறார். "சோழ அரசின் பெரும்படை வேலேந்தி வரிசையாக செல்லும் காட்சியினையும், அவ்வேற்படைக் காட்சியைத் தோற்கச் செய்யும் வெண்பூவினைத் தலையிலே கொண்ட செங்கரும்பு விளைந்து நிற்கும் கவின்மிகு காட்சியினையும் இயற்கை வளத்தினையும் நயம்பட பாடியுள்ளார்.'[40] இப்புலவர் மூன்றுப் பாடல்களைப் பாடியுள்ளார்.

**பெண்பாற் புலவர்கள்**

தமிழாராய்ந்து தங்கள் புகழைப் பரப்பிய பெண்மணிகள் பண்டைக் காலத்தில் பலர் இருந்துள்ளனர். அவர்களுடைய பெருமை பெரிது. அறிவு முதலிய குணங்கள் இயற்கையில் அமைந்தவர்கள். இயற்கை அறிவுடன் செயற்கை அறிவும் சேர்ந்துவிடின் அவர்களுடைய பெருமை அளவிடற்கரியதாம். சங்க காலத்தில் தமிழாராய்ந்த பெண்பாலார் நாற்பதுக்கும் மேற்பட்டவராவர். இவர்களில் சோழநாட்டைச் சேர்ந்தவர்களாக ஐவர் காணப்படுகின்றனர். அவர்கள்:

1. ஆதிமந்தியார்
2. கழார்க்கீரன் எயிற்றியார்
3. தாயங்கண்ணியார்
4. பூங்கணுத்திரையார்
5. வெண்ணிக் குயத்தியார்

ஆகியோர் ஆவர்.

## 51. ஆதிமந்தியார்

கரிகால் பெருவளத்தானின் மகளான இவள் மந்தி எனவும் அழைக்கப்பட்டாள். வஞ்சிக் கோனாகிய ஆட்டனத்தி என்பானை இவள் மணந்தாள். ஆட்டனத்தி ஆடற்கலையில் சிறந்த வல்லவன். இவன் பெயர் அத்தி என்றும் வழங்கப்பெற்றது.

காவிரியாற்றின் இருகரைகளிலும் வாழ்ந்த சோழநாட்டு மக்கள் புனல்விழா கொண்டாடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இவ்வாறு சோழநாட்டில் புனல்விழா நடைபெறும் இடங்களில் ஒன்றான கழார் என்னும் ஊரைச் சார்ந்த காவிரித் துறையில் தன் கணவனுடன் ஆதிமந்தி நீராடுகையில் அவள் கணவன் காவிரி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டான். அதனால் மந்தியார் தம் கணவனைக் காணாது பலவிடத்தும் தேடிச்சென்று முடிவில் ‘கடற்கரையில் ‘என்கல் நவில் தோளானை’ என்னிடம் கொடுத்துவிடு என்று கதறி அழுது வருந்தி நின்றார். அப்பொழுது இவரது கற்பின் பெருமையால் கடல் ஆட்டனத்தியைக் கரையில் கொண்டு வந்ததைக் கண்டு இவர் மகிழ்ந்தார்’[41] என்று இவரின் வரலாற்றினை அகநானூறும் சிலப்பதிகாரமும் கூறுகின்றன.

வெள்ளி வீதியார், பரணர் முதலியோர் இவரைப் பாராட்டியுள்ளனர். இவர் அறத்தொடு நிற்றல் துறையில் குறுந்தொகையில் 31-வது பாடலை மட்டும் பாடியுள்ளார்.

## 52. கழார்க்கீரன் எயிற்றியார்

இவர் காவிரிப்பூம்பட்டினம் அருகே இருக்கும் கழார் என்னும் ஊரைச் சேர்ந்தவர். ஆட்டனத்தியும் ஆதிமந்தியும் இக்கழார்த்துறையில்தான் புனல்விழா கொண்டாடினர். இப்புலவரே தம் ஊரை வில்போல் சோழர் கழாஅர்[42] என்று குறிப்பிடுவதனால் இவரின் ஊர் கழார் என்பது புலப்படுவதோடு, இப்புலவர் சோழநாட்டுப் புலவர் என்பதையும் அறியமுடிகிறது. "எயினி என்பதைப்போலவே எயிற்றி என்பது குறிஞ்சி நிலப் பெண் மக்கள் பெயராகும். ஆதலால் இவர் குறவர் குடியில் பிறந்தவர்"[43] என்பர் கா.கோவிந்தன். "கீரன் என்பவர்க்கு உறவினர் அல்லது இவர்தம் தந்தை பெயர் கீரனாகவும் இருக்கலாம்"[44] என்று தாயம்மாள் அறவாணன் மகடூஉ முன்னிலை என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். 'கீரன் என்பாரின் மனைவியார்' என்று பின்னத்தூரார் குறிப்பிடுகின்றார்.

இவரது நற்றிணை 312-வது பாடலில் நயம் மிகுந்த செய்தி ஒன்று வெளிப்படுகிறது. கொக்கு வேட்டைக்குச் செல்பவர்கள் ஒரு பெண் கொக்கை முன்பே பிடித்து நீர்நிலையின் முன்பு கட்டி வைத்திருப்பர். அக்கொக்கை நாடிவரும் பிற கொக்குகளை வேட்டையாடுவது வேட்டுவனின் வழக்கம். பெரும் மழையில் கால் கட்டப்பட்டிருந்த கொக்கு நனைந்து குளிரால் வாடுவதைப் பார்த்த வேட்டுவன் அக்கொக்கின் கால்கட்டுகளை அவிழ்த்துச் சுதந்திரமாகப் பறக்க விடுகிறான் என்பதை,

> ......................... வெண்குருகு
> பார்வை வேட்டுவன் காழ்களைந்து அருள[45]

என்ற பாடல் வெளிப்படுத்துகிறது. இப்புலவர் அக நூல்களில் எட்டுப் பாடல்களைப் பாடியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட கழார்க்கீரன் எயிற்றியார் என்னும் பெண்பாற்புலவரை ந.சஞ்சீவி சோழநாட்டுப் புலவர்களின் வரிசையில் சுட்டவில்லை. ஆய்வில் கிடைத்த தரவுகளின் அடிப்படையிலும் 'கழார்' என்பது சோழநாட்டு ஊர் என்பதாலும்,

இப்புலவரே தாம் பாடிய நற்றிணைப் பாடலில் தம் ஊர் கழார் என்று குறிப்பிடுவதாலும் இவரைச் சோழநாட்டுப் புலவர் என்று உறுதிப்படுத்தலாம்.

### 53. தாயங்கண்ணியார்

தாயங்கண்ணனார் என்ற புலவர் ஒருவரைப் புறநானூற்றுப் பாடல் வழி அறியலாம். இதனால், "தாயங்கண்ணனார், தாயங்கண்ணியார் என்ற பெயர்களிடையே காணப்படும் ஒற்றுமையினைக் கண்டால் தாயங்கண்ணியார் அப்புலவரோடு யாதோ ஒரு வகையில் உறவுடையவரோ என எண்ணவும் கூடும். அவ்வாறு உறுதியாகுமானால் நம் தாயங்கண்ணியாரும் எருக்காட்டூரில் வாழ்ந்தவரே என்பது திண்ணமாகும்."[46] இப்புலவரும் எருக்காட்டூரைத் தாயகமாகப் பெற்று அப்பெருமைமிக்க குடியோடு தொடர்புடையவர் ஆவார். இவர் பாடிய ஒரு புறநானூற்றுப் பாடலில் கணவனை இழந்த கைம்பெண்ணின் துயர்நிலையைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறார்.

### 54. பூங்கணுத்திரையார்

இவரின் இயற்பெயர் உத்திரை. ஆதிரை என்பது பெயரானது போல இவர் பெயரும் அமைந்திருக்கக் கூடும். "இவரின் அழகிய கண்களைக் கண்டு பிறர் அளித்த பூங்கண் என்ற சிறப்புப் பெயர் சேர பூங்கணுத்திரையார் என்று பெயர் அமைந்திருக்க வேண்டும்"[47] என்கிறார். இவர் பெயரோடு வரும் பூங்கண் என்பது ஓர் ஊர் என்று ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, "பூங்கண் என்பது காவிரியின் வடகரையிலுள்ள தோரூர் எனக் கல்வெட்டுகளால் அறிகின்றோம்"[48] என்று குறிப்பிடுகின்றார்.

இவர் பாடிய புறநானூற்றுப் பாடல் மிகச் சிறப்புடையதாகும். முதிய கிழவி தன் மகனைத் தன் நாடு காக்கும் பொருட்டுப் போருக்கு அனுப்பி வைக்கிறாள். போர்க்களத்தில் யானையுடன் போரிட்டு அவன் இறந்துபட்டான் என்ற செய்தியைக் கேட்டவுடன் என்மகனைப் பெற்றெடுத்தபோது அடைந்த மகிழ்ச்சியைவிட அவன் பெருவீரனாகக் களத்தில் மடிந்த செய்தி எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது என்று பெருமையுடன் கூறியதை,

**களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை**
**ஈன்ற ஞான்றினும் பெரிதே**[49]

என்னும் அடிகளால் அறியமுடிகிறது. இதன் மூலம் அக்காலத் தாய்மார்களின் வீர உணர்வினைத் தெளியலாம். 'ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்' என்னும் திருவள்ளுவரின் சிந்தனையும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது. இப்புலவர் குறுந்தொகையில் இரண்டும், புறநானூற்றில் ஒன்றுமாக மூன்று பாடல்களை பாடியுள்ளார்.

பூங்கணுத்திரையார் என்னும் இப்பெண்பாற் புலவரை ந.சஞ்சீவி சோழநாட்டுப் புலவர்களின் வரிசையில் சுட்டவில்லை. இவர் பெயரில் வரும் பூங்கண் என்னும் ஊர் சோழநாட்டில் இருந்தது என்பதற்கு ஔவை சு.துரைசாமிப் பிள்ளை கல்வெட்டு ஆதாரத்தைக் குறிப்பிடுகிறார். இக்கல்வெட்டு தரவின் அடிப்படையில் இவரும் சோழநாட்டுப் புலவர் வரிசையில் இவ்வாய்வின் மூலம் சேர்க்கப்படுகிறார்.

## 55. வெண்ணிக் குயத்தியார்

இவர், வெண்ணி என்ற ஊரில் வாழ்ந்தவர். வேட்கோவர் குடியில் பிறந்தவர். "வணிகர் குடியிலே சிறந்தார்க்கு எட்டிப்பட்டமும், படை வீரருள் சிறந்தோர்க்கு ஏனாதிப் பட்டமும் வழங்குவதைப் போல் பழங்கால அரசர் வேட்கோவர் குடியிலே சிறந்தார்க்குக் குயம் என்று பட்டமளித்து சிறப்பித்தனர்."[50] நாளடைவில் வேட்கோவர் என்ற பட்டம் மறைய குயவர் என்பதே குடிப்பெயராயிற்று.

### பெயர்க்காரணம்

குயவர் குடியிலே பிறந்து குன்றாப் புகழ் பெற்ற புலவராய் இருந்தமையால் இவர் குயத்தியார் எனக் குலப்பெயராலேயே அழைக்கப் பெற்றார். இக்குலப்பெயரோடு ஊர்ப்பெயரும் சேர்ந்து வெண்ணிக் குயத்தியார் என்றழைக்கப்பட்டார்.

### பாடல் சிறப்பு

கடலில் இயங்கும் காற்றைக் கலஞ்செலுத்தற்குப் பணி கொள்ளும் முறையினை முதன் முதலில் கண்டறிந்தவர் பண்டைத் தமிழரே, உரோமனியர் அல்லர் என்பது இவர் பாட்டால் வலிமைப் பெறுகிறது.

தம் சோழ நாட்டுக்குரிய மன்னனாகக் கரிகாலன் இருந்தாலும் வெண்ணிப்போரில் அவன் பெற்ற வெற்றியை விட மானத்துக்காக உயிர்விட்ட சேர மன்னனின் செயலே இவரைப் பெரிதும் கவர்ந்தமை சங்கப் புலவரின் மாண்பினை எடுத்துரைக்கிறது. அவமானம் நேரும்பொழுது அரசரே ஆனாலும் வடக்கு நோக்கி அமர்ந்து உண்ணா நோன்பிருந்து உயிர் நீக்கும் அக்கால வழக்கத்தையும், சங்க காலச் சான்றோரின் தன்மான உணர்வையும், இவர்தம் பாடலில் காணமுடிகிறது. இவர் புறநானூற்றில் 66-வது பாடலை மட்டும் பாடியுள்ளார். இப்புலவரை ந.சஞ்சீவி சோழநாட்டுப் புலவர்களின் வரிசையில் சுட்டவில்லை. வெண்ணி என்னும் ஊர் சோழநாட்டில் காணப்படுவதாலும், இப்புலவர் கரிகால்வளத்தானைப் பாடியுள்ளமையாலும் இவரும் சோழநாட்டுப் புலவர் வரிசையில் இவ்வாய்வின் வழி சேர்க்கப்படுகிறார்.

### அரசப் புலவர்கள்

புலவர்கள் மட்டுமின்றிச் சங்க காலத்தில் அரசர்களும் தமிழறிவு நிறைந்த புலவர் பெருமக்களாய் உலகம் போற்ற தமிழகத்தை ஆண்டுள்ளனர். அரசர்கள் கல்வியின் பெருமை உணர்ந்து அதைப் போற்றி வளர்த்தனர். பொருளின் சிறப்புணர்ந்து அதை நல் வழியில் ஈட்டி அறவழியில் செலவழிக்க வேண்டும் என்பதையும் உணர்ந்திருந்தனர். மானம் அழிந்தபின் வாழாமை சிறந்தது என்பதை நன்கு உணர்ந்து அரசாட்சி நடத்தியுள்ளனர். கவிபாடும் புலவர்களை ஆதரித்து அவர்களுக்குப் பொன்னும் பொருளும் வழங்கியுள்ளனர். இத்தகையப் பண்புகளைப் பெற்ற அரசர்கள் பாவலராயும் விளங்கியுள்ளனர். அவ்வகையில் சோழநாட்டு அரசப் புலவர்களாக அறுவர் காணப்படுகின்றனர். அவர்கள்:

1. கோப்பெருஞ்சோழன்
2. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்
3. சோழன் நலங்கிள்ளி
4. சோழன் நல்லுருத்திரன்
5. மாவளத்தன்
6. வீரை வெளியன் தித்தனார்

ஆகியோர் ஆவர்.

### 56. கோப்பெருஞ்சோழன்

உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்த சோழ அரசர்களுள் கோப்பெருஞ்சோழனும் ஒருவன். இவன் பிசிராந்தையார், பொத்தியார் ஆகிய இருவருக்கும் உயிர் நண்பனாவான்.

இவன் எல்லாவற்றையும் துறந்து வடக்கிருந்து தன்னுடன் உயிர் நீத்தற்கு வந்த பொத்தியாரை, மகன் பிறந்தபின் வருக எனக் கூறித் தான் உயிர்நீத்துக் கல்லாகிய பிறகு வந்த பொத்தியாருக்கு இடங்கொடுத்துப் புகழ்பெற்று விளங்கினான். இவன் வடக்கிருந்ததைக் கேட்டுப் பிசிராந்தையாரும் உடன் உயிர் நீத்தார்.

கோப்பெருஞ்சோழன் நண்பர்கள்பால் கொண்டிருக்கும் பெருமதிப்பு அவன் பாடிய குறுந்தொகைப் பாடலின்கண் தோன்றி விளங்குகிறது. தலைமகள் ஒருத்தியிடம் உள்ளத்தைப் பறி கொடுத்தத் தலைவன் கவலையால் உடல் நலம் கெட்டுப்போகின்றான். அவன் உடல் நலக்கேடு குறித்து வினாவிய அவன் நண்பனை நோக்கி என் நண்பனே! இளைஞர்கள் இன்புறுதற்குக் காரணமான நட்புக் குணமுடையோனே! என்று நண்பர்களை விளிப்பதனை,

**எலுவ! சிறாஅர் ஏமுறு நண்ப!**

**புலவர் தோழ!**[51]

என்னும் அடிகள் சுட்டும். இப்புலவரால் இயற்றப்பெற்றவை ஏழு பாடல்கள் ஆகும்.

### 57. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்

கிள்ளிவளவன் புலவர் போற்றும் புகழ்மிக்கோனாவான். ஆலத்தூர்கிழார், ஆடுதுறை மாசாத்தனார், ஆவூர் மூலங்கிழார், இடைக்காடனார், எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார், ஐயூர் முடவனார், கோவூர் கிழார், நல்லிறையனார், மாறோக்கத்து நப்பசலையார், வெள்ளைக்குடி நாகனார் ஆகிய புலவர் பதின்மரும் இவனின் பண்புநலன்கள், கொடைச்சிறப்பு, குலத்தோன்றல், வீரம் ஆகியவற்றைப் புகழ்ந்து பாடியுள்ளனர்.

பொன்மலை சார்ந்த காகமும் பொன்னிறம் பெறும், கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்று கூறுவர் பெரியோர். புலவர் பதின்மர் போற்ற

அவரிடைய வாழும் நல்வாய்ப்புற்ற கிள்ளிவளவன் தானும் ஒரு புலவனாய் விளங்கியதில் வியப்பொன்றும் இல்லை.

இவன் தன் நாட்டில் வேளாண்மைத் தொழில் சிறந்து விளங்கிய பண்ணன் என்பவனுடைய அரிய குணங்களைப் பாராட்டிப் பாடியுள்ளான். வள்ளல் ஒருவன் சிறப்பினை அவன்பால் பரிசில்பெறும் புலவர்கள் பாடுவதில் சிறப்பொன்றும் இல்லை. வள்ளல் ஒருவனை அவனைப் போன்ற பிறிதோர் பெருவள்ளல் பாராட்டுவதே உண்மைச் சிறப்பாகும். அத்தகைய பெருஞ்சிறப்புடைய பண்ணனின் இல்லச் சிறப்பை நோக்கி, பெருங்கொடை வள்ளலாகிய கிள்ளிவளவன்,

**பசிப்பிணி மருத்துவன் இல்லம்**
**அணித்தோ? சேய்த்தோ? கூறுமின் எமக்கே[52]**

என்று கூறும் பாங்கு சிறப்புடையது. கிள்ளிவளவன் புறநானூற்றில் 173-வது பாடல் மட்டும் பாடியுள்ளார்.

## 58. சோழன் நலங்கிள்ளி

புகாரைத் தலைநகராகக் கொண்டு சோழநாட்டை ஆட்சிசெய்த அரசர்களுள் சிறந்தோன் நலங்கிள்ளி ஆவான். இவனை ஆலத்தூர்கிழார், உறையூர் முதுகண்ணன் சாத்தனார், கோவூர் கிழார் ஆகிய புலவர்கள் பாராட்டியுள்ளனர். இவன் பகைவரை அஞ்சாது வெல்லும் ஆற்றல் உடையவன்; பொதுமகளிரைச் சிறிதும் விரும்பாதவன்; இரப்போர்க்கு எவற்றையும் வரையாது கொடுக்கும் வள்ளல் என்று அவனுடைய குணநலன்களை இப்புலவர்களின் பாடல்கள் சுட்டுகின்றன. ‘பெரும்போர்கண்டு கலங்காத பேருள்ளம் உடையவனே அரசுரிமையைப் பெறவேண்டும் என்றும், குடியில் பிறந்த முன்னோன் அரசுரிமையைப் பெறக்கூடாது என்றும் இவர் தம் பாடலில் குறிப்பிடுகிறார்.’[53] இப்புலவர் இரண்டு பாடல்களைப் பாடியுள்ளார்.

## 59. சோழன் நல்லுருத்திரன்

இப்புலவர் பாடிய முல்லைக்கலியும் புறநானூற்றுப் பாடலும் சிறப்புடையதாக விளங்குகிறது. முல்லைநில மக்களின் வாழ்க்கை நிலையினையும், ‘ஏறுதழுவுதல்’ என்ற வீர விளையாட்டின் சிறப்பினையும் முல்லைக்கலி நவில்கிறது. புலிபோன்று இருப்போரிடம் நட்பு கொள்ள வேண்டும். அதுவே சிறப்புடையது

என்பதை இவர் பாடிய புறநானூற்றுப் பாடல் உணர்த்துகிறது. இவரைப் பற்றி வேறொன்றும் அறியமுடியவில்லை.

### 60. மாவளத்தன்

சோழநாட்டுப் புலவர்களில் தந்தையும் மகனும் பாடல் இயற்றும் திறன் பெற்றிருந்ததுபோல, தமையன்மார்களும் பாடல் இயற்றும் திறன் பெற்றிருந்தனர். சோழநாட்டு அரசப் புலவர்களில் சோழன் நலங்கிள்ளியும் அவன் தம்பி மாவளத்தனும் இதற்கோர் சான்றாகும்.

புலவர் போற்றும் பெருமகனாய் விளங்கிய நலங்கிள்ளியின் தம்பி மாவளத்தன் ஆவான். இவன் பாடியது குறுந்தொகையில் 348-வது பாடல் மட்டுமேயாகும். புலவர்களோடு கலந்து பழகும் பண்பு உடையவன். இவன் பாடிய பாடல் தலைவன் பொருள்வயின் பிரிவதைக் கண்ட தலைவியின் துயரினைத் தோழி தேற்றும் நிலையில் அமைந்துள்ளது.

மாவளத்தனை ந.சஞ்சீவி தம் ஆராய்ச்சி அட்டவணையில் சோழநாட்டுப் புலவர்களில் வரிசையில் சுட்டவில்லை. எனினும் சோழநாட்டு அரசப் புலவர்கள் என்ற வகைப்பாட்டில் இவனைச் சுட்டியுள்ளார். ஆதலால் மாவளத்தனும் சோழநாட்டுப் புலவரின் வரிசையில் இடம்பெறுகிறார்.

### 61. வீரை வெளியன் தித்தனார்

சங்க காலத்தில் உறையூரிலிருந்து ஆட்சிபுரிந்த சோழவேந்தருள் முதல்வனாகக் கருதத்தக்கவன் தித்தன் ஆவான். இவன் சிறந்த புலவன்.

#### பெயர்க்காரணம்

இவன் இயற்பெயர் தித்தன் என்பதாகும். வீரை என்னும் ஊரை ஆட்சி செய்த வேளிர்குடியினான இவன் வீரை வெளியன் தித்தன் என்று அழைக்கப்பெற்றான்.

#### பாடல் சிறப்பு

இப்புலவர் பாடியது அகநானூற்று 188-வது பாடல் மட்டுமே. இப்பாடலில் மின்னல் விளங்குவது போல் அரசர் உறைகழித்த வாள் மின்னும் என்று உவமித்துள்ளது இவரது புலமை நயத்தினை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

*வீரை வெளியன் தித்தனை ந.சஞ்சீவி சோழநாட்டுப் புலவர்களின் வரிசையில் சுட்டவில்லை. எனினும் சங்க காலச் சோழ மன்னர்களில் ஒருவனாக காணப்படுவதாலும், "ஆய்விற்குக் கிடைத்த சான்றுகளின் அடிப்படையிலும் வீரை வெளியன் தித்தன் சோழநாட்டுப் புலவர் வரிசையில் சேர்க்கப்படுகிறார்."[54]*

**புலவர்களால் பாடப்பட்ட அரசர்கள்**

*சோழநாட்டுப் புலவர்கள் தங்கள் காலத்தே வாழ்ந்த மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள் போன்றோரின் வாழ்வியலையும், அவர்தம் சிறப்புகளையும் தம் பாடல்களில் பதிவு செய்துள்ளனர். இவ்வகையில் சங்க காலச் சோழநாட்டுப் புலவர்களால் பாடப்பட்டோரின் பெயர்களும், பாடிய புலவர்களின் பெயர்களும் அட்டவணையாக பின்னிணைப்பு-8இல் தரப்பட்டுள்ளது.*

**புலவர்களின் பெயர் வைப்பு முறை**

*சங்க காலப் புலவர்கள் தங்கள் பெயர்களோடு வாழ்ந்த ஊர்ப்பெயர், தந்தை பெயர், பெற்ற பட்டப்பெயர், பாடலில் பயின்ற உவமைப்பெயர், மற்றவர்களிடமிருந்து தனித்து விளங்குவதற்கு வழங்கப்பட்ட சிறப்புப்பெயர், தொழில் பெயர், உடல் உறுப்புக் குறையினால் ஏற்பட்ட பெயர் எனப் பல்வேறுபட்ட பெயர் வைப்பு முறையில் சங்க காலப் புலவர்களின் பெயர்கள் வழங்கி வந்தமையை அறியமுடிகிறது. இவ்வகையில் சோழநாட்டுப் புலவர்களின் பெயர் வைப்பு முறையினைக் காணலாம்.*

**இயற்பெயர்**

*புலவர்கள் இயற்பெயரால் அழைக்கப்படும் முறை பரவலாக வழங்கப்பெற்ற முறையாகும். புலவர்களுக்கு எவ்வித மாற்றுப் பெயரும் வழங்காத நிலையில் இயற்பெயரைக் குறிப்பிட்டு அழைக்கும் வழக்கம் சங்க காலத்தில் இருந்துள்ளது.*

1. *ஆதிமந்தி*
2. *கொள்ளம்பக்கனார்*
3. *சல்லியங்குமரனார்*
4. *செம்பியனார்*

*ஆகியோர் இத்தகைய வழக்கத்திற்கு உரியோர் ஆவர்.*

**ஊர்ப்பெயரோடு இயற்பெயர்**

சங்கப் பாடல்களைப் பாடிய புலவர்களின் இயற்பெயர்கள் ஊர்ப்பெயரோடு சேர்த்து அழைக்கும் முறை சங்க காலத்தில் இருந்துள்ளது. ஊர்ப்பெயரோடு தொடர்ந்து வரும் இயற்பெயர்களால் புலவர்களின் ஊர்களை இனம்கண்டுகொள்ள முடிகின்றது. இவ்வகையில்,

1. ஆலங்குடி வங்கனார்
2. ஆடுதுறை மாசாத்தனார்
3. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்
4. உறையூர்க் கதுவாய் சாத்தனார்
5. உறையூர்ச் சல்லியங்குமரனார்
6. உறையூர்ச் சிறுகந்தனார்
7. உறையூர்ப் பல்காயனார்
8. கடலூர்ப் பல்கண்ணனார்
9. காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார்
10. காவிரிப்பூம்பட்டினத்து சேந்தன் கண்ணன்
11. குடவாயிற்கீரத்தனார்
12. மாங்குடி மருதனார்
13. வெள்ளைக்குடி நாகனார்

ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

**இயற்பெயர் - ஊர்ப்பெயர் - தந்தைப்பெயர்**

புலவர்களின் இயற்பெயர்களோடு தந்தைப் பெயரும் ஊர்ப்பெயரும் சேர்ந்து வழங்கப்பட்டதைக் காணமுடிகிறது. இவ்வகையில்,

1. ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார்
2. ஆவூர் கிழார் மகனார் கண்ணனார்
3. செல்லூர்கிழார் மகனார் பெரும்பூதங்கொற்றனார்

ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

**இயற்பெயர் - ஊர்ப்பெயர் - பட்டப்பெயர்**

சங்க காலத்தில் காவிதி, குலபதி, எட்டி, ஏனாதி போன்ற பட்டங்கள், சிறப்பாக நிர்வாகம் செய்தோருக்கு வழங்கப்பட்டன. அவற்றுள் காவிதிப்பட்டம் அமைச்சருக்கும், குலபதிப் பட்டம் ஆசிரியருக்கும் வழங்கப்பட்டன. இவ்வகையில்,

1. ஆவூர்க் காவிதிகள் சாதேவனார்
2. கிடங்கில் காவிதிக் கீரங்கண்ணனார்
3. கிடங்கில் காவிதிப் பெருங்கொற்றனார்
4. கிடங்கில் குலபதி நக்கண்ணனார்

ஆகியோர் அடங்குவர்.

**உவமைப்பெயர்**

சங்க காலப் புலவர்கள் பாடிய பாடல்களில் இடம்பெற்ற சிறந்த உவமைகளால் புலவர்களின் பெயர்கள் வழங்கப்படும் வழக்கமும் இருந்துள்ளது. இவ்வகைப்பாட்டில்,

1. இரும்பிடர்த்தலையார்
2. சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்

ஆகியோர் காணப்படுகின்றனர்.

**ஊர்ப்பெயரையே இயற்பெயராகப் பெற்றவர்கள்**

புலவர்கள் இயற்பெயர்களால் வழங்கப்படாமல், ஊர்ப்பெயரே இயற்பெயராக 'அர்' விகுதியுடன் சேர்த்து வழங்கப்பட்டதைக் காணமுடிகிறது. இவ்வகையில்,

1. ஆலியார்
2. இடைக்காடனார்
3. பொத்தியார்

ஆகியோர் காணப்படுகின்றனர்.

**சிறப்புப் பெயர்**

சங்க காலப் புலவர்கள் அவர்களோடு வாழ்ந்த பிறரினும் சிறந்து விளங்கியமையால் சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு

வழங்கப்படும் பெயரோடு ஊர்ப்பெயர், தொழில் ஆகியவையும் சேர்த்து வழங்கப்பட்டுள்ளன. இவ்வகையில்,

1. உறையூர் முதுகண்ணன் சாத்தனார்
2. காவிரிப்பூம்பட்டினத்து பொன்வணிகனார் மகனார் நப்பூதனார்
3. பெருந்தலைச் சாத்தனார்

ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

**ஊர்ப்பெயரோடு கிழார் பட்டம் பெற்றவர்கள்**

கிழார் என்னும் பட்டம் வேளாண் மரபிற்கு உரியதாகும். இவ்வகைப்பாட்டில்,

1. அரிசில்கிழார்
2. ஆவூர்கிழார்
3. கயத்தூர் கிழார்
4. கோவூர் கிழார்
5. துறையூர் ஓடைகிழார்
6. நல்லாவூர் கிழார்

ஆகியோர் காணப்படுகின்றனர்.

**நாள்மீன் - ஊர்ப்பெயர் பெற்றவர்கள்**

புலவர்களின் பெயர்கள் அவர்கள் பிறந்த நட்சத்திரத்தோடும், ஊர்ப்பெயரோடும் சேர்த்து வழங்கப்பட்டுள்ளன. இவ்வகையில்,

1. ஆவூர் மூலங்கிழார்
2. ஐயூர் மூலங்கிழார்
3. பூங்கணுத்திரையார்

ஆகியோர் அடங்குவர்.

**இயற்பெயர் - குலப்பெயர் - ஊர்ப்பெயர்**

புலவர்களின் இயற்பெயரோடு அவர்கள் பிறந்த குலம், ஊர் முதலியவை சேர்த்தும் பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வகையில் செல்லூர்க் கோசிகன் கண்ணனார் ஒருவர் மட்டுமே இடம்பெறுகிறார்.

**இயற்பெயர் - தொழில் - ஊர்**

புலவர்களின் பெயர்கள் அவர்கள் செய்த தொழிலோடு, இயற்பெயர், ஊர்ப்பெயர் ஆகியவை சேர்த்து வழங்கப்பட்டமையை அறியமுடிகிறது. இவ்வகையில்,

1. உறையூர் இளம்பொன் வணிகனார்
2. உறையூர் மருத்துவன் தாமோதரனார்

ஆகியோர் காணப்படுகின்றனர்.

**இயற்பெயர் - உரிமை**

சங்க காலத்தில் வாழ்ந்த புலவர்கள் சமுதாயத்தில் நன்மதிப்பு பெற்று அரசர்களிடம் ஊர், நிலம் முதலானவற்றைத் தாயமாகப் பெற்று வாழ்ந்துள்ளனர். இவ்வகைப்பாட்டில்,

1. தாயங்கண்ணனார்
2. தாயங்கண்ணியார்

ஆகியோர் அடங்குகின்றனர்.

**ஊர்ப்பெயரோடு உறுப்பு வழிப் பெயரினர்**

சங்க காலப் புலவர்களின் உடல் உறுப்புக் குறைபாட்டினாலும் அவர்களின் பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறு வழங்கப்படும்பொழுது ஊர்ப்பெயரோடு சேர்த்து வழங்கப்பட்டுள்ளதைக் காணலாம். இவ்வகைப்பாட்டில்,

1. ஐயூர் முடவனார்
2. காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்
3. காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்

ஆகியோர் அடங்குவர்.

**தொகுப்புரை**

சங்க காலப் புலவர்கள் மொழியாலும் பண்பாட்டாலும் ஒன்றுபட்டு மூன்று நாடுகளுக்கும் சென்று பரிசில் பெறும் வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர்.

ஆவூர், உறையூர், ஐயூர், காவிரிப்பூம்பட்டினம், கிடங்கில், செல்லூர் முதலான ஊர்களில் ஒன்றிற்கு மேற்பட்ட புலவர்கள் வாழ்ந்துள்ளனர். உறையூரில் மட்டுமே ஒன்பது புலவர்கள் வாழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சோழநாட்டுப் புலவர்களில் தந்தையும் மகனும் பாடல் இயற்றும் திறன் உடையவராக இருந்துள்ளனர். ஆவூரைச் சேர்ந்த ஆறு புலவர்களில் ஆவூர்கிழாரும் அவர் மகன் கண்ணனாரும் ஆவூர் மூலங்கிழாரும் அவர் மகன் பெருந்தலைச் சாத்தனாரும் சான்றாவர். இப்புலவர் பெருமக்களோடு சோழமன்னர்களில் அறுவர் பாடல் இயற்றும் திறன் பெற்றிருந்தமை அறியமுடிகிறது. இச்சோழ மன்னர்களில் சோழன் நலங்கிள்ளியும், அவன் தம்பி மாவளத்தனும் புலவர்களாக விளங்கியுள்ளனர்.

சோழநாட்டுப் புலவர்கள் பாடிய பாடல்களின் எண்ணிக்கை 262 ஆகும். இப்புலவர்களின் பாடல்கள் எட்டுத்தொகையில் ஐங்குறுநூறு, பரிபாடல் என்னும் இருநூலைத் தவிர, ஏனைய ஆறு நூல்களிலும் இடம்பெற்றுள்ளன. இதுபோல் பத்துப்பாட்டு நூல்களில் முல்லைப்பாட்டும், மதுரைக்காஞ்சியும் சோழநாட்டுப் புலவர்கள் பாடியவை ஆகும்.

சோழநாட்டுப் புலவர்களில் அகம் மட்டும் பாடியோராக இருபத்தெட்டுப் புலவர்களும், புறம் மட்டும் பாடியோராக பதினான்குப் புலவர்களும், அகமும் புறமும் பாடியோராகப் பத்தொன்பது புலவர்களும் காணப்படுகின்றனர்.

சோழநாட்டுப் புலவர்களில் ஆண்பாற்புலவர்களாக ஐம்பத்தாறு பேரும், பெண்பாற் புலவர்களாக ஐவரும் காணப்படுகின்றனர். இவர்களுள் அரசப் புலவர்களாக அறுவர் விளங்கியமையை அறியமுடிகிறது.

சோழ அரசர்களை மட்டுமல்லாது, பிறநாட்டு அரசர்களையும், குறுநில மன்னர்களையும், வடுகர், வேளிர் போன்ற மரபினரையும் பாடி சோழநாட்டுப் புலவர்கள் பரிசில் பெற்று வாழ்ந்துள்ளனர்.

புலவர்களின் பெயர்கள் இயற்பெயராக மட்டுமன்றி ஊர், பட்டம், உவமை, சிறப்பு, தொழில் முதலியவற்றாலும் அமைந்திருந்ததை அறியமுடிகிறது.

## அடிக்குறிப்புகள்

1. குமரகுருபரர், நீதிநெறி விளக்கம், பா.7.
2. ந.சஞ்சீவி, சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள், பக்.36-37.
3. ந.சி.கந்தையா, தமிழகம், ப.13.
4. திருக்குறள், கு.எண்.639.
5. பதிற்றுப்பத்து, பா.72: 4-7.
6. புறம்., பா.146: 4-11.
7. காண்க, குறுந்தொகை, பா.258: 4-7.
8. அ.பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் (உ.ஆ.), நற்றிணை நானூறு மூலமும் உரையும், ப.20.
9. காண்க, புறம்., பா.80, 86; அகம்., பா.152, 208, 226.
10. ஆர்.ஆளவந்தார், இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள், தொகுதி-I, ப.68.
11. பா.வே.கோபாலன், புலவர் அகராதி, ப.17.
12. ந.சி.கந்தையா, தமிழ்ப் புலவர் அகராதி, ப.38.
13. புறம்., பா.166: 28-29.
14. காண்க, மேலது., பா.42: 20-24.
15. புலவர் அரசு, திருவிளையாடல் வசனம், பக்.326-329.
16. பழமொழி நானூறு, பா.239.
17. வேனிலா ஸ்டாலின், உரைவேந்தர் புலமையில் நற்றிணை, ப.94.
18. கா.கோவிந்தன், சங்கத்தமிழ்ப் புலவர் வரிசை - 9, வணிகரிற் புலவர்கள், ப.84.
19. சு.பாலசாரநாதன் (ப.ஆ.), சங்க காலப் புலவர்கள், ப.84.
20. நற்றிணை, பா.200: 1-4.
21. ந.சஞ்சீவி, சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள், ப.44.
22. அகம்., பா.271: 6-7.
23. கா.கோவிந்தன், சங்கத்தமிழ்ப் புலவர் வரிசை - 9, வணிகரிற் புலவர்கள், ப.13.
24. நற்றிணை, பா.218: 1-2.
25. கா.கோவிந்தன், சங்கத்தமிழ்ப் புலவர் வரிசை - 11, மாநகர்ப் புலவர்கள்-2, ப.77.
26. மதுரைக்காஞ்சி, அடிகள் 496-499.
27. குறுந்தொகை, பா.252: 6-8.

28. அகம்., பா.44: 15-18.

29. கா.கோவிந்தன், சங்கத்தமிழ்ப் புலவர் வரிசை - 12, மாநகர்ப் புலவர்கள்-3, ப.8.

30. கா.கோவிந்தன், சங்கத்தமிழ்ப் புலவர் வரிசை - 8, கிழார்ப் பெயர் பெற்றோர், ப.96.

31. புறம்., பா.382: 5-7.

32. அ.பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் (உ.ஆ.), நற்றிணை நானூறு மூலமும் உரையும், ப.44.

33. புறம்., பா.136: 20-21.

34. அகம்., பா.86: 13-14.

35. கா.கோவிந்தன், சங்கத்தமிழ்ப் புலவர் வரிசை - 13, ஊராலும் உறுப்பாலும் பெயர் பெற்றோர், ப.86.

36. மேலது., ப.98.

37. மொ.துரைஅரங்கசாமி, சங்க கால சிறப்புப் பெயர்கள், ப.103.

38. புறம்., பா.212: 9.

39. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை (உ.ஆ.), புறநானூறு மூலமும் உரையும், தொகுதி II, ப.22.

40. காண்க, புறம்., பா.35: 8-11.

41. காண்க, அகம்., பா.45, 76, 333, 346, 376, 396; சிலப்பதிகாரம், வரிகள் 11-15.

42. நற்றிணை, பா.281: 3.

43. கா.கோவிந்தன், சங்கத்தமிழ்ப் புலவர் வரிசை - 5, பெண்பாற் புலவர்கள், ப.49.

44. தாயம்மாள் அறவாணன், மகடூஉ முன்னிலை, பெண்புலவர் களஞ்சியம், ஆதிமந்தி முதல் ஆண்டாள் வரை, ப.77.

45. நற்றிணை, பா.312: 3-4.

46. கா.கோவிந்தன், சங்கத்தமிழ்ப் புலவர் வரிசை - 5, பெண்பாற் புலவர்கள், ப.49.

47. மேலது., ப.39.

48. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை (உ.ஆ.), புறநானூறு மூலமும் உரையும், கல்வெட்டுச் சான்று (M.E.R.No.1530 of 1932), ப.153.

49. புறம்., பா.277: 3-4.

50. கா.கோவிந்தன், சங்கத்தமிழ்ப் புலவர் வரிசை - 5, பெண்பாற் புலவர்கள், ப.98.

51. குறுந்தொகை, பா.129: 1-2.

52. புறம்., பா.173: 11-12.

53. காண்க, மேலது., பா.75.

54. மா.இராசமாணிக்கனார், **சோழர் வரலாறு**, பக்.98-99; புலவர் குழந்தை, **தமிழக வரலாறு**, ப.42; வ.குருநாதன், **சங்க கால அரச வரலாறு**, பக்.194-195.

இயல் மூன்று

# வரலாற்றுச் செய்திகள்

## இயல் – 3

# வரலாற்றுச் செய்திகள்

சங்க இலக்கியங்களை இயற்றிய புலவர்கள் தங்கள் காலத்தில் சிறப்பாக விளங்கிய நாடுகள், மலைகள், ஆறுகள், ஊர்கள், துறைமுகங்கள் குறித்த வரலாற்றினையும், அவற்றை ஆட்சி செய்த மன்னர்கள், குறுநிலமன்னர்கள், படைத்தலைவர்கள் போன்றோரின் வாழ்வியல் வரலாறுகளையும் தங்கள் பாடல்களில் பதிவு செய்துள்ளனர். இவை குறித்த செய்திகளை இவ்வியல் ஆய்வு செய்கிறது.

**சோழநாட்டின் நிலப்பரப்பு**

சங்க காலத்தில் தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தர்கள் ஆட்சி செய்தனர். இவர்தம் ஆற்றலின் வலிமைக்கேற்ப ஆட்சிப் பரப்பு அகன்றும் குறுகியும் இருந்துள்ளன. சோழநாடானது கிழக்கே கடலையும், மேற்கே கோட்டைக்கரை என்னும் ஊரையும், தெற்கே வெள்ளாற்றையும், வடக்கே ஏணாடு, பெண்ணையாறு ஆகியவற்றையும் எல்லையாகக் கொண்டு அமைந்திருந்தது.

சோழநாடு தட்டையான சமவெளியாக அமைந்துள்ளது. வற்றாத காவிரி பல கிளையாறுகளுடன், பாய்ந்து நாட்டை செழுமைப்படுத்தியது. இந்நிலப்பரப்பு மேற்கே உயர்ந்தும் கிழக்கே தாழ்ந்தும் இருந்துள்ளது. சோழநாட்டின் மேற்கு எல்லையாகிய கோட்டைக்கரை ஆற்றங்கரையின் மீது உயர்த்தி அமைத்துக் கட்டப்பட்ட கோட்டை அரணாக அமைந்திருந்தது. இக்கோட்டைக்கரை இன்று பேட்டைவாய்த்தலை என்னும் ஊராக இருக்கிறது. கிழக்கே காவிரி கடலை அடையும் இடத்தில் நிலப்பரப்பு தாழ்ந்துக் காணப்படுகிறது.

காவிரியின் நீர்ப்பெருக்கும் சோழநாட்டின் வண்டல் மண் வளமும் வேளாண்மைச் செய்வதற்கு ஏற்றதாகத் திகழ்ந்துள்ளது. இதனால் சோழநாட்டில் நெல்வயல்களும், மா, பலா, தென்னை மரங்களும் நன்றாக செழித்து வளர்ந்தன. இந்நிலப்பரப்பின் செழுமையினைச் சோழநாட்டுப் புலவர்கள் தம் பாடல்களில் எடுத்துரைத்துள்ளனர்.

**ஆவூர் மூலங்கிழார்**

ஆவூர் மூலங்கிழார் சோழநாட்டின் செழுமையினை, ஒரு யானைப் படுக்கும் அளவிலான இடத்தில் விளையும் பயிர் ஏழு யானைகளுக்கு உணவாகும் என்று புகழ்ந்துரைக்கிறார். இதனை,

> ஒரு பிடி படியும் சீறிடம்
> எழு களிறு புரக்கும் நாடு கிழவோயே[1]

என்னும் புறநானூற்றுப் பாடல் எடுத்துரைக்கிறது.

**கோவூர் கிழார்**

சோழ நாடானது மருதம், முல்லை, நெய்தல் ஆகிய மூன்று நிலங்களையும் தன்னகத்தேக் கொண்டு செழிப்பாக விளங்கியுள்ளமையைக் கோவூர் கிழார் பின்வருமாறு விளக்குகிறார்.

**மருதம்**

சோழநாட்டின் வயல்களில் காணப்படும் நெற்பயிருக்கு வேலிபோல் கரும்புகள் வளர்ந்து நிற்கும். கரும்பு நடுதற்கு இட்ட பாத்தியில் பல்வகை மலர்கள் பூத்துக் குலுங்கும்.

**முல்லை**

முல்லை நிலத்தில் பல வகையான ஆனிரைகள் மேயும். அவற்றிற்குக் காவலாக வில்வீரர்களின் அரண்கள் அங்கு நிறைந்து காணப்படும்.

**நெய்தல்**

காற்று இயக்க இயங்கிக் கரைசேரும் கப்பல்களை எண்ணிக் கணக்கிடும் எழில்மிகு மகளிர், நிழல் கருதி அங்கே இருக்கும் கானற்சோலைகளில் தங்கியிருப்பர். உப்பங்கழிகளில் காணப்படும் வெண்மையான உப்பினை விலைகூறி உமணர்கள், பெரிய மலை பொருந்திய நாடுகளுக்குச் சென்று விற்றனர். ஆதலால் உமணர்களின் வாழ்வு வளமுற்றுத் திகழ்ந்தது என்று கோவூர் கிழார் தாம் கண்ட சோழவளநாட்டின் வளத்தை,

> வயலே நெல்லின் வேலி நீடிய கரும்பின்
> பாத்திப் பன்மலர் பூத்த தும்பின்று

புற[illegible]லிலிருந்து பல்லாயத்தான்
வில்லிலிருந்து வெங்குறும்பின்று
[illegible] கால் தந்த கலன் எண்ணுவோர்
[illegible] புன்னைக் [illegible] லைந்து
[illegible] உப்பின் கொள்ளை சாற்றிப்
[illegible] வெள் [illegible] உமண் ஒலிக்குந்து[2]

[illegible] சோழ நாடு வயல்வளம், இதன் [illegible] பெற்று திகழ்ந்துள்ளதை [illegible]

புறவே புல்லிருந்து பல்லாயத்தான்
வில்லிருந்து வெங்குறும்பின்று
கடலே கால் தந்த கலன் எண்ணுவோர்
கானற் புன்னைச் சினையலைக் குலைந்து
கழிவே சிறுவெள் உப்பின் கொள்ளை சாற்றிப்
பெருங்கல் நன்னாட்டு உமண் ஒலிக்குந்து[2]

என்னும் அடிகளில் உணர்த்துகிறார். இதன் மூலம் சோழ நாடு வயல்வளம், காட்டுவளம், கடல்வளம் ஆகிய வளங்களை இயல்பாகப் பெற்று திகழ்ந்துள்ளதை அறிய முடிகிறது. மேற்கண்ட இப்புலவர்களின் பாடல்கள்வழி காணப்படும் சோழநாட்டு நிலப்பரப்பின் செழுமையினைத் தவிர மற்ற புலவர்களின் பாடல் வழி இத்தகைய குறிப்புகளை அறிய இயலவில்லை.

## மலைத்தொடர்கள்

சோழநாட்டில் பெரிய மலைத் தொடர்கள் எதுவும் காணப்படவில்லை. இருப்பினும் தஞ்சையின் தென்மேற்குப் பகுதியில் உள்ள வல்லம் என்ற இடத்தில் சில மணல்கற்களால் ஆன சிறுமுகடுகளும், மலைக்கோட்டையில் காணப்படும் பளிங்குக் கற்களைப்போன்று சில கற்குன்றுகளும் இருக்கின்றன. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் வடபகுதிகளில் சில மலைகள் காணப்படுகின்றன. கடலையொட்டிய சிறுபகுதிகளில் காணப்படும் முகடுகளையும் மணற்குன்றுகளையும் தவிர கழிமுகப்பகுதி மேடுகளற்ற பரந்த வண்டலமைந்த நிலப்பரப்பாகவே காட்சியளிக்கிறது.

சோழநாட்டில் உள்ள மலைத்தொடர்களைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியத்தில் காணப்படவில்லை. எனினும் சோழநாட்டுப் புலவர்கள் பாடிய பாடல்களில் பிறநாட்டு மலைகளான ஏழிற்குன்றம், கொல்லி மலை, கோடைமலை, திருப்பரங்குன்றம், வேங்கடமலை ஆகிய ஐந்து மலைகளைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

## ஏழிற்குன்றம்

ஏழில்குன்றம் என்னும் இம்மலை கொண்கானத்தை ஆட்சி செய்த நன்னனின் நாட்டில் உள்ளது. இதனை,

பாரத்துத் தலைவன் ஆர நன்னன்
ஏழில் நெடுவரைப் பாழிச் சிலம்பில்[3]

எனவும்,

...... கொண்கான நன்னன் நல்நாட்டு
ஏழிற்குன்றம் பெறினும்[4]

எனவும், சங்க இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன.

ஏழிற் குன்றத்தில் கொற்றவை என்னும் தெய்வம் இருந்தது. அத்தெய்வம் பரந்த புகழும் சிறந்த புலமையும் உடைய புலவன் ஒருவனுக்கு வெள்ளிய கால்களையும், சிறந்த படைக்கலன்களையும் உடைய குதிரைகளைப் பரிசிலாக அளித்தது. அதைப்பெற்ற அப்புலவன் ஏழில் மலையின் சிறப்பினையும் கொற்றவையின் அருளையும் புகழ்ந்துப் பாடினான். இவ்வரலாற்றினை,

கானமர் செல்வி அருளின் வெண்கால்
பால்படைப் புரவி எய்திய தொல்லிசை
நுணங்கு நுன் பனுவல் புலவன் பாடிய
இனமழை தவழும் ஏழிற்குன்றம்[5]

எனக் குடவாயிற்கீரத்தனார் குறிப்பிட்டுள்ளார்.

**கொல்லிமலை**

கொல்லிமலை என்பது சேலம் மாவட்டத்தில் நாமக்கல், ஆத்தூர் வட்டத்திலுள்ள மலைத்தொடராகும். இக்கொல்லி மலை ஓரி என்ற வள்ளலுக்குரியது என்பதை,

மாரி வண்மகிழ் ஓரிக் கொல்லி[6]

எனவும்,

கடுங்கண் வேழத்துக் கோடு தொடுத்து உண்ணும்
வல்வில் ஓரிக் கொல்லிக் குடவரை[7]

எனவும் சங்கப்பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

அரிசில்கிழார் கொல்லிக் கூற்றத்தில் தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறை அதியமானோடு இருபெருவேந்தரையும் உடனிலை வென்று முரசும் குடையும் கலனும் கொண்டான் என்பதை,

கொல்லிக் கூற்றத்து நீர்கூர் மீமிசைப்
பல்வேற்றானை அதிகமானோடு
இருபெருவேந்தரையும் உடனிலை வென்று
முரசுங் குடையுங் கலனுங் கொண்டு[8]

என்று பதிற்றுப்பத்தின் வாயிலாக மொழிகிறார். வல்வில் ஓரியைக் கொன்று காரி என்பான் இம்மலையைச் சேரர்க்கு அளித்ததை,

ஓரிக் கொன்று சேரலர்க்கு ஈத்த
செவ்வேர்ப் பலவின் பயம்கெழு கொல்லி[9]

என்னும் அகநானூற்றுப் பாடல் விளக்குகின்றது.

தாயங்கண்ணனார் என்னும் சோழநாட்டுப் புலவர், கொல்லி மலை சேரனுக்குரியது என்பதை,

எரிமருள் கதிர திருமணி இமைக்கும்
வெல்போர் வானவன் கொல்லிக் குடவரை[10]

என்னும் அகநானூற்றுப் பாடலில் எடுத்துரைக்கிறார்.

கொல்லிமலையில் மாலைப் பொழுதில் பெரிய மரங்களை வெட்டி அழித்த அகன்ற கொல்லையில் தீப்போன்ற ஒளியை உடைய மாணிக்கங்கள் ஒளிவிடும் என்று கொல்லி மலையின் செல்வ வளத்தினை மேற்கூறிய பாடல் விளக்குகிறது.

**கோடைமலை**

கடிய நெடுவேட்டுவன் என்பானுக்கு இம்மலை உரியதாக இருந்துள்ளது. கோடைமலையின் அடியில் கடியம் என்ற ஊர் உள்ளது. ஆதலால் இவன் கடிய நெடுவேட்டுவன் என்றழைக்கப்பட்டுள்ளான். பெருந்தலைச்சாத்தனார் என்னும் சோழநாட்டுப் புலவர் இவனை வாட்படை மிக்க தானையை உடையவன்; வெள்ளிய முல்லைப் பூக்களால் வேலி அமைக்கப்பட்டிருக்கும் கோடை மலைக்குத் தலைவன் என்று சிறப்பிப்பதை,

தாள் உளம் தபுத்த வாள்மிகு தானை
வெள்வீ வேலிக் கோடை பொருந[11]

என்று புறநானூற்றுப் பாடலில் விளக்கியுள்ளார். கடிய நெடுவேட்டுவனுக்குப் பண்ணி என்ற பெயரும் உண்டு. பெருந்தலைச் சாத்தனார் தாம்பாடிய அகநானூற்றுப்பாடலில்,

வள்வாய் அம்பின் கோடைப் பொருநன்
பண்ணி[12]

என்று குறிப்பிடுகிறார். "மதுரை நாட்டில் உள்ள கோடைக்கானல் என்ற பெயரால் சிறப்புற்று விளங்கும் மலையே இக்கோடைமலை"[13] என்று ஒளவை சு.துரைசாமிப் பிள்ளை குறிப்பிடுகிறார். "பண்ணியின் கோடை மலையை பழைய உரையாசிரியர் கோட்டூர்"[14] என்று குறிப்பிடுவர்.

**திருப்பரங்குன்றம்**

திருப்பரங்குன்றம் தற்கால மதுரைக்கு அருகில் உள்ளது. இவ்வூர் சங்க காலத்திலேயே முருகனின் தலமாக விளங்கி இருக்கிறது. இத்தலம் முருகனது அறுபடை வீடுகளுள் ஒன்று. இக்குன்றத்தில் மயில்கொடி தோன்றி விளங்க இடையறாது, விழாக்கள் நடைபெற்றன. இம்மலையின் அருகே ஆழமான சுனை இருந்தது என்று திருப்பரங்குன்றத்தின் சிறப்பினைத் தாயங்கண்ணனார்,

கொடி நுடங்கு மறுகின் கூடற் குடாஅது
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி உயரிய
ஒடியா விழவின், நெடியோன் குன்றத்து
வண்டு படகுண்டு சுனை நீலத்து[15]

என்னும் அகநானூற்றுப் பாடலில் விளக்குகிறார்.

**வேங்கட மலை**

சங்க காலத்து வேங்கடமலை தற்பொழுது திருப்பதி என வழங்கப்படுகிறது. வேங்கடம் தமிழ்நாட்டின் வடஎல்லையாக அமைந்திருந்தது. 'தொண்டை நாட்டை ஆண்ட சங்க காலப் புல்லி என்ற தலைவனின் மலையாக இருந்துள்ளது'[16] என அகநானூற்றுப் பாடல்கள் தெரிவிக்கின்றன.

வேங்கடமலை ஏறுதற்கரிய நெடிய உயரத்தினை உடையது. இம்மலையின் மீது மேகக் கூட்டங்கள் படிந்திருக்கும். மலையிலிருந்து வெண்ணிற அருவிகள் வீழும். இம்மலைத் தொண்டையருக்கு உரியது என்பதை,

வினை நவில் யானை விறற்போர்த் தொண்டையர்
இனமழை தவழும் ஏற்று அருநெடுங்கோட்டு
ஓங்கு வெள்ளருவி வேங்கடத்து உம்பர்[17]

என்னும் அகநானூற்றுப் பாடல் எடுத்துரைக்கிறது.

**ஆறுகள்**

*ஆறுகள், உலக நாகரிகங்களின் வளர்ச்சியில் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளன. ஆறுகள் வெறும் நீர்நிலைகள் மட்டுமன்று. அவை மக்களின் உயிராகவும் உடலாகவும் இருப்பதோடு இவ்விரண்டையும் நிலைபெறச் செய்யும் உணவாகவும், உணர்வாகவும் விளங்கி நிற்பதைக் காணமுடிகிறது. இதனை,*

நீரின்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப்படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே[18]

*என்னும் பாடலின் வழி அறிய முடிகிறது.*

*ஒரு நாட்டிற்கு உறுப்பாக விளங்கும் தன்மை வாய்ந்த ஆறுகள் மக்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்து நிற்கும் பாங்கை, ஒவ்வொரு நாடும் மொழியும் சிறப்பாகக் கொண்டாடுவதை அவற்றின் இலக்கிய ஆவணங்கள் எடுத்துரைக்கின்றன. இவ்வகையில் சோழநாட்டுப்புலவர்களின் பாடல்களில் அரிசிலாறு, காவிரியாறு, சுள்ளிபேரியாறு, வையையாறு ஆகிய நான்கு ஆறுகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.*

**சங்கப்பாக்களில் காவிரி**

*சோழநாட்டில் பல்வேறு ஆறுகள் காணப்பட்டாலும் சங்க காலம் முதல் இக்காலம் வரை சிறப்புற்று விளங்குவது காவிரியேயாகும். பட்டினப்பாலையில் தலைவியைப் பிரிய நேரும் தலைவனின் மனப்பாங்கு கூறப்பட்டாலும் நூலின் பெரும்பகுதி கரிகால் சோழனின் பெருமைகளையும், புகார் நகரின் சிறப்பையும், காவிரியின் பெருமையினையும் எடுத்துரைப்பதாகவே அமைந்துள்ளது. காவிரியின் பெருமையினை,*

வசையில் புகழ் வயங்கு வெண்மீன்
திசை திரிந்து தெற்கு ஏகினும்
தற்பாடிய தளி உணவின்
புள்தேம்பப் புயல்மாறி
வான்பொய்ப்பினும் தான் பொய்யா

மலைத்தலைய கடற்காவிரி

புனல் பரந்து பொன் கொழிக்கும்[19]

என்னும் அடிகள் உணர்த்துகின்றன.

பொருநராற்றுப்படையைப் பாடிய முடத்தாமக் கண்ணியார் கரிகாற் பெருவளத்தானின் சோழநாட்டில், பெரிய பஞ்சம் உண்டான காலத்தும் காவிரியாறு நறைக்கொடியும், நரந்தம் புல்லும், அகில், சந்தனம் முதலியனவற்றைச் சுமந்து கொணர்ந்து அவற்றைத் துறைதோறும் இட்டு நுரையோடு செல்லும் என்று காவிரியாற்றின் சிறப்பினைப் பாடியுள்ளார். பரணர் என்னும் புலவரும்,

கடும் புனல் மலிந்த காவிரி பேரியாற்று

நெடுஞ்சுழி நீத்தம் மண்ணுநள் போல[20]

எனவும்,

சிறைபறைந்து உரைஇச் செங்குணக்கு ஒழுகும்

அம்தண் காவிரி போல[21]

எனவும், காவிரியின் பெருமையினை அகநானூற்றுப் பாடல்களில் எடுத்துரைக்கின்றார்.

## சோழநாட்டுப் புலவர்கள் பாடல்களில் காவிரி

சோழநாட்டுப் புலவர்களான, ஆவூர் மூலங்கிழார், ஐயூர்முடவனார், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், தாயங்கண்ணனார், வெள்ளைக்குடி நாகனார் ஆகியோர் காவிரியின் பெருமையினையும், வளத்தினையும் தம் பாடல்களில் பதிவு செய்துள்ளனர்.

## இளவேனில் -காவிரி

ஆவூர் மூலங்கிழார் இளவேனிற்காலத்தும், காவிரியாற்றின் பயன்பாட்டினை எடுத்துரைக்கிறார். காவிரி நதியின் இரு கரையும் மறையும் வண்ணம் கரைபுரண்டு ஓடும் பெருவெள்ளம் வற்றிய பின்பு, ‘பெருமழை பெய்து ஓய்ந்து ஓடிய மழைநீர் போல, காவிரியாற்று நீர் ஒழுகி ஓடிப் பெரிய வாய்க்கால்களில் தேங்கி நிற்கும். அவ்வாறு தேங்கி நிற்கின்ற நீரை, அருகம் புல்லை மேய்ந்துக் கொண்டிக்கும் மாடுகள் தம் தளர்ச்சி நீங்கக் குடித்துக் காஞ்சி மரத்தின் பூக்கள் தம்மேலே விழும்படி, அருகில்

இருக்கும் மணல்மேட்டில் படுத்து உறங்கும்'[22] என்று அகநானூற்றுப் பாடல் உணர்த்துகிறது.

**காவிரிக் கிழவன்**

சங்க காலச் சோழமன்னர்களைப் பாடிய புலவர்கள், சோழவள நாட்டிற்குக் காரணமான காவிரியாற்றின் பெயரை அம்மன்னர்களுக்குச் சிறப்புப் பெயராக இட்டு வழங்குவதைக் காண முடிகிறது. இவ்வகையில் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் சோழன்குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனைக் குறிப்பிடும் பொழுது, நீயே தண்புனற் காவிரிக் கிழவன்[23] என வாழ்த்துகிறார்.

ஐயூர் முடவனார் என்பாரும் தாமான் தோன்றிக்கோன் என்னும் குறுநில மன்னனிடம் தான் சோழ நாடு செல்ல வேண்டும் என்று வண்டிகேட்டு தன் விருப்பத்தைக் கூறும் பொழுது கிள்ளி வளவனைக் காவிரிக் கிழவன் என்று குறிப்பிடுவதனை,

காவிரிக் கிழவன் மாயா நல்இசைக்
கிள்ளிவளவன் உள்ளி அவற் படர்தும்[24]

என்னும் அடிகளில் எடுத்துரைக்கிறார்.

**காவிரியாற்றின் கருமணல்**

தாயங்கண்ணனார் என்னும் புலவர் காவிரி நதிநீர் குறைந்தொழுகி ஓடும்பொழுது வரி வரியாக கிடக்கின்ற கருமணலின் அழகினைத் தலைவியின் கூந்தலுக்கு ஒப்பிடும் வகையில் காவிரியாற்றின் சிறப்பினை எடுத்துரைக்கிறார். இதனை,

வலம்படுவென்றி வாய் வாள்சோழர்
இலங்குநீர்க் காவிரி இழிபுனல் வரிந்த
அறல் என நெறித்த கூந்தல்[25]

என்று குறிப்பிடுகிறார்.

**காவிரியின் அமைப்பு**

வெள்ளைக்குடி நாகனார் என்னும் புலவர் கொத்தாய் அமைந்த வேல் போன்ற அமைப்பில் காவிரி ஓடியது என்று குறிப்பிடுவதை,

அம்தண்காவிரி வந்து கவர்பு ஊட்ட

தோடுகொள் வேலின் தோற்றம் போல[26]

என்னும் புறநானூற்றுப் பாடல் விளக்குகிறது.

காவிரியாறு மக்களின் உயிராகவும், வாழ்வாகவும், அரசர்களின் பெருமைக்கு அடையாளமாகவும் செழித்து விளங்கியதைச் சங்கப் புலவர்களின் பாடல்களால் அறிய முடிகிறது.

**அரிசிலாறு**

காவிரியிலிருந்து பிரிந்து பாயும் ஆறுகள் பலவாகும். அவற்றுள் அரிசிலாறும் இடம் பெறுகின்றது. சோழநாட்டுப் புலவரான சல்லியங்குமரனார்,

. . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . அம்பர் சூழ்ந்த

அரிசில் அம்தண் அறல் அன்ன[27]

என்று அரிசிலாற்றினைப் பற்றிய குறிப்பினைத் தருகிறார்.

அம்பர் என்னும் நகரைச் சூழ்ந்து அரிசில் ஆறு ஓடியது என்று இப்பாடலில் சுட்டப்பட்டுள்ளது. அரிசிலாறு இன்று அரசலாறு என்று வழங்கப்படுவதைக் காணலாம்.

**வையையாறு**

பாண்டிய நாட்டின் வளம் மிக்க ஆறுகளுள் ஒன்றாகத் திகழ்வது வையை ஆறாகும். மாங்குடி மருதனார் தாம் பாடிய மதுரைக் காஞ்சியில் வையையாற்றின் பெருமையினைச் சுட்டியுள்ளார். சங்க காலத்து வையையாறு இக்காலத்து வைகைப் போன்று வருநீரின்றி கிடக்கவில்லை. வற்றாத நீர்ப்பெருக்குடன் காட்சியளித்தது. அதன் துறைகளில் உள்ள கோங்கு முதலிய மரங்களின் மலர்கள் வையை வெள்ளத்தில் உதிர்ந்து மாலைபோல், மிதந்து சென்றன. வையைத் துறைகளிலே பல பூந்தோட்டங்கள் இருந்தன. அவற்றில் பாணர்கள் குடியிருந்தனர் என்று வையையாற்றின் பெருமையினை,

அவிர் அறல் வையைத் துறை துறை தொறும்

பல்வேறு பூத்திரள் தண்டலை சுற்றி

அழுந்து பட்டிருந்த பெரும்பாண் இருக்கையும்[28]

என்னும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

**சுள்ளி பேரியாறு**

சுள்ளி என்னும் பெயர் கொண்ட பேரியாறு சேர அரசர்க்கு உரியது. அவ்வழகிய ஆற்றினது வெண்ணிற நுரை கலங்குமாறு யவனக் கப்பல்கள் வந்து சென்றன என்று தாயங்கண்ணனார், சுள்ளி அம் பேரியாற்று வெண்நுரை கலங்க[29] என்னும் பாடலடியில் குறிப்பிட்டுள்ளார்.

**சோழ நாட்டு ஊர்கள்**

சங்க காலப் புலவர்கள் தங்களின் பாடல் வழி அக்காலத்தே சிறந்து விளங்கிய ஊர்ப்பெயர்களை, இடம் பொருளுக்கேற்ப சுட்டிப் பாடியுள்ளனர். புற இலக்கியங்களில் புரவலர்களின் கொடைத் தன்மையினையும் வீரச் சிறப்பினையும் பாடும்பொழுது அவர்களின் ஊர்ப்பெயர்களையும், அக இலக்கியங்களில் உவமைக்காக இடப் பெயர்களையும் இடப்பெயர்களோடு தொடர்புடைய வரலாறுகளையும் குறித்துப் பாடியுள்ளனர். அவ்வாறு பாடும் பொழுது புலவர்கள் வாழ்ந்த நாட்டின்கண் காணப்படும் ஊர்களும், பிறநாட்டின் கண் காணப்படும் ஊர்களும் இடம் பெற்றிருப்பதை அறிய முடிகிறது.

இவ்வகையில் சோழநாட்டுப் புலவர்களின் பாடல்களில் அம்பர், அழும்பில், ஆலங்கானம், உறையூர், கழார், குடவாயில், சிறுகுடி, பூஞ்சாற்றூர், மிழலை, வெண்ணி ஆகிய பத்து ஊர்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் அழும்பில் எனப்படும் அழுந்தூரும், உறையூரும் குறித்து செய்திகள் முதல் இயலில் சோழர்களின் தலைநகரங்கள் என்னும் தலைப்பில் கூறப்பெற்றுள்ளன. எஞ்சிய ஊர்கள் பற்றிய செய்திகள் இவ்வியலில் விவரிக்கப்படுகின்றன.

**அம்பர்**

அம்பர் என்ற ஊர் திருவாரூர் மாவட்டத்தில் பூந்தோட்டத்திற்குக் கிழக்கே அரிசிலாற்றின் கரையில் அமைந்துள்ளது. இவ்வூரினைப் பற்றி சங்க காலச் சோழ நாட்டுப் புலவரான சல்லியங்குமரனார், கிள்ளி வளவனின் நகரான அம்பர் அலங்கரிக்கப்பட்டு உயர்ந்த கொடிகளுடன் விளங்கும் என்று குறிப்பிடுவதை,

ஏந்து கோட்டு யானை இசை வெங்கிள்ளி
வம்பு அணி உயர்கொடி அம்பர்[30]

என்னும் அடிகளால் உணரலாம். மேலும் இவ்வூர் அருவந்தை என்னும் புரவலனுக்கு உரியது என்பதை,

நெல்விளை கழனி அம்பர் கிழவோன்
நல் அருவந்தை வாழி[31]

என்று புறநானூறு குறிப்பிடுகிறது.

**ஆலங்கானம்**

ஆலங்கானம் என்ற இவ்வூர்ப் பெயர், மதுரைக்காஞ்சி, அகநானூறு, புறநானூறு, நற்றிணை ஆகிய நூல்களில் இடம் பெற்றுள்ளது. "ஆலங்கானம் சோழநாட்டில் உள்ள ஊர் என்று மயிலை சீனி.வேங்கடசாமி குறிப்பிட்டுள்ளார்."[32] சேரன், சோழன் மற்றும் வேளிர் ஐவரைப் பாண்டியன் நெடுஞ்செழியன் இவ்வூரில் வென்றான். இவ்வரலாற்றிற்குச் சான்றாக தலையாலங்கானத்தில் போரிட்ட செய்தியைக் கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சின்னமனூர் செப்பேடு,

தலையாலங்கானத்திற் றன்னொக்கு
மிரு வேந்தரைக் கொலை வாளிற்றலை துமித்துக்
குறைத் தலையின் கூத்தொழித்தும்[33]

என்று குறிப்பிடுகிறது. மாங்குடி மருதனாரும் இப்போர் நிகழ்ச்சியை மதுரைக் காஞ்சியில்,

காலென்னக் கடிதுராய்
நாடுகெட எரி பரப்பி
ஆலங்கானத்து அஞ்சுவர இறுத்து[34]

என்று சுட்டுகிறார். இவ்வூரில் போரிட்டு வென்ற பாண்டிய மன்னனின் பெயரைத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்று சங்க இலக்கியங்கள் குறிப்பிடுவதால் ஆலங்கானம் என்னும் இவ்வூர் தலையாலங்கானம் என்று அழைக்கப்பட்டதை அறிய முடிகிறது.

**கழார்**

கழார் என்பது காவிரி கடலோடு கலக்குமிடத்தில் அமைந்திருக்கும் ஒரு சிற்றூர். காவிரிப்பூம்பட்டினத்திற்கு ஐந்துகல் தொலைவிலும், மயிலாடுதுறைக்குக் கிழக்கிலும் அமைந்துள்ளது. இவ்வூர் பரதவர் கோமான் மத்தி என்பானுக்குரியது. இதனைப் பல்வேல் மத்தி கழாஅர் அன்ன[35] என்று அகநானூறு குறிப்பிடுகிறது. இவ்வூர்

காவிரியின் கழிமுகப்பகுதியில் அமைந்துள்ளதால், 'கழாஅர் முன்துறை', 'கழாஅர்'[36] என்று சங்க இலக்கியங்களில் குறிக்கப்பெற்றுள்ளது. கழார் பெருந்துறையில் நிகழ்ந்த நீராட்டு விழாவினைக் காண கரிகால் சோழன் சுற்றமொடு வந்த செய்தியினை,

கலிகொள் சுற்றமொடு கரிகால் காணத்
தண்பதங் கொண்டு[37]

என்னும் அகநானூற்றுப் பாடல் சுட்டுகிறது. பண்டைய நாளில் கழாஅர் முன்துறை என்று வழங்கி வந்த பெயர் இன்று கழுதகாரன் துறை என்று வழங்கப்பெறுகிறது.

**குடவாயில்**

சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் குடவாயில், குடந்தை, குடந்தைவாயில் ஆகிய யாவும் இன்றைய குடவாசலே என்று உ.வே.சாமிநாதஐயர், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், பெருமழைப்புலவர் சோமசுந்தரனார் ஆகியோர் குறிக்கின்றனர். குடவாயிற்கீரத்தனார் தம் ஊரான குடவாயிலை,

தன் குடவாயில் அன்னோள்[38]

என்றும்,

தேர்வண் சோழர் குடந்தைவாயில்[39]

என்றும்,

கொற்றச்சோழர் குடந்தை வைத்த
நாடு தரு நிதி[40]

என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நாலாயிர திவ்வியப் பிரபந்த பாடல்களிலும், தேவாரப் பாடல்களிலும் குறிக்கப்படும் குடந்தை என்னும் ஊர் இன்றைய கும்பகோணமாகும். சங்க இலக்கியங்களில் குறிக்கப்படும் குடந்தை இன்று குடவாசல் என வழங்கும் ஊராகும். கோச்செங்கணான் என்னும் சோழமன்னன் தன்னொடு போர் செய்து தோல்வியுற்ற சேர மன்னனைக் குடவாயிற் கோட்டம் என்னும் சிறைக்கோட்டத்தில் அடைத்து வைத்திருந்தான் என்ற வரலாறு, குடவாயிலில் ஒரு சிறைக்கோட்டம் அமைந்திருந்ததை உணர்த்துகிறது.

**சிறுகுடி**

*சிறுகுடி என்பது சோழநாட்டில் காவிரிக்கரையில் இருந்த ஊராகும். இவ்வூர் இப்பொழுது நன்னிலத்தை அடுத்து அமைந்திருக்கின்ற செருகுடியே ஆகும். சிறுகுடி பண்ணன் என்னும் கொடையாளனுக்கு உரியது. கோவூர் கிழார் இவ்வூரைப் பற்றிக் குறிப்பிடுவதை,*

**கிள்ளிவளவன் நல்இசை உள்ளி**
**நாற்ற நாட்டத்து அறுகாற் பறவை**
**சிறுவெள் ஆம்பல் ஞாங்கர் ஊதும்**
**கைவள் ஈகைப் பண்ணன் *சிறுகுடி*[41]**

*என்னும் புறநானூற்றுப்பாடல் விளக்கும்.*

**பூஞ்சாற்றூர்**

*ஆவூர் மூலங்கிழார் பூஞ்சாற்றூர் கௌணியன் விண்ணந்தாயன் என்ற அந்தணனைப் பாடியுள்ளார். அவனின் பெயரால் பூஞ்சாற்றூர் என்னும் ஊர் காணப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. இப்பூஞ்சாற்றூர் சோழநாட்டில் முடிகொண்டான் என்ற ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. அரிசிலாற்றிலிருந்து பிரியும் கிளையாறு முடிகொண்டான் ஆறாகும்.*

**மிழலை**

*எவ்வி என்னும் தலைவனுக்குரியது மிழலைக் கூற்றமாகும். மாங்குடி மருதனார்,* **மாவேள் எவ்வி புலைம்புதவின் மிழலை[42]** *என்று எவ்வியின் மிழலைக் கூற்றத்தைச் சுட்டுகிறார். நன்னிலத்தை அடுத்த திருவீழிமிழலை இவ்வூர் ஆகும்.*

**வெண்ணி**

*கரிகால் பெருவளத்தான் பகையரசர்களோடு பொருது வென்ற வெண்ணி, நீடாமங்கலத்தை அடுத்த கோயில் வெண்ணியே ஆகும். வெண்ணிக் குயத்தியார் இவ்வூரினைச் சேர்ந்தவர் ஆவார். 'கோயில் வெண்ணி' கிள்ளி வளவனுக்குரியது. இதனை,*

**கைவண் கிள்ளி வெண்ணி சூழ்ந்த**
**வயல் வெள்ஆம்பல் உருவ நெறித்தழை[43]**

என்னும் நற்றிணைப் பாடல் கூறுகின்றது. கரிகால் வளத்தானைப் பாடிய வெண்ணிக் குயத்தியார் இவ்வூரை,

> களிஇயல் யானைக் கரிகால் வளவ
> சென்று, அமர்க்கடந்த நின் ஆற்றல் தோன்ற
> வென்றோய்! நின்னினும் நல்லன் அன்றே
> கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை[44]

என்று புறநானூற்றுப் பாடலில் குறிப்பிடுகிறார்.

**பிறநாட்டு ஊர்கள்**

சோழநாட்டு ஊர்களைப்போல, சங்க காலச் சோழ நாட்டுப் புலவர்களின் பாடல் வழி பிறநாட்டு ஊர்களாக ஆமூர், ஒல்லையூர், கழுமலம், கானப்பேரெயில், கூடல், நீழல், மல்லி, வல்லார், வாட்டாறு என ஒன்பது ஊர்கள் காணக்கிடைக்கின்றன.

**ஆமூர்**

ஆலூர்க் காவிதிகள் என்னும் புலவர் பாடிய 'அகநானூற்றுப் பாடலில் ஆமூர் என்னும் ஊர் அறியலாகிறது.'[45] சங்க காலத்தில் ஆமூர் என்னும் பெயரில் பல ஊர்கள் இருந்ததைச் சிறுபாணாற்றுப்படை, ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு ஆகிய நூல்கள் தெரிவிக்கின்றன. இவ்வூரினைக் குறித்த வரலாறு இரண்டாவது இயலில் சோழநாட்டுப் புலவர்கள் என்னும் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஒல்லையூர்**

ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் இறந்த பிறகு, 'குடவாயில் கீரத்தனார் அவனைக் குறித்துப் பாடிய பாடலில் ஒல்லையூர் என்ற ஊரைச் சுட்டுகிறார்.'[46] ஒல்லை என்ற சொல் பழைய என்ற பொருளை உணர்த்தும். இவ்வூர் பழமையான ஊர் ஆதலால் ஒல்லையூர் எனப் பெயர் பெற்றுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒலியமங்கலம் என்றழைக்கப்படும் ஊர் ஒல்லையூராகும். சோழநாட்டிற்கும் பாண்டி நாட்டிற்கும் எல்லையாக ஓடும் தென்வெள்ளாற்றின் மேல் பகுதியில் இவ்வூர் அமைந்துள்ளது. ஒல்லையூரில் வாழ்ந்த கிழான் என்பவனுக்கு மகனாகப் பிறந்தவன் பெருஞ்சாத்தன் ஆவான். இவன்,

சோழர்க்கும், பாண்டியர்க்கும் அடிக்கடி நிகழ்ந்த போரில் பாண்டியருக்கு உதவி புரிந்தான். இவன் பேராண்மையாலும் கொடையாலும் சிறந்து விளங்கினான். இவன் இறந்ததைக் கேள்வியுற்ற சான்றோருள் குடவாயிற்கீரத்தனாரும் ஒருவர். அவர் மனத்தின் கண் பெருஞ்சாத்தன் பிரிவு பெரும் துயரை உண்டாக்கியது. ஆதலால் குடவாயில் நோக்கிச் செல்வாராயினர். அப்பொழுது ஒல்லையூர் நாட்டில் மலர்ந்திருக்கும் முல்லைப் பூவினை நோக்கி,

ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேல் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே[47]

என்று வருந்திப் பாடினார்.

**கழுமலம்**

குடவாயிற்கீரத்தனார் பாடிய ‘அகநானூற்றுப் பாடலில் கழுமலம் என்ற ஊரின் பெயர் காணப்படுகிறது. கழுமலம் சேரநாட்டில் உள்ள ஊராகும். ஒரு சமயம் பெரும்பூண் சென்னி என்பான் கழுமல நகரை முற்றுகையிட்டான். கழுமல நகரின் அரணுள் நன்னன், ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை ஆகியோருடன் சோழனின் படைத்தலைவனான பழையன் வல்லமையோடு போரிட்டான். இறுதியில் பழையன் இறந்துபோக அதனைக் கண்டு பொறாதவனாய் பெரும்பூண் சென்னி, நன்னனின் நண்பனான கணையன் காத்து நின்ற கழுமலத்தை வெற்றி கொண்டான்’[48] என்பதை அறிய முடிகிறது.

**கானப்பேரெயில்**

ஐயூர் மூலங்கிழார் என்னும் புலவர், ‘புறநானூற்றுப் பாடலில் கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி என்ற மன்னனைப் பாடியுள்ளார். இம்மன்னனின் பெயரால் கானப்பேரெயில் என்னும் ஊர் அறியலாகிறது.’[49]

கானப்பேர் என்னுமிடத்தில் இவ்வூர் கோட்டையாக அமைந்தமையால் கானப்பேரெயில் என்று பெயர் பெற்றுள்ளது. இக்கோட்டையின் தலைவனாக வேங்கை மார்பன் என்றொரு வீரன் இருந்தான். அவனை வென்ற பாண்டியன் உக்கிரப்பெருவழுதியே கானப்பேரெயில் உக்கிரப்பெருவழுதி என்றழைக்கப்

*பட்டுள்ளான். இப்பொழுது இராமநாதபுரம் மாவட்டத்தில் மானாமதுரைக்குப் பக்கத்தில் உள்ள இவ்வூர் காளையார் கோவில் என்றழைக்கப்படுகிறது.*

**கூடல்**

*குடவாயிற்கீரத்தனார் பாடிய, 'அகநானூற்றுப் பாடலிலும், தாயங்கண்ணனார் பாடிய அகநானூற்றுப் பாடலிலும், மாங்குடி மருதனார் பாடிய மதுரைக் காஞ்சியிலும் கூடல் என்னும் ஊர் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.'*[50] *பாண்டியர்களின் தலைநகரமான மதுரை சங்க இலக்கியங்களில் கூடல் என்றே சுட்டப்பெற்றுள்ளது. பாண்டியனின் கூடல் நகர் வளம் பொருந்தியது; அரிய காவலை உடையது என்பதை,*

பெரும் பெயர் வழுதி கூடல் அன்னதன்
அருங்கடி வியல்நகர்ச் சிலம்பும் கழியாள்[51]

*என்று குடவாயிற்கீரத்தனார் சுட்டியுள்ளார்.*

*கூடல் நகரை ஆண்ட பாண்டியன் செழியன் என்பான் நல்லயானைப் படையினையும், பகைவரை வெல்லும் ஆற்றலும் உடையவன். அவன் சேரர்களின் வளமான முசிறிப் பட்டினத்தை வென்று அங்குள்ள பொற்பாவையினைக் கவர்ந்து கொண்டு கூடல் நகருக்கு வந்த வரலாற்றினை,*

வளம்கெழு முசிறி ஆர்ப்பு எழ வளைஇ
அருஞ்சமம் கடந்து படிமம் வவ்விய
நெடுநல் யானை அடுபோர்ச் செழியன்
கொடி நுடங்கு மறுகின் கூடற்குடாஅது[52]

*என்று தாயங்கண்ணனார் பாண்டியர்களின் தலைநகரமான கூடல் நகரினைக் குறிப்பிட்டுள்ளார்.*

*மாடங்களைப் பெற்றதும் கொள்ளக் கொள்ளக் குறையாது விளங்கிய நாளங்காடியைப் பெற்றதும், கூடல் நகர் என்று குறிப்பிடுமிடத்து மாங்குடி மருதனார்,*

மாடம் பிறங்கிய மலிபுகழ்க்கூடல்
நாள் அங்காடி நனந்தலைக் கம்பலை[53]

*என்று பாராட்டுகிறார்.*

**நீழல்**

குடவாயிற்கீரத்தனார், 'அகநானூற்றுப் பாடலில் நீழல் என்னும் ஊரின் வளத்தைக் குறிப்பிட்டுள்ளார்.'[54] நீழல் என்னும் இவ்வூர் கடற்கரையின் கண் உள்ளது. எவ்வி என்ற குறுநில மன்னனுக்குரியது. ஔவை துரைசாமிப்பிள்ளை வேள் எவ்வியைக் குறித்து சுட்டும் பொழுது நீடூர் மிழலைக் கூற்றத்தில் உள்ளது. "இஃது அறந்தாங்கி வட்டத்துத் தென்பகுதியும், இராமநாதபுர மாவட்டத்தின் கீழ்ப்பகுதியும் தன்கண் கொண்டது. அதனால் இவன் நீடூர் கிழவன் எனப்படுவன்"[55] என்கிறார். இக்கருத்திற்குச் சான்றாக பரணர் என்னும் புலவரும் அகநானூற்றுப் பாடலில்,

> யாழ் இசை மறுகின் நீடூர் கிழவோன்
> வாய்வாள் எவ்வி ஏவல் மேவார்[56]

என்று எவ்வியின் ஊர் நீடூர் என்று குறிப்பிடுகிறார். எனினும் குடவாயிற்கீரத்தனார் இவ்வூரை நீழல் என்று சுட்டுவதை,

> நனை முதிர் தேறல் நுளையர்க்கு ஈயும்
> பொலம்பூண் எவ்வி நீழல் அன்ன[57]

என்னும் அடிகள் விளக்குகிறது. ஆதலால் எவ்வியின் நீழல் என்னும் ஊர் நீடூர் என்றும் அழைக்கப்பட்டமையை அறிய முடிகிறது.

**மல்லி**

ஆவூர் மூலங்கிழார் என்னும் புலவர் புறநானூற்றுப் பாடலில் காரியாதி என்னும் ஒருவனைக் குறித்துப் பாடியுள்ளார். அவரின் பெயரால் மல்லி என்னும் ஊர் குறிக்கப்படுகிறது. மல்லி என்னும் ஊர் சீவில்லிப்புத்தூரில் உள்ளது. இக்கருத்தினை, "சீவில்லிப்புத்தூர் வைத்தியநாதசாமி கோயில் கல்வெட்டுகளிலும், ஆண்டாள் கோயில் கல்வெட்டுகளிலும், 'மல்லி நாட்டுச் சீவில்லிபுத்தூர்' என்று குறிக்கப்படுகிறது"[58] என்பர்.

பிற்காலத்தில் சீவில்லிப்புத்தூர் என்பது வில்லிபுத்தூர் என மருவியுள்ளது. வில்லிப்புத்தூரில் பெரியாழ்வாரும், ஆண்டாளும் தோன்றினமையால் அது இக்காலத்தே ஸ்ரீவில்லிபுத்தூர் என்று வழங்கப்படுகிறது.

**வல்லார்**

சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார் என்னும் புலவர், 'வல்லார் கிழான் பண்ணன் என்னும் குறுநிலத் தலைவனைப் பாடும்பொழுது வல்லார் என்ற ஊரைக் குறிப்பிடுகிறார். வல்லார் காட்டைச் சூழ்ந்த நாட்டில் உள்ள வன்புல ஊராகும். இவ்வூரைச் சுற்றி வலிய அரணும் அதனைச் சார்ந்து காவற்காடும் அமைந்திருந்தது. இவ்வூர் மன்றில் உள்ள விளாமரங்கள் தழைத்துக் காய்த்து கனிந்து உதிரும். அவ்வாறு உதிரும் விளாப்பழங்களை அவ்வூரில் உள்ள மறத்தியருடைய சிறுவர்கள் ஓடிச் சென்று எடுப்பர். அவர்களுடன் காவற்காட்டில் வாழும் பிடியானையின் இளங்கன்றும் ஓடிவந்து எடுக்கும் என்று பண்ணனின் ஊரான வல்லாரின் இயற்கை வளம் பற்றி புறநானூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது.'[59]

**வாட்டாறு**

மாங்குடி மருதனார் 'வாட்டாற்று எழினியாதன் என்னும் மன்னனைப் பாடும் பொழுது அவனின் ஊரான வாட்டாற்றினைக் குறிப்பிடுகிறார்.'[60] வாட்டாறு எனப் பெயர் கொண்ட ஊர்கள் சோழ நாட்டிலும், தென்பாண்டி நாட்டிலும் உள்ளன. சோழநாட்டுத் தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டை வட்டத்தில் வாட்டாற்றுக்கோட்டை என்னும் ஊர் உள்ளது. அது இப்பொழுது வாட்டாத்திக் கோட்டையென வழங்கப்படுகிறது. மற்றொன்று தென்பாண்டி நாட்டில் திருவாங்கூர் அரசின் மேலைக் கடற்கரையில் கல்குளம் வட்டத்தில் பறளியாற்றின் கரையில் உள்ள திருவாட்டாறு என்னும் ஊராகும். இவ்வூர் பழமையானதாகும். இப்பகுதி பண்டைய நாளில் வேளிர்களின் ஆட்சியில் இருந்தது என்று ஔவை துரைசாமிப்பிள்ளை குறிப்பிடுகிறார். மாங்குடி மருதனார் வாட்டாற்று எழினியாதனின் பண்பு நலனைப் பாராட்டுமிடத்து,

உள்ளிலோர்க்கு வலியாகுவன்
கேளிலோர்க்குக் கேளாகுவன்
கழுமிய வென் வேல் வேளே
வளநீர் வாட்டாற்று எழினியாதன்[61]

என்னும் அடிகளில், எழினியாதனின் வாட்டாறு என்னும் ஊரினையும், அவன் வேளிர் தலைவன் என்பதையும் குறிப்பிடுகிறார். ஆதலால் தென்பாண்டி நாட்டில் இருந்த திருவாட்டாறே எழினியாதனின் ஊராகக் கருத இடமிருக்கிறது.

**நாடுகள்**

சோழநாட்டுப் புலவர்களின் பாடல்வழி இரு நாடுகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அவை 1. குடநாடு 2. மிளைநாடு ஆகியவையாகும்.

**குடநாடு**

மல்லிகிழான் காரியாதி என்ற வள்ளலைக் கண்டு ஆவூர் மூலங்கிழார் பாடிய பாடலில் இந்நாட்டினைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. காரியாதியின் அரண்மனையினை நாடிச் செல்லும் இரவலருக்குக் குடநாட்டு மறவர் வேட்டையாடி கொண்டு வந்த பன்றித் தசையுடன், நிணம்மிக்க சோற்றினையும் குறைப்படாது ஒப்ப வழங்குவான். அவனது கொடைத் தன்மையினைக் குறிப்பிடும்பொழுது,

பெரும் பெயர் ஆதி பிணங்கு அரில் குடநாட்டு
எயினர் தந்த உய்ம்மான் எறி தசைப்
பைஞ்ஞிணம் பெருத்த பகடுவெள் அமலை
வருநர்க்கு வரையாது தருவனர் சொரிய[62]

என்னும் அடிகளில் குடநாட்டினைச் சுட்டுகிறார்.

குடநாடு, கொடுந்தமிழ் நாடு பன்னிரெண்டனுள் ஒன்றாகும். தமிழ்நாட்டின் மேற்குப் பகுதி திசைப் பெயருடன் இணைந்து குடநாடு என்னும் பெயர் பெற்றது. அந்நாட்டு மன்னன் சேரன் குடவர்கோ எனப் பெயர் பெற்றான். இதனை,

வடவர் உட்கும் வான்தோய் வெல் கொடிக்
குடவர் கோமான் நெடுஞ்சேரலாதற்கு[63]

என்று பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பதிகம் குறிப்பிடுகிறது.

**மிளைநாடு**

சங்க காலத்தில் மிளைநாடு என்றொரு நாடு இருந்ததை உறையூர் மருத்துவன் தாமோதரனார் இயற்றிய அகநானூற்றுப் பாடலின் வழி அறியலாம். மிளைநாட்டின் பாலை நிலக் காட்சியை,

மிளை நாட்டு அத்தத்து ஈர்ஞ் சுவற் கலித்த
வரி மரற் கறிக்கும் மடப்பிணைத்
திரிமருப்பு இரலைய காடு இறந்தோரே[64]

என்னும் அடிகளில் விளக்குகிறார். மிளைநாட்டின் பாலை சுரத்தில் ஈரமான மேட்டு நிலத்தின் கண் மடப்பம் பொருந்திய பெண்மானுடன், ஆண்மான் சேர்ந்து வாழும் காட்டினைத் தலைவர் கடந்து செல்வார். அதைக் கண்டு அவர் விரைந்து வந்து தன்னையும் அழைத்துச் செல்வார் என்று தலைவி கூறும் கூற்றில் இம்மிளைநாடு பற்றிய குறிப்பினை அறியமுடிகிறது.

**துறைமுகங்கள்**

சங்க காலத்தில் கடல் வழி வாணிகம் சிறப்பாக நடந்தேறியுள்ளது. உள்நாட்டு வாணிகத்தை விட கடல்வழி வாணிகம் முக்கியத்துவம் பெற்று விளங்கியுள்ளது. கப்பல்களைக் கடலில் செலுத்திப் பொருள்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்வதற்கு அந்தந்த நாடுகளில் கடற்கரையோரத்தில் துறைமுகங்கள் அமைந்திருந்தன. மூவேந்தர் நாடுகளிலும் துறைமுகங்கள் இருந்தன. அத்துறைமுகங்களில் கலங்கரை விளக்குகள் அமைக்கப்பட்டிருந்தன. ஏற்றுமதி இறக்குமதியாகும் பொருள்களுக்குச் சுங்கம் பெறப்பட்டது. இத்துறைமுகங்கள் பற்றியும் அங்கு நடைபெற்ற வாணிகம் குறித்தும் சங்க இலக்கியங்கள் குறிப்பிட்டுள்ளன. சங்க காலச் சோழநாட்டுப் புலவர்களின் பாடல்வழி துறைமுகங்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அவை:

1. காவிரிப்பூம்பட்டினம்
2. தொண்டி
3. முசிறி
4. சாலியூர்

ஆகியவையாகும். இத்துறைமுகங்களில் ‘காவிரிப்பூம்பட்டினம்’ பற்றிய வரலாறு, சங்க காலச்சோழநாடும் சோழ மன்னர்களும் என்னும் முதல் இயலில் விவரிக்கப்பட்டுள்ளது.

**தொண்டி**

தொண்டி, சேரநாட்டின் துறைமுகமாகும். இது சேரநாட்டின் மேற்குக் கடற்கரையில் இருந்தது. அம்மூவனார் என்னும் புலவர் ஐங்குறுநூற்றில் தொண்டிதுறைமுகத்தைப் பற்றி தொண்டிப் பத்து என்னும் தலைப்பில் பத்துப் பாடல்களை இயற்றியுள்ளார்.

குடவாயிற்கீரத்தனார் என்னும் சோழநாட்டுப் புலவர் தொண்டித் துறைமுகத்தில் நடைபெறும் நெய்தல் நில மக்களின் வாழ்வு நிலையை எடுத்துரைப்பதைப் பின்வருமாறு காணலாம். 'பெரிய கடற்பரப்பில் சிவந்த இறால் மீன்கள் நடுங்கும் படி பெரிய மீன்களைப் பிடிக்கும் பொருட்டு நீண்ட படகில் தந்தையானவன் மீன்பிடிக்கும் தொழிலுக்குச் சென்றான். அப்பொழுது அவன் மகள் உப்பு விற்று வாங்கி வந்த வெண்சோற்றில் அயிலைமீன் இட்டு ஆக்கிய சுவை மிகுந்த மீன் குழம்பை அதிலே ஊற்றிக் கொழுமீன் கருவாட்டுடன் தன் தந்தைக்கு உணவாகக் கொடுப்பாள். இத்தகைய பரதவர்கள் வாழும் இடம் வலிமை பொருந்திய தேரினை உடைய சேரனின் தொண்டி நகரமாகும் என்று குறிப்பிடுகிறார்.'[65]

## முசிறி

முசிறித் துறைமுகம், சேரர்களின் துறைமுகமாகும். இது சேரநாட்டின் மேற்குக் கடற்கரையில் அமைந்திருந்தது. கிழக்குக் கடற்கரையில் புகழ் பெற்றிருந்த காவிரிப்பூம்பட்டினம் போல மேற்குக் கடற்கரையில் முசிறி உலகப் புகழ் பெற்றிருக்கிறது.

முசிறித் துறைமுகத்தில் முக்கியமாக மிளகு ஏற்றுமதியாயிற்று. யவனக் கப்பல்கள் மிளகை வாங்குவதற்காகவே முசிறிக்கு வந்தன. யவனர் முசிறியை 'முசிறிஸ்' என்று கூறினார்கள். முசிறிக் கடலில் முத்துச் சிப்பிகளும் கிடைத்தன. முசிறிப் பட்டினத்தில் விளைந்த முத்துகள், முசிறிப் பட்டினத்தின் ஒரு பகுதியான பந்தர் என்னும் இடத்தில் விற்கப்பட்டதைப் பதிற்றுப்பத்து கூறுகிறது. இதனை,

> கொடுமணம் பட்ட விளை மான் அருங்கலம்
> பந்தர்ப் பயந்த பலர் புகழ்முத்தம்[66]

என்னும் அடிகள் விளக்குகிறது. பந்தர் என்ற அரபு மொழிச் சொல்லுக்குக் கடைவீதி என்று பொருள். அக்காலத்திலேயே அரேபியர் இங்கு வந்து வாணிகம் செய்துள்ளனர்.

யவனக் கப்பல்கள் பவளம், கண்ணாடி, செம்பு, தகரம், ஈயம் முதலான பொருள்களைக் கொண்டு வந்து முசிறியில் இறக்குமதி செய்து, இங்கிருந்து பல பொருள்களை ஏற்றுமதி செய்துகொண்டு போனது. ஏற்றுமதியான பொருள்களில் முக்கியமானதும் அதிகமாகவும் இருந்தது மிளகுதான். யவனர் மிளகை ஏராளமாக ஏற்றுமதி செய்துகொண்டு போனார்கள். உரோம நாட்டில் மிளகு பெரிதும் விரும்பி

வாங்கப்பட்டது. பெரிய யவனக் கப்பலில் வணிகர் மிளகை வாங்கிக் கொண்டு சென்றார்கள் என்பதைச் சோழநாட்டுப் புலவரான தாயங்கண்ணனார்,

யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்[67]

என்று முசிறித் துறைமுகத்தில் மிளகு ஏற்றுமதி செய்யப்பட்ட நிலையினை எடுத்துரைக்கின்றார்.

**சாலியூர்**

சாலியூர் என்பது கடலை அரணாகக் கொண்ட ஒரு துறைமுகம். மாங்குடிமருதனார் பாடிய மதுரைக்காஞ்சியில் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் வெற்றிச் சிறப்பைக் கூறுமிடத்து,

தெண் கடல் குண்டு அகழி
நீர் அகன்ற உயர் நெல்லின்
ஊர்கொண்ட உயர் கொற்றவ[68]

என்று குறிப்பிடுகிறார். இதில் 'நெல்லின் ஊர்' என்பதற்கு நச்சினார்க்கினியர் உரை விளக்கம் கூறும்பொழுது சாலியூர் என்று சுட்டுகிறார். சாலி என்பது உயர்ந்த சாதி நெல்லின் வகையாகும். இதனை, சாலி நெல்லின் சிறைகொள்வேலி[69] என்று பொருநராற்றுப்படையும் குறிப்பிடுகிறது. ஆதலால் பாண்டியன் நெடுஞ்செழியன் வெற்றிக் கொண்ட நெல்லின் ஊர் சாலியூர் என்பதை அறியமுடிகிறது.

**சாலியூரின் சிறப்பு**

கடல்வளம் மிகுந்த சாலியூரில் நாவாய்களின் பாய்கள் விரிக்கப்படும். அந்நாவாய்களில் இனிய முரசங்கள் முழங்கும். அங்கே பொன் மிகுதற்குக் காரணமாகிய சிறந்த பொருள்களை நாட்டில் உள்ளவர்கள் நுகர்ந்து செல்லுமாறு, வாணிகம் நன்கு நிலைபெறுவதற்கு அந்நாவாய்கள் கரையை வந்தடையும் என்று சாலியூர் என்னும் துறைமுகப்பட்டினத்தின் சிறப்பினை மதுரைக்காஞ்சியின் வழி அறிய முடிகிறது.

**குறுநில மன்னர்கள்**

சங்க காலத்தில் சிறிய பகுதிகளைக் குறுநில மன்னர்கள், பேரரசர்களுக்குக் கீழடங்கி ஆட்சி செய்தனர். அவர்கள் வீரத்திலும் கொடையிலும் சிறந்து விளங்கினர்.

இம்மன்னர்கள் புலவர் பெருமக்களை ஆதரித்தனர். புலவர் பெருமக்களும் அம்மன்னர்களின் வாழ்விடங்களையும், சிறப்புகளையும் தம் பாடல்களில் எடுத்துரைத்துள்ளனர். இவ்வகையில் சோழநாட்டுப் புலவர்களின் பாடல்கள் வழி அறியலாகும் குறுநிலமன்னர்களாக அவியன், சிறுகுடிகிழான்பண்ணன், செல்லூர் எழினியாதன், மல்லிகாரியாதி, வல்லார் கிழான் பண்ணன் ஆகிய ஐவர் காணப்படுகின்றனர்.

**அவியன்**

காவிரிப்பூம்பட்டினத்தைச் சேர்ந்த செங்கண்ணனார் என்னும் புலவர் தம்பாடலில் அவியன் என்னும் குறுநில மன்னனைப் பற்றி கூறுகிறார். அவியன் நல்ல தேர்ப்படையினை உடையவன்; செல்வ வளம் நிறைந்த கள்ளில் என்ற ஊரினை ஆட்சி செய்தான். அவன் நாட்டில் உயர்ந்த உச்சியினையும், பழம்தரும் மரங்களையும் உடைய மலைகள் காணப்பட்டன என்று அவியனின் நாட்டு வளத்தினை,

> **களிமலி கள்ளில் நற்றேர் அவியன்**
> **ஆடுஇயல் இளமழை சூடித் தோன்றும்**
> **பழம் தூங்கு விடரகத்து எழுந்த காம்பின்**[70]

என்னும் அடிகளில் விளக்கியுள்ளார்.

**சிறுகுடி கிழான் பண்ணான்**

சிறுகுடியில் வாழ்ந்த வேளாளர் தலைவன் இப்பண்ணன். இவன் பேராண்மையும் கைவண்மையும் மிக உடையவன். ‘புலவர் பாடும் புகழைப்பெற்றவன். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் பண்ணன்’[71] எனக் கொற்றங்கொற்றனார் என்னும் புலவர் இவனது குணநலனைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவனது வீரத்தை,

> **மலைமருள் யானை மண்டு அமர் ஒழித்த**
> **கழற்கால் பண்ணன் காவிரி வடவயின்**[72]

என்று செயலூர் இளம் பொன் சாத்தன் கொற்றனார் என்னும் புலவர் சிறப்பித்துப் பாடியுள்ளர்.

சிறுகுடிகிழான் பண்ணனின் மீது அன்பு கொண்ட வேந்தனான சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் இவனின் கொடை நலத்தினைப் பாடியிருப்பதன் மூலம் இவனது பெருமையை மேலும் அறியலாம்.

பண்ணனின் இல்லத்தில் எப்பொழுதும் ஊணொலி அரவம் கேட்டுக் கொண்டே இருக்கும். எறும்பின் வரிசை போல, இளஞ்சிறுவர்கள் சோறுடைக் கையராய் வரிசையாகச் செல்வர் என்று இவனது கொடைத் தன்மை[73] வியந்து போற்றப்பட்டுள்ளது.

**செல்லூர் எழினியாதன்**

இக்குறுநில மன்னனின் ஊர் செல்லூர் ஆகும். இவ்வூர் மிக்க வளத்தினையும், புதிய வருவாயினையும் உடையது. இங்கு பல இளங்கோசர்கள் வாழ்ந்து வந்தனர் என்பதை,

> பல் இளங்கோசர் கண்ணி அயரும்
> மல்லல் யாணர்ச் செல்லிக் கோமான்[74]

என்னும் பாடலடிகள் எடுத்துக் காட்டுகின்றன.

**எழினியின் வீரச் சிறப்பு**

கெடுதல் இல்லாத வலிமையை உடையவன், நல்லவேற்படையினையும், குதிரைகளையும் கொண்டவன். 'அவன் வீரர்கள் அவன் ஏவிவிட்ட தொழிலை முடிக்கும் பொருட்டு, வெப்பம் மிகுந்த பரந்த காட்டிலும் அம்பினைத் தப்பாது குறிவிடுவர். அவ்வீரர்கள் கள்ளினை உண்டு மகிழ்வர்'[75] என்று செல்லிக் கோமானின் வீரத்தினையும், அவனது வீரர்களின் இயல்பினையும் தாயங்கண்ணனார் பாராட்டுகிறார்.

**மல்லி காரியாதி**

இவன் இயற்பெயர் காரியாதி. மல்லி என்னும் ஊருக்குத் தலைவன். வேளாண் குடியில் தோன்றியவன். பரிசிலர்க்கு வேண்டுவன வழங்கிப் புலவர் பாடும் புகழ் பெற்றவன். ஆவூர் மூலங்கிழார் இவனின் கொடை நலத்தினைச் சீர்தூக்கி, வேந்தர்களிடம் சென்று நாவுலரப் பாடிப் பெறும் களிறு முதலிய பரிசிலைக்

காட்டிலும், இக்காரியாதி விடியலில் பனம்பட்டையில் வழங்கும் சோற்றுக் கொடையே சிறப்பானதாகும் என்று வியந்து பாராட்டுவதை,

வருநர்க்கு வரையாது தருவனர் சொரிய
இரும் பனங்குடையின் மிசையும்
பெரும்புலர் வைகறைச் சீர் சாலாதே[76]

என்னும் புறநானூற்றுப் பாடல் விளக்குகிறது.

**வல்லார் கிழான் பண்ணன்**

இவன், வல்லார் என்னும் ஊருக்குத் தலைவன். இவனும் சிறுகுடிகிழான் பண்ணைப் போல கைவண்மையும், போர்வன்மையும் உடையவன். இவனின் கொடைநலத்தினை, சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார் என்னும் புலவர், பாணனுக்கு எடுத்துக்கூறும் பாங்கில், பாணனே, 'பண்ணன் வல்லார் என்னும் ஊரின்கண் உள்ளார். வறுமையால் உண்ணாது வருந்தும் நின்சுற்றம் உண்டு வாழ்தல் வேண்டுவையாயின் வல்லார்கிழானான பண்ணன் பகைப்புலம் நோக்கிச் செல்வதற்குள் உன்பசிக்குப் பகையாகிய பரிசில் பெறுதற்கு இப்போதே செல்வாயாக'[77] என்று கூறியுள்ளார்.

**படைத்தலைவர்கள்**

சங்க காலத்தில் பேரரசர்களுக்குப் போரின் பொழுது உதவி செய்யும் படைத்தலைவர்கள் பலர் இருந்துள்ளனர். அவர்களின் வீரச் சிறப்பினால் பேரரசனும் பகைவர்களை வென்று புகழடைந்தனர். இவ்வகையில், சோழநாட்டுப் புலவர்களின் பாடல் வழி பண்ணி, பிட்டங் கொற்றன் என இரு படைத்தலைவர்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

**பண்ணி**

பாண்டியனின் படைத்தலைவனான இவன் யானைகளைப் பிடித்துப் பின்னர் அவற்றை இரவலர்க்கு ஈயும் வள்ளன்மை உடையவன். இவன் கோடை என்னும் மலைக்குத் தலைவன். பயன்மிக்க களவேள்வியினைச் செய்யக் கூடியவன் என்று அவனின் இயல்புகளை,

திருவீழ் மார்பின் தெனனவன் மறவன்
குழியில் கொண்ட மராஅ யானை

மொழியின் உணர்த்தும் சிறுவரை அல்லது
வரை நிலை இன்றி இரவலர்க்கு ஈயும்
வள்வாய் அம்பின் கோடைப் பொருநன்
பண்ணி...............................[78]

என்னும் அடிகள் உணர்த்துகின்றன.

**பிட்டங் கொற்றன்**

பிட்டங் கொற்றன் என்பான் சேரமான் கோதைக்குப் படைத்துணைவன். பேராண்மையும் கைவண்மையும் ஒருங்குடையவன். சான்றோர் பலரும் பாராட்டும் தகுதி பெற்றவன். இவன் குதிரை மலையைச் சார்ந்த நாட்டை உடையவன். காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் இவன்பால் மிக்க ஈடுபாடு உடையவர். பிட்டங் கொற்றனைக் காண விழையும் போதெல்லாம் அவன் போரில் ஈடுபட்டுப் படைக்குத் தலைமை தாங்கிச் செல்வான். இதனால் அவனைப் பார்ப்பது அரிதாயிற்று. ஒருசமயம் அவனைப் பார்க்கும் நிலை ஏற்பட்டது. அப்பொழுதும் அவன் போருக்குச் செல்லவேண்டிய கடமை இருந்தது. இதனையறிந்த இப்புலவர், அவனின் படை, பகைவர் படையெடுத்து வருங்காலத்து அகன்ற ஆற்றின் கண் குறுக்கே தடுத்துக் கிடக்கின்ற கற்சிறை போல் இருக்கின்றது என்று பாராட்டுவதை,

நும்படை செல்லும் காலை, அவர் படை
எடுத்து எறி தானை முன்னரை எனா அ
அவர் படை வருஉம் காலை நும்படைக்
கூழை தாங்கிய அகல்யாற்றுக்
குன்று விலங்கு சிறையின் நின்றனை[79]

என்னும் புறநானூற்றுப் பாடல் விளக்கும்.

உறையூர் மருத்துவன் தாமோதரனார் பிட்டங் கொற்றனுடைய கை வண்மையும், போர்வன்மையும் கேள்வியுற்று அவன்பால் பெருமதிப்பு உடையவராயினார். அவனைக் காண அவன் நாட்டிற்குச் சென்றார். அவனும் அவரை வரவேற்று தன்னுடன் சிலநாள் தங்கச் செய்தான். ‘அச்சமயம் பிட்டங் கொற்றனோடு போர் செய்யக் கருதிய பகைவர் படையெடுத்து வந்ததை ஒற்றரால் அறிந்தபோது, அப்பகைவரது ஒற்றர் அறியுமாறு இவனது வல்லாண்மையை எடுத்துரைத்தார். பிட்டங் கொற்றன் தன்னை நயந்தவர்க்கு மென்மைத் தன்மையும், நயவார்க்கு வன்மைத் தன்மையும் உடையவன். அவன் கொல்லன் கூடத்தால் எறியும் உலைக்கல்

போலும் வல்லாண்மை உடையவன் என்று புகழ்ந்துரைத்தார்'[80] எனப் புறநானூற்றுப் பாடல் எடுத்துரைக்கிறது.

## சோழநாட்டுப் புலவர்களின் பெயரால் அறியப்படும் ஊர்கள்

சோழநாட்டைச் சேர்ந்த புலவர்கள் சோழநாட்டின் பல்வேறு ஊர்களில் வாழ்ந்துள்ளனர். அவ்வூர்கள் அவர்களின் பெயரோடு அடையாக வழங்கப்பட்டு உள்ளன. அவை:

| | | | |
|---|---|---|---|
| 1. | அரிசல் | 15. | குடவாயில் |
| 2. | ஆடுதுறை | 16. | குளமுற்றம் |
| 3. | ஆர்க்காடு | 17. | கோவூர் |
| 4. | ஆலங்குடி | 18. | செல்லூர் |
| 5. | ஆலி | 19. | துறையூர் |
| 6. | ஆவூர் | 20. | நல்லாவூர் |
| 7. | இடைக்காடு | 21. | பூங்கண் |
| 8. | உறையூர் | 22. | பேரெயில் |
| 9. | ஐயூர் | 23. | பொத்தி |
| 10. | கடலூரர் | 24. | மாங்குடி |
| 11. | கயத்தூர் | 25. | முகையலூர் |
| 12. | கழார் | 26. | வீரை |
| 13. | காவிரிப்பூம்பட்டினம் | 27. | வெண்ணி |
| 14. | கிடங்கில் | 28. | வெள்ளைக்குடி |

இவ் இருபத்தெட்டு ஊர்களைப் புலவர்களின் பெயரால் அறிய முடிகிறது. இவ்வூர்களுள் உறையூர், காவிரிப்பூம்பட்டினம் ஆகிய இரு ஊர்களின் வரலாறு முதல் இயலில் இடம்பெற்றுள்ளன. ஆலி, இடைக்காடு, கயத்தூர், பூங்கண், பொத்தி என்னும் இவைகளைப் பற்றிய குறிப்புகள் இரண்டாவது இயலில் புலவர்களின் வாழ்க்கைக் குறிப்போடு சுட்டப்பெற்றுள்ளன. கழார், குடவாயில், வெண்ணி என்னும் மூன்று ஊர்களும், இவ்வியலில் புலவர்களின் பாடல் வழி அறியலாகும் சோழநாட்டு ஊர்கள் என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ளன. எஞ்சிய பதினெட்டு ஊர்களான அரிசில், ஆடுதுறை, ஆர்க்காடு, ஆலங்குடி, ஆவூர், ஐயூர், கடலூரர், கிடங்கில், குளமுற்றம், கோவூர், செல்லூர், துறையூர், நல்லாவூர், பேரெயில்,

மாங்குடி, முகையலூர், வீரை, வெள்ளைக்குடி ஆகிய ஊர்களைப் பற்றிய குறிப்புகள் இங்கு விவரிக்கப்படுகின்றன.

**1. அரிசில்**

தமிழகத்து ஊர்கள் ஒவ்வொன்றும் பெரும்பாலும் ஏதோ ஒரு காரணம் பற்றியே பெயர் பெற்றிருக்கும். பொதுவாகத் தம்மைச் சார்ந்துள்ள மலைகள், காடுகள், ஆறுகள் இவற்றால் பெயர் பெற்றிருப்பது பெரு வழக்காகும். வெண்குன்றம், நெடுங்குன்றம், பரங்குன்றம் என்பன மலைகளால் பெயர் பெற்ற ஊர்களாகும். திருப்பனங்காடு, திருவாலங்காடு என்பன காடுகளால் பெயர் பெற்ற ஊர்களாகும். குமரிக்கோடு, குமரிமலை என்பன குமரியாற்றை அடுத்திருப்பதால் பெயர் பெற்றன. வடஆர்க்காடு மாவட்டத்தில் ஓடும் சேயாற்றின் கரைக்கண் அமைந்த ‘திருவோத்தூர் சேயாறு’ என வழங்கப்பெறுதல் ஆற்றின் பெயரைத் தன் பெயராகக் கொண்ட ஊருக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். இவ்வாறு ஊரை அடுத்துப் பாயும் ஆற்றின் பெயரைப் பெயரெனக் கொண்ட ஊர்களுள் அரிசிலூரும் ஒன்றாகும். அரிசிலாற்றங்கரையில் அரிசில் என்ற பெயர் தாங்கிய ஊர் பழங்காலத்தில் இருந்தது எனப் பழந்தமிழ்ப்பாடல்கள் கூறுகின்றன.

ஆறுகள் என்றும் ஒரு வழியே மேற்கொண்டு ஓடும் என எதிர்பார்த்தல் இயலாது. காலம் செல்லச் செல்ல அவை இடம் மாறி ஓடுதலும் உண்டு. ஆறுகள் இடம் மாறுவது போல் அவ்வாறுகளின் கரைக்கண் அமைந்த ஊர்கள் இடம் மாறுவதில்லை. ஒரு காலத்தில் ஆற்றின் கரைக்கண் அமைந்து அவ்வாற்றின் பெயர் பெற்றிருந்த ஊரானது பிற்காலத்தில் அவ்வாற்றிற்குத் தொடர்பற்று தோன்றுதலும் உண்டு. இந்தக் காரணங்களால் அவ்வூர்களின் இருப்பிடத்தை உள்ளவாறு அறிந்து கொள்வதிலும் அவ்வூர்ப் பெயர்களுக்கான காரணத்தை அறிந்து கொள்வதிலும் பிற்காலத்தில் ஐயங்கள் பல தோன்றின. அத்தகைய ஊர்களுள் ஒன்றாக விளங்குவது அரிசிலூராகும்.

அரிசிலாறு எது என்பதை அறியமாட்டாது இக்கால அறிஞர் பலரும் மயங்குகின்றனர். “அரிசில் என்பது சோழநாட்டு ஊர்களுள் ஒன்று. இவ்வூரருகே காவிரியினின்றும் பிரிந்து சென்ற ஒரு கிளை அரிசிலாறு என வழங்குவதாயிற்று. அரிசில் கிழார் இவ்வூருக்கு உரியராய்க் கிழார் என்ற சிறப்பு பெயர் பெற்று

வாழ்ந்ததோடு நல்லிசைப் புலமையில் சிறந்து விளங்கினார். ஆயினும் சான்றோர் இவர் இயற்பெயரை விடுத்து அரிசில்கிழார் என்ற சிறப்புப் பெயரையே பெரிதும் வழங்கினமையின் நாளடைவில் இயற்பெயர் மறைந்து போயிற்று. இப்போது அரிசில் என்ற ஊரும் மறைந்து போகவே இச்சான்றோரது அரிசிலூரைத் திருச்சி மாவட்டத்து அரியிலூராகவும், மைசூர் நாட்டு அரிசிற்கரையாகவும் கொள்ளாலாமோ"[81] என ஆராய்ச்சியாளர்கள் மயங்கலுற்றனர்.

தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்திற்கு அருகே உள்ள கல்வெட்டொன்று அரிசிலூரைக் குறித்துக் கூறுகின்றது. ஆகவே அரிசிலூர் சோழநாட்டுக் குடந்தை நகருக்கு அண்மையில் இருந்த ஓர் ஊர் என்று கருத முடிகிறது. இக்கருத்திற்குச் சான்றாக மூவர் தேவாரத்தில் ஒரு குறிப்பு காணப்படுகிறது. சோழநாட்டின் சைவத்திருதலங்களுள் ஒன்றான காவிரியாற்றின் தென்கரையில் அமைந்துள்ள அரிசிற்கரைப் புத்தூர் திருத்தலத்தைச் சுந்தரர் பாடி அருளியுள்ளார். அப்பதிகத்தில் அரிசிலாற்றின் சிறப்பினை,

முழுங்கும் திரைக்கைகளால் வாரி மோதி
அரிக்கும் புனல்சேர் அரிசிற்றென்கரை
அழகார் திருப்புத்தூர் அழகனீரே[82]

என்று பாராட்டியுள்ளார். அரிசிலாற்றின் தென்கரையில் அமைந்த அரிசிற்கரைப்புத்தூர் இப்பொழுது அழகாபுத்தூர் என்றழைக்கப்படுகிறது. இக்குறிப்பினைக் காணும் பொழுது அரிசிற்கரை புத்தூரே அரிசிலூராக இருக்கக் கூடும் எனக் கருத வாய்ப்பிருக்கிறது.

## 2. ஆடுதுறை

ஆடுதுறை என்ற பெயருடைய ஊர்கள் பல தமிழகத்தில் உள்ளன. அவற்றுள் காவிரியின் தென்கரைக்கண் உள்ள ஆடுதுறை தென் குரங்காடுதுறை என்றும், அவ்வாற்றின் வடகரைக்கண் உள்ள ஆடுதுறை வடகுரங்காடுதுறை எனவும் வழங்கப்படுகிறது. வெள்ளாற்றின் கரைக்கண் உள்ள ஆவடுதுறை ஆடுதுறை எனவும் வழங்கப்படுகிறது. "ஆவடுதுறை என்ற பெயரே ஆடுதுறை எனப் பிறழ வந்துள்ளது. திருவாவடுதுறைக்குச் சாத்தனூர் என்பது பழம்பெயர் எனக் கல்வெட்டுகளும் திருத்தொண்டர் புராணமும் கூறுகின்றன. சாத்தனூர் என்பது ஊர்ப்பெயர். ஆவடுதுறை என்பது அவ்வூர்க் கோயிலுக்குப் பெயர். நாளடைவில் சாத்தனூர் என்பது

மறைந்து போக கோயில் பெயரே ஊர்க்கும் பெயராகி விட்டது"[83] என ஆராய்ச்சியாளர் கூறுவர். மாசத்தனார் என்னும் புலவர் இவ்வாடுதுறையைச் சேர்ந்தவர் ஆவார். இப்பொழுதுள்ள ஆடுதுறைக்கு அருகே சாத்தனூர், திருவாவடுதுறை ஆகிய ஊர்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

### 3. ஆர்க்காடு

சோழ மன்னனுக்குரிய ஆத்தியைக் குறிக்கும். 'ஆர்' என்ற மரத்தால் பெயர் பெற்றது ஆர்க்காடாகும். ஆர்க்காடு என்ற பெயரே இன்று ஊருக்கும் மாவட்டத்திற்கும் பெயராக வழங்குகிறது.

ஆர்க்காடு என்ற பெயருடைய மாவட்டம் வடஆர்க்காடு, தென்னார்க்காடு மாவட்டம் என இரண்டு பிரிவாக உள்ளது. இவ்வூர் வடஆர்க்காடு மாவட்டத்தில் பாலாற்றங்கரையில் உள்ளது. இந்த ஆர்க்காடு கர்நாடக நவாபுகள் காலத்தில் அவர்களுடைய தலைநகரமாக இருந்திருக்கிறது. ஆர்க்காடு சோழர்களின் நகரமாக இருந்ததை,

> படுமணி யானைப் பசும்பூட் சோழர்
> கொடி நுடங்கு மறுகின் ஆர்க்காட்டு ஆங்கண்[84]

என்னும் அடிகள் குறிப்பிடுகிறது.

### 4. ஆலங்குடி

ஆலங்குடி என்ற பெயர் தாங்கிய ஊர்கள் பல தமிழகத்தில் உண்டு. எனினும் தொன்மைச் சிறப்பமைந்த ஊர்களாகச் சோழநாட்டில் இரண்டு உள்ளன. அவை, "தஞ்சை மாவட்டத்து மேலைப்பெரும்பள்ளத்துக் கல்வெட்டில் காணப்படும் ஆலங்குடியும், புதுக்கோட்டை மாவட்டத்து ஆலங்குடியும் ஆகும். மேலைப்பெரும்பள்ளத்து ஆலங்குடி திருஞான சம்பந்தர் முதலியோர் காலத்தில் 'திரிவிரும்பூளை' என்று வழங்கி வந்திருக்கின்றது. அதனால் அவர்கட்குப் பின்னர்த் தோன்றிய சோழர் காலத்தில் அது சுத்தமல்லி வளநாட்டு முடிச்சோணாட்டு ஆலங்குடியான சனநாதச் சதுர்வேதமங்கலம் ஆயிற்று"[85] என்பர்.

மேலைப்பெரும்பள்ளத்து ஆலங்குடியே இராமநாதபுர மாவட்டத்து இரணியூர்க் கல்வெட்டிலும் குறிக்கப்படுகிறது. பிறிதொருக் கல்வெட்டில் இந்த

ஆலங்குடியே 'குலோத்துங்க சோழ வளநாட்டு வேளாநாட்டு ஆலங்குடி' என்று கூறப்படுகிறது. புதுக்கோட்டை மாவட்டத்து ஆலங்குடியை இராசராச வளநாட்டுப் புன்றிற் கூற்றத்து ஆலங்குடி என அவ்வூர்க் கல்வெட்டுகள் குறிக்கின்றன.

இவை இரண்டுள்ளும் புன்றிற் கூற்றத்து ஆலங்குடியே ஆலங்குடி என்ற பெயரளவில் தொன்மையுடைதாகத் தெரிதலால் இதுவே நல்லிசைப் புலவர் வங்கனாரின் ஆலங்குடியென்று கொள்ளுதற்கு இடம் தருகிறது. வலங்கைமானுக்கு அருகிலும் நன்னிலம் பகுதியிலும் அமைந்த ஆலங்குடி என்ற இடப்பெயர்கள் சங்க இலக்கியம் சுட்டிய இடப்பெயராக இருக்கக்கூடும். வலங்கைமானுக்கு அருகில் அமைந்த ஆலங்குடி தேவாரப்பாடல் பெற்றதும் சோழர்காலக் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் இடம் பெற்றதுமான பழமைச் சிறப்புடையதாகும்.

## 5. ஆவூர்

ஆவூர் எனப் பெயருடைய ஊர்கள் தொண்டை நாட்டிலும், சோழ நாட்டிலும் உண்டு. "இடைக்காலச் சோழ பாண்டியர் காலம் வரையில் சோழநாட்டு ஆவூர் 'ஆவூர்க் கூற்றத்து ஆவூர்' என்று விளங்கியிருந்தது. அது பிற்காலத்தே பசுபதி கோயில் என்ற பெயரை மேற்கொண்டமையின் ஆவூர் என்ற பழம் பெயர் மறைந்தொழிந்தது. அதனை அவ்வூர்க் கல்வெட்டுகள் நித்த விநோத வளநாட்டு ஆவூர்க்கூற்றத்து ஆவூர்"[86] என்று குறிக்கின்றன.

ஆ என்பது பசுவையும் ஆச்சா மரத்தையும் குறிக்கும். எனவே விலங்குப் பெயர் அல்லது மரப்பெயர் அடிப்படையில் தோன்றிய ஊராக இது இருக்க வேண்டும் என்னும் குறிப்பு இங்குக் கருதத்தக்கது.

ரா.பி.சேதுப்பிள்ளையும் இந்த ஆவூர் பற்றி குறிப்பிட்டதை வேனிலா ஸ்டாலின் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "பசுபதீச்சுரம்தான் ஆவூர் என்பது அவருடைய முடிவு. அவர் 'அங்கணர்க் கிடமாகிய ஆவூர் என்று சேக்கிழாரால் சிறப்பிக்கப்பெற்ற ஊரில் அமைந்தது பசுபதி என்று கூறுவதோடு 'பத்திமைப்பாடல் ஆறாத ஆவூர்ப் பசுபதீச்சரம் பாடுநாவே' என்று அத்திருக்கோயிலைத் திருஞானசம்பந்தரும் பாடியருளிதை எடுத்துக்காட்டுகிறார். ஆன்ம கோடிகளாகிய பசுக்களுக்கெல்லாம் பதியாக விளங்கும் ஈசனைப் பசுபதி என்று போற்றுதல்

சைவமுறை ஆதலின் அவர் உறையும் கோயில் பசுபதீச்சுரம் என்னும் பெயர் பெற்றது"[87] என்கிறார்.

### 6. ஐயூர்

ஐ என்றால் அழகு, தலைவன் என்று பொருள்படும். எனவே அழகிய ஊர், தலைவனின் ஊர் என்றப் பொருளில் ஐயூருக்கு பெயர் அமைந்திருத்தல் வேண்டும். "ஐயூர் என்பது சோழ நாட்டகத்ததாகிய ஓரூர் எனத் தெரிகிறது"[88] என்பர் ஆளவந்தார்.

ஐயூர் என்ற பெயருடைய ஊர்கள் தமிழகத்தில் பல உள்ளன. அவற்றுள் "பாண்டி நாட்டில் ஐயூரென்றும், சிற்றையூர் என்றும் பேரையூர் என்றும் பல ஊர்கள் காணப்படுகின்றன"[89] என்று குறிப்பிடுவர் ஔவை துரைசாமிப்பிள்ளை.

மதுரை மாவட்டம் திண்டுக்கல் மலைத் தொடரில் விளங்கும் தோன்றிக் குடியில் வாழ்ந்த தாமான் என்ற செல்வப் பெருமகனை முடவனார் பாடியிருக்கின்றார். அவ்வூர்க்குத் தென்பகுதியில் நிலக்கோட்டை வட்டத்தில் ஐயூர் என்ற பழமையான ஊர் ஒன்று உள்ளது என்றும் அவ்வூரில் வாழ்ந்த முடவனாரே தோன்றிக்கோனின் வள்ளன்மையை வியந்து பாராட்டி அவனிடம் பகடு பெற்றார் என்றும் ஔவை துரைசாமிப்பிள்ளை குறிப்பிட்டு ஐயூர் பாண்டிநாட்டில் உள்ளது என்ற கருத்தைத் தெளிவுப்படுத்துகிறார். ஆதலால் ஐயூர் எந்த நாட்டைச் சேர்ந்தது என்பதை அறிய முடியவில்லை. எனினும் சஞ்சீவி அவர்கள் இவ்வூரைச் சேர்ந்த ஐயூர் முடவனார், ஐயூர் மூலங்கிழார் ஆகிய இருவரையும் சோழநாட்டுப் புலவர்கள் என்றே குறிப்பிடுள்ளார்.

### 7. கடலூர்

தமிழ்நாட்டில் கடலோர மாவட்டமாக தென்னார்க்காட்டில் இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூரில், தென்பெண்ணை, கெடிலம், வெள்ளாறு என மூன்று ஆறுகள் ஓடுகின்றன. இவை கூடுமிடத்தால் இவ்வூர் கூடலூர் எனவும் பெயர் பெற்றுள்ளது. "ஆறுகள் கூடும் இடம் கூடல் எனப் பெயர் பெற்றது. அங்கே அமைந்த ஊரும் கூடலூர் எனப் பெயர் பெற்றிருக்கலாம்"[90] என்பர். இக்கூடலூர் என்னும் பெயர் மருவி பின் கடலூர் என அமைந்திருக்க வேண்டும். இதன் வட எல்லையில் வடவார்க்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களும், மேற்கெல்லையில் சேலம்,

திருச்சிராப்பள்ளி மாவட்டங்களும், தென் எல்லையில் தஞ்சை மாவட்டமும், கிழக்கே கடலும் அமைந்துள்ளன. இம்மாவட்டத்திற்குக் கிழக்கே புதுச்சேரி அமைந்துள்ளது. "புலவர் பல்கண்ணனார் பிறந்த கூடலூர் இதுவோ அன்றி வேறோ அறிகிலம் ஐயுறுகின்றனர். இவர் மருதத்திணையினையே பாடியிருத்தலின் இவர் பிறந்த கூடலூர் புனல்நாட்டில் உளதாதல் வேண்டும் என உரைப்பாரும் உளர்."[91] இக்கருத்தை நோக்கின் தென்னார்க்காடு மாவட்டத் தலைநகராகிய கடலூரே இவர் ஊர் என்பதை அறிய முடிகிறது. இவர் பெயர் கடலூர்ப் பல்கண்ணனார் எனவும், கூடலூர் பல்கண்ணனார் எனவும் ஏடுகளில் காணப்படுகிறது.

## 8. கிடங்கில்

ஓய்மா நாட்டு நல்லியக்கோடன் ஆட்சி செய்த ஊர். இது தென்னார்க்காடு மாவட்டம் திண்டிவனம் நகரத்தில் உள்ளது. இந்த ஊர் மிகப் பழமையானது. இவ்வூர் திண்டிவனம் நகரில் பள்ளமான இடத்தில் அமைந்துள்ளது. அங்கே சிவன் கோயிலும் சில தெருக்களும் உள்ளன. அதைச் சுற்றிலும் இடிந்த மதிற்சுவர்கள் காணப்படுகின்றன. அம்மதில் சுவரைச் சுற்றி அகழி இருந்ததற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. அவ்வூரிலுள்ள சிவன் கோயிலில், "கி.பி. 11 முதல் 15 ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்துக் கல்வெட்டுகள் சில உள்ளன. அவை சோழர், சம்புவராயர், விசயநகர வேந்தர்களின் காலக் கல்வெட்டுகள் ஓய்மானாட்டு கிடக்கை நாட்டுக் கிடங்கில்"[92] எனும் ஊரில் அக்கோயில் இருப்பதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இவ்வூருக்கு ஒரு கிலோ மீட்டர் வடக்கில் அமைந்த திண்டிவனத்திலும் ஒரு சிவன் கோயிலுள்ளது. அக்கோயிலுள்ள சோழர் காலக் கல்வெட்டுகள் கி.பி.1300 காலத்தவை. அக்கல்வெட்டுகளும் 'ஓய்மானாட்டு கிடக்கை நாட்டுக் கிடங்கிலான் இராஜேந்திர சோழ நல்லூர்த் திண்டீசுரம் என்று குறித்துள்ளன. இச்சான்றுகளின்படி இன்றைய திண்டிவனம் நகரத்தின் பெரும்பகுதி பண்டையக் கிடங்கிலே' ஆகும். இக்கிடங்கில் நகரைச் சேர்ந்தவர்களாக மூன்று சங்கப்புலவர்கள் காணப்படுகின்றனர்.

## 9. குளமுற்றம்

குளமுற்றம் என்னும் பெயரிலமைந்த ஊர்கள் சேரநாட்டிலும், சோழநாட்டிலும் உள்ளன. இவ்வூர் எந்த நாட்டைச் சேர்ந்தது என்பதை அறிய முடியவில்லை. இந்த ஊரிலே துஞ்சிய சோழமன்னன் ஒருவன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் எனப் பெயர் பெற்றான். "ஊரின் வெளியிடம் எனப் பொருள்படும் முற்றம் என்ற சொல்

அமைந்த ஊர்ப் பெயர்களில் இதுவும் ஒன்று. இது குளம் என்ற நீர்நிலை காரணமாகக் குளமுற்றம் எனப் பெயர் பெற்றது போலும்"[93] என்கிறார் ஆளவந்தார்.

## 10. கோவூர்

கோவூர் கிழாரின் பெயரால் அறியப்படும் இவ்வூர் சோழநாட்டு ஊர்களுள் ஒன்று. நாகைக்கு அருகில் 'கோகூர்' என்று அறியப்படும் ஊர் சங்க காலத்தைச் சேர்ந்த கோவூராக இருக்கலாம் எனக் கருத இடமிருக்கிறது.

## 11. செல்லூர்

இவ்வூர் செல்லிக்கோமான் என்றழைக்கப்பட்ட ஆதன் எழினி என்பானுக்கு உரியது. இது சோழநாட்டின் கீழைக் கடலோரம் அமைந்துள்ளது. இவ்வூரின் கிழக்கே நியமம் என்ற ஊர் உள்ளது. இவ்வூரில் வீரத்தினையும் நல்ல செல்வ வளத்தினையும் உடைய இளங்கோசர்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை,

> அருந்திறற் கடவுட் செல்லூர்க் குணாஅது
> பெருங்கடல் முழக்கிற்று ஆகியாணர்
> இரும்பு இடம்படுத்த வடுவுடை முகத்தர்
> கடுங்கட் கோசர் நியமம் ஆயினும்[94]

என்னும் அடிகள் உணர்த்துகின்றது. இவ்வூரைச் சேர்ந்தவர்களாக இரு புலவர்கள் காணப்படுகின்றனர். இப்பொழுது கீழைக்கடலோரம் காரைக்கால் அருகே செல்லூர் என்ற ஊர் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## 12. துறையூர்

துறையூர் என்ற பெயருடன் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் முசிறி வட்டத்தில் ஓர் ஊரும், அதே மாவட்டம் லால்குடி வட்டத்தில் ஓர் ஊரும் தென்னார்க்காடு மாவட்டம் விழுப்புரம் வட்டத்தில் ஓர் ஊரும் உள்ளன. தென்னார்க்காடு, திருச்சி மாவட்டங்கள் சோழநாட்டின் பகுதியாக விளங்கியதால் இம் மாவட்டங்களில் காணப்படும் ஏதேனும் ஒரு துறையூரைச் சேர்ந்தவராக துறையூர் ஓடைகிழார் இருந்திருக்கலாம் எனக் கருத முடிகிறது. இவர் வேள்ஆய் அண்டிரனைப் பாடும் பொழுது, தன் ஊரான துறையூரை, தண்புனல் வாயிற்றுறையூர் முன்றுறை[95] என்று சிறப்பித்துப் பாடுகிறார்.

**13. நல்லாவூர்**

நல்லாவூர் சோழநாட்டைச் சேர்ந்த ஊராகும். இவ்வூரைச் சேர்ந்தவராக நல்லாவூர் கிழார் என்னும் புலவர் வாழ்ந்துள்ளார். கும்பகோணத்திலிருந்து காரைக்கால் செல்லும் வழியில் எஸ்.புதூர் அருகே நல்லாவூர் என்ற ஊர் உள்ளது. எஸ்.புதூரிலிருந்து வடமட்டம் செல்லும் வழியில், திருநல்லம் என்றழைக்கப்பட்ட கோனேரிராஜபுத்தில் பிற்காலச் சோழர் குலப் பெண்ணான செம்பியன் மாதேவியார் கருங்கற்களால் ஆன கோவில் ஒன்றைச் சிவனுக்கு எழுப்பியுள்ளார்.

**14. பேரெயில்**

பேரெயில் முறுவலார் என்னும் சோழநாட்டுப் புலவரின் பெயரால் ‘பேரெயில்’ என்ற ஊர் காணப்படுகிறது. பேரெயில் என்ற பெயருடைய ஊர்கள் தமிழ்நாட்டில் பல உள்ளன. “பேரெயில் என்றோரூர் சோழநாட்டிலும் உளது. ஆயினும் முறுவலார் பாண்டித் தலைவனைப் பாடியிருப்பதாலும், பாண்டி நாட்டிலும் இப்பெயருடையதோரூர் இருத்தலாலும் இவர் பாண்டி நாட்டினரென்பது வலியுறுகிறது.”[96] இருப்பினும் பேரெயில் முறுவலரால் பாடப்பட்ட நம்பி நெடுஞ்செழியனின் பெயர் நெடுமொழியன் என்றும் காணப்படுகிறது. “நம்பி நெடுமொழியன் என்பதே பாடமாயின் நெடுமொழியனூரென்றோரூர் தென்னார்க்காடு வட்டத்தில் உண்மையின் பேரெயின் முறுவலார் சோழ நாட்டினரெனத் துணியலாம்”[97] என்பர் ஒளவை துரைசாமிப்பிள்ளை. பேரெயில் என்னும் ஊர் சோழநாட்டின் காவிரியின் தென்பாலுள்ள தேவாரம் பெற்ற சிவஸ்தலம் என்று உ.வே.சாமிநாதஐயர் குறிப்பிடுகிறார்.

**15. மாங்குடி**

மாங்குடி மருதனார் என்னும் புலவர் பெயரால் இவ்வூர் அறியப்படுகிறது. “திருத்துறைப்பூண்டிக் கண்மையில் உள்ள மாங்குடி, மருதவனம் என்ற இரண்டு ஊர்களில் முன்னையதை மாங்குடி கிழார் பிறந்த ஊராகவும் பின்னையதை அவர் பெயரால் எழுந்த ஊராகவும் கருதுவர்.”[98] இவ்வூர்களைச் சேர்ந்தவர் மாங்குடி மருதனார் என அறிய முடிகிறது.

**16. முகையலூர்**

சோழநாட்டுப் புலவரான முகையலூர் சிறுகருந்தும்பியார் என்னும் புலவரால் இவ்வூர் அறியலாகிறது. முகையலூர் என்பது சோழநாட்டைச் சேர்ந்த ஓர் ஊராக இருந்துள்ளது. "முகையலூர் என்பது இடைக்காலத்தில் முகலாறு என வழங்கி இப்போது மொகலாரென வழங்குகிறது. இதற்கு முகையலென்றும் பெயருண்மையின் சோணாட்டு முகையலூர் இதுவென்று துணியலாம் என்பர்"[99] ஔவை துரைசாமிப்பிள்ளை.

**17. வீரை**

வீரை என்னும் கடற்கரைப் பட்டினத்தை ஆட்சி செய்தவன் வேள்மகன் தித்தன் ஆவான். 'வீரை வேளிருடையது என்றும் அங்கு உப்பளங்கள் இருந்தன என்றும் அகநானூற்றுப் பாடலால் அறிய வருவதால் வீரை என்பது கடற்கரை ஊர் என்பது விளங்குகிறது.'[100] தித்தன் என்னும் சோழ அரசனால் அறியப்படும் இவ்வூர், "பெண்ணையாற்றின் வடகரையிலுள்ள நாட்டைச் சேர்ந்தது. புதுச்சேரிக்கருகில் வீராம்பட்டினமென இப்பொழுது வழங்குகிறது"[101] என்பார் ஔவை துரைசாமிப்பிள்ளை.

**18. வெள்ளைக்குடி**

வேங்கை மரம் எனப் பொருளுடைய சொல் வெள்ளையென்பதாகும். "வேங்கை மரங்கள் அடர்ந்த குடியிருப்புகள் அமைந்த ஊர் வெள்ளைக்குடி எனப் பெற்றிருக்கலாம்"[102] என்பர். இவ்வூரும் சோழநாட்டைச் சேர்ந்த ஊராகும். நாகனார் என்னும் புலவர் இவ்வூரினராவார்.

**தொகுப்புரை**

புலவர்கள் இலக்கியங்களைப் படைக்கும் பொழுது தாம் வாழ்ந்த, வாழுகின்ற பகுதியின் அமைப்புகளான நாடுகள், மலைத்தொடர்கள், ஆறுகள், ஊர்கள், துறைமுகங்கள், இவற்றை ஆட்சி செய்தோரின் வாழ்வு நிலைகள் போன்றவற்றை அமைத்துப் படைப்பது வழக்கமாகும். இத்தகைய நிகழ்வுகளைச் சங்க காலச் சோழநாட்டுப் புலவர்களும், தம் பாடல்களில் பதிவு செய்துள்ளமையை அறிய முடிகிறது.

சோழநாடு மேற்கே உயர்ந்தும், கிழக்கே தாழ்ந்தும், மருதம், முல்லை, நெய்தல் ஆகிய மூன்று நிலங்களைத் தன்னகத்தே கொண்டும் இயற்கை வளத்தோடு திகழ்ந்துள்ளது.

சோழநாட்டில் மலைத்தொடர்கள் காணப்படவில்லை. எனினும் புலவர்களின் பாடல்கள் வழி, ஏழில் குன்றம், கொல்லிமலை, கோடைமலை, திருப்பரங்குன்றம் போன்ற பழமை வாய்ந்த பிறநாட்டு மலைகளைப் பற்றிய சிறப்புகளை அறிந்து கொள்ள முடிகின்றது.

சோழநாட்டில் காவிரியும், பாண்டி நாட்டில் வையை ஆறும் வற்றாத வளத்தைத் தந்துள்ளன.

அம்பர், அழும்பில், ஆலங்கானம், உறையூர், கழார், குடவாயில் போன்ற ஊர்கள் சோழநாட்டு ஊர்களாக விளங்கியுள்ளன.

பாண்டிநாட்டு ஊர்களாக ஒல்லையூர், கானப்பேரெயில், கூடல் முதலிய ஊர்களும் சேரநாட்டு ஊராக கழுமலமும் விளங்கியதை அறிய முடிகிறது.

சேரநாட்டின் துறைமுகங்களாக தொண்டி, முசிறி விளங்கியுள்ளன. முசிறித் துறைமுகத்தில் மிளகு அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டதையும், முசிறிப்பட்டினத்தில் விளைந்த முத்துக்கள், பந்தர் என்னும் இடத்தில் விற்கப்பட்டதையும் அறிய முடிகிறது.

சாலியூர் என்ற வளமான துறைமுகத்தில் வாணிகம் நிலைபெற்று விளங்கியதை மதுரைக்காஞ்சி எடுத்துரைக்கிறது.

குறுநிலமன்னர்களில் சிறுகுடி பண்ணனும் மல்லிகாரியாதியும், கொடைத்தன்மை உடையோராய் இருந்துள்ளனர்.

பாண்டியனின் படைத்தலைவனாகப் பண்ணியும், சேரமான் கோதையின் படைத்தலைவனாகப் பிட்டங் கொற்றனும் சிறந்து விளங்கியுள்ளனர்.

அரிசில், ஆடுதுறை, ஆர்க்காடு, உறையூர், ஐயூர் என இருபத்தெட்டு ஊர்கள் சோழநாட்டுப் புலவர்கள் பெயரோடு இணைந்துள்ளதை அறிய முடிகிறது.

## அடிக்குறிப்புகள்

1. புறம்., பா.40:10-11.
2. மேலது., பா.386:10-17.
3. அகம்., பா.152:12-13.
4. நற்றிணை, பா.391:6-7.
5. அகம்., பா.345:4-7.
6. நற்றிணை, பா.265:7.
7. குறுந்தொகை, பா.100:4-5.
8. பதிற்றுப்பத்து, எட்டாம்பத்து, பதிகம்:2-5.
9. அகம்., பா.209:14-15.
10. மேலது., பா.213:14-15.
11. புறம்., பா.205:5-6.
12. அகம்., பா.13:10-11.
13. ஔவை சு.துரைசாமிபிள்ளை, **புறநானூறு மூலமும் உரையும், தொகுதி-II**, ப.13.
14. அ.மா.பரிமணம் மற்றும் கு.வெ.பாலசுப்பிரமணியன் (ப.ஆ.), **அகநானூறு மூலமும் உரையும், தொகுதி-I**, ப.39,
15. அகம்., பா.149:14-17.
16. காண்க, மேலது., பா.61, 85.
17. மேலது., பா.213:1-3.
18. புறம்., பா.18:18-23.
19. பட்டினப்பாலை, அடிகள்:1-7.
20. அகம்., பா.62:9-10.
21. மேலது., பா.76:11-12.
22. காண்க, மேலது., பா.341:6-11.
23. புறம்., பா.58:1.
24. மேலது., பா.399:11-13.
25. அகம்., பா.213:21-23.
26. புறம்., பா.35:9-10.
27. நற்றிணை, பா.141:10-11.

28. மதுரைக்காஞ்சி, அடிகள்.340-342.

29. அகம்., பா.149:7.

30. நற்றிணை, பா.141:9-10.

31. புறம்., பா.385:9-10.

32. மயிலை சீனி.வேங்கடசாமி (க.ஆ.), **தமிழ்நாட்டு வரலாறு சங்க கால அரசியல்**, ப.253.

33. தி.வை.சதாசிவப்பண்டரத்தார், **இலக்கியமும் கல்வெட்டுக்களும்**, ப.104.

34. மதுரைக்காஞ்சி, அடிகள்:125-127.

35. அகம்., பா.6:20.

36. ஐங்குறுநூறு, பா.61, அகம்., பா.226.

37. அகம்., 376:4-5.

38. மேலது., பா.44:18.

39. நற்றிணை, பா.379:4.

40. அகம்., பா.60:13-14.

41. புறம்., பா.70:10-13.

42. மேலது., பா.24:19.

43. நற்றிணை, பா.390:3-4.

44. புறம்., பா.66:3-6.

45. காண்க, அகம்., பா.159.

46. காண்க, புறம்., பா.242.

47. மேலது., பா.242:4-6.

48. காண்க, அகம்., பா.44.

49. காண்க, புறம்., பா.21.

50. காண்க, அகம்., பா.149, 315.

51. மேலது., பா.315:7-8.

52. மேலது., பா.149:11-14.

53. மதுரைக்காஞ்சி, அடிகள் 429-430.

54. காண்க, அகம்., பா.366.

55. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை (உ.ஆ.), **புறநானூறு மூலமும் உரையும், தொகுதி-II**, ப.73.

56. அகம்., பா.266:10-11.
57. மேலது., பா.366:11-12.
58. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை (உ.ஆ.), புறநானூறு மூலமும் உரையும், தொகுதி-I, ப.387.
59. காண்க, மேலது., பா.181:1-6.
60. காண்க, மேலது., பா.396.
61. மேலது., பா.396:10-13.
62. மேலது., பா.177:12-15.
63. பதிற்றுப்பத்து, ஐந்தாம் பத்து, பதிகம் 1-2.
64. அகம்., பா.133:16-18.
65. மேலது., பா.60:1-7.
66. பதிற்றுப்பத்து, பா.74:5-6.
67. அகம்., பா.149:8-9.
68. மதுரைக்காஞ்சி, அடிகள் 86-88.
69. பொருநராற்றுப்படை, அடி.246.
70. அகம்., பா.271:12-14.
71. காண்க, மேலது., பா.54.
72. மேலது., பா.177:15-16.
73. காண்க, புறம்., பா.173.
74. அகம்., பா.216:11-12.
75. மேலது., பா.105:10-14.
76. புறம்., பா.177:15-17.
77. மேலது., பா. 181:6-10.
78. அகம்., பா.13:6-11.
79. புறம்., பா.169:1-5.
80. மேலது., பா.170:15-17.
81. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை (உ.ஆ.), பதிற்றுப்பத்து மூலமும் உரையும், பக்.41-42.
82. சுந்தரர், தேவாரம், திருஅரிசிற்கரைப்புத்தூர் பதிகம், பா.85.
83. சங்கத்தமிழ்ப்புலவர் வரிசை - 10, மாநகர்ப் புலவர்கள் - 1, ப.12.

84. அகம்., பா.227:5-6.

85. வேனிலா ஸ்டாலின், **உரைவேந்தர் புலமையில் நற்றிணை**, ப.85.

86. மேலது., ப.87.

87. மேலது., ப.88.

88. ஆர்.ஆளவந்தார், **இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள், தொகுதி-I**, ப.92.

89. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை (உ.ஆ), **புறநானூறும் மூலமும் உரையும், தொகுதி-I**, ப.62.

90. ஆர்.ஆளவந்தார், **இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள், தொகுதி-I**, ப.124.

91. கா.கோவிந்தன், **சங்கத்தமிழ்ப் புலவர் வரிசை-12, மாநகர்ப் புலவர்கள்-3**, ப.5.

92. ஆர்.ஆளவந்தார், **இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள், தொகுதி-I**, ப.108.

93. மேலது., ப.113.

94. அகம்., பா.90:9-12.

95. புறம்., பா.136:25.

96. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை (உ.ஆ.), **புறநானூறு மூலமும் உரையும், தொகுதி-II**, ப.87.

97. மேலது., ப.87.

98. கா.கோவிந்தன், சங்கத்தமிழ்ப் புலவர் வரிசை-8, கிழார்பெயர் பெற்றோர், ப.138.

99. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை (உ.ஆ), **புறநானூறும் மூலமும் உரையும், தொகுதி-II**, பக்.136.

100. அகம்., பா.206.

101. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை (உ.ஆ), **புறநானூறும் மூலமும் உரையும், தொகுதி-II**, ப.234.

102. ஆர்.ஆளவந்தார், **இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள், தொகுதி-I**, ப.164.

இயல் நான்கு

# சமுதாயச் செய்திகள்

# இயல் – 4

# சமுதாயச் செய்திகள்

மொழியின் வாயிலாக வாழ்க்கையை உணர்த்துவதே இலக்கியங்களாகும். இலக்கியங்கள் தத்தம் கால சமுதாயத்தினைப் பிரதிபலிக்கின்றன. நாட்டின் வரலாற்றையும் சமுதாய அமைப்பையும் எழுதுவதற்கு இலக்கியங்கள் பெரிதும் துணைபுரிகின்றன. பழந்தமிழரின் பெருமை நிறைந்த வாழ்வினைச் சங்கப் பாடல்கள் எடுத்தியம்புகின்றன. சங்கப் புலவர்களுள் சோழநாட்டைச் சேர்ந்த புலவர்களின் பாடல் வழி அறியலாகும் பண்டைத் தமிழ் மக்களின் சால்பு, இல்லறம், விருந்தோம்பல், மக்கட்பேறு, பரத்தையர் நிலை, பழக்கவழக்கம், நம்பிக்கைகள், நிமித்தங்கள், மணமுறை, மகளிர் நிலை, அரசர், அந்தணர்தம் வாழ்வு நிலைகள், உமணர், வடுகர் போன்ற பல்வேறு இனத்தாரின் வாழ்வியல் கூறுகள், உழவு முதலான தொழில்கள், உணவு உடை, அணிகலன்கள், பொழுதுபோக்கு விளையாட்டுகள் ஆகியவற்றை இவ்வியல் ஆய்வு செய்கிறது.

### சமூகம்

சமூகம் மனித உறவுகளால் தோன்றுகிறது. உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளும் மனிதர்கள் உறவுகளை நிலைப்படுத்தியும் முறைப்படுத்தியும் தங்களுக்குள் ஓர் அமைப்பை ஏற்படுத்திக் கொள்ளும்போது சமூகம் பிறக்கிறது. பிளாட்டோ என்ற அறிஞர் மனிதர்கள் தேவையின் காரணமாகத் தங்களுக்குள் சமூக அமைப்பை ஏற்படுத்திக் கூடி வாழ்கிறார்கள் என்று கூறியுள்ளார். அரிஸ்டாட்டில் என்பார் மனிதனுக்கு, இயற்கையிலேயே சமூக இயல்பு உள்ளது என்றும் அதன் காரணமாக அவன் பிறரோடு கூடிப்பழக முற்படும் பொழுது சமூகம் தோன்றுகிறது என்றும் கூறியுள்ளார். எவ்வாறாயினும் சமூகம் என்பது தனிமனித வாழ்வு எல்லைகளைக் கடந்து நிலவும் ஓர் அமைப்பாகும். தனிமனிதர் பலரால் சமூகம் உருவாக்கப்பட்டிருந்தாலும், சமூகம் என்ற அமைப்பிலேயே மனிதர்களின் நலன்களை விட, சமூக நலன்களுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

சமூகம், சமுதாயம் என்ற சொற்கள் ஒன்று போல தோன்றினாலும், இரண்டிற்கும் வேறுபாடு உள்ளது. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி,

"சமுதாயம் என்பதற்கு மக்களின் திரள் என்றும், சமூகம் என்பதற்குத் திரள் என்றும் பொருள் விளக்கம் தருவதாக குறிப்பிடுகிறார் க.திலகவதி."[1] இதே பொருளில் சங்கப் பாக்களில் சொற்கள் கையாளப்பட்டுள்ளன. பல்நூறு அடுக்கிய வேறு பைஞ்ஞிலம்[2] என்று கழாத்தலையார் பாடலடியில் இடம் பெற்றுள்ள பைஞ்ஞிலம் என்ற சொல்லும், மன்பதை புரக்கும் நல்நாட்டுப் பொருநன்[3] என்று கோவூர் கிழார் பாடலில் காணப்படும் மன்பதை என்ற சொல்லும் சமுதாயம், சமூகம் என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளன என்பது புலனாகின்றது.

பைஞ்ஞிலம் என்பது படைவீரராகிய தொகுதியினர் என்றும், மன்பதை என்பது உலக உயிர்கள் என்றும் இப்பாடல்களில் பொருள் பயின்று வந்துள்ளது. எனவே சமுதாயம் என்பது சமூகத்தின் ஒரு பிரிவாகும். சமூகத்திற்குள் சமுதாயம் அடங்கியிருக்கும்.

**சங்க காலச் சமுதாயம்**

சங்க காலச் சமுதாயத்தில் காதல்நெறி போற்றப்பட்டுள்ளது. உடன்போக்கு மேற்கொண்ட தலைமக்களைத் தேடிச் சென்ற செவிலியை நோக்கி, முக்கோற்பவர் என்னும் அந்தணர் 'சந்தனம் பிறந்த மலைக்காகாது, பூசுபவர்களுக்கே பயன்படும். இதுபோல நும்மகள் நுமக்குரியவள் அல்லள். அவள் சிறந்த நெறியை நாடிச் செல்கிறாள் என்று எடுத்துரைப்பதன் மூலம் சமுதாய அமைப்பில் காதற்நெறி போற்றபட்டதை உணர முடிகிறது. பொதுமக்கள் அறம் கேட்கும் வகையில் சங்க காலச் சமுதாய அமைப்பு இருந்துள்ளது. 'பழங்காலத்தில் பெண்களே நீதிகேட்டு குரல் கொடுத்துள்ளனர். அன்னமிஞிலி என்ற பெண் வயலில் பசு மேய்ந்ததற்காக தன் தந்தையைக் குருடாக்கிய கோசரைப் பழிவாங்கும் வகையில் நோன்பு மேற்கொண்டு, திதியன், குறும்பியன் என்னும் குறுநில மன்னர்களின் உதவியோடு கோசரைத் தண்டித்ததை அறியமுடிகிறது.'[4]

சங்ககாலச் சமுதாயத்தின் பொதுத்தன்மைகளில் குறிப்பிடத்தக்கன புகழை விரும்புதலும், பழிக்கு நாணுதலும் ஆகும். 'உண்டால் அம்ம இவ்வுலகம், என உலக நிலைப்பேற்றிற்குக் காரணம் இத்தகு பண்புடையோர் இருந்ததால்தான் என்பதைச் சங்கப்பாடல்கள் பல எடுத்துரைக்கின்றன.

இம்மை, மறுமை, ஊழ் பற்றிய நம்பிக்கைகள் அக்காலச் சமுதாயத்தில் இருந்தன. அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகிய பண்புகளைச் சங்க காலச் சமுதாயம் பெரிதும் போற்றியிருக்கிறது. எனினும் கள் குடித்தலும் பரத்தமையும் சங்க காலச் சமுதாயத்தால் கடிந்தொதுக்கப்படவில்லை.

அரசு வழி இயங்கிய சங்க காலச் சமுதாயத்தில் அரசர்க்கும், நாட்டுக்கும் ஆற்ற வேண்டிய பணிகளைச் சிறப்பாக செய்யவேண்டும் என்ற மன நிலை இருந்தது. பொன் முடியார் என்னும் புலவர், 'ஈன்று புறந்தருவது தாயின் கடன், சான்றோனாக்குவது தந்தையின் கடன் என்று சங்க கால மக்களின் கடமைகளை எடுத்துரைக்கிறார்.'[5] இங்ஙனம் பண்டைத் தமிழ்மக்களின் சமுதாய அமைப்பு விளங்கியதைக் காண முடிகிறது.

**சால்பு**

சால்பு, சான்றோன், சான்றாண்மை ஆகியன பழந்தமிழ் நூல்களின் வழி நன்கறிந்த சொற்களாகும். 'சால்பு' என்ற சொல் இசைவு, ஊக்கம், கல்வி, குணம், மாட்சிமை, மேன்மை என்னும் பொருள்களைத் தருகின்றது. சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி சால்பு என்பது மேன்மை, நற்குணம், சான்றாண்மை, மனவமைதி, கல்வி ஆகிய பொருள்களைத் தருவதாக எடுத்துக்காட்டுகிறது. சான்றாண்மைக்குரிய குணங்களாக திருக்குறள்,

> அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
> ஐந்து சால்பூன்றிய தூண்[6]

என்று குறிப்பிடுகிறது. இத்தகைய சான்றாண்மைக்குரிய பண்புகளைச் சோழநாட்டு மக்கள் பெற்றிருந்ததைக் காணலாம்.

**மன்னரின் சால்பு**

சோழ அரசர்கள் நடு நிலைமையோடு நீதி வழங்கியுள்ளனர். இளையவனாக இருந்தபொழுதும் நீதி கேட்டு வந்தவரிடத்து நரை முடித்து நீதி வழங்கிய கரிகாலனின் சான்றாண்மையினை,

> உரை முடிவு காணான் இளமையோன் என்ற
> நரைமுது மக்கள் உவப்ப நரைமுடித்து

சொல்லாமல் முறைச் செய்தான் சோழன்குல விச்சை
கல்லாமல் பாகம் படும்[7]

என்னும் பழமொழி நானூற்றுப் பாடல் விளக்குகிறது.

கரிகாலனின் ஆட்சிச் சிறப்பை உணர்த்தக் கருதிய முடத்தாமக் கண்ணியார், அறனொடு புணர்ந்த திறனறி செங்கோல்[8] என்று குறிப்பிடுகிறார். அதாவது தம் நாட்டு மக்கள் அறவழியை உணர்ந்து செயல்பட வேண்டும் என்பதற்காக அறவழிச் சென்று செங்கோல் செலுத்தியவன் கரிகாலன் என்கிறார். ஒரு நாட்டை நல்வழிப்படுத்த எண்ணும் சான்றோர் தாம் முதலில் அறவழியறிந்து செயல்பட வேண்டும். மன்னன் எவ்வழியோ மக்களும் அவ்வழி என்ற ஆன்றோர் வாக்கிற்கேற்ப நாட்டு மக்களுக்குத் தானே முன்னுதாரணமாகத் திகழ்ந்து கரிகாலன் ஆட்சி செய்துள்ளதை அறியமுடிகிறது.

**புலவரின் சால்பு**

சோழநாட்டுப்புலவர்கள் சிறந்த அறத்தையே முதன்மையாக் கொண்டு வாழ்ந்ததோடு, நாட்டை ஆளும் அரசனுக்கு அறத்தின் மேன்மையை வலியுறுத்தி சான்றாண்மை உடையவர்களாகத் திகழ்ந்துள்ளனர்.

உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்னும் புலவர் சோழன் நலங்கிள்ளியை நோக்கி சிறந்த அரச குடியில் பிறந்து அரசாண்ட பலருள்ளும் புலவர் பாடும் சிறப்புப் பெற்றவர் சிலரே. புகழ்பெற்றவர் வானவூர்தியில் ஏறி விண்ணுலகம் அடைவர் என்று அறிவுடையோர் கூறக் கேட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். வளர்தலும் தேய்தலும் பிறத்தலும் இறத்தலும் உடையது உலகம். இவ்வுலகில் வருந்தி நிற்கும் வறியவர்க்கு வேண்டுவன கொடுத்துதவும் வண்மைதான் வெற்றிக்கு மாண்பாகும். ஆதலால் அத்தகைய அறத்தை செய்ய வேண்டும் என்று மன்னனுக்கு அறத்தின் மேன்மையினை உணர்த்தியுள்ளார்.

**வணிகரின் சால்பு**

சோழநாட்டில் வாழ்ந்த வணிகர்கள் நேர்மை, நடுவு நிலைமை, வாய்மை ஆகிய மூன்றினையும் கடைப்பிடித்து வாணிகம் செய்துள்ளனர். ‘தம்பொருளையும் பிறர்பொருளையும் ஒன்று போலவே எண்ணி, கொள்வதும் மிகையாகக் கொள்ளாது,

கொடுப்பதும் குறைவாகக் கொடாது வாணிகம் செய்துள்ளதைப்'[9] பட்டினப்பாலை குறிப்பிடுகிறது.

இவ்வாறு சோழநாட்டு மக்கள் அறவொழுக்கங்களில் சிறந்து நற்குணங்களைப் பெற்றிருத்தலை நோக்கும்பொழுது பண்டைய சோழநாடு சான்றாண்மையைப் போற்றிய நாடாக விளங்கியதை உணர முடிகிறது.

## இல்லறம்

பிறப்பால் ஒவ்வொரு மனிதனும் தனிமனிதனாகத் திகழ்கிறான். ஆனால் பிறப்பிற்குப் பின்னர் அவனது வளர்ச்சியின் ஒவ்வொரு நிலையிலும் அவன் புதுப்புது உறவுகளைப் பெற்று அதன் கட்டுப்பாட்டிற்குள் வருகிறான். அங்ஙனம் அவன் உணர்ந்த கட்டுப்பாடுகளில் ஒன்று குடும்ப வாழ்வு. இது தனிமனிதனுக்காக மட்டும் நடத்தப்படுவதன்று. சமுதாய நன்மை கருதியும் நடத்தப்படுவதாகும். சமுதாயத்திற்குப் பயன்படுதலே இல்வாழ்வின் நோக்கமாக இருந்தது என்பதை, "காதலர் இருவர் மக்களைப் பெற்று மனையறம் காத்துச் சுற்றம் தழுவிச் சோர்விலாது சமுதாயத்திற்குப் பயன்பட வாழ்தலே இல்வாழ்க்கையின் இனிய நோக்கங்களாக இருந்தன"[10] என்பர். வீட்டின் நல்வாழ்வே நாட்டின் நல வாழ்விற்கு வழிவகுக்கும் என்பதை, "ஒரு சமுதாயத்தார் சிறந்த நாகரிகமும் பண்பாடும் பெற்றுச் சிறந்து வாழ்ந்தனர் எனில், அதன் அடிப்படை அவர்களுடைய குடும்ப வாழ்வில்தான் காணப்பெறும். வீட்டில் நல்வாழ்வைப் பெற்ற சமுதாயம், வெளியில் சிறந்த வாழ்வைப் பெறுதல் என்பது வேரில்லாத மரம் தழைத்தது என்பது போலத்தான்"[11] என்று குறிப்பிடுகிறார் அ.ச.ஞானசம்பந்தன்.

## இல்லறம்-சொல்லாட்சி

இல்லறம் என்ற சொல்லாட்சி சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. ஆனால் இல்லறம் என்னும் சொல் உணர்த்தும் பொருள் தரக்கூடிய சொற்களான மனை, மனைக்கிழமை ஆகிய சொற்கள் பயின்று வந்துள்ளன. இதனை,

> மனை புறந்தருதி ஆயின் ஏனையதூஉம்
> இம் மனைக்கிழமை எம்மொடு புணரின்[12]

என்னும் அடிகள் உணர்த்துகிறது. கணவன், மனைவி ஆகிய இருவரும் இல்லின்கண் இருந்து வாழும் வாழ்க்கை முறை இல்லறம் எனப்படும் என்பதை,

இரந்தோர் மாற்றல் ஆற்றா

இல்லின் இல்வாழ்க்கை[13]

என்று நற்றிணை குறிப்பிடுகிறது.

சங்க காலத்தில் மனையின்கண் இருந்து மனையறம் நிகழ்த்தும் உரிமை இல்லத்தில் தலைமை தாங்கி நடத்திச் செல்லும் சிறப்பு மகளிர்க்கு உரியவொன்றாக இருந்தது. மனைவி இல்லாள், மனைக்கு விளக்கு, மனைக்கிழத்தி, மனையாள், மனையோள், இற்பொலி, மகடூஉ, இற்கிழத்தி போன்ற பெயர்களால் சங்க இலக்கியத்தில் குறிக்கப்பட்டுள்ளாள். இப்பெயர்கள் சோழநாட்டுப் புலவர்களின் பாடலில் காணப்படுவதை, புதல்வர் பூங்கண் முத்தி மனையோட்[14] என்னும் புறநானூற்று அடியில் இல்லறத்தலைவி மனையோள் என்று குறிக்கப் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. இவ்வாறு மனையின் உரிமையைக் குறிக்கும் பெயர்கள் ஆண்பாலாருக்கு வழங்கப் பெறாமையால் மனையறக் கடமைகளில் மகளிரே பொறுப்புடையோராய் விளங்கியுள்ளனர் எனலாம். திருமணத்திற்குப் பிறகு தலைவி கணவனையே தன்னுயிராகக் கருதி ஓம்புவதிலும், குழந்தைகளைப் போற்றி வளர்ப்பதிலும், விருந்தோம்புவதிலும் ஈடுபடுகிறாள். இவ்வாறு இல்லறத்தை நடத்தும் மனையாளைப் பற்றி, சோழநாட்டுப் புலவர்களின் வழி அறியமுடிகிறது.

மனைக்கு விளக்கு ஆகிய வாணுதல் கணவன்

முனைக்கு வரம்பு ஆகிய வென்வேல் நெடுந்தகை[15]

என ஐயூர்முடவனார் இயற்றிய இப்பாடலில் சமுதாய நியதிப்படி இல்லறத்தை நடத்துவதற்கு ஆணுக்கு உதவியாக அமையும் மனைவியாலேயே இல்லறம் மாண்படையும் என்று உரைத்துள்ளார். சோழநாட்டு மகளிர் தலைவனொடு கூடி நிகழ்த்தும் இல்லறமே சிறந்த அறம் என்று போற்றி வாழ்ந்துள்ளனர்.

சேவலுடன் கோழி குப்பையைக் கிளறும் பொழுது புழுதியிடத்தே நல்ல பொன் ஒளி வீசித் தோன்றும். அதுபோல் தலைவனோடு கூடி நிகழ்த்தும் இல்லறத்தைப் பலரும் புகழ்வர் என்ற கருத்தை,

சேவலோடு சிலம்பின் போகிய சிதர்கால் வாரணம்

முதைச் சுவல் கிளைத்த பூழி மிகப்பல

நன்பொன் இமைக்கும் நாடனொடு

அன்புறு காமம் அமைக நம் தொடர்பே[16]

என்று காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனாரின் பாடல் வலியுறுத்துகின்றது. இவ்வாறாக வாழ்க்கைத் துணையாகிய மனையாள் மாட்சிமையுடையவளாக இருத்தல் வேண்டும். அத்தகைய மனைமாட்சி மனையாளிடத்து இல்லாவிட்டால் இல்லறவாழ்வு எத்துணைச் சிறப்புகள் உடையதாக இருந்தாலும் பயன் இல்லை என்பதை மேற்கண்ட செய்திகள் உணர்த்துகின்றன.

**விருந்தோம்பல்**

இல்லற மகளிரின் இன்றியமையாப் பண்புகளுள் ஒன்று விருந்தோம்பல். பெண்ணின் இலக்கணம் கூறும் தொல்காப்பியர் இல்லறத் தலைவியின் கடமைகளைக் கூறும்பொழுது விருந்தோம்பல் பண்பாட்டையும் இணைத்து, **விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**[17] என்று கூறியுள்ளார்.

சங்க கால மக்களின் முதன்மையானக் கடமையாக விருந்தோம்பல் இருந்துள்ளது. விருந்தோம்பல் என்பது இல்லம் தேடிப் புதிதாக வருபவர்களை இன்முகத்துடன் வரவேற்று இனிய மொழிகள் பேசி, உபசரித்துப் போற்றும் உயரிய பண்பாகும்.

சோழநாட்டு மகளிர் நள்ளிரவில் விருந்து வரினும் முகம் சுளிக்காது அவர்களை எதிர்கொண்டு வரவேற்று விருந்து செய்வர். இதனை,

> **அல்லிலாயினும் விருந்துவரின் உவக்கும்**
> **முல்லைச் சான்ற கற்பின்**
> **மெல்இயற் குறுமகள் உறைவின் ஊரே**[18]

என்று இடைக்காடனாரின் பாடல் புகழ்கின்றது. விருந்தினரை எதிர்கொண்டு போற்றும் விருப்பம் மிகுந்தவர்களை, **விருந்து விருப்புறூஉம் பெருந்தோட் குறுமகள்**[19] என்று நற்றிணைக் கூறுகின்றது.

கணவன் மனைவியரிடையே எழும் ஊடலைத் தீர்க்க வாயில்களாக விருந்தினர் அமைவர். விருந்தினர் வரின் இருவரும் ஊடலை மறந்து விருந்தினரைப் பேணும் கடமையில் கணவனும் மனைவியும் ஈடுபடுவர். தன் மனைவியின் ஊடலைத் தீர்ப்பதற்கு யாரேனும் விருந்தினர் வரமாட்டார்களா என்று ஏங்குகின்ற தலைவனை,

எமக்கே வருகதில் விருந்தே சிவப்பாளன்று
சிறியமுள் எயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகங்காண்கம்மே[20]

என்று மாங்குடி மருதனாரின் பாடல்வரிகள் உணர்த்துகின்றது.

**மக்கட்பேறு**

பெறுதற்கரிய பேறுகளுள் தலைசிறந்த பேறு மக்கட்பேறாகும். இல்லற வாழ்விற்கு அணியாக நன்மக்களைப் பெறுவதைச் சிறந்த இல்லற நெறியாக மகளிர் போற்றியுள்ளனர். இதனை,

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு[21]

என்ற குறள் உணர்த்துகிறது. வாழையடி வாழையாக வளர்ந்து நிலைத்து வரும் குடிப்பெருமையை உயர்த்திடும் மக்கள் பேற்றைப் பண்டைத் தமிழர் மிகவும் விரும்பினர். கணவனும் மனைவியுமாக உரிமை பூண்டு வாழும் அன்பு வாழ்க்கையின் மணிமுடியாகத் திகழ்வது மழலைச் செல்வமாகும். குடிக்கு விளக்காகிய மழலையை ஈன்றெடுக்கும் மனைவி மிக உயர்வாகப் போற்றப் பெற்றாள். இதனை,

கடும்புடைக் கடுஞ்சூல் நம்குடிக்கு உதவி
நெய்யொடு இமைக்கும் ஐயவித்திரள் காழ்
விளங்கு நகர் விளங்கக் கிடந்தோள்[22]

என்னும் அடிகள் மூலம் உணரலாம். உறையூர்க்கதுவாய்ச் சாத்தனார் இயற்றிய இப்பாடலானது குடியின் பெருமையை உயரச் செய்யும் அரிய கடமையை ஆற்றியவள், ‘தலைவி’ என்று தலைவனும் தோழியும் பாராட்டியுரைக்கும் செய்தியை உரைக்கின்றது.

**மழலைச் செல்வத்தின் பயன்**

தலைவியை விட்டுப் பரத்தையர் பிரிந்த தலைவன் பரத்தையரை மறுமணம் செய்து கொள்ளச் சென்றபொழுது அவன் வீட்டு வாயிலில் விளையாடும் தன் புதல்வனைப் பார்த்து ஆரத்தழுவி வீட்டிற்குப் போகச் சொன்னான். அதைக் கேட்ட மகனோ அழுதான். அழுத அவனைத் தூக்கிக் கொண்டு இல்லின் உள்ளே சென்றான். இதனை நோக்கிய தலைவி இக்கொடிய மகன் இடையூறு விளைவித்துத் தந்தையை மனம் கலங்குமாறு செய்து விட்டான் என எண்ணி அடிக்கும் கோலுடன் அணுகினாள்.

உடனே தலைவன் தன் மகனை அணைத்துக்கொண்டு அவனை விட்டு நீங்கிச் செல்லவில்லை என்று நன்மக்களை பெறுவதால் அடையும் நன்மையினை,

இம்மை உலகத்து இசையொடும் விளங்கி
மறுமை உலகமும் மறுஇன்று எய்துப
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்மலோர் எனப்
பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்
வாயே ஆகுதல் வாய்த்தனம்[23]

என்னும் பாடல் விளக்குகிறது. நன்மக்களைப் பெறுவதால் இம்மை உலகத்தும் புகழை அடைந்து மறுமை உலகத்து குற்றமின்றி அடைவர் என்று சான்றோர் கூறிய சொற்கள் பொய்யாகவில்லை என்று மக்கட்பேற்றின் மாண்பினை மேற்கண்ட கருத்து விளக்கி நிற்கின்றது.

### மழலைச் செல்வத்தின் சிறப்பு

இல்லறத்தில் குழந்தைகள் இருப்பது என்பது மிகப்பெரிய மகிழ்ச்சியைத் தரும். தாய் தன் மகவைப் பார்த்து மகிழ்ந்து கூறும் சொற்களைத் தந்தை கேட்டு மகிழ்ச்சியுறுவர். பொருள்வயின் சென்று திரும்பி வரும் தலைவன் தேர்ப்பாகனிடம் தன் தலைவி புதல்வன் தூங்குமிடத்துச் சென்று எந்தையை வருக என்று கூறிக் கொஞ்சும் மொழியைக் கேட்டுத்தான் மகிழவேண்டும் என்று கூறுவதனை,

நடை நாட் செய்த நவிலாச் சீறடிப்
பூங்கட் புதல்வன் உறங்குவயின் ஒல்கி
வந்தீக, எந்தை! என்னும்
அம் தீம் கிளவி கேட்கம் நாமே[24]

என்னும் அடிகள் உணர்த்துகின்றன.

### பரத்தமை

சங்க காலத்தில் தமிழ் மக்களிடையே பரத்தமை ஒரு தொழிலாக நடைபெற்று வந்திருக்கிறது. பரத்தமை இன்றும் ஒரு தனித் தொழிலாக வளர்ச்சி அடைந்துள்ளது. அரசும் அதை அனுமதித்து வருகிறது. திருவள்ளுவர் பரத்தமையால் உண்டாகும் கேட்டினை,

பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டுஅறையில்
ஏதில்பிணம் தழீஇ யற்று[25]

என்று சாடுகிறார். பரத்தையோடு ஒருவன் கூடுவது இருட்டறையில் ஏதும் அறியாத பிணத்தைத் தழுவுவது போன்றதாகும் என்கிறார் திருவள்ளுவர். சங்க இலக்கியங்களில் பரத்தையர் குலத்தைச் சமுதாயம் ஒதுக்கவில்லை; மாறாக பரத்தையரின் இழிகுணங்களையும் அவரது வாழ்வு முறைகளையும் எடுத்தியம்புகின்றன.

அறுவகைப் பிரிவுகளில் பரத்தையர் பிரிவையும் ஒரு பிரிவாக கூறுகிறார் தொல்காப்பியர். இதனால் பரத்தமை ஒழுக்கம் சங்க காலச் சமுதாயத்தில் கூடா ஒழுக்கமாக நடைபெற்றிருந்தது என்பதை அறிய முடிகின்றது. கோவலன் கண்ணகியை மணந்திருந்தும் செல்வம் படைத்திருந்த காரணத்தால் மாதவியை அடைவதற்குச் சமுதாய அமைப்பு அவனுக்குத் துணைச் செய்ததும் கருதத்தக்கது. பரத்தையர் என்பவர் பொது மகளிர். இவர்கள் பொதுவாக ஆடல்பாடல்களில் சிறந்து விளங்கினர். “கணிகை, விலைக்கணிகை, விலை நலப்பெண்டிர், கொண்டி மகளிர், பரத்தை போன்ற பெயர்களாலும் இவர்கள் சுட்டப்படுவார்.”[26] இவர்கள் தம்மிடம் இன்பம் துய்க்க வந்த ஆடவரிடமிருந்து செல்வத்தைப் பெற்று வாழ்ந்தனர். இவர்கள் செல்வந்தர், அரசர் ஆகியோருடன் இன்ப வாழ்க்கை நடத்தினர். சங்க இலக்கியத்தில் மருதத்திணைப் பாடல்கள், மதுரைக்காஞ்சி, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்கள் இவர்கள் வாழ்வை எடுத்தியம்புகின்றன.

பரத்தையரைப் பிரிந்து வந்த தலைவனிடம் வாயில் மறுக்குமிடத்துத் தோழி, தலைவனே ‘பரத்தையரைக் குலமகளிர்போல் திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்தி மக்களைப் பெற்றாலும், அவர்களின் கொடிய மனதில் பொருள் கவரும் எண்ணமே மிகுந்திருக்கும். அவர்கள் பெற்ற மக்களும் நன்மக்கள் ஆகார். பரத்தையரும் கற்புடைய மகளிர் போல் வாழமாட்டார்’[27] என்று கூறுவதனை நற்றிணைப் பாடல் விளக்கி நிற்கிறது. இதனால் சங்க காலத்தில் பரத்தையருக்கு இருந்த நிலையினையும், குடிக்கு விளக்காகிய குழந்தைப் பேறு பரத்தையர்க்கு இல்லை; அது குலமகளிர்க்கே உரியதாக இருந்துள்ளது என்பதையும் உணர முடிகிறது.

இல்லற மகளிரை நோக்கும் பொழுது பரத்தையருக்கு சமுதாய மதிப்பு குறைந்ததாகவே இருந்துள்ளது. தலைவி மற்றும் தோழியர் பரத்தையரை இகழ்ந்துரைக்கும் செய்திகளைச் சங்கப்பாடல்களில் அதிகமாகக் காண முடிகின்றது.

எனினும் சில சமயங்களில் பரத்தையர் தலைவியை இகழ்ந்து வன்சொல்லால் சாடுவதனையும் ஐயூர் முடவனாரின் பாடல் மூலம் அறியமுடிகிறது.

பரத்தையர் ஒருத்தி, தலைவி தன்மேல் பழிகூறினாள் என்று கேள்வியுற்று அதனைப் பொறுக்க முடியாமல், 'செல்லூர் மன்னனாகிய ஆதன் எழினி என்பான் பகைவர் மீது எறியும் பழுதுபடாத வெண்மையான வேலினைத் தனது மார்பில் பெற்ற பெருங்களிறு அடையும் துன்பம் போல தலைவியும் துன்புற வேண்டும்'[28] என்று தலைவியின் சுற்றத்தினர் கேட்குமாறு இகழ்ந்துரைக்கின்றாள்.

**பரத்தையரின் இழிகுணம்**

பரத்தையர் வெண்பூக்களைச் சூடி, தொடிகளை வீசித் தெருவெங்கும் செல்வர். அவர்களுடைய வடிவழகை விரும்பிச் சேய்மை நாட்டவரும், அண்மையில் உள்ளாரும் வருவர். அவர்களிடம் பரத்தையர் வஞ்சனை உடைய பொய் வார்த்தைகள் கூறி முதலில் அழைத்துக் கொண்டுச் சென்று அன்புடையவர் போல் நடித்து அவர் செல்வமெல்லாம் அழியும்படி கவர்ந்து கொள்வர். 'அவர்களது வாழ்க்கைப் பூமலரும் காலமறிந்து நுகர்ந்து நீங்கும் வண்டின் வாழ்வினைப் போன்றது என்றும், பழுமரம் தேடிச் செல்லும் பறவையின் வாழ்வினைப் போன்றது'[29] என்றும் மதுரைக்காஞ்சி பரத்தையரின் இழிகுணங்களைக் குறிப்பிடுகின்றது.

**பரத்தையர் பிரிவுக்கான காலம்**

திருமணத்திற்குப் பின்னரே தலைவன் பரத்தையரை நாடிச் செல்கிறான். தலைவி கருவுற்ற நிலையிலும், மகப்பேற்றால் தலைவி இளமைநலம் குன்றியவளாகத் தலைவன் கருதிய நிலையிலும் பரத்தையர் நாட்டம் தலைவனுக்கு இருந்ததாகச் சங்கப் பாடல்கள் கூறுகின்றன. தலைவன் பரத்தையரைப் பிரிந்து மீண்டும் தலைவியிடம் சேர வருகின்றான். அப்பொழுது தலைவியின் ஊடலைத் தீர்க்கப் பாணனை அனுப்புகிறான். அப்பாணனிடம் தோழி, 'பாணனே, எமது தலைவியின் ஆடை நெய்யும் நறுமணப் புகையும் பிடித்தமையால் அழுக்குற்றது. அவளது உடம்பும் மாசுபட்டது. தலைவியின் தோளும், மார்பகமும் புதல்வன் பால் குடிப்பதால் முடைநாற்றம் வீசுகின்றன. ஆதலால் தூய்மையுடைய பரத்தையர் சேரிக்கே தலைவனைச் செல்லச் சொல் என்று இடித்துரைக்கின்றாள்.'[30] இதன் மூலம் தலைவியின் மகப்பேற்றின் பொழுது தலைவன் பரத்தையர் பிரிந்து செல்கிறான்

என்பதையும் பரத்தையருக்குக் குழந்தைப்பேறு கிடையாது என்பதையும் அறிய முடிகிறது.

**பரத்தையரின் நிலை**

உளங்கலந்த அன்பால் ஒருவனை மணந்து வாழும் இல்லறத் தகுதியில்லாத போதிலும், அவர்களிடம் உள்ள கலைச் சிறப்பால் மன்னர்கள் மதிக்கும் நிலையில் பரத்தையர் விளங்கியுள்ளனர். சிலப்பதிகாரம் காட்டும் மாதவியின் வாழ்வு இதற்கோர் எடுத்துக்காட்டாகும். சேற்றில் செந்தாமரை போல அவள் உளங்கலந்த ஒருவனோடு மட்டும் வாழ்ந்து மகப்பேறு எய்திச் சிறப்போடு இருந்த செய்தியைச் சிலம்பும் மேகலையும் சுட்டியுள்ளன.

கள்ளுண்ணல் கடியப் பெறாமலும், ஒதுக்கப்படாமலும் இருந்ததைப்போல பரத்தமையும் இயல்பான ஒன்றாகச் சங்க காலச் சமுதாயத்தில் கருதப்பட்டது. ஆடவரின் பரத்தை ஒழுக்கத்தால் குடும்ப வாழ்விற்கு இடையூறு வந்தபோது ஆடவரை இடித்துரைத்துத் திருத்தும் போக்கு காணப்படுகிறது. தலைவியும் தோழியும் தலைவனின் பரத்தையர் ஒழுக்கத்தைக் குற்றமாகக் கருதினர். தவறைக் கணவனிடமிருந்து நீக்க முயன்றனர். உடனுறைதலையே தலைவி விரும்பினாள். ஆயினும் பரத்தையர் சமுதாயம் சங்க காலத்தில் நிலைப்பெற்றே இருந்தது.

**பழக்கவழக்கம்**

பழக்கம், வழக்கம் என்னும் இரு சொற்களும் இக்காலத்தில் ஒரே சொல்லாகப் பயன்படுத்தப்பட்ட போதிலும் அவற்றிற்கு இடையே வேறுபாடு உண்டு. “பழக்கம் என்பது தனிமனிதனிடம் இயல்பாக வந்தமைந்த நடத்தையைக் குறிக்கும். பழக்கத்தின் தொடர்ந்த நிலையே வழக்காகும். வழக்கம் என்பது ஏற்புடைய சமூக நடவடிக்கை என்றும், குழுவிலுள்ள பலருடைய மனவெழுச்சி, உணர்ச்சி ஆகியவற்றுடன் இயைந்து நிற்பது”[31] என்றும் பாஸ்கல் கில்பர்ட் கூறுவார்.

இந்தப் பழக்க வழக்கத்தோடு தொடர்புடையது மரபு என்ற ஒன்றாகும். மரபு என்பது பாரம்பரியமாகத் தொடர்ந்து வரும் ஒரு சமுதாயக் கட்டுப்பாடாகும். பழக்கம், வழக்கம், மரபு என்ற மூன்றனுள் பழக்கம் என்பது தனிமனிதனைச் சார்ந்தது.

வழக்கம் என்பது சமுதாயத்தைச் சார்ந்தது. மரபு என்பது சமுதாயம் விதிக்கும் கட்டுப்பாடு ஆகும்.

தனிமனிதனும் சமுதாயமும் சேர்ந்து உருவாக்கிய பழக்க வழக்கங்கள் மரபாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன. இவை சமூகத்தின் குறிக்கோள்கள், தேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றுகின்றன. இதனடிப்படையில் சங்க காலச் சமுதாயத்தில் சில பழக்க வழக்கங்கள் தோன்றி அவை மரபாக நிலைப்பெற்று விளங்கிய செய்தியைச் சங்க இலக்கியங்களின் வாயிலாக அறிய முடிகின்றது. சங்க கால மக்களிடம் காணப்படும் பழக்கவழக்கங்கள், அவர்கள் வாழ்ந்த இயற்கைச் சூழலையும் சமுதாய அமைப்பையும் விளக்கி நிற்கின்றன.

**சுவரில் வெண் கடுகை பூசுதல்**

சோழநாட்டுப் புலவர்களின் பாடல்கள் வழி வெண்கடுகை சுவரில் பூசுதல், சிலம்பு கழிநோன்பு, சுவரில் கோடு இடுதல், சூளுரைத்தல், கைம்மைநோன்பு, இறந்தவரைத் தாழியில் அடக்கம் செய்தல், நடுகல் வழிபாடு ஆகிய பழக்கவழக்கங்களைக் காண முடிகிறது. 'மகளிர் மகவை ஈன்ற காலத்தில் நெய்யுடன் சிறுவெண்கடுகைக் கலந்து மனையெங்கும் பூசும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர்.'[32]

**சிலம்பு கழி நோன்பு**

திருமணத்தின்போது முதுபெண்டிர் நால்வர் மணப்பெண்ணை நோக்கி நின் கணவன் விரும்பும் விருப்பத்தை உடையவளாகுக எனக் கூறித் தலையில் நெல்லும் மலரும் தூவி வாழ்த்தும் வழக்கம் இருந்துள்ளது. திருமணத்தின்போது திருமணத்திற்கு முன் மணமகளது காலில் பெற்றோர்களால் அணிவிக்கப்பட்ட சிலம்பை நீக்கும் வழக்கமே சிலம்புகழி நோன்பு எனப்பட்டது. இதனை, அருங்கடி வியல் நகர்ச் சிலம்பும் கழியாள்[33] என்று குடவாயிற்கீரத்தனாரின் பாடல் தெரிவிக்கின்றது. உடன்போக்கு நிகழும்போது மட்டும் அச்சடங்கானது தலைவனது மனையில் நடைபெற்று வந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

**சுவரில் கோடு இடுதல்**

*தலைவி தலைவனுடன் கற்பு வாழ்க்கை மேற்கொள்ளும் பொழுது தலைவன் வினை காரணமாகப் பிரிவு மேற்கொள்வான். அவன் வரும் வரை ஆற்றியிருக்கும் தலைவி, தலைவன் வருவதாகக் குறித்த நாட்களைச் சுவரில் கோடுகளால் இட்டுக் குறித்துப் பின் அவற்றை ஒவ்வொன்றாகக் கழித்து அறியும் இயல்பு பண்டு இருந்துள்ளதை,*

ஆய்கோடு இட்டுச்
சுவர்வாய் பற்றும் நின்படர் சேண் நீங்க
வருவேம் என்ற பருவம் உதுக்காண்[34]

*என்னும் பாடல் உணர்த்துகிறது. இன்றும் கிராமப்புறங்களில் கல்வியறிவு இல்லாதோர் மற்றவருக்குக் கொடுக்கும் பால், தயிர் ஆகியவற்றின் கணக்கை சுவரில் கோடாக இட்டு கழித்து அறியும் வழக்கம் இருந்து வருகிறது.*

**சூளுரைத்தல்**

*சூளுரைத்தல் என்பது அக்காலம் முதல் இக்காலம் வரை எல்லா மக்களிடையேயும் இருந்து வரும் பழக்கவழக்கமாகும். மக்கள் தங்களைச் சாரந்தவருக்கோ, பிறருக்கோ செய்ய வேண்டிய செயலை உறுதியாகச் செய்வேன் என்று தெய்வத்தின் முன்னே கையில் அடித்து சூளுரைப்பர். இதனை,*

நேர் இறை முன் கை பற்றி
சூரர மகளிரோடு உற்ற சூளே[35]

*என்னும் அடிகள் விளக்குகின்றன.*

**திணை அறுவடை**

*வேங்கை மரம் மலரும் காலத்தில் திணைக் கதிர்களை அறுவடை செய்யும் பழக்கத்தை மேற்கொண்டனர் என்பதை,* நல்நாள் வேங்கையும் மலர்கமா[36] *எனவும்,* வேங்கையும் புலி ஈன்றன[37] *எனவும் குறிப்பிட்டுள்ளார்.*

**கைம்மை நோன்பு**

*சங்க கால சமுதாய அமைப்பில் கணவனை இழந்த மகளிர் உயிர் துறப்பர் அல்லது கைம்மை நோன்பு நோற்று வாழ்வர். இவர்கள் நெய்யற்ற நீர்ச்சோறு, எள்ளுத் துவையல், வேளைக்கீரை போன்ற சத்துக்குறைந்த உணவினையே உண்பர்.*

பாய் விரிப்பின்றி பரற்கற்களில் படுத்துறங்குவர். மறுமணம் செய்துகொள்ள மாட்டார். வாழ்க்கைத் தேவைகளுக்காக பருத்தி நூற்கும் தொழிலைச் செய்வர். மேலும் கூந்தலைக் களைந்து, மங்கல அணி, வளையல் முதலிய அணிகலன்களை நீக்கிக் கொள்வர். இதனை,

நிரைஇவண் தந்த நடுகல் ஆகிய
வென்வேல் விடலை இனிமையின் புலம்பி
கொய்ம் மழித் தலையொடு கைம்மையுறக் கலங்கிய
கழிகல மகடுஉப் போல[38]

என்று ஆவூர் மூலங்கிழாரின் பாடலும்,

கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி
அல்ல உணவின் மனைவியொடு[39]

என்று தாயங்கண்ணியாரின் பாடலும் உணர்த்தி நிற்கின்றன.

## தாழியில் அடக்கம் செய்தல்

இறந்தவரைத் தாழியில் அடக்கம் செய்வது சங்க காலத்தில் வழக்கமாக இருந்துள்ளது. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் இறந்த பொழுது கையறுநிலைப் பாடிய ஐயூர் முடவனார். 'தாழி செய்யும் குயவனை நோக்கி, சோழனை அடக்கம் செய்தற்கு நீ பெரிய தாழியைச் செய்ய விரும்பினால் நிலவட்டத்தையே சக்கரமாகவும் மேருமலையை மண்ணாகவும் கொண்டு செய்ய முடியுமோ என்று கேட்கும் நிலையை நோக்கும் பொழுது, இறந்தவரைத் தாழியில் புதைக்கும் வழக்கம் இருந்துள்ளது'[40] என்பதை அறிய முடிகிறது.

## நடுகல் வழிபாடு

சமுதாயச் சிறப்புமிக்க இயல்புகளைக் கொண்டிருந்தவர்களின் இறப்பிற்குப்பின் அவர்களது நினைவாக நடப்பட்ட கல் நடுகல் ஆகும். இந்நடுகல் வழக்கமும் சங்க கால மக்களிடம் இருந்துள்ளது. வீரத்தைப் போற்றும் பண்பும், ஆவி பற்றிய நம்பிக்கையுமே நடுகல் நடுவதற்கு அடிப்படையாயின. வீரத்தைப் பாராட்டுவதற்காகத் தோன்றிய நடுகல் வணக்கம் காலப்போக்கில் மனிதனின் பிற பண்புகளைப் பாராட்டும் நிலையிலும் அமைந்தது. நடுகல் எடுக்கும் வழக்கம் சங்க காலத்தில் ஆண்களுக்குரிய ஒன்றாகக் காட்டப்பட்டுள்ளது. இதனை,

ஒளிறேந்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவின் அல்லது
நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே[41]

என்னும் அடிகளும்,

நடுகல் பிறங்கிய உவல்இடு பறந்தலை
புன்காழ் நெல்லி வன்புல சீறூர்[42]

என்னும் அடிகளும் உணர்த்துகின்றன. சங்க காலத்தில் நடுகல் எடுக்கும் வழக்கத்தோடு அதனை வழிபடும் பழக்கமும் இருந்துள்ளது என்பதை அறியமுடிகிறது.

**நம்பிக்கைகள்**

நம்பிக்கைகள் சமூகத்தின் பண்பாட்டு மரபினை அறிவிப்பன. இவை மக்களால் உருவாக்கப்பட்டு மக்களால் செயல்படுத்தப்படுகின்றன. இவை சமூகத்தேவைகள் மற்றும் குறிக்கோள்களின் அடிப்படையில் தோன்றியவை. மனிதனின் தன்னல உணர்வும், சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன. நம்பிக்கைகள் பெரும்பாலும் மனிதனின் அச்ச உணர்வினை அடிப்படையாகக் கொண்டு தோன்றியவையாகவேக் காட்சித் தருகின்றன. "இயற்கையில் புதிரான செயல்களை உணர இயலாத போதும், மனித வாழ்வில் நிகழும் ஊறுகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத நிலையிலும் மனிதமனம் சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்ளுகின்றது. அவை நம்பிக்கைகளாக உருப்பெறுகின்றன"[43] என்பர். சங்க காலத்தில் நிலவிய இத்தகைய நம்பிக்கைகளைச் சங்க இலக்கியங்களின் வாயிலாக அறியலாம்.

**துறக்கம் - நிரையம்**

மனித உயிர்கள் இவ்வுலகில் வாழும் காலத்தில் ஆற்றும் நல்வினை, தீவினைகளுக்கேற்ப அவ்வுயிர்கள் முறையே துறக்கத்திற்கும், நிரையத்திற்கும் கொண்டு செல்லப்படுகின்றன என்ற நம்பிக்கை இருந்துள்ளதை இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. துறக்கம் என்பது சொர்க்கம்; நிரையம் என்பது நரகம் எனப் பொருள்படும். தாயங்கண்ணனார் தம் பாடலில் இந்நம்பிக்கை பற்றிக் கூறுவதனை,

வேயொழுக்கன்ன சாயிறைப் பணைத்தோட்
பெருங்கவின் சிதைய நீங்கி யான்றோர்

அரும் பெறலுலக மமிழ்தோடு பெறினும்

சென்று தாம் நீடலோ விலரே[44]

என்னும் அடிகள் விளக்குகிறது. அமிழ்தம் இருக்கக் கூடிய தேவலோகமே கிட்டினும், அதை எதிர்பாராமல் தலைவன் விரைந்து வருவான் என்று தோழி தலைவியிடம் கூறும் பொழுது சுவர்க்கம் என்னும் உலகம் இருக்கின்றது என்ற நம்பிக்கை சங்க காலத்தில் இருந்தமையை உணரமுடிகிறது. மேலும் புலவர் பாடும் புகழுடையோர் சுவர்க்கம் புகுவர் என்ற கருத்து நிலவியதை,

புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்

வலவன் ஏவா வான ஊர்தி

எய்துப என்ப[45]

என்னும் அடிகளின் மூலம் சொர்க்கம், நரகம் என்ற நம்பிக்கை இருந்ததை அறிய முடிகிறது.

**வேங்கைப் புலிப்பூசல்**

வேங்கை என்பது மரம், புலி ஆகிய பெயர்களைக் குறித்து வருகின்ற சொல்லாகும். எனினும் அது பெரும்பாலும் வேங்கை என்ற மரத்தைக் குறிப்பதற்காகவே பயன்படுத்தப்பட்டது. புலிப்பூசல் என்பது வேங்கை மலர் கொய்யும் சிறுவர் சிறுமியர் புலி புலி என்று கூவி அம்மரத்தை அச்சுறுத்தினால் அது தாழ்ந்து வளைந்து கொடுக்குமென நம்பிக்கை பண்டைத் தமிழரிடம் இருந்துள்ளது. உண்மைப் புலி பூசலும் வேங்கைப் புலி பூசலும் ஒத்த நிலையினவாக இருந்தமையை,

கருங்கால் வேங்கை யிருஞ்சினைப் பொங்கர்

நறும்பூக் கொய்யும் பூசல் இருங்கேழ்

ஏறடு வயப்புலிப் பூசலொடு அனைத்தும்

இலங்கு வெள் அருவியொடு சிலம்பகத்து இரட்ட[46]

எனக் காட்டுவதிலிருந்து இந்நம்பிக்கை சங்க காலத்தில் உலவியமைமயை அறியமுடிகிறது.

**பாம்புமிழ் மணி**

நாகப்பாம்பு பற்றிய பல செய்திகள் தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. அவற்றில் பாம்பு இடிக்கு அஞ்சும்; இடி பாம்பின் தலையில் விழுந்து தலையைத் துண்டிக்கும்; இரவில் மணியை உமிழ்ந்து அதன் ஒளியில்

இரைதேடும் என்ற செய்திகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. இத்தகைய செய்திகளில் கற்பனை கலந்துள்ளதெனினும் இவை அக்கால மக்களின் நம்பிக்கையின் அடிப்படையிலேயே தோன்றியுள்ளது. இந்நம்பிக்கையை,

போர் மலைந் தொருசிறை நிற்ப யாவரும்
அரவுமிழ் மணியிற் குறுகார்
நிரைதார் மார்பனின் கேள்வனைப் பிறரே[47]

என்னும் அடிகள் தெரிவிக்கின்றன. பாம்பு உமிழ்கின்ற மணியின் அருகே யாரும் செல்லமாட்டார்கள்.

## வேழமுத்து

யானையின் பல்லாகிய தந்தத்தில் முத்துப் பிறக்கும் என்ற நம்பிக்கையும் சங்க காலத்தில் இருந்துள்ளதை அறியமுடிகின்றது. உறையூர் மருத்துவன் தாமோதரனார் என்னும் புலவர் தம் பாடலில் இக்கருத்தைச் சுட்டியுள்ளதை,

சிறுகண்யானை வெண்கொடு பயந்த
ஒளிதிகழ் முத்தம் விறலியர்க் கீத்து[48]

என்னும் அடிகள் மூலம் உணரலாம்.

## ஏழு என்ற எண்ணின் சிறப்பு

பழந்தமிழ் இலக்கியங்களில் ஏழு என்ற எண் மிகுதியாக இடம்பெற்றுள்ளது. இவ்வெண்ணை நன்மை பயக்கும் எண்ணாகக் கருதும் வழக்கம் உலகின் பல நாடுகளிலும் உள்ளது. இவ்வெண் சிறப்புப் பெறுவதற்கு விண்கோள்கள் அடிப்படையாக அமைந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. சான்றாக இன்று வழக்கில் இருக்கும் ஏழு நாட்களைக் கொண்ட வாரமுறையில் அடங்கியுள்ள நாள்கள் விண்கோள்களின் அடிப்படையிலேயே பெயர் பெற்றுள்ளன. இதிலிருந்து இவ்வெண் நம்பிக்கையின் அடிப்படையிலேயே சிறப்புப் பெற்றுள்ளது என்பது புலனாகின்றது. சங்க இலக்கியத்தில் இவ்வெண் சிறப்புப் பெற்றுள்ளதைப் பல பாடல்கள் காட்டுகின்றன.

புலவரை நாடிச் சென்ற இரவலரைக் கரிகால் பெருவளத்தான் ஓம்பிய திறத்தினை முடத்தாமக் கண்ணியார் எடுத்துரைக்கும் பொழுது,

பால்புரை புரவி நால்குடன் பூட்டிக்

காலின் ஏழடிப் பின் சென்று கோலின்

தாறு களைந்து 'ஏறு' என்று ஏற்றி[49]

என்று சுட்டுகிறார். இங்கு ஏழடி பின்சென்று வழிநடத்திய செய்தி நம்பிக்கை வழக்காகக் கருதப்படுகிறது.

ஏழு என்ற எண் போலவே அதன் பெருக்கற் தொகைகளும் நம்பிக்கையாகக் கருதப்பட்டுள்ளதை,

மெய்யன்ன பொய் உணர்ந்து

பொய் ஓராது மெய் கொளீஇ

மூவேழ் துறையும் முட்டு இன்று போகிய

உரைசால் சிறப்பின் உரவோர் மருக[50]

என்னும் அடிகள் உணர்த்துகின்றன. இவற்றை நோக்கும் பொழுது ஏழு என்ற எண் விண்கோள்களின் அடிப்படையில் சிறப்புப் பெற்று நம்பிக்கையின் அடிப்படையில் இலக்கியத்தில் பயின்று வந்துள்ளதாகத் தெரிகிறது.

**நிமித்தங்கள்**

நிமித்தம் என்பது வாழ்வில் பின் நிகழவிருக்கும் நன்மை தீமைகளைச் சில குறியீடுகளின் வாயிலாக முன் உணர்த்துவதாகும். இது 'சகுனம்' என்று இன்று வழங்கப்படுகிறது. பழங்காலத் தமிழர் இதனைப் புள்நிமித்தம் என்ற சொற்களால் சுட்டியுள்ளனர். வருங்கால நிலைமைகளை முன்னறிவிக்கும் அறிகுறியாக நிமித்தங்களை மக்கள் கருதியதைப் பண்டுதொட்டு இன்று வரையுள்ள சமூகங்களின் வாழ்வியல் கூறுகள் உணர்த்தி நிற்கின்றன.

நிமித்தங்கள் நம்பிக்கையின் பாற்பட்டன. இயற்கை நிகழ்வுகளுக்கும் மனிதனின் செயல்களுக்கும் தொடர்பு உண்டு என்ற கருத்தோட்டத்தின் அடிப்படையில் அவை நம்பப்படுகின்றன. நிமித்தங்கள் பொதுவாக அச்சத்தின் அடிப்படையில் தோன்றிப் பாதுகாப்புணர்வின் அடிப்படையில் வளர்க்கப்பட்டனவாகக் காட்சி தருகின்றன. தீமைகளிலிருந்து மனிதன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும் வாழ்வியலில் சில நிலைமைகளை நிச்சயிப்பதற்கும் இவை மக்களால் தொன்றுதொட்டு நம்பப்பட்டு வருகின்றன.

நிமித்தங்கள் பெரும்பாலும் மனித மனம் முடிவெடுக்க இயலாத சூழ்நிலையில் தோன்றுவனவாகக் காட்சி தருகின்றன. செயல்களில் நிகழும் நன்மை தீமைகளை நிச்சயிக்கும் வகையில் அவை நன்னிமித்தம், தீநிமித்தம் எனப் பகுக்கப்படுவதுண்டு. நிமித்தம் என்ற சொல்லாட்சி தொல்காப்பியத்தில் காணப்படுவதை,

அச்சமும் உவகையும் எச்சம் இன்றி
நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்[51]

என்ற நூற்பா காட்டி நிற்கிறது. நிமித்தங்களை அறிந்து உணர்த்துவோர் நிமித்தகர் எனப்பட்டனர். இவர் காலத்தையும் நிமித்தங்களையும் கணித்து உணர்த்துபவர்களாக அமைந்து கணிகர் என்ற சிறப்புப் பெயருக்கு உரியவராயினர்.

**விரிச்சி கேட்டல்**

சங்க காலத்தில் போருக்குச் செல்லும் மறவர்கள் விரிச்சி எனனும் நற்சொல் கேட்கும் பழக்கத்தைக் கடைப்பிடித்தனர். இதனைத் தொல்காப்பியர், படையியங்கு அரவம் பாக்கத்து விரிச்சி[52] எனப் புறத்திணையியலில் துறை வகுத்துள்ளார்.

ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன்னர் பிறர் கூறும் சொற்களைச் சகுனமாகக் கொள்ளும் வழக்கம் பண்டுதொட்டே இருந்தன. விரிச்சி கேட்டல் என்பது அகம், புறம் என இரு மரபுகளிலும் பயின்று வந்துள்ளது. இதனை வாய்ப்புள் எனவும் சுட்டுவதுண்டு. இது நன்னிமித்தம் உணர்த்தும் பாங்கில் பயின்று வந்துள்ளதைச் சங்கப் பாடல்களில் காணமுடிகின்றது. நப்பூதனார் முல்லைப்பாட்டில் நற்சொல் கேட்கும் வழக்கத்தைப் பதிவு செய்திருக்கிறார்.

பிரிந்து சென்ற தலைவன் குறித்த பருவத்தில் வாராமையால் தலைவி துயரத்தில் ஆழ்கிறாள். தோழியரின் ஆறுதல் மொழியைத் தலைவியின் செவிகள் ஏற்கவில்லை. அவள் துன்பத்தைப் போக்க 'வயதில் முதிர்ந்த பெண்கள் ஊரின் வடக்கு எல்லையில் சென்று நெல்லொடு நாழியின் கண் உள்ள மலரையும் தூவி தலைவன் விரைவில் வருவானா மாட்டானா என்ற குறிக்கொண்ட உள்ளத்தோடு தெய்வத்தைத் தொழுது நின்றனர். அப்பொழுது தாயின் வருகைக்காக ஏங்கி நிற்கும் கன்றினைப் பார்த்து ஆயர் சிறுமி உன் தாய் விரைவில் வந்து விடுவாள் என்று கூறுகின்ற மொழியைக் கேட்டு வந்து தலைவியிடம் கூறுகின்றனர். இச்செய்தியை முல்லைப்பாட்டு வாயிலாக அறிய முடிகிறது.'[53] வாய்ப்புள், விரிச்சி, நற்சொல்

என்பன ஒரு பொருட் கிளவிகள் ஆகும். நப்பூதனர் அச்சொற்களோடு 'நன்னர் நன்மொழி' என்ற புதிய சொல்லாட்சியையும் அறிமுகம் செய்திருக்கிறார்.

**புள்ளும் ஓராம், விரிச்சியும் நில்லாம்**
**உள்ளலும் உள்ளாம் அன்றே**[54]

என்னும் பாடலில் தலைவன் பொருட்டு, நற்சொல் கேட்பதற்குச் சென்று நிற்கமாட்டோம் என்று தலைவி கூறுமிடத்து நற்செயலுக்காக 'விரிச்சி' கேட்கும் நிமித்தத்தைப் பண்டைத் தமிழர்கள் மேற்கொண்டிருந்த நிலையினை உணரமுடிகிறது.

**உன்னம்**

உன்னம் என்பது ஒரு வகை மரமாகும். இம்மரம் நிமித்தம் காண்பவர்க்கு வெற்றி கிடைப்பதாயின் தழைத்தும், தோல்வியுறுவதாயின் கரிந்தும் காணப்படும். பின் விளைவுகளை முன் உணர்த்தும் மரமாக இம்மரம் சங்க காலத்தில் கருதப்பட்டது. சோழநாட்டுப் புலவர் பாடிய பாடலிலும் இத்தகையதோர் மரம் பற்றிய தீ நிமித்தக்குறி குறிக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. கோவூர் கிழார் பாடிய புறநானூற்றுப் பாடலொன்றில் வற்றிய மரம் தீப்பற்றிய நிலை தீநிமித்தக் குறியாகக் குறிக்கப்பட்டுள்ளதை,

**வேண்டிடத்து அடூஉம் செல்போர்வேந்தே!**
**திசையிரு நான்கும் உற்கம் உற்கவும்**
**பெருமரத்து இலைஇல் நெடுங்கோடு வற்றல் பற்றவும்**
**வெங்கதிர்க் கனலி துற்றவும் பிறவும்**[55]

என்ற வரிகளில் காணமுடிகிறது.

**கூகை**

பறவைகளில் ஆந்தை இனப்பறவைகள் தீநிமித்தங்களை அறிவிக்கும் கருவிகளாகச் செயல்பட்ட நிலையினை இலக்கியச் சான்றுகளில் அதிகமாகக் காணமுடிகிறது. "சங்க இலக்கியத்தில் ஆந்தை இனப்பறவைகளாக ஐந்துவகைப் பறவைகள் கூறப்பட்டுள்ளதாகவும் அவை கூகை, குரல், குடிஞை, ஊமன், ஆண்டலை என ஐவகைப்படும் என்பர்."[56] மேற்கூறிய ஐந்து வகைப் பறவைகளில் கூகையே தீ நிமித்தக் கூறாகப் பல பாடல்களில் சுட்டப்பட்டுள்ளது.

கூகையானது மரப்பொந்தில் வாழும். இது வளைந்த வாயையும், குடுமியையும் அழல் போன்ற கண்ணையும் உடையது. இல்லத்தில் வாழும் எலியை விரும்பியுண்ணும். இக்கூகை பேய்கள் உலவும் நடு இரவில் அஞ்சும்படிக் குழறும் தன்மை உடையது. இக்கூகையைப் பற்றிய குறிப்பை மதுரைக்காஞ்சியின் கீழ்க்கண்ட அடிகள் காட்டுகின்றன.

நெடுநகர் வீழ்ந்த கரிக்குதிர்ப் பள்ளிக்
குடுமிக் கூகை குரலொடு முரல்[57]

எனவும்,

களரி பரந்து கள்ளி போகிப்
பகலுங் கூவும் கூகையொடு பிறழ்பல்
ஈம விளக்கின் பேஎய் மகளிரொடு
அஞ்சு வந்தன்றுஇம் மஞ்சுபடு முதுகாடு[58]

என்னும்அடிகள் தெரிவிக்கின்றன.

**விலங்கு**

விலங்குகளில் யானை, குதிரை, எருது, மறி ஆகியவற்றின் இயல்பல்லாத நிலைகள் தீநிமித்தக் குறிகளாகச் சுட்டப்பட்டிருக்கின்றன. கனவில் கோட்டுமா ஊர்தலை தீநிமித்தமாகச் சங்க கால மக்கள் கருதியதை,

களிறு மேல் கொள்ளவுங் காழகம் நீப்பவுங்
வெள்ளி நோன்படை கட்டிலொடு கவிழவும்
கனவின் அரியன காணா நனவிற்[59]

என்ற அடிகள் சுட்டுகின்றன. இதனைச் சிலம்பும்,

நாறுஐங் கூந்தல் நடுங்கு துயர் எய்தக்
கூறை கோள் பட்டுக் கோட்டுமா ஊரவும்[60]

என்று உணர்த்துகிறது. நிமித்தக்கூறுகள் பெரும்பாலும் மக்கள் வாழ்வியலின் சுற்றுப்புற சூழ்நிலைகளுக்குத் தக்கவாறு அமைகின்றன. புறநானூற்றுப் பாடலில் மன்னனது கனவில் அவனது இன்றியமையாத கூறுகளுக்கு ஊறு நேர்வதாகவும் சிலம்பில் ஆயரின் பயன்படு பொருள்களின் வழி ஊறு நேர்வதாகவும் அமைக்கப்பட்டுள்ளன. நிமித்தக் கூறுகள் மக்கள் வாழ்வியலின் அடிப்படையில் தோன்றி வளர்ந்தமைக்கு இவை சான்றுகளாகும்.

**வெள்ளி**

*வானில் கண்ணிற்குத் தெரிந்தும் தெரியாததுமான கோள்கள், விண்மீன்களின் செயற்பாட்டுக் காட்சிகள் மனிதனுக்கு அச்சத்தை விளைவித்த நிலையில் அவை மனிதனின் கவனத்திற்கு ஆட்பட்டுச் சில கற்பிதங்களை உருவாக்கக் காரணமாக அமைந்தன. அவற்றின் செயற்பாடுகள் வாழ்வுகளின் நிகழ்வுகளோடு இயைத்து நோக்கப்பட்ட நிலையில் அவை நிமித்தக் கூறுகளாகக் கருதப்பட்டன. இந்நிலையில் வானில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கும் உலகில் வாழும் மக்களின் உள்ளத்திற்கும் மிகவும் நெருங்கிய தொடர்புண்டு என்ற வானியல் கொள்கை உருவாகியது. இக்கொள்கையே சோதிட வல்லாரின் கணிப்புக்குக் காரணமாய் அமைந்து இவை மனிதனது கவனத்தை ஈர்த்து நிமித்தங்களைப் படைத்துக் கொள்ளக் காரணமாயின. சங்க இலக்கியங்களில் காணப்படும் இவ்விண் நிகழ்வுகளில் தீநிமித்தக் கூறுகளே அதிகமாகக் காணப்படுகின்றன.*

*தமிழிலக்கியத்தில் வெள்ளி என்று அழைக்கப்படும் கோள் இப்பொழுது சுக்கிரன் என்று அழைக்கப்படுகிறது. இது வெள்ளை நிறமுடைய கோள் ஆதலால், வெள்ளி எனக் காரணப் பெயர் பெற்று விளங்குகிறது. இது காலையில் அல்லது மாலையில் கண்ணுக்குத் தென்படும். வெள்ளி கிழக்கே உதிக்குமானால் இரவு விடியும் என்று நம்புகின்றனர். வெள்ளிக் கோளின் இயக்கத்தைத் தமிழர்கள் கூர்ந்து கவனித்துள்ளனர் என்பதை இலக்கியங்களிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது.*

*வெள்ளியின் போக்கினை வைத்து நாட்டின் வாழ்வும் வீழ்வும் முன்னரே அறியப்பட்டது. வெள்ளித் தென்திசையில் முளைத்தால் நாட்டில் மழை பொய்த்து வறட்சி தோன்றும் என்பதைச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. இதனை,*

அலங்குகதிர் கனலி நால்வயின் தோன்றினும்
இலங்கு கதிர் வெள்ளி தென்புலம் படரினும்[61]

*என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன.*

*கோவூர் கிழார் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனின் கொடைத் திறத்தினைப் பாராட்டும் பொழுது வெள்ளி என்னும் சுக்கிரனைப் பற்றிய குறிப்பினைத் தருகின்றார். 'கீழ்த்திசையில் நிற்கும் சுக்கிரன் மேற்றிசைக்குச் சென்றாலும், மேற்றிசையில் இருந்து கீழ்த்திசைக்குச் சென்றாலும், வடதிசையிலிருந்து*

தென் திசைக்குச் சென்றாலும், தென் திசையிலேயே பலநாள் இருந்தாலும், வெள்ளியாகிய விண்மீன் எங்கு நிற்பினும் வேண்டுவனவற்றைக் கிள்ளி வளவன் வழங்குவான்'[62] என்று புறநானூறு கூறுகின்றது. இத்தகைய நிலையினை நோக்கும்பொழுது தமிழர்கள் வெள்ளி என்னும் சுக்கிரன் மீது கொண்ட நிமித்தக் குறியும், புலவர்களின் வானவியல் அறிவும் வெளிப்படுகிறது.

**நாளும் பொழுதும்**

நாளும் கோளும் பார்த்து வினைகளாற்றுவது உலகின் எல்லாப் பகுதி மக்களிடமும் நிலவியதனை வரலாறுகள் உணர்த்துகின்றன. பழந்தமிழர் திருமணம் முதற்கொண்டு எல்லாவிதமான நற்காரியங்களையும் நன்னிமித்தம் பார்த்தே நிகழ்த்தியுள்ளனர். வேங்கை மலரும் இளவேனிற்காலமும் அதிகாலை நேரமும் திருமணம் நிகழ்த்துவதற்குரிய வேளையாகச் சங்க காலத் தமிழர் கூறியுள்ளனர். சோழநாட்டுப் புலவரின் பாடல் வழி இச்செய்தியானது இடம் பெற்றுள்ளதை,

> **கணையிரு ளகன்ற கவின்பெறு காலை**
> **கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கள்**
> **கேடில் விழுப் புகழ் நாள்தலை வந்தென[63]**

என்னும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகி திருமணம் நல்ல நாளில் நடைபெற்றதை,

> **இரு பெருங் குரவரும் ஒரு பெரு நாளான்**
> **மணவணி காண மகிழ்ந்தனர்[64]**

என்ற அடிகளானது எடுத்துக்காட்டுகிறது. இன்றும் நல்ல காரியங்கள் அனைத்தும் நல்ல நாளிலும் நல்ல நேரத்திலும் நடப்பதைக் காணலாம்.

**திருமண முறை**

தமிழ்ச் சமுதாயம் முன்னேற்றம் அடையாத காலத்தில் எத்தகைய திருமணச் சடங்கும் நடைபெறவில்லை. அப்பொழுது ஆணும் பெண்ணும் யாருமின்றி தாமே கூடிக் குடும்பம் நடத்தியுள்ளனர். பின் சமுதாயம் ஒழுங்குற்று அதன் பல்வேறு குலப்பிரிவுகள் தொழிலடிப்படையில் தோன்றின. சில வரையறைகளைச் சமுதாயத்தினர் மேற்கொண்டு திருமண முறையை ஏற்படுத்தியிருக்க வேண்டும். தொல்காப்பியரும் இதனை,

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப[65]

என்று சுட்டுகின்றார்.

**சங்க காலத் திருமணம்**

சங்க காலத்தில் நடந்த திருமண முறைப்பற்றி சோழநாட்டுப் புலவரான நல்லாவூர் கிழாரின் பாடல் தெரிவிக்கின்றது. திருமணத்தின் போது நிகழ்த்தப்பட்ட சடங்குகளாவன:

1. திருமணத்திற்குத் திங்களும் உரோகிணியும் கூடிவரும் நாளில் காலை நேரத்தைத் தேர்ந்தெடுத்தல்
2. புள் நிமித்தம் பார்த்து மணவினை ஆற்றத் தொடங்குதல்
3. கடவுளை வணங்கிப் பின் செயலாற்றுதல்
4. திருமணம் பெண் வீட்டில் நிகழ்த்தல்
5. பந்தரில் புதுமணல் பரப்புதல்
6. விளக்கேற்றுதல்
7. திருமண முழவு ஒலித்தல்
8. மங்கல நீராட்டல்
9. கலிங்கம் உடுத்துதல்
10. நெல்லும் நீரும் சொரிந்து மங்கல மகளிர் வாழ்த்துதல்
11. திருமணத்திற்கு வந்தோர்க்கு உணவு படைத்தல்.

ஆனால் தாலி அணிதல் பற்றிய குறிப்பு இல்லை. எனினும் நன்மக்களைப் பெற்ற முதுமகளிர் நால்வர்கூடி நின்று தலைவியைக் கற்பில் இருந்து வழுவாது நல்ல செயல்கள் பலவற்றிலும் உதவியாக இருந்து உன்னை மனைவியாகப் பெற்ற உன் கணவனைப் பேணிக் காக்கும் பெரு விருப்பத்தை உடையவளாகுக எனக் கூறி வாழ்த்தி வதுவை மணத்தை முடித்துள்ளனர். 'இத்திருமண முறையினையே விற்றூற்று மூதெயினனார் என்னும் புலவரும் தம் பாடலில் விளக்கியுள்ளார்.'[66] மேற்கூறிய இத்திருமண சடங்குகள் யாவும் இப்பொழுதும் நடைபெற்று வருகின்றன. இருப்பினும் சங்க காலத்தில் திருமணம் நிகழ்தல் பெண் வீட்டில் நடைபெற்றுள்ளது. இக்காலத்தில் பெரும்பான்மையாக மணமகன் வீட்டில் தான் திருமணம் நடைபெறுகிறது. சில சமயங்களில் பெண் வீட்டிலும் நிகழ்கிறது. பண்டைச்

சான்றோர்கள் ஒன்றுகூடி நடத்திய இத்திருமண முறையைத் தவிர, சங்காலத்தில் தலைவனும் தலைவியும் உடன்போக்கின் போதும் திருமணம் செய்து கொண்ட நிலையினைக் காணமுடிகிறது.

வளஞ்சான்ற தந்தையின் பெரிய இல்லத்தில் சான்றோர் மணம் செய்விக்கின்ற மண விழாவில் என்மகள் பலரறிய மணம் செய்ய விரும்பவில்லை. சிறிதும் அச்சமின்றித் தான் முன் அறியாத நாடுபல கடந்து சிலம்பு கழித்துத் தலைவனை மணம் செய்து கொண்டது கொடுமையிலும் கொடுமை என்று செவிலி புலம்புவதை,

**சிறுவன் கண்ணி சிலம்பு கழீஇ**
**அறியாத் தேஎத்தள் ஆகுதல் கொடிதே**[67]

என்று குடவாயிற்கீரத்தனாரின் பாடல் விளக்கி நிற்கின்றது.

**மகளிர் நிலை**

சங்க காலத்தில் மகளிர் சமுதாய மதிப்பினை நன்கு பெற்றிருந்தனர். சங்க காலப் பெண்கள் பற்றி, "பெண் கல்வி கற்கும் உரிமையையும், கவிபாடும் உரிமையையும், காதல் களவு செய்யும் உரிமையையும் காதலனை இடித்துரைக்கும் உரிமையையும், இல்லறத் தொழில் உரிமையையும் ஆடவர்க்கு நிகராகப் பெற்றிருந்தனர்"[68] என்று வ.சுப.மாணிக்கம் குறிப்பிடுகிறார்.

**கல்வி கற்கும் உரிமை**

ஒரு சமுதாயம் சீருடனும் சிறப்புடனும் விளங்குவதற்கு ஆணும், பெண்ணும் நிகராக மதிக்கப்படவேண்டும். பெண்கள் கல்வி கற்கும் உரிமை பெறவேண்டும் என இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. சோழநாட்டுப் பெண்கள் கல்வி கற்று வாழ்ந்ததை அறிய முடிகிறது. சோழநாட்டுப் பெண்களில் ஆதிமந்தி, வெண்ணிக் குயத்தியார் போன்ற ஐவர் புலவராக திகழ்ந்தமை இதற்குச் சான்றாகும். மேலும் இவர்கள் இசைக்கருவிகளை வாசிப்பதிலும் நடனம் ஆடுவதிலும் சிறந்து மன்னர்களைக் களிப்பூட்டினர் என்பதை,

**மண் அமை முழவின் பண் அமை சீறியாழ்**
**ஒண் நுதல் விறலியர் பாணி தூங்க**[69]

என்ற பாடல் அடிகளால் உணரலாம். சிறப்பாகப் பாடப்பட்ட பாடினிக்குக் கரிகாலன் பொன்னரிமாலையும், முத்து மாலையும் வழங்கியுள்ளான் என்ற குறிப்பும்

காணப்படுகிறது. கல்வி கற்றலிலும் கலையை வளர்ப்பதிலும் சோழநாட்டுப் பெண்கள் சிறந்திருந்தாலும், காதலனோடு களவு வாழ்க்கை மேற்கொள்ளும்பொழுது அவர்கள் இற்செறிக்கப்பட்ட நிலையினையும் காணமுடிகிறது.

**இற்செறிப்பு**

களவுக் காலத்தில் மகளிர் களவு வெளிப்பட்டவுடன் அவர்கள் அன்னையால் இற்செறிக்கப்பட்ட செய்தியைக் காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனாரின் பாடல் தெரிவிக்கின்றது.

தலைவனின் அன்பால் தலைவியின் உடலிலும் மனத்திலும் தோன்றிய வேறுபாடுகளால் அன்னைக்கும் ஊராருக்கும் தெரிந்து அவள் இற்செறிக்கப்பட்டாள். ஆதலால் தலைவனே நயந்தோர் துன்பத்தைத் தீர்க்கும் பண்பினை உடைய நீ தலைவியை விரைவாக மணந்து கொள் என்று தோழி கூறுவதை,

நயந்தோர் புன்கண்தீர்க்கும்
பயம் தலைப்படா அப்பண்பினை எனினே[70]

என்னும் அடிகள் விளக்குகிறது. இதனால் களவுக் காலத்தில் பெண் இற்செறிக்கப்பட்ட நிலையினை உணர முடிகிறது.

**செல்வச் செழிப்பு**

செல்வம் நிறைந்த வீட்டின் அகன்ற முற்றத்தில் பெண்கள் நெல்லை உலர வைக்கின்றனர். அப்பொழுது நெல்லைத் தின்னவரும் கோழியைத், தங்கள் காதுகளில் அணிந்திருக்கும் மகரக் குழையினைக் கழற்றி வீசியெறிந்து விரட்டுகின்றனர். அக்குழையானது அவர்தம் இல்லத்தில் புதல்வர் உருட்டி வரும் சிறுதேரின் ஓட்டத்தைத் தடுத்து நிறுத்தும். இதனை,

கோழி எறிந்த கொடுங்கால் கனங்குழை
பொற்காற் புதல்வர் புரவி இன்று உருட்டும்
முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும்[71]

என்னும் அடிகள் உணர்த்துகின்றன. இத்தகைய நிலையினை நோக்கும்போது சோழநாட்டு மகளிர் குறையாத செல்வத்தைப் பெற்று நிறைவான வாழ்வு வாழ்ந்துள்ளமையை உணர முடிகிறது.

**வீரமகளிர்**

சோழநாட்டுப் பெண்கள் மறக்குடி மகளிராகவும் விளங்கியுள்ளனர். வீரத்தில் சிறந்து விளங்கும் பெண்டிரை 'மூதின் மகளிர்' என்றழைத்துள்ளனர். வீரம் மிகுந்த மகளிரைப் பாடுவது மூதின் முல்லைத் துறையாகும். இதனை,

> அடல்வேல் ஆடவர்க்கு அன்றியும் அவ்வில்
> மடன்வரன் மகளிர்க்கு மறமிகுத்தன்று[72]

என்று புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடுகிறது.

போர்க்களத்தில் பகைவன் எறிந்த வேல் தன் கணவன் மார்பில் ஊடுருவிச் சென்றது. அந்த வேலைப் பெயர்த்து வலிமை படைத்தவனான என் தலைவன் ஓங்கிச் செலுத்தியவிடத்து பகைவரின் களிறுகள் அச்சமுற்று ஓடின என்று மறக்குடி மகள் ஒருத்தி தன் கணவனின் வீரச் செயலைக் கண்டு பெருமிதம் அடைந்த நிகழ்ச்சியை,

> உளங்கழி சுடர்ப்படை யேந்தீ நம் பெருவிறல்
> ஓச்சினன் உரந்தகாலை மற்றவன்
> புன்றலை மடப்பிடி நாணக்
> குஞ்சரமெல்லாம் புறக் கொடுத்தனவே[73]

என்று கோவூர் கிழாரின் பாடல் விளக்குகின்றது.

**பண்பு நலன்**

பட்டினப்பாலையில் கடியலூரர் உருத்திரங்கண்ணனார், தலைவன் கூறும் கூற்றாக,

> முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
> வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய
> வாரேன் என் நெஞ்சமே[74]

என்று பாடியதைக் காணும்பொழுது, சோழநாட்டு மகளிரின் பண்பிற்கும், அன்பிற்கும் நிகரானது எதுவும் இல்லை என்பதை அறிய முடிகிறது.

**அரசர்**

சங்க காலத்தில் மக்களின் உயிர்நாடியாக விளங்கியவன் அரசன். மக்களும் மன்னனே உயிர் எனக் கருதி வாழ்ந்துள்ளனர். மன்னனும், அறநெறியையே முதன்மையாகக் கொண்டு ஆட்சி செய்துள்ளான். மன்னனைச் சுற்றியிருக்கும்

சான்றோர்களும், அரசனை நல்வழிப்படுத்தி சிறந்ததொரு ஆட்சி செய்யவேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்துள்ளனர். அரசர்களின் வாழ்வுதனைப் புலவர்களால் நல்வழிப்படுத்தல், அறிவுறுத்தல், மானம் பெரிதென எண்ணுதல், முரசின் சிறப்பு, வீரச்சிறப்பு ஆகிய நிலைகளில் காணலாம்.

**நல்வழிப்படுத்தல்**

சங்க காலச் சான்றோர்கள் மன்னர்களின் குணநலன்களைப் பாராட்டுவதோடு அவன் ஆட்சி செய்யும் முறையை நல்வழிப்படுத்தியுள்ளனர். சோழன் நலங்கிள்ளியை நோக்கி உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்னும் புலவர் நீ காட்சிக்கு எளியவனாகவும், இனிய சொல்லைக் கூறுபவனாகவும் இருத்தல் வேண்டும். உன்னைப் பழிப்போர் வணங்கவும், புகழ்வோர் பொலிவுறவும் ஆட்சி செய்ய வேண்டும் என்று கூறுவதனை,

யாமே நின் இகழ் பாடுவோர் எருத்து அடங்க
புகழ் பாடுவோர் பொலிவு தோன்ற[75]

என்னும் அடிகள் எடுத்துக்காட்டுகின்றன.

**அறிவுறுத்தல்**

வெள்ளைக்குடி நாகனார் என்பார் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனிடம் ‘மழை பெய்யும் காலத்தில் மழை பொய்த்துப் போனாலும், விளைதல் குறைந்தாலும் இந்த உலகமானது அரசரைப் பழிக்கும். அதனை நீ நன்கு உணர்ந்து, அயலாரின் பழிச் சொற்களை ஏற்காது, உழவு புரிவோர் குடியைக் காத்து, அதன்வழி உன் நாட்டு மக்களைப் பாதுகாத்தும், மக்களுக்கு நீதிவழங்கியும், நீ ஆட்சி செய்யவேண்டும் என்று அறிவுறுத்துவதை,

மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்
காவலர்ப் பழிக்கும் இக்கண் அகல்ஞாலம்[76]

என்னும் புறநானூற்றுப் பாடல் விளக்குகிறது.

**மானம் பெரிதென எண்ணுதல்**

சமுதாயப் பொது நிலையில் அரசர்களின் வாழ்க்கை உயர்வுடையதாக விளங்கிய பொழுதும், தனி வாழ்வில் மானம் பெரிதென வாழ்ந்துள்ளனர். மானம்

அழிய நேர்ந்த பொழுது உண்ணா நோன்பிருந்து உயிர் விட்டனர். தான் பெற்ற மக்கள் வெகுண்டு எழுந்தபோது கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர்நீத்த செய்தி இதற்குச் சான்றாகும்.

**முரசின் சிறப்பு**

அரசர்கள் தங்களின் முரசைப் புனிதமாகக் கருதியுள்ளனர். காவல் தொழிலுக்குரிய சின்னமாக முரசு கருதப்பட்டது. இத்தகைய முரசம், புலியைக் கொன்ற யானையின் தோலால் செய்யப்பட்டதை,

> கொல் ஏற்றுப் பைந்தோல் சீவாது போர்த்த
> மார்க்கண் முரசம் ஓவுஇல் கறங்க[77]

என்னும் அடிகள் விளக்கி நிற்கின்றன. பகைவர் முரசத்தைக் கைப்பற்றுவதை அரசர்கள் பெரிய வெற்றியாகக் கருதியுள்ளனர்.

**வீரச்சிறப்பு**

அரசர்கள் வீரம் செறிந்த வாழ்வினை மேற்கொண்டு வாழ்ந்துள்ளனர். இடைக்காடனார் என்னும் புலவர், ‘சோழன் நலங்கிள்ளியின் வீரத்தைக் குறிப்பிடும் பொழுது, அவனது போர் யானை மலைபோல விளங்கும்; அவனது படை கடல் போன்று ஆரவாரிக்கும்; வேல் மின்னலைப் போல் ஒளிவிடும்; பகையரசரின் தலை நலங்கிள்ளியின் வலிமை கண்டு நடுங்கும்’[78] என்று அவனது வீரச்சிறப்பைக் குறிப்பிட்டுள்ளார்.

சங்க கால அரசர்கள் நல்லாட்சி செய்ததோடு, சான்றோரின் வழி தங்கள் வாழ்வு நிலைகளை மேன்மைப்படுத்தியும், தன்மானம், வீரச்சிறப்பு மிகுந்தவர்களாக வாழ்ந்தும் சமுதாயத்தில் நன்மதிப்பைப் பெற்று வாழ்ந்த நிலையைக் காண முடிகின்றது.

**அந்தணர்**

பண்டைய தமிழர்கள் பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிக்கவில்லை. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், உழவர், வேட்டுவர், பொற்கொல்லர் எனப் பல்வேறு பிரிவினர் சங்க காலத் தமிழகத்தில் இருந்துள்ளனர். செய்யும் தொழில் அடிப்படையிலேயே இப்பிரிவுகள் தோன்றின என்பதை,

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா

செய்தொழில் வேற்றுமை யான்[79]

என்று திருக்குறள் சுட்டுகிறது.

சங்க காலத்தில் பிராமணர் என்ற சொல்வழக்குக் காணப்படவில்லை. அந்தணர் என்ற சொல் அக்காலத்தில் பெருவழக்காக இருந்துள்ளது. அந்தணர்க்குரிய பொருட்களாக,

நூலே கரகம் முக்கோல் மணையே

ஆயுங் காலை அந்தணர்க்குரிய[80]

என்பனவற்றைத் தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ளது. அந்தணரின் இயல்பை,

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்

செந்தண்மை பூண்டொழுக லான்[81]

என்ற குறட்பாவானது எடுத்துரைத்துள்ளது. வேதம் ஓதலும் வேள்வியினை நிகழ்த்தலும் அந்தணரின் முதன்மையான தொழில்களாகும். இதனை, ஓதல் அந்தணர் வேதம் பாட[82] என்று மதுரைக் காஞ்சியானது எடுத்துரைத்துள்ளது.

மேலும் இவர்கள் வேள்வித் தொழிலின் போது காட்டில் வாழும் கலைமானின் தோலினை அணிந்து கொள்வர். தோளில் பூணூல் சிறந்து விளங்கும். 'வியாகரணம், சோதிடம், நிருத்தம், சந்தம், சிக்கை, கற்பம் என்ற ஆறு அங்கத்தானும் உணரப்பட்ட பழைய நூலாகிய வேதத்தைக் கற்றவர்கள், இருபத்தொரு வேள்வித் துறைகளைக் குறையின்றி செய்து முடிக்கும் வல்லமை உடையவர்கள்'[83] என்று அந்தணரின் வாழ்வியல் முறைகளைப் புறநானூறு சுட்டுகிறது.

அந்தணரைப் பார்ப்பனர் என்று கூறும் வழக்கம் சங்க காலத்தில் இருந்துள்ளது. இதனை, ஆவும் ஆன்இயற் பார்ப்பன மாக்களும்[84] என்னும் அடி விளக்குகிறது. ஆவூர் மூலங்கிழாரும் கௌணியன் விண்ணந்தாயன் என்ற அந்தணனைப் பாடும் பாடலில் 'சோணாட்டுப் பார்ப்பான்' என்று குறிப்பிடப்பட்டுள்ளார்.

### அந்தணரின் இருப்பிடம்

அதர்வன வேதம் தவிர மூன்று வேதங்களையும் ஓதுகின்றவர். விழுமிய யாகங்களைச் செய்யக்கூடிய வலிமையுடையவர்கள். உலகில் பிரமப் பொருளாகவே

விளங்கி நிற்கின்றவர்கள். உயர்ந்த தேவர் உலகத்தை இவ்வுலகில் இருந்து கொண்டே பெறுகின்ற சிறப்பினை உடையவர்கள். அறத்தின் வழியிலேயே செல்லக்கூடியவர்கள். எல்லா உயிர்களிடத்தும் அன்பு பொருந்தி நடப்பவர். சீவன் முத்தி அடைந்தவர்களிடம் சில காலம் பொருந்தி வீட்டின்பத்தைப் பெற்று, இனிதாகத் தங்கியிருக்கும் அவரது பள்ளிகள் மலையை உள்வெளியாகக் குடைந்து இருப்பிடமாக்கினாற் போல காட்சியளிக்கும் என்பதை,

உயர்நிலை உலகம் இவண் நின்று எய்தும்
அறநெறி பிழையா அன்புடை நெஞ்சின்
பெரியோர் மேஎய், இனிதின் உறையும்
குன்று குயின்றன்ன அந்தணர் பள்ளியும்[85]

என்று மதுரைக்காஞ்சி குறிப்பிடுகின்றது.

**புலவரின் வாழ்வு நிலை**

சங்க காலப் புலவர் பெருமக்கள் நிறைந்த ஒழுக்கமுடைமை, பரந்த மனப்பான்மை, ஒருவரை ஒருவர் மதித்து வாழும் ஒற்றுமைப் பாங்கு, வறுமையிலும் செம்மை, பரிசில் வாழ்க்கையை மேற்கொள்ளினும் தன்மான உணர்வோடு வாழ்ந்தமை, இருபெரு வேந்தர்களிடையே சந்து செய்வித்தல், தேவையான காலத்தில் அறிவுறுத்தல் முதலிய வாழ்க்கைக் கூறுகளைப் பெற்று நிறைவாழ்வு வாழ்ந்துள்ளனர்.

**புலவரின் மாண்பு**

உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் அந்துவஞ்சேரல் இரும்பொறையுடன் கருவூரில் வேண் மாடத்து மேல் தங்கி இருந்தார். அப்பொழுது சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி யானையின் மீது ஏறி சேரமன்னனின் மேல் படையெடுத்து வருகிறான். அக்காட்சியைக் கண்ட இவர் சேரல் இரும்பொறையை நோக்கி,

இவன் யார் என்குவைஆயின், இவனே
புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய
எய்கணை கிழித்த பகட்டு எழில் மார்பின்,
மறலி, அன்ன களிற்று மிசையோனே[86]

என்று முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளியைப் பாராட்டுகின்றார். தன்னைப் புரந்த மன்னன் உடனிருந்தும் அவனின் பகை மன்னனை வாழ்த்திய செம்மையையும் புலவரின் மாண்பையும் அறிய முடிகிறது.

**புலவரின் தன்மானம்**

பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் ஆவூர் மூலங்கிழாருக்குப் பரிசில் நீட்டித்த காலத்து அவனை நோக்கி இயலும் பொருளை இல்லையென்று மறுத்தல் ஈவோரின் புகழைக் குறைக்கும். நீ இப்பொழுது என்னிடத்து செய்த தவறும் அதுவே. இதற்கு முன் எம் குடியில் இருந்தோர் இதுபோன்ற செயலைக் காணாதவர். நானும் வெயிலென்றோ, பனியென்றோ சோம்பி இருக்க மாட்டேன். என்னை வீட்டு நீங்காது கல்லால் செய்தாற் போன்று மிகுதியான வறுமை வாட்டினாலும் நாண் என்னும் கற்பினை உடைய என் மனைவியை நினைத்து இல்லத்திற்குச் செல்வேன் என்று கூறி, அவன் பரிசில் நீட்டித்ததால் துன்பம் அம்மன்னனுக்கு ஏற்படுமோ என்று கருதி 'இன்னா செய்தாரை ஒறுத்தல்' என்னும் குறளுக்கேற்ப நின் பிள்ளைகள் நோயின்றி வாழவேண்டும் என்று வாழ்த்திய நிலையால் சங்க காலப் புலவரின் தன்மான உணர்வும், அவரின் பெருந்தன்மையும் வெளிப்படுகிறது.

கடிய நெடுவேட்டுவன் பரிசில் நீட்டித்த காலத்து பெருந்தலைச் சாத்தனார் அவனிடம்,

> முற்றிய திருவின் மூவராயினும்
> பெட்பின்று ஈதல் யாம் வேண்டலமே[87]

என்று தன்மான உணர்வோடு கூறுவதனையும் காண முடிகின்றது.

**சந்து செய்வித்தல்**

இருபெரு வேந்தர்களுக்கு இடையே பகை ஏற்படும் பொழுது புலவர்கள் அம்மன்னர்கள் இருவரையும் சந்து செய்வித்து நாட்டில் அமைதி தவழச் செய்ய முயன்றுள்ளனர். காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பகைவனை வீழ்த்தச் சென்ற இலவந்திகை நன்மாறனிடம் உன் வீரர்கள் பகைவன் நாட்டு வயலை, கொள்ளையடித்தாலும் கொள்ளையிடட்டும்; ஊரினைத் தீயிட்டு எரித்தாலும் எரிக்கட்டும்; பகைவனை எவ்வாறு வேண்டுமானாலும் அழிக்கட்டும்; ஆனால் பகைவர் தம் காவல் மரத்தை மட்டும் வெட்டுவதைத் தவிர்க்க வேண்டும் என்று கூறுமிடத்து சங்க கால மன்னர்கள் காவல் மரத்தைப் புனிதமாகக் கருதியதையும், இருநாடுகளிடையே உள்ள மக்கள் அமைதியாக வாழவேண்டியும் சந்து செய்த புலவரின் உளப்பாங்கினை,

ஒன்னார் செகுப்பினும் செகுக்க என்னதூஉடம்

கடிமரம் தடிதல் ஓம்பு[88]

என்னும் வரிகள் உணர்த்துகின்றன. இதுபோன்று கோவூர் கிழாரும் சோழன் நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் பகைமூண்ட பொழுது,

ஒருவீர் தோற்பினும் தோற்ப நும் குடியே

இருவீர் வேறல் இயற்கையும் அன்றே[89]

என்று அவர்கள் இருவருக்கும் இடையே சமாதானம் செய்துவிக்க முயன்ற நிலையினையும் காணமுடிகிறது.

**புலவரின் வாழ்வுநிலை**

புலவர்கள் பழுத்தமரம் தேடிச் செல்லும் பறவை போல கொடைக்குரியவரை நாடிச் செல்வர். நீண்ட வழி எனக் கருதாது பல அரிய பகுதிகளையும் கடந்து சென்று இரவலரைக் கண்டு குற்றமில்லாத சொற்களால் தமக்கியன்றவாறு பாடிப் பரிசில் பெறுவர். அவ்வாறு பெற்ற அப்பரிசிலைத் தம் சுற்றத்தினருக்குத் தந்தும், தம்மிடம் மறைத்துக் கொள்ளாது தாமும் உண்டு தம் உள்ளம் மலர பிறர்க்கு வழங்கியும் வாழும் தன்மை உடையவர்கள் புலவர்கள். தம்மை ஆதரிப்பார் தமக்குச் செய்யும் சிறப்பின் பொருட்டு, வருந்தும் பரிசில் வாழ்க்கையை மேற்கொள்பவர்கள். இத்தகைய புலவர்களின் வாழ்க்கை முறை, பிறருக்குத் தீங்கு அறியுமோ? அறியாது என்று கோவூர் கிழார் சோழன் நலங்கிள்ளியின் அரண்மனைக்குச் சென்ற இளந்தத்தன் என்னும் புலவனை நலங்கிள்ளி கொல்ல முயன்ற பொழுது அவனை நோக்கிக் கூறியதனை,

பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி

ஓம்பாது உண்டு கூம்பாது வீசி

வரிசைக்கு வருந்தும் இப் பரிசில் வாழ்க்கை

பிறர்க்கு தீது அறிந்தன்றோ[90]

என்னும் புறநானூற்று வரிகள் புலவர் தம் வாழ்வு நிலையினை எடுத்துக் காட்டுகின்றன. இங்ஙனம் பெருஞ்சித்திரனார் என்னும் புலவரும் குமணனைப் பாடி பரிசில் பெற்று வந்து தம் மனைவியிடம் கொடுத்து அவளிடம்,

இன்னோர்க்கு என்னாது, என்னொடும் சூழாது

வல்லாங்கு வாழ்தும் என்னாது, நீயும்

எல்லோர்க்கும் கொடுமதி - மனை கிழவோயோ[91]

என்று கூறியவிடத்து, புலவர்களின் உள்ளம், மற்றவர்க்கு உதவி செய்யும் நலனை உடையது என்பதை உணர்த்துகின்றது.

**வறுமைநிலை**

புலவர்கள் எண்ணி எண்ணி திளைத்துச் சிந்தனையை உலகினுக்கே தந்து தங்களை ஒப்படைத்து விடுவது இயற்கை. எண்ணத்தில் திளைப்பவர்கள் செயலில் தலைப்படுதல் அரிது. தொழில் செய்யாதவர் வறுமையால் வாடுதல் இயற்கையாகும். எனினும் வறுமையிலும் செம்மையுடையவர்களாகப் புலவர்கள் திகழ்ந்துள்ளனர். வள்ளல்களிடம் பொருள்வளம் பெற்று வாழ்ந்துள்ளனர். பெருந்தலைச் சாத்தனார் குமணனை நோக்கி, 'உணவு அடுதலை மிகவும் மறந்த என் இல்லத்தின் கண் ஓங்கிய அடுப்பில் காளான் பூத்துள்ளது. வறுமையினால் உடல் மெலிந்த என் மனைவியின் மார்பில் பால் இல்லாததால் வறிய முலையைச் சுவைக்குந்தோறும் பால் காணாமல் குழந்தை அழுகின்றது. அக்குழந்தையின் முகத்தைப் பார்த்து நீர் நிரம்பிய கண்ணோடு என்மனைவி வருந்துவாள். அதனைப் பார்த்த நான், அவ்வருத்தத்தைத் தீர்த்தற்குரியவன் நீயென நினைத்து, வந்தேன்'[92] என்று தம் வறுமை நிலையினைப் புலவர் எடுத்துரைத்துள்ளார்.

**பல்வேறு இனத்தாரின் வாழ்வியல் முறைகள்**

சங்க கால சமுதாயத்தில் பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர்களாக உமணர், வடுகர், வேடுவர் எனப் பலர் வாழ்ந்துள்ளனர். சோழநாட்டுப் புலவர்களின் பாடல் வழி இத்தகையோரான உமணர், வேடுவர், புலையர், வம்பலர், வடுகர், மழவர், மறவர் ஆகியோரின் வாழ்வியல் முறைகளைக் காணமுடிகிறது.

**இடையர்**

ஆடு மேய்த்தல் தொழிலைச் செய்யும் இவர்கள் தங்களுடைய செம்மறியாட்டு இனங்களுடன் ஊர்க்கண் வாராது காடுகளிலேயே தங்கி வாழ்ந்துள்ளனர். 'கார்காலம் முடிந்த இறுதிநாளில் இடையர்கள், கையில் காலிட்டுப் பின்னிய தோல் பையில் தீக்கடைக்கோல் முதலான கருவி கொண்டு ஒரு சேர சுருக்கிக்கட்டி, அத்துடன் பனையோலைப் பாயையும் முதுகில் சுமந்துச் சென்று காடுகளில் ஆடுகளை மேய்த்துள்ளனர். அவ்வாறு மேய்க்கும் பொழுது கையிலிருந்த கோலையூன்றிக் கொண்டு அதன் வலிமையில் ஒரு காலை ஊன்றி ஒடுங்கி நின்று அவ்விடையன் நாவை

மடித்தபடி, 'வீளை' என்ற ஒலியை எழுப்புவான். அவ்வொலி கேட்ட ஆட்டுக்கூட்டம் வேற்றிடங்களில் திரியாது மயங்கி அவ்வண்ணமே தங்கி நிற்கும்'[93] என்று இடையர்களின் வாழ்வினை நற்றிணைப்பாடல் விளக்குகிறது.

**உமணர்**

உமணர் என்போர் உப்பினை வண்டிகளில் ஏற்றிக்கொண்டு ஊர் ஊராகச் சென்று வணிகம் புரிந்தனர். வண்டிகளில் வீட்டுப் பொருள்கள் அனைத்தையும் ஏற்றிக்கொண்டு வழியிலே கல்லடுப்பில் உணவு சமைத்து உண்டுள்ளனர். இவர்கள் வளைந்த நுகத்தடியில் சிவந்த கயிறு கொண்டு பூட்டிய பகடுகள் மணி ஒலிக்க வருந்தி இழுத்துத் துன்புறும் இடங்களில் புழுதியுடன் காற்றானது சுழன்றடிக்கும் என்பதனை,

படுமணி இயம்பப் பகல் இயைந்து, உமணர்
கொடு நுகம் பிணித்த செங்கயிற்று ஒழுகைப்
பகடுஅயாக் கொள்ளும் வெம்முனைத் துகள் தொகுத்து
எறிவளி சுழற்றும் அத்தம்[94]

என்னும் பாடல் விளக்கும்.

**வேடுவர்**

முல்லை நிலத்து மலையின் அடிவாரத்தில் உள்ள சிற்றூரில் நெல்லி மரங்களால் ஆன வேலியையும் அதன் விதையாகிய பரலை உடைய முற்றத்தினையும் ஒடுமரத்தின் கோல்களால் அமைக்கப்பட்ட கட்டுக்கதவினை உடையது வேடுவர்களின் இல்லமாகும். இவர்கள் பகல் முழுவதும் வேட்டையாடித் திரிபவர். கல்வியறிவு இல்லாத வேடர்கள் வில்லாகிய ஏரால் உழுது உண்பவர். கலங்கிய சேற்று நீரையே தங்களுக்குள் முறையாகப் பெற்று உண்கின்ற நிறைவு பெறாத வாழ்க்கை உடையோர் என்பதை, முறையின் உண்ணும் நிறையா வாழ்க்கை[95] என்னும் அடிகள் உணர்த்துகிறது. 'முள்ளம் பன்றியைக் கொன்று பேரொலியுடன் திரியும் அவ்வினத்து ஆண் மக்கள் சிறப்பில்லாத தங்கள் இல்லங்களின் முன்னர் உடும்பினது நிணத்தை அறுத்து யாவர்க்கும் பகுத்துத் தருவதற்காகத் தீயை மூட்டி அதில் உடும்பினை வாட்டும்போது கொழுவிய நிணத்தின் நாற்றம் சிற்றூர்களின் தெருக்கள் எங்கும் கமழும். வேடர்களின் சிறுவர்கள் இலந்தை மரத்தின் நிழலில் இருந்து அம்புகளை எறிந்து விளையாடுவர். வேட்டை நாயை உடைய இவ்வேட்டுவர்கள், காட்டில் வாழும் வாழ்க்கையை உடையவர்கள். வேடர்கள் மான் தசையைக் கொண்ட கடகப்பெட்டியும் ஆய்மகள்

தயிர் கொண்டு வந்து தந்த பானையும் உடையவர்கள். அவர்களுக்கு உழவர் தம் வீட்டிலுள்ள முது மகளிர் வெண்ணெல்லையும் முகந்து தருவர். இவற்றை எல்லாம், பெற்ற வேடன் மகிழ்ந்து தன் இருப்பிடத்திற்குச் செல்வான்'[96] என்று வேடர்களின் வாழ்க்கையினைப் புறநானூற்றுப் பாடல் விளக்கி நிற்கிறது.

**புலையர்**

வேடர்களின் நடுவே இழிந்த பிறப்பினை உடைய புலையன் வலிய அச்சத்தைத் தரும் துடியைத் தன் கை சிவக்குமாறு முழக்கிக் கொட்டுவான் என்று புலையர்களின் வாழ்வினை,

**வில் உழுது உண்மார் நாப்பண் ஒல்லென**
**இழிந்த பிறப்பாளன் கருங்கை சிவப்ப**
**வலி துரந்து சிலைக்கும் வன்கண் கடுந்துடி**
**புலி துஞ்சு நெடு வரைக் குடிஞையோடு இரட்டும்**[97]

என்னும் பாடல் எடுத்துரைக்கின்றது.

**வம்பலர்**

வழிப்போக்கர் வம்பலர் எனப்பட்டனர். இவர்கள் மீது ஆறலைப்போர் கல்லெடுத்து எறிந்தமையால், பலவிடங்களில் கிழிந்த ஆடையினையும், உலறிய குடையினையும் கொண்டு உயர்ந்த மரத்தில் ஏறிக் கொள்வர். இவ்வாறு தன் கூட்டத்திலிருந்து பிரிந்து வந்த இவர்கள் உணவைப் பாய்ந்து எடுப்பதற்கு விரும்பி, பருந்து வானிலே பறந்து செல்லும் திசையினை நோக்கியிருப்பர். ஆறலைக் கள்வராகிய பகைவர் மிகுந்த கவர்த்த வழிகளில் பயணம் செய்யும் இவர்கள், பின்வரும் வழிப்போக்கருக்குத் தாம் செல்லுதற்குரிய வழி இதுவெனக் காணும் பொருட்டு, யாமரத்தின் மேலே ஏறி ஏணியைச் சார்த்தி விட்டு செல்வதனை,

**. . . . . . . . . . . . . . . . . . கள்வர்**
**பகைமிகு கவலைச் செல்நெறி காண்மார்**
**மிசைமரம் சேர்த்திய கவை முறியாஅத்து**[98]

என்னும் அடிகள் உணர்த்துகின்றன. வம்பலர்களின் பொதுச்சிந்தனை சங்க காலச் சமுதாயத்தின் சிறப்பிற்கு வேரூற்றாகத் திகழ்கிறது.

**வடுகர்**

வைகறைப் பொழுதில் மலர்கின்ற காட்டு மல்லிகையின் மலர்களைத் தம் சுருண்ட கரிய முடியில் சூடிக்கொண்டு, 'போர்முனையில் பகைவரை வென்று அவர்தம் பசுக்கூட்டத்தைக் கவர்ந்து கொண்டு வந்தமைக்காக, விடியற்காலத்தே முதிர்ந்த கள்ளாகிய நறவினைப் பருகி அத்துடன் வெண்மையான நிணச்சோற்றினை உணவாகக் கொள்ளும் இயல்பினை உடையது வடுகர் நாடு'[99] என்று அவரது நாட்டின் சிறப்பினை அகநானூறு எடுத்துரைக்கிறது. வடுகர் கடுமையாக ஒலிக்கும் பம்பையையும், சினமிகுந்த நாயையும் உடையவர்கள் என்பதை,

கடுங்குரற் பம்பைக் கதநாய் வடுகர்[100]

எனவும்,

கல்லா நீள்மொழிக் கதநாய் வடுகர்
வல்ல ஆண் அருமுனை நீந்தி[101]

என்னும் அடிகள் உணர்த்துகின்றன.

**வடுகச் சிறுவர்களின் வாழ்வு**

வடுகரின் சிறுகுடுமியினை உடைய சிறுவர்கள் அழகிய தளிர்களை உடைய இருப்பை மரத்தின் பூக்களைத் தம் வில்லினால் உதிர்ப்பர். அதைத் தின்ன வரும் மானை விரட்டியுள்ளனர். பாரம் சுமக்க முடியாமல் முடம்பட்டு விழுந்து தனித்துக் கிடக்கும் பகட்டினை உண்டு வாழ்ந்துள்ளனர்.

**மழவர்**

கூர்மையான படைக்கலன்களை உடையவர். காலடியில் செருப்பினை அணிந்து கொள்வர். சிற்றூர்களில் வாழும் மக்கள் தம் தலைகளில் கை வைத்துக் கதறும்படி அவர்தம் கொழுத்த ஆனிரைகளைக் கவர்ந்து சென்று, அவற்றைக் கொன்று, நீர் வேட்கையின் சுனைநீரை மிகுதியாகப் பருகி, வாழும் தன்மையினை உடைய இவர்கள் உமணர் விட்டுச் சென்ற கல் அடுப்பில் மணம் உண்டாக நன்கு புழுக்கிய இறைச்சியை விருப்பமுடன் சமைத்ததை,

உமண்சாத்து இறந்த ஒழிகல் அடுப்பில்
நோன் சிலை மழவர் ஊன்புழுக்கு அயரும்[102]

என்ற அகநானூற்றுப்பாடல் விளக்கும்.

**மறவர்**

வில் ஏந்திய மறவர்கள் கொழுப்புடைய இறைச்சியை உண்டு வாழ்ந்தனர். அவர்தம் தோள்கள் பூரிக்க பண்டச் சுமையைக் கழுதைகளின் மீது சுமத்தி வரிசையாக வருகின்ற வாளினை உடைய வாணிகச் சாத்தரைத் துன்பப்படுத்தி அவர்களின் அரிய தலைகளைத் துணிப்பர். ‘புலால் மிக்க நாறும் அப்போர்க்களத்தில் தம் துடியினைத் தாழக் கொட்டி முழக்கியவாறே அவ்வணிகரிடம் கொள்ளையடித்த பெறற்கரிய அணிகலன்களை வில்கள் பொருந்திய அரணிடத்தே அவரவர்க்குரிய பங்குகளை முறையே தமக்குள் பகுத்துக் கொள்வர்.’[103]

**பல்வேறு தொழில்கள்**

மக்கள் வாழ்வு சிறக்கப் பொருள் வேண்டும். பொருள் பெருகத் தொழில் சிறக்க வேண்டும். சங்க காலப் பொருளாதாரம் பெரும்பான்மையும் தன்னிறைவு உடையதாய்க் காணப்படுகின்றது. மக்கள் தொழில் முயற்சி உடையவராய் செல்வம் ஈட்டி நல்வாழ்க்கை வாழ்தலில் நம்பிக்கை உடையவராய் இருந்துள்ளனர் என்பதைச் சங்க இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன.

பழந்தமிழ்ச் சமுதாயத்தில் உழவுத்தொழில், தச்சுத்தொழில், மட்கலம் செய்தல், பொற்கொல்லர்த் தொழில், வேடுவர் தொழில், மீன்பிடித் தொழில், நூல் தொழில், சலவைத்தொழில், அமைச்சர்த் தொழில், போர்த்தொழில், வாணிகத்தொழில், கிணறு வெட்டும் தொழில் முதலிய தொழில்கள் நடந்தேறியுள்ளன. இத்தொழில்களின் சிறப்பினைச் சோழநாட்டுப் புலவர்கள் தம் பாடல்களில் எடுத்துரைத்துள்ளனர்.

**உழவுத் தொழில்**

உழுவார் உலகத்தார்க்கு அச்சாணி என்று திருக்குறள் குறிப்பிடுகிறது. மற்றைய தொழில்களின் ஆதாரமாகவும், முதன்மையாகவும் விளங்குவது உழவுத் தொழிலே. சோழநாட்டின் முதன்மையான தொழிலாக விளங்கியது உழவு ஆகும்.

மனித வாழ்விற்கு அடிப்படையானது உணவு. உணவு இன்றேல் பண்பாடும் இல்லை; பழம்பெருமையும் இல்லை. ஆதலின் உணவுப் பொருளின் இன்றியமையாமையை உணர்ந்து அவற்றைப் பெருக்கினர். உழவுத்தொழில்

தலைமைத் தொழிலாகப் போற்றப்பெற்றுள்ளது. உழவுத் தொழில் உயிர் காக்கும் தொழிலாக இருந்துள்ளது.

உழவுத் தொழிலுக்கு இன்றியமையாதவை நிலவளமும், நீர்வளமும் ஆகும். உழவுத் தொழிலுக்கு ஏற்ற வகையில் நிலத்தைப் பண்படுத்தி நீர்பாய்ச்சும் காட்சியினை,

நீர்த் தெவ்வும் நிரைத்தொழுவர்
பாடு சிலம்பு இசை ஏற்றத்
தோடு வழங்கும் அகல் ஆம்பியின்
கயன் அகைய வயல் நிறைக்கும்[104]

என்ற பாடல் அடிகள் எடுத்துரைக்கின்றது.

நீர்ப்பாய்ச்சிய நிலத்தைப் பயிர்த்தொழிலுக்கு ஏற்ற வகையில் உழவர்கள் உழுதனர். அவ்வாறு உழுத சாலிடத்து விதைத்த விதைகள் முளைத்து எழுந்ததை,

பேர்உறை தலைஇய பெரும்புலர் வைகறை
ஏர்இடம் படுத்த இருமறுப் பூழிப்
புறம்மாறு பெற்ற பூவல் ஈரத்து
ஊன்கிழித் தன்ன செஞ்சுவல் நெடுஞ்சால்
வித்திய மருங்கின் விதைபல நாறி[105]

என்ற அகநானூற்றுப்பாடல் தெரிவிக்கின்றது.

வயல்களில் அறுவடை செய்யுமுன் வயல்களில் கூடமைத்து வாழும் பறவைகளை ஓட்டும் செயலை,

கழி சுற்றிய விளை கழனி
அரிப்பறையான் புள் ஓப்புந்து[106]

என்னும் அடிகள் விளக்குகின்றது.

அகன்ற இடத்தை உடைய வயலில் ஆம்பல், நெய்தல் பூவோடு விளைந்த நெல்லை மகளிர் அறுவடை செய்துள்ளனர். அவ்விடத்தே இடம் இல்லாமையால் கடாவிடும் களமாகிய போரடிக்கும் நெற்களத்தில் அவற்றைச் சேர்த்து, பின் எருமைகளால் மிதிக்கச் செய்து நெல்லை உதிர்த்து, உதிர்க்கப்பட்ட நெல்லினை

மரக்காலால் அளத்தற் பொருட்டு ஓர் இடத்தில் குவிப்பர் என்று உழவுத் தொழிலின் சிறப்பினை,

அறாஅ யாணர் அகன் கண் செறுவின்
அருவி ஆம்பல் நெய்தலொடு அரிந்து
செறுவினை மகளிர் மலிந்த வெக்கை
பரூஉப் பகடு உதிர்த்த மென் செந்நெல்லின்
அம்பண அளவை உறை குவித்தாங்கு[107]

என்னும் அடிகள் மூலம், மகளிர் நெல் அறுவடை செய்த காட்சியினையும், இப்பொழுது உள்ள 'மரக்கால்' என்ற அளவை 'அம்பணம்' என்று அழைக்கப்பட்டதையும் உணர முடிகின்றது. இன்றைய நிலையில் உழவுத் தொழிலின் செயல்களை நோக்கின் எல்லாமே நவீன இயந்திரங்களால் செய்யப்படுவதைக் காண முடிகிறது.

## தச்சுத்தொழில்

தச்சு என்பது ஒன்றையும் மற்றொன்றையும் பொருத்தி இணைப்பதாகும். இத்தச்சுத் தொழிலைச் செய்வோர் தச்சர் எனப்பட்டனர். சங்க கால இலக்கியங்களில் திறமை வாய்ந்த தச்சர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இத்தச்சர்கள் தேர், கப்பல், வீடுகளுக்குத் தேவையான மரச்சாமான்கள் செய்தல் போன்றவற்றில் வல்லுநர்களாக விளங்கியுள்ளனர். ஒரு நாளில் எட்டுத் தேர்களைச் செய்யவல்ல தச்சர்கள் முற்காலத்தில் இருந்தனர் என்பதை, **வைகல் எண்தேர் செய்யும் தச்சன்**[108] என்னும் அடி சுட்டுகிறது.

சங்க காலத்தில் பொருளாதார நலனைப் பெருக்கும் வகையில் வாணிகம் சிறந்து விளங்கியது. இவ்வாணிகத்திற்குத் தேவையான படகுகள், கப்பல்கள் கட்டும் தொழிலிலும் தச்சர்கள் சிறந்து விளங்கியுள்ளனர். அவ்வாறு அவர்களால் கட்டப் பெற்ற நாவாய்களின் பாய்கள் விரிக்கப்படும் காட்சி மேகங்கள் சூழ்ந்து நிற்கும் மலையை போல காட்சியளித்தன என்பதை,

ஆடியற் பெருநாவாய்
மழை முற்றிய மலைபுரைய[109]

என்னும் அடிகள் விளக்கியுரைக்கிறது.

### மட்கலத் தொழில்

பண்டைத் தமிழரின் மட்கலத் தொழில் திறமையை அறிய துணைபுரியும் நூல்கள் சங்க கால இலக்கியங்கள் ஆகும். மட்கலத் தொழில் செய்வோர் கலஞ்செய்கோ அல்லது வேட்கோ எனப்பட்டனர். மட்கலஞ் செய்யும் பொழுது அவர்கள் முழுக் கவனத்துடன் அதில் ஈடுபட்டுள்ளனர். இம்மட்கலத் தொழிலின் சிறப்பு, கோவூர் கிழார் பாடலில் வெளிப்படுகிறது. சோழ மன்னன் நெடுங்கிள்ளியின் நாட்டுச் சிறப்பினைக் குறிப்பிடுமிடத்து,

> வேட்கோச் சிறாஅர் தேர்க் கால் வைத்த
> பசு மண் குரூஉத் திரள்போல, அவன்
> கொண்ட குடுமித்து இத் தண் பணை நாடே[110]

என்னும் அடிகளில் மட்கலத் தொழிலின் தன்மையினை உரைக்கிறார். மட்கலம் செய்தல் தொழில் சிறப்பாக நடந்தமைக்கு மேற்கண்ட பாடல் சான்று பகர்கின்றது.

### பொற்கொல்லர் தொழில்

அழகுக்கு அழகு செய்வன அணிகள். சங்க காலத்தில் ஆண்களும் பெண்களும் தங்கள் இயற்கை அழகு மேலும் பொலிவுறும் வகையில் பல்வேறுவிதமான அழகிய வேலைப்பாட்டுடன் கூடிய அணிகலன்களை அணியத் தொடங்கினர். இவ்வணிகளுக்கு ஏற்ற பெயர்களும் தரப்பட்டுள்ளன. அணிகலத் தொழில் செய்வோர் பொற்கொல்லர் எனப்பட்டனர். இவர்கள் அணிகள் செய்யப் பயன்படுத்திய கருவிகளுள் அரம் என்பது ஒன்று. இதனை, **வாளரந் துமித்த வளை**[111] என்னும் அடி விளக்குகிறது.

### மீன் பிடித் தொழில்

நெய்தல் நிலத்துப் பரதவ மக்கள் கடலில் மீன் பிடித்தலைத் தலையாயத் தொழிலாகக் கொண்டிருந்தனர். கடலில் பெரிய மீனைப் பிடிக்கும் இயல்புடையவர்கள் பரதவர்கள். அவர்கள் கடற்கரையில் அமைந்த சிறுகுடியில் தங்கி, தங்கள் இல்லங்களில் விளக்கை ஏற்றுவர். அவ்விளக்கானது கடலில் இரவில் வரும் மரக்கலங்களுக்கு வழிகாட்டும் என்பதனை,

> அலவனொடு பெயரும் புலவுத் திரை நளிகடல்
> பெருமீன் கொள்ளும் சிறுகுடிப் பரதவர்
> கங்குல் மாட்டிய கனை கதிர் ஒண் சுடர்[112]

என்னும் அகநானூற்றுப் பாடல் உணர்த்துவதன் மூலம் நெய்தல் நில மக்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வாழ்ந்தமையை அறிய முடிகிறது. தூண்டிலால் மீன்பிடிக்கும் வழக்கத்தையும், மேற்கொண்டு வாழ்ந்துள்ளனர். இதனை, நாண்கொள் நுண்கோலின் மீன்கொள் பாண் மகள்[113] கயிறு கட்டப்பெற்ற நண்ணிய தூண்டிற் கோலினால் பாண் மகள் மீனைப் பிடித்தாள் என்னும் குறிப்பால் அறியலாம்.

## நூல் தொழில்

பண்டைக் காலத்தில் நூலால் பல பொருள்கள் செய்யப்பட்டன. நூலால் செய்யப்பட்ட பொருள்களில் நூலேணி, சிமிலி எனப்படும் நூல் உறி ஆகியவற்றைப் பற்றிய குறிப்புகள் மதுரைக் காஞ்சியில் காணப்படுகின்றன. நள்ளிரவில் களவு செய்யும் கள்வர் நூலேணியை இடையில் கட்டியிருந்தனர் என்பது, மென் நூல் ஏணிப் பல்மாண் சுற்றினார்[114] என்று மதுரைக்காஞ்சியில் சுட்டப்பட்டுள்ளது.

முக்காலமும் அறிந்து கூறும் சமண சமய நெறி நிற்கும் சாவகர் விரதம் நோற்பதற்கு கல்லைப் பொளிந்தாற் போன்ற சிறிய வாயினை உடைய குண்டிகை எனப்படும் பாத்திரத்தைப் பல வடங்களையுடைய நூல் உறியில் தூக்கிச் செல்வர். இக் கருத்தை,

> ஆன்று அடங்கு அறிஞர் செறிந்தனர், நோன்மார்
> கல் பொளிந்தன்ன இட்டுவாய்க் கரண்டைப்
> பல்புரிச் சிமிலி நாற்ற[115]

என்னும் அடிகள் மூலம் பண்டைக் காலத்தில் நூல் உறி இருந்ததையும் அது சிமிலி என்ற பெயரில் அழைக்கப்பட்டதையும் அறிய முடிகின்றது.

## சலவைத் தொழில்

சங்க காலத்தில் ஆடைகளை வெளுக்கச் சலவைத் தொழில் செய்வோர் இருந்தனர். இவர்கள் காழியர் எனப்பட்டனர். ஆடையை உவர் மணலைப் பயன்படுத்தி வெளுத்துள்ளனர். இதனை,

> . . . . . . . . . . . . . . . காழியர்
> கவ்வைப் பரப்பின் வெவ் உவர்ப்பு ஒழிய[116]

என்ற அகநானூற்றுப் பாடலின் வழி அறிய முடிகின்றது.

**அமைச்சர்த் தொழில்**

*அரசர்பால் உள்ள அமைச்சர் பெருமக்கள் 'காவிதி' என்னும் பட்டத்தைப் பெற்றனர். 'அவர்கள் நல்லனவற்றையும் தீயனவற்றையும் ஆராய்ந்து அரசர்களை நன்னெறியில் நடக்கச் செய்தனர்'[117] என்பதை மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது.*

**போர்த்தொழில்**

*சங்க காலத்தில் போர்த்தொழிலில் ஈடுபடும் வீரர்கள் போரில் கூறப்படும் அறத்தின் வழியே செல்லும் இயல்புடையவர்களாக இருந்துள்ளனர். அக்காலத்தில் வாழ்ந்த வீரர்கள் போர் என்றவுடன் விரும்பி உடன் எழுந்ததை,* **போர் எனின் புகலும், புனைகழல் மறவர்**[118] *என்னும் பாடலடி உணர்த்தி நிற்கிறது. இவர்கள் குறி தப்பாது அம்பு தொடுக்க வல்ல வீரர்கள் என்னும் நிலையினை,*

> **கெடலருந் துப்பின் விடுதொழின் முடிமார்**
> **வினைவல் அம்பின் விழுத்தொடை மறவர்**[119]

*என்ற அகநானூற்றுப் பாடலானது எடுத்துரைக்கின்றது.*

**வாணிகத் தொழில்**

*சங்க கால மக்களின் வாணிகம் அவர்கள் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருந்தது. அவர்கள் வாழ்ந்த நிலத்திற்கு ஏற்பத் தொழில் மாறுபட்டு, அதனால் வாணிகம் வேறுபட்டுக் காணப்படுவதை அவர்களது தொழில்முறையைப் பற்றி அறியும் பொழுது தெரிய வருகின்றது. வாணிகம் என்பது உள்நாட்டு வாணிகம், வெளிநாட்டு வாணிகம் என்ற இரண்டு நிலைகளில் நடைபெற்றுள்ளது. தமிழ் நாட்டிலிருந்து ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்டப் பொருள்களாக, 'முத்து, சங்கு, பரதர் தரும் பொருட்கள், வெள் உப்பு, தீம்புளி, கானல், மீன், நாவாய் ஆகிய பொருட்களை ஏற்றுமதி செய்தல், மேலைநாட்டுக் குதிரைகள் மரக்கலங்களில் வந்து இறங்குதல் போன்ற நிலையில் வாணிகம் நடந்தேறியதை மதுரைக்காஞ்சி எடுத்துரைக்கிறது.'*[120]

**கிணறு வெட்டும் தொழில்**

*வலிமை பொருந்திய கையினை உடைய ஆடவர்கள் தோளிலே சோற்று முடிச்சுத் தொங்க, கிணறு வெட்டும் வேலை செய்தனர். பாறைகளை வெட்டும்போது*

பாறைகளில் தீப்பொறிப் பறக்க மிக்க உவரை உடைய கிணற்றினைத் தோண்டுவர் என்பதனை,

> தோட் பதன் அமைத்த கருங்கை ஆடவர்
> கனை பொறி பிறப்ப நூறி, வினைப் படர்ந்து
> கல்லுறுத்து இயற்றிய வல் உவர்ப் படுவில்[121]

என்னும் அகநானூற்று வரிகள் விளக்கும்.

**உண்டியும் குடி வகைகளும்**

நிலத்திற்கேற்ற வாழ்வுமுறை கொண்ட சங்க காலத்தில் மக்கள் அந்தந்த நிலத்தில் கிடைக்கும் பொருளைக் கொண்டு உணவு சமைக்கும் முறையைக் கையாண்டுள்ளனர். முல்லை நிலத்து ஆய்மகள் திணையரிசிச் சோற்றைப் பாலுடன் கலந்து விருந்தினர்க்கு வழங்கி, சோறு, கொம்மட்டி, மாதுளை, மாவடு, ஊறுகாய் போன்ற உணவு வகைகளைப் பயன்படுத்தியுள்ளாள். குறமகள் மூங்கில் அரிசியோடு புளியம்பழத்தின் புளிப்பையும், மோரினையும் கலந்து சோறாக்கியுள்ளாள். கள் விற்கும் வலையருடைய மகளிர் வாளைமீனை, வரால் மீனின் கறியோடு கலந்து ஆக்கிய உணவையும், கள்ளையும், கூத்தர்க்குக் கொடுத்தாள் என்னும் குறிப்புகளிலிருந்து சங்க கால மக்கள் குடிவகைக் கேற்ற உணவு வழக்கத்தைக் கொண்டிருந்துள்ளனர் என்பது புலனாகின்றன. சுவைக்கினிதாகிய குய்யுடை அடிசில்[122] எனவும், குய்குரன் மலிந்த கொழுந்துவை அடிசில்[123] என்னும் புறநானூற்றுப் பாடலடிகள் சங்க கால மக்களின் உணவு முறையை விளக்கி நிற்கின்றன.

**ஊன்துவை அடிசில்**

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் வம்பலர் என்பர் ‘ஊன் துவை அடிசில்’ என்னும் பிரியாணி சமைத்து உண்ட குறிப்பை அகநானூற்றில் தருகின்றார். ‘புலி அடித்துத் தின்ற ஆண்மானின் இறைச்சி கற்பாறைகளில் காய்ந்து கிடக்கின்றது. அதனை எடுத்து நெய்விட்டு வதக்கி மூங்கில் அரிசியை இட்டுத் தயிரை ஊற்றிச் சமைத்துத் தேக்கிலையில் வைத்து உண்டுள்ளனர்.’[124]

**மீன் வறுவல்**

தூண்டில் கோலினால் வரால் மீனைப் பிடிக்கும் பாணமகள், அம்மீனை வஞ்சி மரத்து விறகு கொண்டு சுட்டு, பன்னாடையால் வடித்து எடுக்கப்பட்ட கள்ளை உண்டு களித்திருந்த தன் தந்தைக்கு வாயில் உண்பிப்பதை,

தான்புனல் அடைகறைப் படுத்த வராஅல்

நார்அரி நறவுஉண்டு இருந்த தந்தைக்கு

வஞ்சி விறகின் சுட்டு, வாய் உறுக்கும்[125]

*என்று ஐயூர் முடவனாரின் பாடல் எடுத்துரைக்கின்றது.*

**புளிக்கறி**

வேளை வெண்பூ வெண்தயிர்க் கொளீஇ

ஆய்மகள் அட்ட அம்புலி மிதவை[126]

*தயிரில் வேளைக் கீரையின் வெள்ளிய பூவைச் சொரிந்து புளிக்கறி ஆக்கியதை மேற்கண்ட அடிகள் விளக்குகின்றன.*

**களி (உழுந்தங்களி)**

*திருமணத்தின் பொழுது இவ்வுணவு வகை பயன்படுத்தப்பட்டுள்ளது. களி வகையாக இது கொள்ளப்படுகிறது. உழுந்தம் பருப்பு இட்டு ஆக்கிய சோற்றைத் திருமணத்திற்கு வந்த உறவினருக்கும் மற்றவர்களுக்கும் சிறப்பு உணவாகக் கொடுத்தனர். இதனை,* உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை[127] *என்ற அடி சுட்டுகிறது.*

**அடை**

*பாகிலே செய்த அடையை மாங்குடி மருதனார்,* நல்வரி யிறாஅல் புரையு மெல்லடை[128] *என்று சுட்டிக்காட்டுகிறார். அடையானது நல்ல வரிகளை உடைய தேனிறாலை ஒக்கும் மெல்லிய அடை என்று இப்பாடலடிக்கு நச்சினார்க்கினியர் உரை விளக்கம் தருகிறார்.*

**பண்ணியம்**

*பண்ணியம் என்பதற்குப் பலவாய் வேறுபட்டப் பண்டம் என்று பொருள்படும். இதனை,*

பல்வேறு பண்ணியம் தழீஇத்திரி விலைஞர்[129]

*எனவும்,*

பல்வேறு பண்ணியக் கடைமெழுக் குறுப்ப[130]

*என்னும் அடிகள் விளக்கி நிற்கின்றன.*

**சோழநாட்டின் உணவு முறைகள்**

நெல்லைக் குற்றி வெள் உலையில் சமைத்தலை,

அடுமகள் முகந்த அளவா வெண்ணெல்

தொடிமாண் உலக்கைப் பருஉக்குற்று அரிசி

காடி வெள் உலைக் கொளீஇ[131]

என்ற அடிகள் எடுத்துக்காட்டுகின்றன. மேலும், புளிக்குழம்பு, வள்ளைக்கீரை, பாகற்காய், பழஞ்சோறு உண்ணுதல் ஆகிய உணவு வகைகள் சோழநாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**ஆடை அணிகலன்கள்**

சங்க கால மக்களின் ஆடை அணிகலன்கள் அவரவர்களின் வாழ்க்கைச்சூழல், செல்வம் மற்றும் தொழில் ஆகியவற்றிற்கேற்ப அமைந்திருந்தன. குறிஞ்சி, முல்லை நிலமக்கள் தழையாடையை விரும்பி அணிந்துள்ளனர். ஆடவர்கள் எப்பொழுதும் பருத்தி ஆடையை அணிந்துள்ள நிலையைக் காண முடிகிறது. திருமணம் மற்றும் விழாக் காலங்களில் புத்தாடை அணிந்துள்ளனர். இதனை, கொடும் புறம் வளைஇ கோடி கலிங்கத்து[132] என்ற அகநானூற்றுப் பாடலானது எடுத்துக்காட்டுகின்றது. மெய்க்காப்பாளர்களும், பிற அதிகாரிகளும், ‘மெய்ப்பை’ எனப்பட்ட தைத்த மேலங்கி அணிந்தனர். சங்க இலக்கியத்தில் ஆடையைக் குறிக்கக் கலிங்கம், துகில், அறுவை, ஆடை, பட்டு, மெய்ப்பை போன்ற பல சொற்கள் வழங்கப்பட்டுள்ளன.

பண்டைக் காலச் சமுதாய மக்கள் ஒப்பனைக்காகப் பல வகையான அணிகலன்களை அணிந்துள்ளனர். சங்க காலத்தில் அணிகலன்கள் பல இடம் பெற்றிருப்பினும், வளை, சிலம்பு, புலிப்பல்தாலி, வீரக்கழல் போன்றவை இன்றியமையாத அணிகலன்களாக விளங்கியுள்ளன. செல்வந்தர்கள் உயர்ந்த மற்றும் உயர்தர கற்களால் ஆன அணிகளைப் பயன்படுத்தியுள்ளனர். சாதாரண மக்கள் சங்கு மற்றும் கண்ணாடியாலான அணிகளை அணிந்துள்ளனர். அக்கால மக்கள் சிறுவர்களுக்கு புலிப்பல் கோத்த கழுத்தணியை அணிவித்ததை, புலிப்பல் தாலிப் புன்தலைச் சிறாஅர்[133] என்னும் அடி சுட்டுகிறது.

### பொழுதுபோக்கு விளையாட்டுகள்

*சங்க காலத்தில் வாழ்க்கையை முழுமையாகவும் நன்றாகவும் வாழ விரும்பிய மக்களுக்கு அவரது ஒழிந்த நேரங்களைக் கழிக்கப் போதுமான பொழுதுபோக்குகளும் மகிழ்வினைகளும் இருந்தன. இசை, நாட்டியம், நாடகம் போன்றவை கண்ணுக்கும் செவிக்கும் கருத்துக்கும் விருந்தாக அமைந்திருந்தன. மகளிர், மலர் கொய்தல், நீராடுதல், கழங்கு ஆடுதல், திணைப்புலம் காத்தல், வட்டாடுதல், பாவை செய்தல் போன்ற விளையாட்டுகளை மேற்கொண்டுள்ளனர். ஆடவர் வீரம் மிகுந்த விளையாட்டினை மேற்கொண்டுள்ளனர். முல்லை நிலத்து ஆடவர் ஏறுதழுவுதலை வீர விளையாட்டாகக் கொண்டிருந்தனர். இவர்கள், 'அரும்பு, பிடவம், காயா என்ற பூக்களைக் கண்ணியாகச் சூடிக் கொண்டு ஒரு சேரக் கூடி ஏறுதழுவினர் என்பதை முல்லைக்கலி தெரிவிக்கின்றது.'[134] மேலும் ஆடவர் மற்போர் செய்துள்ளனர். முக்காவல் நாட்டு ஆமூர் மல்லனைச் சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி மற்போரில் வென்றதை,*

> இன்கடுங் கள்ளின் ஆமூர் ஆங்கண்,
> மைந்துடை மல்லன் மதவலி முருக்கி
> ஒருகால் மார்பு ஒதுங்கின்றே; ஒரு கால்
> வருதார் தாங்கிப் பின் ஒதுங்கின்றே[135]

*என்னும் அடிகள் எடுத்துரைக்கின்றன.*

### மகளிர் விளையாட்டு

*மகளிர் மலர் கொய்தும் கூந்தலில் சூடியும் நீராடியும் பொழுது போக்காய் இளநீர், பனைநீர், கரும்பின்சாறு போன்றவற்றைக் குடித்தும் விளையாடினர். இதனை,*

> வண்டு பட மலர்ந்த தண் நறுங் கானல்
> முண்டகக் கோதை ஒண் தொடி மகளிர்
> இரும் பனையின் குரும்பை நீரும்
> பூங்கரும்பின் தீம் சாறும்
> ஓங்கு மணற் குவவுத் தாழை[136]

*என்ற பாடல் விளக்குகின்றது.*

**தொகுப்புரை**

சோழநாட்டு மன்னர் முதல் மக்கள் வரை பெரும்பான்மையும் சான்றாண்மையுடன் வாழ்ந்திருந்தனர்.

ஆணும் பெண்ணும் இயைந்து நிகழ்த்தும் இல்லறமே சிறந்தது என்பதை அக்காலச் சமுதாயம் உணர்த்தியுள்ளது.

விருந்தோம்பல் பண்பாடு சமுதாயத்தில் தனிமனிதக் கடமையாகப் போற்றப் பெற்றது. நள்ளிரவில் கூட முகம் குழையாது விருந்து ஓம்பியுள்ளனர்.

குடிக்கு விளக்காகிய குழந்தையைப் பெற்றெடுக்கும் தலைவி மிக உயர்வாகப் போற்றப்பெற்றாள். நன்மக்களைப் பெறுவோர் இம்மை, மறுமை பயன் அடைந்து குற்றமில்லாத வாழ்க்கையை அடைவார் என மக்கட்பேற்றின் முக்கியத்துவம் உணர்த்தப்பட்டது.

பரத்தையர் ஒழுக்கம் கூடாஒழுக்கமாக இருந்தபோதிலும் அது சங்க காலச் சமுதாயத்தில் பரவலாக காணப்பட்டது. பரத்தையர் ஆடல் பாடல்களில் சிறந்தும் தம்மை நாடி வரும் ஆடவரிடம் பொருளைப் பெற்றும் வாழ்ந்தமையை அறிய முடிகிறது.

சிலம்புகழி நோன்பு, சுவரில் வெண்கடுகு பூசுதல், சூளுரைத்தல், நடுகல் வழிபாடு, கைம்மை நோன்பு நோற்றல் போன்ற பழக்கவழக்கங்கள் இருந்துள்ளன.

மனிதர்கள் செய்யும் நல்வினை, தீவினைகளுக்கேற்ப துறக்கம், நிரையம் உலகத்திற்குச் செல்வர் என்ற நம்பிக்கை இருந்தன.

விரிச்சிக் கேட்டல், விலங்குகளின் இயல்பான நிலைகள் மாறுபடும் பொழுது அதனைத் தீநிமித்தமாகக் கருதுதல், நற்காரியங்கள் செய்வதற்கு நாளும் பொழுதும் பார்த்தல் போன்றவை நிமித்தக் கூறுகளாகக் காணப்பட்டன.

திருமணத்தின் பொழுது தாலிகட்டும் முறை இல்லை. ஆனால் முதுபெண்டிர் நால்வர், தலைவியை வாழ்த்தி நீ கணவன் விரும்பும் மனையாள் ஆகுக என்று கூறித் திருமணத்தை நடத்தியுள்ளனர்.

சமுதாயம் சிறப்புடன் திகழ்வதற்குப் பெண் முன்னேற்றம் ஒரு கூறாக அமையும். சோழர்காலப் பெண்களின் வாழ்க்கை முறை போற்றத்தக்கதாகவே இருந்துள்ளது.

அரசர்களால் புலவரும், புலவர்களால் அரசரும் சிறப்புப் பெற்றிருந்தமையைக் காண முடிகிறது. வறுமை வாழ்விலும் செம்மையான பண்புகளைப் பெற்று புலவர்கள் வாழ்ந்துள்ளனர்.

உழவு, தச்சு, மட்கலம் செய்தல் முதலானத் தொழில்கள் சிறப்பாக நடந்தேறியுள்ளன.

புளிக்குழம்பு, சுறாமீன், வள்ளைக்கீரை, பழஞ்சோறு ஆகியவை சோழநாட்டு உணவு வகைகளாக இருந்தமையை அறிய முடிகிறது.

வளை, சிலம்பு, புலிப்பல்தாலி போன்றவை இன்றியமையாத அணிகலன்களாக இருந்துள்ளன. சிறுவர்களுக்குப் புலிப்பல் தாலியை அணிவித்துள்ளனர்.

ஆடவர்கள் ஏறு தழுவுதல் போன்ற விளையாட்டினையும் பெண்கள் மலர் கொய்தல் போன்ற விளையாட்டினையும் மேற்கொண்டுள்ளனர்.

## அடிக்குறிப்புகள்

1. க.திலகவதி, சங்க கால மகளிர் வாழ்வியல், பக்.13-14.
2. புறம்., பா.62:10.
3. மேலது., பா.68:10.
4. காண்க, அகம்., பா.262: 1-12.
5. காண்க, புறம்., பா.312.
6. திருக்குறள், கு.எ.983.
7. பழமொழி நானூறு, பா.6.
8. பொருநராற்றுப்படை, அடி.230.
9. காண்க, பட்டினப்பாலை, அடிகள்.208-210.
10. க.த.திருநாவுக்கரசு (க.ஆ.), நாகரிகமும் பண்பாடும், தமிழ்நாடு, சங்க காலம் - வாழ்வியல், ப.184.
11. அ.ச.ஞானசம்பந்தன், "முன்னுரை", அகமும் புறமும், ப.5.
12. அகம்., பா.230:8-9.
13. நற்றிணை, பா.84:11-12.
14. புறம்., பா.41:14.
15. மேலது., பா.314:1-2.
16. நற்றிணை, பா.389:8-11.
17. தொல்.பொருள்.கற்பியல், நூ.150:3.
18. நற்றிணை, பா.142:9-11.
19. மேலது., பா.221:8.
20. மேலது., பா.120:10-12.
21. திருக்குறள், கு.எ.60.
22. நற்றிணை, பா.370:2-4.
23. அகம்., பா.66:1-6.
24. நற்றிணை, பா.221:10-13.
25. திருக்குறள், கு.எ.913.
26. க.திலகவதி, சங்க கால மகளிர் வாழ்வியல், ப.44.
27. காண்க, நற்றிணை, பா.330.

28. காண்க, அகம்., பா.216:12-16.

29. காண்க, மதுரைக்காஞ்சி, அடிகள்:571-576.

30. காண்க, நற்றிணை, பா.380:1-6.

31. எஸ்.ஜே.பாஸ்கல் கில்பர்ட், சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள், பக்.231-232.

32. காண்க, நற்றிணை, பா.370:2-3.

33. அகம்., பா.315:8.

34. குறுந்தொகை, பா.358:2-4.

35. மேலது., பா.53:6-7.

36. நற்றிணை, பா.206:7.

37. மேலது., பா.389:1.

38. புறம்., பா.261:15-18.

39. மேலது., பா.250:3-4.

40. காண்க, மேலது., பா.228:10-13.

41. மேலது., பா.335:10-12.

42. மேலது., பா.314:3-4.

43. கா.காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும், ப.103.

44. அகம்., பா.213:16-19.

45. புறம்., பா.27:7-9.

46. மதுரைக்காஞ்சி, அடிகள்:296-299.

47. புறம்., பா.294:7-9.

48. மேலது., பா.170:10-11.

49. பொருநராற்றுப்படை, அடிகள்:165-167.

50. புறம்., பா.166:6-9.

51. தொல்.பொருள். புறத்திணையியல், நூ.30:16-17.

52. மேலது., நூ.61:1.

53. காண்க, முல்லைப்பாட்டு, அடிகள்:6-11, 16-18.

54. குறுந்தொகை, பா.218:3-4.

55. புறம்., பா.41:3-6.

56. பி.எஸ்.சாமி, செந்தமிழ்ச்செல்வி, சிலம்பு-46, சங்க இலக்கியத்தில் கூகையும், குராலும், குடிஞையும், ஊமனும், ஆண்டலையும், ப.402.
57. மதுரைக்காஞ்சி, அடிகள்: 169-170.
58. புறம்., பா.356:1-4.
59. மேலது., பா.41:8-11.
60. சிலம்பு., அடைக்கலக்காதை, வரிகள்: 97-98.
61. புறம்., பா.35:6-7.
62. காண்க, மேலது., பா.386:20-25.
63. அகம்., பா.86:5-7.
64. சிலம்பு., மங்கலவாழ்த்துப் பாடல், வரிகள்: 41-42.
65. தொல்.பொருள்.கற்பியல், நூ.143.
66. காண்க, அகம்., பா.136.
67. அகம்., பா.385:17-18.
68. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல், ப.124.
69. பொருநராற்றுப்படை, அடி.109-110.
70. குறுந்தொகை, பா.342:6-7.
71. பட்டினப்பாலை, அடிகள்:23-25.
72. புறப்பொருள் வெண்பாமாலை, வாகைப்படலம், நூ.21.
73. புறம்., பா.308:8-11.
74. பட்டினப்பாலை, அடிகள்:218-220.
75. புறம்., பா.40:6-7.
76. மேலது., பா.35:27-29.
77. மதுரைக்காஞ்சி, அடிகள்:732-733.
78. புறம்., பா.42:2-5.
79. திருக்குறள், கு.எ.972.
80. தொல்.பொருள்.மரபியல், நூ.615.
81. திருக்குறள், கு.எ.30.
82. மதுரைக்காஞ்சி, அடி.656.
83. காண்க, புறம்., பா.166:4-5, 8-11.
84. மேலது., பா.9:1.

85. மதுரைக்காஞ்சி, அடிகள்:471:474.

86. புறம்., பா.13:1-4.

87. மேலது., பா.205:1-2.

88. மேலது., பா.57:9-10.

89. மேலது., பா.45:4-7.

90. மேலது., பா.47:4-7.

91. மேலது., பா.163:5-7.

92. காண்க, மேலது., பா.164:1-8.

93. காண்க, நற்றிணை, பா.142:1-8.

94. அகம்., பா.329:5-8.

95. புறம்., பா.325:5.

96. காண்க, மேலது., பா.33:1-6.

97. அகம்., பா.170:4-7.

98. அகம்., பா.257:13-14.

99. காண்க, மேலது., பா.213:5-8.

100. நற்றிணை, பா.212:5.

101. அகம்., பா.107:11-12.

102. அகம்., பா.119:8-9.

103. காண்க, மேலது., பா.89:12-16.

104. மதுரைக்காஞ்சி, அடிகள்.89-92.

105. அகம்., பா.194:1-5.

106. புறம்., பா.396:3-4.

107. பதிற்றுப்பத்து, பா.71:1-5.

108. புறம்., பா.87:3.

109. மதுரைக்காஞ்சி, அடிகள்.83-84.

110. புறம்., பா.32:8-10.

111. அகம்., பா.24:2.

112. மேலது., பா.216:5-7.

113. மேலது., பா.216:1.

114. மதுரைக்காஞ்சி, அடி.640.

115. மேலது., அடிகள்.481-483.

116. அகம்., பா.89:7-8.

117. காண்க, மதுரைக்காஞ்சி, அடிகள்.496-499.

118. புறம்., பா.31:9.

119. அகம்., பா.105:12-13.

120. காண்க, மதுரைக்காஞ்சி, அடிகள்.315-324.

121. அகம்., பா.79:1-3.

122. புறம்., பா.127:7.

123. மேலது., பா.250:1.

124. காண்க, அகம்., பா.107:5-10.

125. அகம்., பா.216:1-4.

126. புறம்., பா.215:3-4.

127. அகம்., பா.86:1.

128. மதுரைக்காஞ்சி, அடி.624.

129. மேலது., அடி.405.

130. மேலது., அடி.661.

131. புறம்., பா.399:1-3.

132. அகம்., பா.86:31.

133. புறம்., பா.374:9.

134. காண்க, முல்லைக்கலி, பா.101:4-9.

135. புறம்., பா.80:1-4.

136. மேலது., பா.24:10-14.

இயல் ஐந்து

# இலக்கியத் திறன்

# இயல் – 5

# இலக்கியத்திறன்

இலக்கியம் கற்குந்தோறும் சுவையைத் தரக்கூடிய தன்மையது. இலக்கியத்தை முதன்முறையாகப் படிக்கும் பொழுது ஏற்படும் இன்பமானது மீண்டும் மீண்டும் பெருகிக் கொண்டே செல்லும். ஏனெனில் படிக்கப் படிக்க அதில் சொல்லப்பட்டுள்ள கருத்தின் ஆழமும் நுட்பமும் நன்கு வெளிப்படும். இந்நுட்பத்தினை வள்ளுவப் பெருந்தகையாரும், 'தொட்டனைத் தூறும் மணற்கேணி' என்றார்.

இலக்கியம் படிப்போர்க்கு இன்பத்தையும் விழைவையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தும் நுண்ணிய ஆற்றல் கொண்டது. இவ்வகையில் சங்க இலக்கியங்கள் இத்தகையதோர் இயல்பினைக் கொண்டதாகத் திகழ்கிறது. இத்தகு சிறப்பு மிக்க சங்க இலக்கியப் பாடல்களுள் சோழநாட்டுப் புலவர்களின் பாடல்களில் காணலாகும் இலக்கியத் திறன்களான உவமை, உள்ளுறை, இறைச்சி, தொன்மம், பொருள்நயம், உளவியல் திறன் ஆகியவற்றை இவ்வியல் ஆய்வு செய்கிறது.

**உவமை**

ஒரு பொருளை விளக்க அதனோடு ஒப்புமை உடைய மற்றொரு பொருளை ஒப்பிட்டுக் கூறி விளக்குவதே உவமையாகும். உவமையானது புலனல்லாதவற்றையும் புலனாக வைக்கும். கேட்போர்க்கு அலங்காரமாகிய பொருளைத் தந்து இன்பம் பயப்பதாகும். இத்தகு சிறப்புடைய உவமையைக் குறித்துத் தொல்காப்பியர்,

உவமப் பொருளின் உற்றதுணருந்
தெளி மருங்குளவே திறத்தியலான[1]

என்னும் நூற்பா வாயிலாக விளக்குகிறார். பொதுவாகப் பொருளின் சிறப்பை வலியுறுத்த உவமை அமைக்கப்படுகிறது. அப்பொருளின் உயர்வினைக் காட்ட அதனின் உயர்ந்த பொருளையே வரையறையாக அமைக்க வேண்டியுள்ளது. எனவே சொல்லப்படுகின்ற உவமையானது பொருளைவிட உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்பதை உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை[2] என்னும் நூற்பா விளக்குகிறது.

**உவமையின் நிலைக்களன்**

உயர்ந்த பொருளால் அமைக்கப்படுகின்ற உவமை சிறப்பு, நலன், காதல், வலிமை ஆகிய நான்கையும் நிலைக்களனாகக் கொண்டு வரும் என்பதை,

> சிறப்பே நலனே காதல் வலியோடு
> அந்நாற் பண்பும் நிலைக்களம் என்ப[3]

என்னும் நூற்பா வாயிலாக உணரமுடிகிறது.

சங்க இலக்கிய உவமைகள் சொல்லாலும், பொருளாலும் தனிமரபுகள் பெற்று விளங்குகின்றன. "ஒப்புமை செய்யப்படும் பொருள்கள் இரண்டினை எடுத்துக்கொண்டு எக்காரணம் பற்றி இவை ஒப்புமை செய்யப் பெற்றன என்று ஆராய்ந்தால், ஏதோ ஒரு பண்பு பற்றி மட்டும் செய்யப்பட்டிருப்பதை அறியலாம். முற்றும் வேறுபட்டதாகக் காணப்படும் இரண்டு பொருள்களில் ஓர் இயல்பு மட்டும் இரண்டுக்கும் பொதுவாக அமைந்து விடுமாயின் அதுவே போதுமானது"[4] என்று ஒப்புமைக்குரிய பொருள்களின் இயல்பு குறித்து அ.ச.ஞானசம்பந்தன் கூறுகின்றார்.

**உவமை வகைகள்**

தொல்காப்பியர் நான்கு வகை உவமைகளைக் குறிப்பிடுகிறார். அவை:

1. வினை உவமம்
2. பயன் உவமம்
3. மெய் உவமம்
4. உரு உவமம்

என்பனவாகும். இதனை,

> வினை பயன் மெய் உரு என்ற நான்கே
> வகை பெற வந்த உவமைத் தோற்றம்[5]

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

**வினை உவமம்**

உவமையிலும் பொருளிலும் அமைகின்ற பொதுத்தன்மை வினை அடிப்படையில் அமையுமானால் அது வினை உவமம் ஆகும். வினையாவது நீட்டல், முடக்கல், விரித்தல், குவித்தல் முதலான பொருள்களைக் கொண்டு வரும்.

(எ.கா) புலி போலப் பாய்ந்தான்.

**பயன் உவமம்**

உவமையிலும் பொருளிலும் அமையும் பொதுத்தன்மை நன்மை, தீமை போன்ற பயன்களின் அடிப்படையில் அமையுமானால் அது பயன் உவமம் எனப்படும். பயனாவது நன்மை, தீமையைக் கொண்டு அமையும்.

(எ.கா) மாரி அன்ன வண்கை

**மெய் உவமம்**

உவமையிலும் பொருளிலும் அமையும் பொதுத்தன்மை அளவு, வடிவு போன்றவற்றின் அடிப்படையில் அமைந்து வந்தால் அது மெய் உவமம் ஆகும். வடிவாவது வட்டம், சதுரம், கோணம் முதலான பொருள்களைக் கொண்டு வரும்.

(எ.கா) துடி போலும் இடை

**உரு உவமம்**

உவமையிலும் பொருளிலும் வருகின்ற பொதுத்தன்மை நிறம், பண்பு போன்றவற்றின் அடிப்படையில் அமையுமானால் அவை உரு உவமம் எனப்படும். நிறமாவது வெண்மை, பொன்மை முதலான வண்ணங்களைக் கொண்டு அமையும்.

(எ.கா) தளிர் போலும் மேனி

இவ்வாறு தொல்காப்பியர் குறித்த உவமை வகைகளின் அடிப்படையில் சோழநாட்டுப் புலவர்கள் பாடிய பாடல்களில் அமைந்து கிடக்கும் உவமை நயங்களைக் காணலாம்.

**வினை உவமை**

மனிதன் செய்கின்ற பணிகள் அனைத்தும் செயல் அல்லது தொழில் எனப்படும் வினை வழியே அமையும். உறையூர் முதுகூத்தனார் வீரன் ஒருவனின் செயலாக்கத்தை உவமைப்படுத்துகிறார். குளிர்ச்சி மிகுதலால் சிறிது பொழுதே இருக்கும் மாலைப் பொழுதில் சிறிய தீயைப் பெறுவதற்காக தீக்கடைக்கோலால் தீயை உண்டாக்குகின்ற தொழில் அல்லாத பிறதொழிலைச் செய்ய இயலாத கல்லா இடையனைப்போல வீரன் ஒருவன் எதனைக் கருதினானோ அச்செயலை உண்டாக்குவதில் வல்லவன் என்பதை,

புல்லென் மாலைச் சிறுதீ ஞெலியும்
கல்லா இடையன் போல, குறிப்பின்
இல்லது படைக்கவும் வல்லன்[6]

என்னும் புறநானூற்றுப் பாடல் எடுத்தியம்புகிறது.

**பெருஞ்சேரல் இரும்பொறையின் வீரம்**

பெருஞ்சேரல் இரும்பொறை வலிய புலியையும் பெரிய யானையையும் கொல்லுகின்ற அரிய வரிகளை உடைய சிங்கத்தைப் போன்று வலிமை உடையவன் ஆவான். இதனை,

இரும்புலி கொன்று பெருங்களிறு அடூஉம்
அரும் பொறி வயமான் அனையை[7]

என்று பதிற்றுப்பத்து தெரிவிக்கின்றது.

**பிட்டங் கொற்றனின் ஆற்றல்**

இரும்பைப் பயன்படுத்துகின்ற வலிய கையை உடைய கொல்லன் உலைக்களத்திலே விளங்கும் உலைக்கல் போலும் வலிய ஆண்மையை உடையவன் பிட்டங் கொற்றன் ஆவான். இதனை,

இரும்பு பயன்படுக்கும் கருங்கைக் கொல்லன்
விசைத்து எறி கூடமொடு பொரூஉம்
உலைக்கல் அன்ன வல்லாளன்னே[8]

என்னும் பாடல் எடுத்துரைக்கிறது.

**நலங்கிள்ளியின் ஆற்றல்**

நலங்கிள்ளி பகைவரை வென்று அவர் நாட்டை இரவலர்க்குப் பரிசிலாகத் தரும் ஆற்றல் உடையவன். ஆனால் சோழநாட்டைப் பகைவர் இரவலர்க்குத் தரக் கருதினால் இயலாது. சோழநாடு அவரால் வெல்லுதற்கரிது. எனவே சோழநாட்டைப் பிறர்க்குத் தரக்கூடிய கருத்து சோழனுக்கே உரிய வலிமை என்பதும், அவ்வலிமையின் கருத்தாற்றல், எதனைப் போன்றது எனின் குயவர் குலச் சிறுவர்கள், பானை செய்வதற்கு உதவும் சக்கரத்தில் வைத்த பசிய மண்ணின் கனத்த திரள் போன்றது என்பதை,

> வேட்கோச் சிறாஅர் தேர்க்கால் வைத்த
> பசுமண் குரூஉத் திரள் போல அவன்
> கொண்ட குடுமித்து இத் தண்பனை நாடே[9]

*என்று புறநானூற்றுப் பாடல் விளக்குகிறது.*

## பிட்டங் கொற்றனின் வீரச் சிறப்பு

*வெற்றி வேலையுடைய பல இளங்கோசர்களாகிய வீரர்கள், படைக்கலப் பயிற்சி எடுக்கும் காலத்தில் வேல் எறிந்து பழகும் அகன்ற இலையை உடைய முள்ளு முருங்கை மரத்தால் செய்யப்பட்ட கம்பத்தை இலக்காகக் கொள்வர். அதுபோல பகைவர் வெல்லுதற்குரிய குறிக்கோளை உடைய வெற்றியை உடையவனே! நீ நிலைபெற்று வாழவேண்டும் என்று அவனின் வீரச் சிறப்பினை,*

> இளம்பல் கோசர் விளங்குபடை கன்மார்
> இகலினர் எறிந்த அகல்இலை முருக்கின்
> பெரு மரக் கம்பம் போல
> பொருநர்க்கு உலையா நின் நலன் வாழியவே[10]

*என்னும் பாடல் வரிகள் விளக்குகிறது.*

## நெடுஞ்செழியனின் யானைப்படை

*பெரிய கடலில் மிகுந்த ஆழமுடைய பரப்பிடத்தில் காற்றால் செலுத்தப்பட்ட மரக்கலம் நீரை விலக்கி முன்னேறும். அதுபோல நெடுஞ்செழியனின் வலிமையான யானைப்படை போர்க்களத்தில் முன்னேறிச் செல்லச் செல்ல பகைவீரர் அஞ்சி அகன்றதால் அப்போர்க்களத்தின் இடம் அகன்றது என்பதை,*

> நளிகடல் இரும் குட்டத்து
> வளி புடைத்த கலம் போல
> களிறு சென்று களன் அகற்றவும்[11]

*என்னும் பாடல் உணர்த்துகிறது.*

## பயன் உவமை

*பிறர்க்கு செய்கின்ற உதவியின் பொருட்டுப் பயன் அமைந்து வரும் உவமையாகும். இது நன்மை, தீமை என்ற இரு வழி பாற்படும். எனினும் பெரும்பான்மைப் பயன் என்பது நன்மைக் கருதியே அமையும்.*

வீரன் ஒருவனின் கொடைச் சிறப்பினை, உறையூர் முதுகூத்தனார் மிக அழகாக உவமைப்படுத்தியுள்ளார். இல்லாள் தன்னிடம் உள்ள சிறிதளவு உணவினைப் பலருக்கும் முறையறிந்து வழங்குதல் போல, சிற்றூரில் வாழும் வீரன் ஒருவன் வரிசையறிந்து இரவலர்க்கு ஈதலில் சிறந்தவன் என்பதை,

தவச்சிறிது ஆயினும் மிகப்பலர் என்னாள்
நீள் நெடும் பந்தர் ஊண்முறை ஊட்டும்
இற்பொலி மகடுப் போல, சிற்சில
வரிசையின் அளிக்கவும் வல்லன்[12]

என்னும் பாடல் விளக்கும்.

## அதியமான் எழினியின் கொடை

அதியமான் எழினி போர்க்களத்தே வீழ்ந்தான். அவனால் புரக்கப்பட்ட எல்லா இரவலர்களும் பெற்ற தாயால் கைவிடப்பட்ட உண்ணாத குழந்தையைப் போல இடந்தோறும் வருந்தி நிற்கின்றனர். அவனை இழந்த உலகமானது பசியால் வருந்தி மிக்கத் துன்பமுற்றுக் கிடப்பதை,

பொய்யா எழினி பொருது களம் சேர
ஈன்றோள் நீத்த குழவி போல
தன் அமர் சுற்றம் தலைத்தலை இணைய
கடும்பசி கலக்கிய இடும்பை கூர் நெஞ்சமோடு
நோய் உழந்து வைஇய உலகினும்[13]

என்று புறநானூற்றுப் பாடல் எடுத்துரைக்கிறது.

## குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனின் ஈகை

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் இரவலர்க்குப் பாம்பின் தோல் போன்ற பல வேலைப்பாடுகளுடன் நிறைந்த ஆடையோடு, மழை போன்ற கொடையை வழங்கி இளவேனிற் காலத்து வெம்மை போல இருந்த என் வறுமை நீங்குமாறு கொடை நல்கினான் என்பதைத் தாயங்கண்ணனார்,

பாம்பு உரித்தன்ன வான்பூங் கலிங்கமொடு
மாரிஅன்ன வண்மையின் சொரிந்து
வேனில் அன்ன என் வெப்பு நீங்க
அருங்கலம் நல்கியோனே[14]

என்ற பாடலில் உவமை மூலம் உணர்த்துகிறார்.

**ஆய் ஈகைத் திறன்**

உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் விறலியை ஆற்றுப்படுத்தும் விதமாக ஆயைக் காணச் செல் என்று பாடும் பொழுது, அவனின் மழை போன்ற கொடைத் தன்மையினை,

> மாரி அன்ன வண்மைத்
> தேர் வள் ஆயைக் காணிய சென்மே[15]

என்று வியந்து போற்றுகிறார்.

**மெய் உவமை**

புலவர்கள் தாங்கள் கூறவந்த கருத்தின் பொருளுக்கு இணைய வடிவம் கொண்ட பொருள்களை உவமைப்படுத்துவது மெய் உவமையாகும். தலைவனும் தலைவியும் உடன்போக்குச் செல்லும் பொழுது, தலைவிக்கு வழியிடை வருத்தம் ஏற்படுகிறது. அப்பொழுது தலைவன் தலைவியிடம் மேகத்தைக் கண்டு நீலமணி போன்ற கழுத்தினை உடைய மயில் ஆடும். அவ்வாறு ஆடும் மயில் போல மலர் புனைந்த நின் கூந்தல், வீசும் காற்றில் விரிந்து பறக்குமாறு சிறிது விரைந்து செல்க என்று கூறுவதனை,

> மணிபுரை எருத்தின் மஞ்ஞை போல, நின்
> வீ பெய் கூந்தல் வீசு வளி உளர
> ஏகுதி . . . . . . . . . . . . . . . .[16]

என்னும் அடிகள் விளக்கும்.

**ஆம்பல்**

ஆம்பல் மலர் பிடியானையின் செவிபோன்ற பசுமையான இலைகளையும், குளத்தில் வாழும் அழகிய கொக்குப் போன்ற கூம்பிய மொட்டுக்களையும் உடையது என்பதை,

> முயப்பிடிச் செவியின் அன்ன பாசடை
> கயக் கணக் கொக்கின் அன்ன கூம்பு முகை
> கணைக்கால் ஆம்பல்[17]

என்னும் பாடல் விளக்கும்.

**முயல் கண்**

*சிறிய இலைகளை உடைய நெல்லியின் காய் போன்ற குறுகிய விழிக்கண்ணை உடையது குறுமுயல் என்பதை,*

**சிறியிலை நெல்லிக் காய் கண்டன்ன**

**குறுவிழிக் கண்ண கூரல்அம் குறுமுயல்[18]**

*என்னும் அகநானூற்றுப் பாடல் கூறுகிறது.*

**வெள்ளெலி**

*குன்றி மணி போன்ற கண்களையும், நல்ல நிறத்தையுடைய மயிரினையும், மெல்லிய கால்களையும் உடையது வெள்ளெலி என்பதை,*

**குன்றி அன்ன கண்ண, குரூஉ மயிர்**

**புன்தாள் வெள்ளெலி[19]**

*என்னும் அடிகள் உணர்த்துகிறது.*

**எலி**

*போரிடுகின்ற குணம் உடைய குறும்பூழ்ப்பறவை, 'இளவேனிற் பருவத்தில் மலரும் கோங்கமரத்தின் மொட்டுகளைப் போல விளங்குகின்ற வளைந்த காதினை உடைய எலியைப் பிடிப்பதற்கு வன்மையான நிலத்தின் கண் உள்ள வரகுப் போரில் பதுங்கிக் கொண்டிருக்கும்'[20] என்னுமிடத்து எலியின் தோற்றத்தினைப் புறநானூற்றுப் பாடல் உவமைப்படுத்துகிறது.*

**உரு உவமை**

*உரு எனப்படுவது நிறம், பண்பு முதலியவற்றை உணர்த்தி வருவதாகும். புலவர்கள் கூறவந்த பொருளுக்கேற்ப, நிறத்தையும், அதன் பண்புத் தன்மையினையும் உவமையின் வழியாக உணர்த்தியுள்ளனர்.*

**இருவாட்சி மலர்**

*தலைவி மாலையாகச் சூடியிருந்த இருவாட்சி மலர் காக்கையின் சிறகு போன்று அடர்ந்தும் கருமை நிறத்துடனும் காணப்பட்டது என்பதை,*

**கானக் காக்கை கலிச்சிறகு ஏய்க்கும்**

**மயிலைக் கண்ணி பெருந்தோட் குறுமகள்[21]**

*என்னும் புறநானூற்றுப் பாடல் எடுத்துரைக்கிறது.*

**கார்கால மலர்கள்**

வினைமுற்றி மீண்டு வரும் தலைமகன் கார்காலத்தேப் பூத்துக் கிடக்கின்ற பல்வேறு மலர்களின் நிறங்களை எடுத்துரைக்கின்றான். 'நீலமணி போன்று கரிய நிறமுடைய காக்கணங்கொடி மலர்கள், புதல்தோறும் காந்தள் மலருடன் மலர்ந்து அழகு செய்யும். பொன்னைப் போன்ற கொன்றைமலர் பொற்காசினைத் தொங்க விட்டாற் போல சரமாக மலர்ந்திருக்கும்'[22] என்று நற்றிணைப் பாடல் மொழிகின்றது.

**செம்மண் நிலம்**

செவ்வண்ணம் தீட்டி வைத்தாற்போல செம்மண் நிலம் காட்சியளித்தது. இதனை, செய்து விட்டன்ன செந்நில மருங்கில்[23] என்னும் அடி உணர்த்துகிறது.

**காயா மலர்**

கோடு கோடாகக் கிடக்கின்ற மணற்பரப்பில் காயாவின் உதிர்ந்து வீழ்ந்த பழம்பூக்கள் நீலமணியுடன் செம்பவளம் கலந்தது போல் இருந்தன என்பதை,

> . . . . . . . . . . . . . . . . . வரி மணல்
> மணிமிடை பவளம் போல அணிமிகக்
> காயாஞ் செம்மல்[24]

எனவும்,

> மணிமண்டு பவளம் போல காயா
> அணிமிகு செம்மல் ஒளிப்பன[25]

எனவும் அகநானூற்றுப் பாடல்கள் சுட்டுகின்றன.

**சங்க இலக்கிய உவமைகளின் பொருள் மரபுகள்**

சங்க இலக்கிய உவமைகள் குறிப்பிட்ட பொருள் மரபுகளைக் கொண்டு விளங்குகின்றன. இவ்வாறு வருகின்ற உவமைச் செய்திகளில் அக்காலத்து மக்களின் எண்ண நினைவுகளும், புலவர்களின் மனநிலையும் புலனாகின்றன. உவமையில் இடம்பெறும் பொருள் மரபுகளின் சிறப்பியல்புகளைக் கொண்டு ரா.சீனிவாசன், "உவமையில் இயற்கைச் செய்திகள், உவமையில் கலைச் செய்திகள், உவமையில் அறவியல் செய்திகள், உவமையில் கடவுளர் செய்திகள், உவமையில் வரலாற்றுச் செய்திகள்"[26] என வகைப்படுத்தியுள்ளார்.

**உவமையில் இயற்கை**

நிலம், நீர், தீ, காற்று, விசும்பு, விண்மீன், ஞாயிறு, திங்கள், மின்னல், இடி, மழை, காடு, கடல், ஆறு, குளம், அருவி முதலிய பருப்பொருள்களையும் செடி, கொடி, விலங்கு, பறவைகள் போன்ற உயிர்பொருள்கள் உயிர் அல்லாத பொருள்களும் இயற்கைப் பொருள்கள் என்பர். சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள உவமைகளில் இத்தகைய இயற்கைப் பொருள்கள் மிகுதியாகக் காணப்படுவதை அறியமுடிகிறது. இவ்வகையில் சோழநாட்டுப் புலவர்களின் பாடல் வழி காணப்படும் இயற்கை உவமைகளைக் காணலாம்.

"பருப்பொருள் ஆகிய நிலம், நீர், தீ, காற்று, விசும்பு ஆகியவற்றை, நுண்பொருள்கள் ஆகிய நட்பு, ஆற்றல், அறிவு, பொறுமை, சூழ்ச்சி, வலிமை, ஆக்கல், அழித்தல் முதலியவற்றிற்கு உவமைப்படுத்துதலும் அக்கால மரபாக விளங்கியது. இவைப் பெருகிய வழக்காகும்"[27] என்பர்.

பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய நன்மாறனின் வீரத்தைப் பாராட்டும் ஐயூர் முடவனார்,

நீர்மிகின் சிறையும் இல்லை, தீ மிகின்
மன் உயிர் நிழற்றும் நிழலும் இல்லை
வலிமிகின் வலியும் இல்லை ஒளிமிக்கு
அவற்றோர் அன்ன சினப்போர் வழுதி[28]

என்று குறிப்பிடுகிறார். நீர், தீ, காற்றின் வலிமையைப் போலவே மிகுந்த ஆற்றலும், சினமும் உடையவன் மாறன் வழுதியாவான் என்பதை மேற்கண்ட உவமை உணர்த்துகிறது.

'நிலம், நீர், காற்று, தீ, விசும்பு ஆகியவற்றின் வாழ்நிலைகளை அளக்கும் தன்மை உடையோரிடம் அடக்கம் என்பதில்லை. ஆனால் அத்தகையோரைக் காட்டிலும் வலிமையிலும் அடக்கத்திலும் சிறந்தவன் நலங்கிள்ளி'[29] என்று பருப்பொருளின் வாயிலாக உவமைப்படுத்தி உறையூர் முதுகண்ணன் சாத்தனார் பாராட்டுகிறார்.

காற்றோடு எரி நிகழ்ந்தன்ன செலவின்
செருமிகு வளவ! நிற்சினைஇயோர் நாடே[30]

என்று சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனின் ஆற்றல், போர்க்களத்தில் காற்றும் நெருப்பும் கலந்து சுழல்வது போல இயங்கும் என்று கோவூர் கிழார் பாடுகிறார்.

*தீ*

தீயிலே அழிவினையும், ஆற்றலையும் கண்டதோடு அதன் வழியே நிறத்தையும், தோற்றத்தையும் கண்டு அதனை மலர்களுக்கும் தளிர்களுக்கும் உவமைப்படுத்தும் வழக்கம் சங்க காலத்தில் இருந்துள்ளது. சோழநாட்டுப் புலவர்களின் பாடல்களிலும் இத்தகைய உவமை நலனைக் காண முடிகிறது. ஆவூர்கிழார் மகனார் கண்ணனார் இயற்றிய அகநானூற்றுப் பாடலில்,

**நல் இணர் வேங்கை நறுவீ கொல்லன்**
**குருகு ஊது மிதிஉலைப் பிதிர்வின் பொங்கி**
**சிறுபல் மின்மினி போல[31]**

என்பதில் வேங்கை மலர் மரத்திலிருந்து சிதறி விழும் காட்சியினைக் கொல்லன் உலைக்களத்திலே ஊதும் தீப்பொறி போல பொங்கி மின்மினி பூச்சி போல் கீழே விழுந்தன என்று உவமைப்படுத்துகிறார்.

அழல் ஏர் செயலை அம்தழை அசைஇயும்[32] என்னும் உவமையில் திணைப்புனம் காக்கும் குறமகள் தழையிலான ஆடையினை உடுத்தி காக்கின்றாள் என்றவிடத்து, அவள் அணிந்த அசோகு மரத்தின் அழகிய தழையிலான ஆடை தீயின் கொழுந்து போன்று இருந்தது என்று உவமைப்படுத்தப்பட்டுள்ளது. வயலில் நெல் விளைந்துக் கிடக்கும் காட்சியினை,

**அழல் நுதி அன்ன தோகை ஈன்ற**
**கழனிநெல் ஈன் கவை முதல் அலங்கல்[33]**

என்னும் அடிகள் விளக்குகிறது. தீயின் கொழுந்தினைப் போன்ற தோடுகளை ஈன்று நெல் பலவாகக் கிளைத்து கிடந்தது என்பதே இவ்வுவமையாகும்.

நெருப்புக் கொழுந்து விட்டு எரிந்தாற் போன்று சிவந்த தாமரைப் பூக்கள் வயல்களில் பூத்துக் கிடக்கும் என்பதை, எரி அகைந் தன்ன தாமரைப் பழனத்து[34] என்னும் அடிகள் குறிப்பிடுகிறது.

**விசும்பு**

*ஐயூர் முடவனார் தன்னால் நடக்க இயலாத காரணத்தால் தோன்றிக்கோன் என்னும் குறுநில மன்னனை இரந்து தான் சோழநாடு செல்லவேண்டும் என்று வண்டி பூட்டுவதற்கு ஆநிரைகள் வேண்டிப் பாடுகிறார். தோன்றிக்கோனும் அவருக்குப் பலவாகிய ஆநிரைகளை அளிக்கின்றான். அந்நிரைகளைப் பெற்ற புலவர் அவனை நோக்கி வானத்தில் விண்மீன்கள் பூத்தாற்போல அழகிய நிறத்தை உடைய பல ஆநிரைகளைத் தனக்கு வழங்கினான் என்பதை,*

**. . . . . . . . . . . . . . . . விசும்பின்**
**மீன்பூத்து அன்ன உருவப் பல்நிரை**
**ஊர்தியொடு நல்கியோனே[35]**

*என்று பாடுகிறார்.*

*விசும்பில் காணப்படும் மேகக் கூட்டங்களை யானைக்கு உவமைப்படுத்தியதை,*

**இரவலர் வரூஉம் அளவை, அண்டிரன்**
**புரவு எதிர்ந்து தொகுத்த யானை போல**
**உலகம் உவப்ப, ஓது அரும்**
**வேறுபல் உருவின், ஏர்தரும் மழையே[36]**

*என்னும் அடிகள் விளக்குகிறது.*

*வலமாக எழுந்து சென்ற சூல்கொண்ட கரிய மேகங்கள் வானைப் பிளப்பது போல மின்னின என்பதை,*

**பழங்கண் கொண்ட கொழும்பல் கொண்மூ**
**போழ்ந்த போலப் பல உடன் மின்னி[37]**

*என்னும் அகநானூற்றுப் பாடல் எடுத்துரைக்கிறது.*

**திங்கள்**

*இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர் தலைவன் தலைவியின் காதல், தன்னை வயப்படுத்தியது என்று அவளின் அழகுணர்ச்சியைப் பாராட்டுமிடத்து திங்கள் பற்றிய உவமை வெளிப்படுகிறது.* இதனை,

**மாக்கடல் நடுவண் எண்நாள் பாக்கத்துப்**
**பசுவெண் திங்கள் தோன்றியாங்குக்**
**கதுப்பு அயல் விளங்கும் சிறு நுதல்[38]**

என்னும் குறுந்தொகைப் பாடல் விளக்குகிறது. அதாவது எட்டாம் நாளின் வெள்ளிய பிறைத் திங்கள் போல அவள் நெற்றி விளங்கியது என்பதாகும்.

**கடல்**

சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனின் வெண்கொற்றக் குடையைப் புகழுமிடத்துக் கடல் உவமைப்படுத்தப்படுகிறது. முந்நீர் நாப்பண் திமில் சுடர் போல[39] என்னும் அடியில் சோழனின் வெண்கொற்றக்குடை கடல் நடுவே படகினில் வைத்த விளக்கு போல விளங்குகிறது என்பதாகும்.

**கருமணல்**

மலைவீழ் அருவி, ஆற்றின் கருமணல், ஓடும் ஆறு போன்ற இயற்கைக் கூறுகளும் உவமையாக விளங்கியுள்ளன. அற்று அற்று ஒழுகும் ஆற்றின் கருமணல் மிகுதியை அறல் எனக் கூறியுள்ளனர். பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிடம் தலைவன் செலவழுங்கியவிடத்து,

அரிசில் அம் தண் அறல் அன்ன இவள்
விரி ஒலி கூந்தல் விட்டு அமைகலனே[40]

என்று தலைவியின் கூந்தலை அரிசிலாற்றின் கருமணலுக்கு ஒப்பிட்டு, அக்கூந்தலிடத்து துயில்வதனைக் கைவிட்டுச் சிறுபொழுதும் இருக்க மாட்டேன் என்று கூறுகிறான்.

**ஆறு**

ஓடும் ஆறு அதன் பரப்பாலும் அகலத்தாலும் தெருக்களுக்கு உவமைப்படுத்தப்பட்டது. இதனை, ஆறுகிடந்தன்ன அகல் நெடுந்தெருவில்[41] என்னும் வரி விளக்குகிறது.

**யானை**

பருப்பொருள்களாக நிலம், நீர், காற்று போல செடி, கொடி, மரம், விலங்கு, பறவைகள் என்னும் இயற்கை வாழ் உயிரினங்களின் வாழ்வினையும் சங்க இலக்கியங்கள், உவமையாக எடுத்துரைக்கின்றன. பாலை நிலத்தின் கொடுமையைக் கூறுமிடத்து அங்கு வாழும் யானையின் வாழ்வினைக் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார் தாம் பாடிய அகநானூற்றுப் பாடலில் மிக அழகாக உவமைப்படுத்துகிறார். காட்டு யானைக்குச் சமணத்துறவியர் உவமையாகக்

கூறப்பட்டுள்ளனர். 'உணவு உண்ணாமையால் வாடிய வயிற்றையும், நீராடாத நோன்பையும் உடைய சமணத் துறவியர் போல் பாலை நிலத்தில் உணவின்மையால் உண்ணாமலும், நீர் இல்லாமையால் நீராடாமலும் காட்டு யானைகள் அழகு அழிந்துக் காணப்படுகின்றன'[42] என்ற உவமை கூறப் பெற்றுள்ளது.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனின் படையில் ஆவூர் மூலங்கிழார் மலைபோன்று இளங்கன்றாகிய யானைமீது விண்ணைத் தடவுவது போலப் பல நிறங்கள் ஆகிய கொடிகள் அசைந்து விளங்கும் என்பதை,

> **வரை புரையும் மழகளிற்றின் மிசை**
> **வான் துடைக்கும் வகைய போல[43]**

என்னும் அடிகளில் குறிப்பிடுகிறார்.

**மான்**

உழுத சாலிடத்து விதைத்த விதைகள் முளைத்து வளர்ந்தன. அத்தகைய இடத்தில் உழவர்கள் தங்கள் தலைகளிலே கொம்புடைய ஓலைக் குடையைத் தலையில் கவிழ்த்துக் கொண்டு நிற்கின்ற காட்சியினை,

> **இரலை நல்மானினம் பரந்தவை போல்**
> **கோடுடைத் தலைக்குடை சூடிய வினைஞர்[44]**

என்று இடைக்காடனார் விளக்குகிறார். நல்ல கலைமானின் கூட்டம் பரந்து நிற்பதைப்போல உழவர்கள் நின்றனர் என்பது இதன் பொருளாகும்.

**உவமையில் கலை**

ஒரு நாட்டின் நாகரிகம் அந்நாட்டு மக்களால் போற்றப்படும் கலைகளால் விளங்கும். சங்க காலப் புலவர்கள் கலையுணர்ச்சி மிக்கவர்களாகத் திகழ்ந்துள்ளனர். யாழ், குழல், முழவு, முரசு, வயிர், வங்கியம் முதலிய இசைக்கருவிகளிலும், ஆடற்கலையிலும் நுட்ப உணர்வும், அறிவுத் திறனும் மிக்கவர்களாக விளங்கினார்கள் என்பது அவர்கள் அமைத்த உவமைகளின் வழி அறியமுடிகிறது.

**கிணைப்பறை**

சோழன் நலங்கிள்ளியைப் பாடிய கோவூர் கிழார் அவனின் வீரச்சிறப்பினைக் கூறுமிடத்து இப்பறை பற்றிக் கூறுகிறார். நெட்டியின் காம்பு போன்று தெளிந்த

கண்ணை உடைய பறை பலரும் அறிய என்னுடையதாகும். அது கிணையிடத்து கட்டப்பட்டிருக்கும். அதனை அடிக்கும் நுண்ணிய கோலானது அடிக்குத்தோறும் அதன்கண் நடுங்குவது போல உன் பகைவர் கேட்குந்தோறும் மனம் நடுங்குமாறு பிறவேந்தருடைய அவையின் கண் ஏனையோரை வென்று கொள்ளப்பட்ட தேர்களைச் சொல்லிப் பாடுவேன் என்று கூறுவதனை,

> கிடைக்காழ் அன்ன தெண்கண் மாக்கிணை
> கண் அகத்து யாத்த நுண் அரிச் சிறுகோல்
> எறிதொறும் நுடங்கி யாங்கு நின்பகைஞர்
> கேட்டொறும் நடுங்க ஏத்துவென்
> வென்ற தேர் பிறர் வேத்தவை யானே[45]

என்னும் அடிகள் விளக்குகிறது.

### யாழ்

பொன்னை உருக்கி ஒழுகவிட்டாற் போல முறுக்கு அடங்கிய நரம்பினையும், மின்னலைப் போல ஒளிவிடும் நிறம் ஊட்டப்பட்ட தோலினையயம், மிஞிறு என்னும் வண்டின் சாதி எழுப்பும் குரல் இசை போன்று ஒலியையும் உடைய சிறிய யாழ் என்பதை,

> பொன்வார்ந்தன்ன புரி அடங்கு நரம்பின்
> மின்நேர் பச்சை மிஞிற்றுக் குரல் சீறியாழ்[46]

என்னும் அடிகளில் யாழ் என்னும் இசைக்கருவியின் தோற்றம் குறித்து உவமைப்படுத்தப்பட்டுள்ளது. மேகங்கள் இடியும் முழக்கமும் இன்றிப் பாணரது யாழிசை போன்று இனிய குரலுடன் வைகறைப் பொழுதில் மழையினைப் பெய்து முடித்தது என்பதை,

> இடியும் முழக்கும் இன்றி, பாணர்
> வடிஉறு நல்யாழ் நரம்பு இசைத்தன்ன[47]

என்னும் பாடல் குறிப்பிடுகிறது. இடியும் முழக்கமும் இல்லாத மேகத்திற்குப் பாணனின் யாழிசை உவமையாகக் கூறப்பட்டுள்ளது. அல்லிப் பாவை ஆடு வனப்பு ஏய்ப்ப[48] என்னும் புறநானூற்றுப் பாடலில் கூத்து பற்றிய செய்தியும் உவமையாக வந்துள்ளதை அறிய முடிகிறது.

**உவமையில் வரலாறு**

சங்க இலக்கியப் பாடல்களில் காணப்படும் உவமையில் இயற்கைப் பொருள்கள், கலைப் பற்றிய செய்திகள் இடம் பெற்றது போல் வரலாற்றுச் செய்திகளும் இடம் பெற்றிருப்பதைக் காண முடிகிறது. உவமையில் அகப்பொருள் செய்திகளும் புறப்பொருள் செய்திகளும் இடம் பெறுகின்றன. இவ்வகையில் புலவர்கள் மகளிரின் நலத்தையும், அழகையும், தமிழகத்தின் வளமான நகர்களுக்கும், துறைமுகங்களுக்கும் உவமைப்படுத்தியுள்ளனர். அவ்வாறு உவமைப்படுத்தும் பொழுது பெரும்பான்மை அவற்றிற்குரிய அரசர்களின் பெயர்களோடு சேர்த்துக் கூறப்படுகிறது. அவ்வாறு கூறப்பட்ட உவமையின் வழி மன்னர்களின் வீரச்சிறப்பு, கொடைச்சிறப்பு முதலியவற்றையும் அறிய முடிகிறது.

**நுதல்**

தலைவன் வினைவயின் பிரிவானோ என்னும் ஐயத்தால் வருத்தமுற்ற தலைவியை நோக்கி தோழி, பகைவர்களை வென்று அடிக்கின்ற வீரமுரசினையும் போர் வெற்றியையும் உடைய சோழரது இனிய ஊர் உறையூராகும். அவ்வூரிடத்தே காவிரியாற்றின் கரையில் உள்ள சோலையில் பங்குனி உத்தரவிழா நடைபெறும். அவ்விழாவின் மறுநாளில் அவ்விடத்தே நெருப்பில்லாத அடுப்புகளை உடைய அரங்கம் போல உன்னுடைய நெற்றியானது பொலிவிழந்து காணப்படும். இதனை,

> பங்குனிமுயக்கம் கழிந்த வழிநாள்
> வீ இலை அமன்ற மரம்பயில் இறும்பில்
> தீஇல் அருப்பின் அரங்கம் போல
> பெரும்பாழ் கொண்டன்று நுதலே[49]

என்னும் அகநானூற்றுப் பாடல் விளக்கும்.

**தோள்**

முத்துகள் விளையும் தெளிந்த கடலைத் தனக்கு உரிமையாக உடையவனும் வீரமாகிய திண்ணிய தேரினையுடைய பாண்டியனது 'பொதிய மலையில் வளர்ந்துள்ள மூங்கிலைப் போன்று அழகுடைய நின்தோள் இப்பொழுது அழகிழந்து காணப்படுகின்றன'[50] என்று தோழி தலைவியின் இளமை நலம் நோக்கி வருந்துமிடத்து, பாண்டியனின் வீரச்சிறப்பும் அவனது நாட்டுவளமும் உவமைப்படுத்தப்படுவதனை அறிய முடிகிறது.

மணந்து கொள்வதில் கருத்தின்றி களவொழுக்கமே விரும்பியவனாய் தலைவன் தலைவியைக் காண பலமுறை வருகின்றான். இதனையறிந்த தோழி தலைவனிடம்,

திண் தேர்ப் பொறையன் தொண்டி அன்ன எம்
ஒண்தொடி ஞெமுக்காதீமோ தெய்ய[51]

சேரனது தொண்டியைப் போன்று வளமுடைய ஒளிரும் வளையல்களை உடைய தலைவியின் கையில் தழும்பு ஏற்படும் வண்ணம் நெருக்கி அமுக்கி வருத்தாமல் அவளை விரைவாகத் திருமணம் செய்து கொள் என்று கூறுகின்ற நிலையினையும் காண முடிகிறது. மேலும் சேரனுக்குரிய கொல்லி மலையில் விளையும் மூங்கில் தலைவியின் தோள் அழகிற்குச் சுட்டப்படுவதை,

வெல்போர் வானவன் கொல்லிக் குடவரை
வேய் ஒழுக்கு அன்ன சாய் இறைப் பணைத்தோள்[52]

என்னும் பாடல் விளக்கும்.

**கண்**

தலைவி இற்செறிக்கப்படுகிறாள். அவள் இல்லத்தில் உள்ள வேங்கை மரத்தின் தாழ்ந்த கிளையிடத்தே அமைந்திருக்கும் குரங்குக் குட்டி அவள் கையில் வைத்திருக்கும் தேன் கலந்த இனிய பால்கிண்ணத்தை வலிய கைப்பற்றி எடுத்துச் சென்றது. அதனால் அவள் அழுகின்றாள். அவ்வாறு அழுத கண்கள், ‘இரவலர்க்குத் தேர்களை வழங்கும் வள்ளன்மை உடைய சோழ மன்னர்க்குரிய குடவாயில் என்னும் ஊரில் மழை பெய்து நிரம்பிய அகழியிடத்து மலர்ந்த நீலமலர் போலும் இருந்தன’[53] என்று சோழர்களின் குடவாயில் ஊரின் சிறப்பும், அவர்களது கொடைத்தன்மையும் வரலாற்று உவமையாக அமைக்கப்பட்டதை அறிய முடிகிறது.

**உவமையில் அறம்**

உவமையில் அறம் சார்ந்த செய்திகளும் இடம் பெற்றுள்ளன. சங்க இலக்கியங்களில் காணப்படும் இக்கருத்துகள் பிற்கால நீதி நூல்கள் தோன்றுவதற்கும் அடிப்படையாக விளங்கின. “நீதிகளும் தத்துவ உணர்வுகளும் வாழ்க்கையின் அனுபவத்தில் எழும் முதிர்வுச் செய்திகளாகும். உவமைகளில் அறவியல் அமைந்துள்ளமை தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறப்பான செய்தியாகும்”[54] என்பர்.

அறத்திற்கு அடிப்படையாக நிலையாமை உணர்வு வற்புறுத்தப்படுவது அறநூல்களில் காணப்படும் பொது இயல்பாகும். இந்நோக்கில் சோழநாட்டுப் புலவர்களின் பாடலில் உவமை காணப்படுகிறது. திருவிழாக் காலங்களில் கூத்தாடுபவர் வேறு வேறு ஒப்பனையுடன் திகழும் காட்சி போல முறை, முறையாக ஆடி மறைகின்ற மனிதர்களைக் கொண்டது இவ்வுலகம் என்பதனை,

................ விழவில்

கோடியர் நீர்மை போல முறைமுறை

ஆடுநர் கழியும் இவ் உலகத்து[55]

என்னும் பாடலில் உலகின் நிலையற்ற வாழ்வை உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்னும் புலவர் குறிப்பிட்டுள்ளதை அறியும் பொழுது உலக வாழ்க்கையே நாடகம் என்பதை அறியலாம்.

சோழன் நலங்கிள்ளியின் குடை முன்வர அவனால் வெல்லப்பட்டோரின் இரண்டு குடைகள் பின்னால் அமைய அவன் குடை உயர்ந்து விளங்கியது என்று அவன் சிறப்பைக் கூறுமிடத்து கோவூர் கிழார் அறம் சார்ந்த உவமையை வெளிப்படுத்துகிறார். இதனை,

சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும்

அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல

இருகுடை பின்பட ஓங்கிய ஒருகுடை[56]

என்னும் புறநானூற்றுப் பாடல் எடுத்துரைக்கிறது. இதனால் அறத்து வழியே பொருளும் இன்பமும் பெறுதலே சிறப்பு என்பதை உணர முடிகிறது.

**உவமையில் கடவுள்**

உவமையில் கடவுள் பற்றிய தோற்றங்களும் சின்னங்களும் இடம்பெறுகின்றன. கலித்தொகையில் முல்லைக் கலியைப் பாடிய சோழன் நல்லுருத்திரன் பாடலில் இத்தகைய உவமைகள் இடம் பெற்றிருப்பதைக் காண முடிகிறது. ஏறு தழுவும் விளையாட்டில் பங்கேற்கும் காளைகளின் நிறத்தினையும் தோற்றத்தினையும் ஒப்பிடும் வகையில் திருமால், பலராமன், சிவன், முருகன் பற்றிய உவமைகள் காணப்படுகின்றன.

'பனைக் கொடியினை உடைய பால் போன்ற நிறமுடைய பலராமனைப்போன்று வெள்ளை எருதும், பொன்னாலாகிய புகழ் பெற்ற சக்கரப்

படையை உடையவனும், திருமகளை மார்பிலே கொண்டவனுமாகிய மாயோனின் நிறம் போன்ற கரிய எருதும், தாழ்ந்த சடையினையும், பிறைபோன்ற நுதலையும், முக்கண்ணனாகிய சிவபெருமானின் உருவினை ஒத்த வலிமையும் உடைய கபிலை நிற எருதும், கரிய கடல் கலங்கும்படி மாமரத்தின் வடிவில் நின்ற அசுரனைக் கொன்ற வேலினை உடைய முருகனின் நிறம் போன்ற எருதும்'[57] இவைப் போன்ற போர்க்குணமுடைய ஒப்பில்லாத எருதுகளைத் தொழுவிலே புகவிட்டனர் என்று முல்லைக் கலி எடுத்தியம்பும்.

**உள்ளுறை**

எல்லாக் கலைகளும் அவைகள் உணர்த்தும் குறிப்புப் பொருளால் சிறப்புப் பெறுகின்றன எனலாம். உள்ளுறை என்பது கூறிய கருத்திலிருந்து கூறாதக் கருத்தைக் குறிப்பாக வெளிப்படுத்தும் முறையாகும். இதற்கு இலக்கணமாகத் தொல்காப்பியர்,

**உள்ளுறுத்து இதனோடு ஒத்துப் பொருள் முடிகென**
**உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்[58]**

என்னும் நூற்பாவில் விளக்குகின்றார். மேலும்,

"உள்ளுறை என்ற சொல் உள், உறை எனப் பிரியும். உள்ளே தங்குதல் என்பது அச்சொல்லின் பொருள். உள்ளுறை கருத்தைக் குறிப்பாகப் புலப்படுத்தும் ஓர் இலக்கிய நெறி என்பதும், மிகுதியும் அகத்திணைச் செய்யுள்களிலேயே பயிலும் அறிய நெறி என்பதும், கூறுவோர், கேட்போர் நுண்ணுர்வைப் பொறுத்தே விளங்கும் நுட்பநெறி என்பதும் சங்க உள்ளுறைகளும் தொல்காப்பியமும் காட்டும் உண்மையாகும்"[59] என்று உள்ளுறையின் இலக்கணம் குறித்து அர.சிங்கார வடிவேலன் விளக்குகின்றார்.

**உள்ளுறை நிலைக்களன்கள்**

ஒரு பாடலின் திணையை அறிதற்கு உதவுவன இரண்டு. அவை உள்ளுறை உவமம், ஏனை உவமம் என்பன. இவ்விரண்டினுள் கருப்பொருள்களுள் தெய்வம் தவிரப் பிறவற்றை நிலைக்களமாகக் கொண்டு உருவாக்கப் பெறுவது உள்ளுறையாகும். இதனைத் தொல்காப்பியர்,

**உள்ளுறை உவமம் ஏனை உவமம் எனத்**
**தள்ளாது ஆகுந் திணையுணர் வகையே[60]**

எனவும்,

உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலம் எனக்

கொள்ளும் என்ப குறிஅறிந்தோரே[61]

எனவும் கூறியுள்ளார். உள்ளுறையின் இயல்பு குறித்து, "பாடலில் வரும் காதல் மாந்தர் கருதியது கூறாத வழியும் கேட்போர் (அ) படிப்போர் அம்மாந்தர் கருதிய பொருள் இதுதான் என்று அறிந்து கொள்ளுதற்குக் கருவியாய் நிற்பது உள்ளுறை உவமம் ஆகும். ஆதலின் கருப்பொருளுடன் கருதிய பொருள் ஒத்து முடிதல் உள்ளுறையின் இயல்பு என்பதும், உவமை புலப்பட்டும், உவமிக்கப்படும் பொருள் புலப்படாமலும் இருப்பது உள்ளுறை உவமத்தின் இயல்பு என்பதும் அறிதல் வேண்டும். சுருங்கக்கூறின் உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசுதல் உள்ளுறையின் உட்கிடையாகும்"[62] என்று சோ.ந.கந்தசாமி விளக்குகின்றார்.

உவமை என்ற அடிப்படையில் உள்ளுறையானது வினை, பயன், மெய், உரு ஆகியவற்றோடு பிறப்பு என்பதும் சேர்த்துக் கூறப்படுகிறது. இதனை,

தவலருஞ் சிறப்பின் அத்தன்மை நாடின்

வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவிலும்

பிறப்பிலும் வரூஉந் திறத்தியல் என்ப[63]

என்ற நூற்பாவானது எடுத்துக் காட்டுகின்றது. உள்ளுறையானது பாடியோரின் கூற்றுகளில் அமையாது பாடல் மாந்தர்களின் கூற்றுகளிலேயே அமைவனவாக உள்ளது.

**புலவர் பாடல்களில் உள்ளுறை நயம்**

உள்ளுறை நயமானது சோழநாட்டுப் புலவர்களின் பாடல்களில் சிறப்பாக காணப்படுகின்றன. தலைவியை மணம் செய்து கொள்வதில் கருத்தின்றி இரவு நேரத்தில் களவின்பத்தையே விரும்பி தலைவியை வந்து பார்த்துச் செல்லும் தலைவனிடம் தோழி, அவன் வந்து செல்கின்ற வழியின் கொடுமையை எடுத்துக்கூறி தலைவியை மணந்து கொள்ளுமாறு எடுத்துரைக்கின்றாள். தலைவனே நீ வரும் வழியில் 'புலியைக் கொன்ற யானையானது பெருமூச்சு விடுவதால் அருகில் இருக்கின்ற வேங்கை மரத்தின் மலர்கள் உதிர்ந்து, உலைக்களத்தில் கொல்லன் ஊதும் தீப்பொறி போலவும், மின்மினி பூச்சிப் போலவும், அருகே இருக்கின்ற புதர்களில் விழுகின்றன'[64] என்றுரைக்கிறாள்.

புலியை வென்ற யானை பெருமூச்சு விடுவதால் வேங்கை மரத்திலிருந்து சிதறி விழுந்த மலர்கள் மின்மினிப் பூச்சி போல புதரில் பரவும் என்று தோழி உரைத்ததன் நோக்கம், தலைவன் வழியில் ஏற்படும் இடையூறுகளைக் கடந்து இரவு நேரத்தில் வருவதால் ஊர் எங்கும் அலர் எழுந்தது என்பதை உள்ளுறைப் பொருளாக குறித்து நின்றது.

களவொழுக்கமே விரும்பியவனாய்த் தலைவன் தலைவியைக் காண பகற்குறியிடத்தேப் பலமுறை வந்து செல்கிறான். இதனையறிந்த தோழி தலைவனிடம் இவ்வொழுக்கத்தை அன்னை அறிந்தால், தலைவியை இற்செறித்து, பாதுகாப்பினையும் செய்வாள். ஆதலால் தலைவனே! படகுத் தொழிலின் மேல் கருத்தூன்றித் தங்கிய தந்தைக்கு அவனது இளமை பொருந்திய மகள் அவன் மீன் கொண்டு வருவதற்கு முன்னே, தான் உப்பு விற்ற நெல்லாலே ஆக்கப்பட்ட வெண்சோற்றையும், மீனையும் கொடுத்தாற்போல நீயும் தலைவியைத் திருமணம் செய்வதற்குப் புறத்தே இருந்து முயன்றால் நாங்களும் இல்லகத்தே இருந்து அறத்தொடுநிற்றல் வழியில் முயல்வோம் என்று உள்ளுறை நயம் படத் தோழி கூறுவதனை,

நெடுந்திமில் தொழிலொடு வைகிய தந்தைக்கு
உப்புநொடை நெல்லின் மூரல் வெண்சோறு
அயிலை துழந்த அம் புளிச் சொரிந்து
கொழுமீன் தடியொடு குறுமகள் கொடுக்கும்[65]

என்று குடவாயிற்கீரத்தனாரின் பாடல் சுட்டி நிற்கிறது.

களவொழுக்கத்தின் பொழுது தலைவன் பிரிந்து செல்கிறான். அதனை அறிந்த தோழி தலைவியிடம் உரைக்கின்றாள். அதற்குத் தலைவி தோழியே அவனது பிரிவால் என் மேனியழகு வாட வருந்துவேன் என்பதைத் தெரிந்தும் தலைவன் மணந்து கொள்ளுதலே நன்மை தரும் எனக் கருதாது என்னை விட்டுப் பிரிந்து செல்லினும் செல்லட்டும், அவ்வாறு அவர் பிரிந்து செல்லும் பாலை வழியில் வழிப்போக்கராய் செல்வோர் அறுத்துப்போட்ட பிரண்டைக் கொடி இடியுண்ட பாம்பினது உடலின் துண்டுகள் போல வழியில் பக்கத்தே பயனின்றி வாடி வதங்கிக் கிடக்கும் என்று கருத்துரைப்பதை,

வண்ணமும் வனப்பும் வரியும் வாட
வருந்துவள் இவள் எனத் திருந்துபு நோக்கி
வரைவு நன்று என்னாது அகலினும்,அவர்-வறிது

ஆறுசெல் மாக்கள் அறுத்த பிரண்டை
ஏறுவாறு பாம்பின் பைந்துணி கடுப்ப[66]

என்னும் பாடல் விளக்குகிறது. இப்பாடலில் பாலை வழியில் மக்களால் அறுத்துப் போடப்பட்ட பிரண்டைக்கொடி வீணே வாடி வதங்குவது போலத் தலைவரால் துறக்கப்பட்ட தலைவியின் அழகு அவர்க்குப் பயன்படாது கழிந்து போகட்டும் என்பதே உள்ளுறை நயமாகும்.

பிரிவிடை வேறுபட்டத் தலைவியைத் தோழி வற்புறுத்தியவிடத்து உள்ளுறை நயம் வெளிப்படுகிறது. தலைவன் பிரிவிற்குத் தலைவி பெரிதும் வருந்தினாள். அது கண்ட தோழி தலைவியிடம் ‘வெட்சி வீரர்கள் பசுக்கூட்டம் பலவற்றைக் கவர்ந்து சென்றனர். அதனையறிந்த கரந்தை வீரர்கள் ஆனிரையை மீட்டு வெட்சி மறவருடன் போரிட்டு அவரை அடித்து விரட்டினர். அதனால் மகிழ்ச்சியுற்று வெற்றி பெற்ற இவர்கள் துடியின் ஒலிக்கேற்ற தாளத்தோடு உமணர் விட்டுச் சென்ற கல்லடுப்பில் ஊனைப் புழுக்கி உண்டு மகிழ்ந்தனர். இத்தகைய தன்மை உடைய வழியில் தலைவர் சென்றுள்ளார் என்று வருந்தாதே.’[67] வெற்றி பெற்ற கரந்தையர் ஊன் சோற்றினை உண்டு மகிழ்ந்திருக்கும் சுரவழியைக் கடந்து செல்லும் தலைவர் இக்காட்சியைக் காண்பார் ஆதலின் வினை முடித்து விரைந்து வந்து நின்னோடு இல்லறம் நடத்தி இன்பம் காண்பார் என்னும் உள்ளுறைப் பொருளை இப்பாடல் குறித்து நிற்கிறது.

பரத்தையின் காரணமாகத் தலைவியைத் தலைவன் பிரிந்தான். அவன் மீண்டும் தலைவியை நாடி அவள் ஊடல் தணிக்குமாறு தோழியை வேண்டினான். அதனை மறுத்த தோழி, வளைந்த கொம்பையும் சொர சொரப்பான பிடரியையும் உடைய ‘கரிய எருமைக்கிடா, நாரையின் இனம் பலவும் குலைந்து விலகுமாறு நீர் நிரம்பிய குளத்தில் துடுமெனப் பாயும். அங்ஙனம் பாய்ந்த எருமை உழுதொழில் புரிந்த வருத்தம் நீங்குமாறு மருத மரத்தின் நிழலிலே தங்கி இருக்கும்.’[68] இத்தகைய இயல்புடைய ஊருக்குத் தலைவனே பரத்தையரைக் கற்புடை மகளிர் போல் நினைத்துக் கூடினாலும், தலைவி போன்று ஆகாள் என்று கூறி வாயில் மறுக்கின்றாள்.

எருமைக்கிடா நாரையினம் வாழும் பொய்கையில் பாய்ந்து வருத்தம் நீங்கிய பின் தன் தொழுவம் புகாது மருத மரத்தின் நிழலிலே தங்குவது போல் தலைவன் காமக்கிழத்தியரைத் துய்த்துப் பின்னர் அவரை வெறுத்து சேரிப் பரத்தையிடம்

முயங்கிப் பின், பாணன் கூட்டிய புதிய பரத்தையிடம் தங்கியிருந்தான் என்பதை உள்ளுறைப் பொருளாக கொண்டு அமைந்துள்ளது. இவ்வுள்ளுறையால் தலைவன் எவரிடமும் அன்பு கொண்டிலன் என்பது உணர்த்தப்படுகிறது.

தலைவன் தலைவியை மணம் புரியவிருப்பதை அறிந்த தோழி, தலைவியிடம் நீண்ட மூங்கில் காடு உயர்ந்த மலையில் கன்றை ஈன்ற யானை பசியால் வருந்தியிருக்கும். இப்பெண் யானையின் பசியை நீக்குவதற்கு ஆண் யானை வளைந்த தினைக் கதிரைக் கவரும். அதனால் கானவன் எரி கொள்ளியை எறிவான். அது மூங்கில் மலையெல்லாம் ஒளி விளங்கும்படி மின்னி எரி நட்சத்திரம் போல் விளங்கும் என்பதை,

> கானவன் எறிந்த கடுஞ்செலல் ஞெகிழி
> வேய் பயில் அடுக்கம் சுடர மின்னி
> நிலை கிளர் மீனின் தோன்றும் நாடன்[69]

என்னும் அடிகள் விளக்கும்.

பிடியானையின் பசியை, போக்கவேண்டி களிறு தினைக்கதிரை அழித்தலை நோக்கி கானவன் எறிந்த எரிக்கொள்ளி எங்கும் சுடர் வீசித் தோன்றும் என்றது, தலைவி படும் காமநோயை ஆற்றும் பொருட்டு தோழி தலைவனைப் பழித்துரைக்க அதனால் ஆற்றாத தலைவன், தலைவியைப் பெறுவதற்குத் தலைவியின் சுற்றத்தார்க்கு அளிக்கக் கொணர்ந்த நிதியமும் கலனும் எங்கும் விளங்கித் தோன்றும் என்பது உள்ளுறையாகும்.

**இறைச்சி**

இறைச்சி என்பது உள்ளுறையைப் போல அகப்பொருள் இலக்கியங்களில் எடுத்தாளப்படும் பொருள் நய உத்தியாகும். அகப்பாடல்களில் உரிப்பொருளுக்குப் புறத்தாக பிறிதொரு உரிப்பொருள் போல வருவது இறைச்சியாகும். இதனை, இறைச்சி தானே உரிப்புறத்ததுவே[70] என்று தொல்காப்பியம் எடுத்துரைக்கிறது. இறைச்சியில் பிறக்கும் பொருள் குறித்து,

> இறைச்சியிற் பிறக்கும் பொருளுமாருளவே
> திறத்தியல் மருங்கில் தெரியுமோர்க்கே[71]

என்ற நூற்பாவானது சுட்டிக்காட்டுகின்றது.

இறைச்சிப் பொருளின் தன்மை குறித்து, " பாட்டின் நேரான கருத்தைவிடக் குறிப்பு முறையில் புலப்படும் உணர்ச்சியே சிறப்புடையதாகும். அந்த உணர்ச்சி ஒரு குறிப்புடையதாய் வருமாயின் அக்குறிப்புப் பொருள் உணர்த்தும் ஆற்றலும் பாட்டுக்கு இருப்பதை அறிய முடிகின்றது. அத்தகைய குறிப்புப் பொருளை மறைத்துப் புலப்படுத்துதலையே இறைச்சி"[72] என்று இறைச்சியின் இயல்பு குறித்து மு.வரதராசன் விளக்குகிறார்.

அன்புணர்ச்சியைச் சுட்டும் இறைச்சி உரிப்பொருளின் புறத்தே தோன்றும் பறவை, விலங்குகள் போன்ற உயிரினங்களின் செயல்களில் அமைந்து காணப்படுகின்றன.

அன்புறு தகுந இறைச்சியுள் சுட்டலும்
வன்புறை ஆகும் வருந்திய பொழுதே[73]

என்று தொல்காப்பிய நூற்பாவும் இதனைச் சுட்டிச் செல்கிறது.

கருப்பொருள்களின் வாயிலாகவும் இறைச்சிகள் விளக்கப்படுகின்றன. "இவ்விறைச்சியானது அமைந்து தோன்றுதற்கு அடிப்படைப் பொருள் பெரும்பான்மையும் மா, மரம், புள், நீர், நிலம், பூ முதலியவையாகிய ஐவகை நிலத்திலும் தோன்றும் கருப்பொருள்களாகும். இறைச்சியை அமைத்துப் பேசுங்கால் இத்தகைய அஃறிணைப் பொருள்களுக்கு உயர்திணையாகிய மக்களின் பண்பும் செயலுமாகிய ஒழுகலாறுகளைச் சார்த்திப் பேசுதல் இலக்கண மரபாகும்.[74]

இறைச்சி சிற்றுயிர்களின் காதல் செயல்களையும் அன்புப் பொழிவையும் அடிப்படையாகக் கொண்டது. பாடலைப் படிக்கும் பொழுது அதனுள் சொல்ல வந்த செய்தி இராது. ஆனால் படித்து முடித்தபின் இறைச்சிப்பொருள் தோன்றும். இதில் அன்புறுவதற்கு ஏற்புடையனவே இடம்பெறும். தலைவியை ஆற்றுவித்தல், தலைவன் தலைவியைக் காணவிழைதல், தலைவனின் அன்பு மிகுதியை நினைத்தல் போன்றவை இதில் இடம்பெறும்.

**இறைச்சி நயம்**

பொருள் காரணமாகத் தலைவன் பிரிந்து சென்று மீண்டு வருவதை, அவனோடு வந்த இளைஞர் முதலான வாயிலார் தெரிவிக்கின்றனர். அதையறிந்த

தோழி மகிழ்ந்து கூறியவிடத்து இறைச்சிநயம் வெளிப்படுகிறது. வேடன் விரித்த வலையைக் கண்ட கணந்துள் பறவை அச்சமுற்றுக் கத்தும். இப்பறவைக் குரலானது பாலை நிலத்தில் செல்லும் கூத்தர் இசைக்கும் யாழிசையுடன் சேர்ந்து ஒத்து ஒலிக்கும் என்பதை,

பார்வை வேட்டுவன் படு வலை வெரீஇ
நெடுங்கால் கணந்துள்அம் புலம்பு கொள் தெள் விளி
சுரல்செல் கோடியர் கதுமென இசைக்கும்
நரம்பொடு கொள்ளும் அத்தத்து ஆங்கண்[75]

என்று நற்றிணைப் பாடல் மொழிகின்றது. கணந்துள் பறவையின் ஒலி கூத்தரின் யாழோசையுடன் சேர்ந்து இசைத்தல் என்பது தலைவி தலைவனுடன் கூடி இசைபட வாழ்வாள் என்ற இறைச்சிப் பொருள் தந்து குறிப்பாக உணர்த்துகிறது.

வரைவிடை வைத்துத் தலைமகன் பொருளீட்டப் பிரிகின்றான். அதனை ஆற்றாது தலைவி தோழியிடம் கூறுமிடத்து இறைச்சிப் பொருள் வெளிப்படுகிறது. தலைவன் பிரிவதால் 'தன் அழகுக் கெட்டுப்போய், தன் இனிய உயிர் இறந்து படுவதாயினும் போகட்டும். புலால் நாற்றம் வீசுகின்ற அலைகளை உடைய செறிந்த கடலில், சிறுகுடியில் தங்கும் இயல்புடைய பரதவர் இரவில் வரும் மரக்கலங்களுக்குத் தெரியுமாறு விளக்கு ஏற்றுவர். அவ்விளக்கின் ஒளி இளங்காலையில் தோன்றும் கதிரவன் ஒளிக்கு ஒப்பாக விளங்கும் கடற்கரைக்குத் தலைவனாக இருந்தவன் தானே முன்பு வந்து எனக்கு தலையளி செய்தான்'[76] என்று தலைவி வருந்திக் கூறுகிறாள்.

பரதவர் ஏற்றிய விளக்கு இளங்கதிரின் ஒளிபோல விளங்கி நிற்கும் என்பது முன்பு பிரியேன் என்று தலைவியைக் கூடி தலைவன் சொன்ன மொழி அவள் நெஞ்சில் மாறாமல் மறையாமல் விளங்கி நிற்கிறது என்பதனை இறைச்சிப் பொருளாக குறித்து நிற்கிறது.

பரத்தை காரணமாகப் பிரிந்த தலைவன் தோழியிடம் தலைவியின் ஊடல் தீர்க்க வாயிலாக வேண்டினான். அதற்குத் தோழி வாயில் மறுத்துக் கூறும் பொழுது அழகியதோர் இறைச்சிநயம் பிறக்கின்றது. 'ஆம்பல் மலர் கிழக்கில் தோன்றும் வெள்ளியைப் போல இருள்நீங்கும் போது மலரும். இத்தகைய பொய்கையை உடைய ஊருக்குத் தலைவனே; தலைவியைக் கைவிட்டு உன்னிடம் சினங்கொள்ளாது இருக்கும்

பரத்தையரையே அடைவாய். மிகவும் வறண்ட கோடைக்காலத்து வயலில் குளிர்ச்சி உடைய நீர் பரந்து விளங்கி இனிமையைத் தருவது போல், தலைவனைக் காண்பதால் தலைவிக்கு ஏற்படும் இனிமை ஒன்றே போதும்'[77] என்று வாயில் மறுக்கின்றாள்.

விடியலில் தோன்றும் வெள்ளி போல ஆம்பல் மலரும் என்றது தலைவன், தலைவிக்குச் செய்யும் அருள்போல பரத்தைக்கும் அருள் செய்கிறான். ஆயினும் ஆம்பல்மலர் வெள்ளி ஆகாது. அதுபோல பரத்தையும் தலைவியாகாள் என்னும் இறைச்சி குறித்து நின்றது. ஆம்பலைப் பரத்தைக்கும், தலைவியை வெள்ளிக்கும் ஒப்பிட்டுக் கூறும் பாங்கு சிறப்பானதொரு இறைச்சி நயத்தை வெளிப்படுத்துகிறது.

பகற்குறியிடத்தும், இரவுக் குறியிடத்தும் வந்தொழுகும் தலைவன் இடையீடுபட்டு வராதநிலையில், வரைவு வேண்டும் விருப்பத்தோடு கிளியை நோக்கி, 'பலவாகக் காய்கள் காய்க்கின்ற பலாமரங்கள் மிக்கச் சாரலை உடைய தலைவரது நாட்டின்கண் உள்ள உன் உறவினரை என்றாவது காணச் சென்றால் அங்கு என் தலைவரையும் கண்டு இம்மலைக் காட்டின்கண் உள்ள தினைப்புனத்திற்குக் குறவன் மகள் மட்டும் வந்து காவல் காத்து நிற்கின்றாள் என்று சொல்வாயாக'[78] என்று வருந்தி தலைவி உரைத்தாள். பலாமரங்களை உடைய தலைவனது சாரல் என்னைக் கைவிட்டதாயினும், பலருக்கும் பயன்படும் நல்ல பலாக்கனிகளைப் பெற்று விளங்கியது என்பது இப்பாடலின் இறைச்சி நயமாகும்.

பகற்குறி வரும் தலைவன் விரைந்து மணம் முடிக்கவேண்டும் என்னும் கருத்துடையவளாய்த் தோழி, தலைவியிடம் அன்னை உன் தந்தை வேட்டைக்குச் சென்றதால் தினைப்புலக்காவல் உனக்குரியது என்றாள். அது முதலே காவல் செய்கின்றோம்.

'மலையிடத்தே சென்று கோழி தன் சேவலுடனே பழங்கொல்லையின் மேற்புறத்தைக் கிளறும் புழுதியிடத்தே நல்ல பொன் ஒளிவீசித் தோன்றும் மலைக்குரிய நாடனுடன் தினைப்புனம் காக்கச் சென்றதால் அன்பு பொருந்திய காமவாழ்வு உண்டாயிற்று. அத்தொடர்பு அறுமாறு இப்பொழுது வேங்கை மரம் புலிபோன்ற மலரை மலரச்செய்தது'[79] என்று தோழி இனி பகற்குறிடத்து எம்மைக் காண்பது அரிது என்று தலைவன் கேட்குமாறுக் கூறினாள்.

கோழி கிளறிய புழுதியில் நன்பொன் இமைக்கும் மலைக்குத் தலைவனாக இருந்தும், தலைவியின் சுற்றத்தார்க்கு மணக்கொடை நேரவில்லை என்பது இறைச்சி நயமாகும்.

**தொன்மம்**

சங்க காலம் பலவிதமான வழிபாட்டு முறைகள் நிறைந்திருந்த காலம். மக்களின் சமூக வாழ்விற்கு ஏற்ற வகையில் அவரவர் வாழ்வியல் நிலைகளை அடிப்படையாகக் கொண்ட வழிபாட்டு முறைகள் இருந்துள்ளன. அதற்கேற்ப கடவுளர்களும் ஏற்படுத்தப்பட்டனர். பழமையான மந்திர விதிகளும் சடங்கு நெறிகளும் நிலவிய அதே வேளையில் வைதீக நெறிகளும் யாகங்களும் ஆரியக் கடவுள் கூறுகளும் வளம் பெறத் துவங்கின. இவ்விருவகை நெறிகளும் இணைந்து தமிழ்க் கடவுள்கள் வைதீக நெறிக்கு ஆட்படுத்தப்பட்டு மாற்றங்களைப் பெற்றுள்ளன.

தமிழகத்து நிலமக்களோடு தொடர்புடைய திணைத் தெய்வங்களாய் இருந்த கடவுள்கள் வடமரபுத் தெய்வங்களின் புராணக் கூறுகளோடு இணைக்கப்பட்ட நிலையில் அவை விண்ணுலகத் தெய்வங்களாய் மாறிவிட்டன. இவ்வாறு திணைநிலத் தெய்வங்கள் ஆரியமயமாகிப் போன நிலையில் ஆரியக் கடவுள்களோடு தொடர்புடைய பல கதைகள் தமிழ்க்கடவுளர்களோடு இணைத்துப் பேசப்படுகின்றன. இவ்வளர்ச்சிப் போக்கின் முழுமையைச் சங்க இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. இவ்வாறு இடம்பெற்ற புராணக்கதை கூறுகளே தொன்மங்கள் எனப்படுகின்றன. சோழநாட்டுப் புலவர்களின் பாடல்களில் மாயோன், கண்ணன் - பலராமன், சிவன் ஆகிய கடவுளர்களைப் பற்றிய தொன்மங்களும், சுவர்க்கம், இம்மை - மறுமை, காலன் ஆகியவைப் பற்றிய தொன்மங்களும் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

**மாயோன்**

தொல்காப்பியம் ‘மாயோன் மேய காடுறை உலகம்’ என மாயோனை முல்லைத் திணையின் தெய்வமாகக் குறிப்பிட்டுள்ளது. சங்க இலக்கியத்தில் மாயோன் வழிப்பாட்டு நெறியும், மாயோன் என்ற சொல்லாட்சியும் காணப்படுகிறது.

புகழ்தல் உற்றோர்க்கு மாயோன் அன்ன
உரைசால் சிறப்பின் புகழ்சால் மாற[80]

என்று காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடலில் மாயோன் என்ற சொல் பயின்று வந்துள்ளதைக் காணலாம். இதனை, மாயோன் மேய ஓண நன்னாள்[81] என்று மதுரைக்காஞ்சியும் குறிப்பிட்டுள்ளது. இவற்றிலிருந்து மாயோன் வழிபாடு செல்வாக்குப் பெற்றிருந்ததை உணரலாம்.

**பலராமன் - கண்ணன்**

பலராமன், கண்ணன் பற்றிய செய்திகள் சங்கப்பாடல்களில் காணப்படுகின்றன. இதனை,

பால்நிற உருவின் பனைக் கொடியோனும்
நீர்நிற உருவின் நேமியோனும், என்று
இருபெருந் தெய்வமும் உடன் நின்றாங்கு
உருகெழு தோற்றமொடு உட்குவர விளக்கி[82]

என்ற பாடல் விளக்குகிறது. திருமாலோடு பலராமனும் ஒப்ப தனிப்பெருந்தெய்வமாக போற்றப் பெற்றுள்ளான் என்பதை அறியமுடிகிறது.

**சிவன்**

ஐம்பெரும் பூதமான நீர், நிலம், தீ, வளி, ஆகாயம் ஆகியவற்றைப் படைத்தவனாய் மதுரைக்காஞ்சியில் சிவன் புகழப்பட்டுள்ளான். இதனை,

நீரும், நிலனும், தீயும், வளியும்
மாக விசும்போடு ஐந்து உடன் இயற்றிய
மழு வாள் நெடியோன் தலைவன் ஆக[83]

என்னும் பாடல் விளக்குகிறது.

சங்க காலத்தில் சுவர்க்கம் பற்றிய தொன்மம் இருந்துள்ளதைச் சங்கப்பாடல்களின் வழி அறியமுடிகின்றது.

**சுவர்க்கம்**

சங்க இலக்கியங்களில் சுவர்க்கம் என்னும் சொல் இடம்பெறவில்லை என்றாலும் இக்கற்பனை உலகைச் சுட்டும் வேறுபல பெயர்கள் சங்க இலக்கியத்தில் பரவலாய் இடம்பெற்றுள்ளன.

கொடி நுடங்கு யானை நெடுமா வளவன்
தேவருலகம் எய்தினன் ஆதலின்[84]

என்ற பாடலில் சுவர்க்கத்தைக் குறிக்க தேவருலகம் என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

உயர்ந்தோர் உலகமான சுவர்க்கத்தை அடைவதற்கான காரணங்கள், வழிமுறைகள் இவை இவையெனச் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. வீரம், கொடை முதலிய நற்செயல்கள், வினைப்பயன், ஆண்மக்கட்பேறு, தவம், உடன்கட்டை ஏறுதல், கணவனுடன் இறத்தல், இறை வழிபாடு, உயர்நிலை ஆகியன உலகப் பேற்றுக்கான காரணங்களாகக் காட்டப்பட்டுள்ளன. இதனை,

**திண்தேர் இரவலர்க்கு ஈத்த தண்தார்**
**அண்டிரன் வரூஉம் என்ன ஒண்தொடி**
**வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலுள்**
**போர்ப்புறு முரசம் கரங்க**
**ஆர்ப்பு எழுந்தன்றால் விசும்பினானே**[85]

என்னும் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடலில் ஆய்அண்டிரன் என்னும் குறுநில மன்னன் தன்னுடைய வீரம், கொடை காரணமாகச் சுவர்க்கத்திற்குச் சென்றான் என்ற குறிப்பானது காணப்படுகிறது. பெண்டிர் கணவனொடு இறந்தால் சுவர்க்கம் செல்வர் என்ற தொன்மச் சிந்தனையும் சங்க காலத்தில் இருந்துள்ளது.

**இம்மை-மறுமை**

சுவர்க்கம் பற்றிய தொன்மத்தோடு மறுமை பற்றிய சிந்தனையும் புலவர் பாடல்களில் காணப்படுகின்றன.

**இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்' எனும்**
**அற விலை வணிகன் ஆஅய் அல்லன்**
**பிறரும் சான்றோர் சென்ற நெறி என**
**ஆங்குப் பட்டன்று, அவன் கை வண்மையே**[86]

என்ற உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடலில் கொடைத்தன்மையானது இம்மையில் புகழையும் மறுமையில் சுவர்க்க இன்பத்தையும் அளிக்க வல்லது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**காலன்**

கூற்றுவன் குறித்தத் தொன்மச் செய்திகள் நேரிடையாகவும், உவமை வழியாகவும் சங்க இலக்கியங்களில் மிகுதியாய் இடம்பெற்றுள்ளன. கூற்றம், கூற்று,

மடங்கல், கலன், மறலி, தருமன், ஞமன் என்னும் பல சொற்கள் எமனைச் சுட்டும் பெயர்களாய் ஆளப்பட்டுள்ளன. மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தென[87] என்னும் அடிகளில் கூற்றம் என்பது எமனைக் குறித்து வந்துள்ளது.

போரில் இறந்துபடும் அரசர், வீரர் போன்றோர் உயிரைக் காலன் கவர்ந்தான் என்னும் செய்தியும் காணப்படுகிறது.

காலனும் காலம் பார்க்கும் பாராது
வேல்ஈண்டு தானை விழுமியோர் தொலைய[88]

என்னும் கோவூர் கிழார் பாடலானது இக்கருத்திற்குச் சான்றாகும். இவ்வாறு இறந்தோர் சுவர்க்கமும் புகுந்தனர் என்பதால் எமனும் அவர்களைச் சுவர்க்கத்திற்கு இட்டுச் சென்றான் என்பதிலிருந்து சுவர்க்கம் எமனின் இருப்பிடம் எனக் கருதவும் இடமுண்டு. "இருக்கு வேதத்தில் ஒரு சுவர்க்கம் எமனுக்கு உரிமை உடையது என்பதும் அது வீரர் உலகம் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது."[89] இக்கருத்தைச் சங்கப்பாடல்களும் காட்டுகின்றன.

**பொருள் நயம்**

பொருள் வெளிப்பாட்டிற்கு மொழி முதன்மையான கருவியாகும். பொருளானது கேட்போருக்கும் படிப்போருக்கும் தெளிவாகப் புரியும் நிலையில் செம்மையாக அமையும். மையப்பொருளில் கருத்துப் புலப்பாட்டுத் திறன் வெளிப்பட்டுவரும். இதற்கெல்லாம் அடிப்படையாக அமைவது பொருள் நயமாகும். புலவர் கூறக் கருதிய பொருளைத் தகுந்த நயத்துடன் புலப்படுத்தும் போதே கருத்துப் புலப்பாடு திறனுடையதாக விளங்கும். சோழநாட்டுப் புலவர் பாடல்களில் இப்பொருள் நயம் இயல்பாக அமைந்து காணப்படுகின்றது.

கொடியோர் நிலம் பெயர்ந்து உறைவே; என்னாது
பெயர்த்தும் கடிந்த செறுவில் பூக்கும்
நின்ஊர் நெய்தல் அனையேம் - பெரும
நீ எமக்கு இன்னாதன பல செய்யினும்
நின் இன்று அமைதல் வல்லமாறே[90]

என்ற குறுந்தொகைப் பாடலில் உழவர்கள் அறுவடை முடிந்தபின் வயலுக்கு நீர் பாய்ச்சுவதில்லை. அதனால் வயலில் உள்ள நீர்ச்செடிகள் வாடிப்போகும். பின்னர் நீர்ப்பாய்ச்சிய வழி தழைக்கும். அதுபோல தலைவியும் தலைவனின் அன்பைப்

பெற்றால் மகிழ்வாள், பெறாத நிலையில் வாடிக் கிடப்பாள் என்ற கருத்தானது நயம்பட உரைக்கப்பட்டுள்ளது.

களவுக் காலத்தில் தலைவன் அன்னை போல அன்பு காட்டினான். இப்போது உன்னைப் பிரிந்து செல்வதால் கள்வனைப் போல கொடியவனாக உள்ளான் என்னும் பொருள் நயத்தினை,

**என் கைக் கொண்டு தன் கண் ஒற்றியும்**
**தன் கைக் கொண்டு என் நல்நுதல் நீவியும்**
**அன்னை போல இனிய கூறியும்**
**கள்வர் போலக் கொடியன் மாதோ**[91]

என்னும் பாடல் விளக்கி நிற்கிறது.

உவமையின் வாயிலாகக் கருத்தை விளக்கும் போது உணர்ச்சிக்கு ஏற்ற சொல்லாட்சித் திறன் கையாளப்பட்டு பொருள் நயம் வெளிப்படுவதைச் சங்கப் பாடல்களில் காணமுடிகின்றது.

தினைப்புனத்தை முயன்று உண்டாக்கியவன் தோட்டத்தில் பொன்போன்ற சிறிய திணையின் கதிர்கள் முளைத்து எழும். அதனைக் கிளிகள் தம் வாயால் ஒடித்து உண்டமையால், தினையின் தாள்கள் குறுமையடைந்து இருக்கும். பின் அவை பெரிய மழை பெய்தமையால் இலைகளோடு தழைத்தன. அதுபோல தலைவர் என் நலத்தை எல்லாம் உண்டு நீங்கிச் சென்றமையால் ஏற்பட்ட தனிமையிடத்து என் வலிமை நீங்கியபோதிலும் சாகாமல் இன்னும் உயிரோடு இருக்கின்றேன் என்று உவமையின் வாயிலாக கூறும் பொருள் நயப்பாட்டினை,

**புனவன் துடவைப் பொன்போல் சிறுதினை**
**கிளிகுறைத்து உண்ட கூழை இருவி**
**பெரும் பெயல் உண்மையின் இலை ஒலித்தாங்கு, என்**
**உரம் செத்தும் உளனே தோழி - என்**
**நலம் புதிது உண்ட புலம்பினானே**[92]

என்ற குறுந்தொகைப் பாடல் உணர்த்துகின்றது.

இதனைப் போன்றே பொருள் நயமுடன் அரிசில்கிழார் பாடல் ஒன்றும் அமைந்துள்ளது.

மட்டம் பெய்த மணிக்கலத்தன்ன
இட்டுவாய்ச் சுனைய பகுவாய்த் தேரை
தட்டைப் பறையின் கறங்கும் நாடன்[93]

என்பதே அப்பாடலாகும். சுனையில் அடைந்து கிடக்கும் தேரைகள் தட்டைப் பறைபோல ஒலி எழுப்பித் தன் இருப்பிடத்தைப் பிறர்க்கு உணர்த்தின. அதுபோலத் தலைவன் தலைவியை இரவுக் குறியில் நெடுவெண்ணிலவில் மணந்தமை பலராலும் அறியப்பட்டு அலர் உரைக்கக் காரணமாயிற்று என்ற பொருளானது நயம்பட உரைக்கப்பட்டுள்ளது.

### உளவியல்

எண்ணத்தின் பிறப்பிடம் மனம். அதில் சிந்தனை, நினைவு, கருத்து, உணர்ச்சி ஆகியவை விளைகின்றன. இவற்றின் விளைவால் செயற்பாடுகள் பல்வேறாக நிகழ்கின்றன. மனிதனுக்கு மனிதன் சொல்லும், செயலும் வேறுபடுவதற்குக் காரணம் மனங்களில் எழும் எண்ண அலைகளின் வேறுபாடே ஆகும்.

### இலக்கியமும் உளவியலும்

வாழ்க்கை நடைமுறைகளை அடிப்படையாகக் கொண்டு இலக்கியம் படைக்கப்படுகிறது. ஆகையால் வாழ்க்கையின் கூறான உளவியல் சிந்தனை இலக்கிய உருவாக்கத்திற்கு உறுதுணையாக அமைகிறது. உளவியல் வகுத்துக்காட்டும் மனித மனப்பண்பிற்குப் பொருந்தாத இலக்கியப் படைப்புகள் உலக இயல்புக்கு மாறுபட்டதாக கருதப்படும். உண்மையான வாழ்வை உலக இயல்புக்குத் தக்கவாறு உருவாக்கிக் காட்டும் இலக்கியமே சிறந்ததாக மதிக்கப்படும்.

### சங்க இலக்கியத்தில் உளவியல்

உளவியலின் பல்வேறு உத்திகள் சங்க இலக்கியங்களில் காணப்படுவதை அறியமுடிகிறது. கற்பனையான ஒன்றை மன உணர்வால் மெய்யாகக் கருதி உறுதிப்பாட்டுடன் செயல்படும் மனநிலை உளவியல் ஆகும். தன் தாய் நட்டு வளர்த்து வரும் புன்னை மரத்தைத் தன் உடன்பிறப்பாகக் கருதும் தலைவியின் உளநிலைப் போக்கை,

நும்மினும் சிறந்தது நுவ்வையாகுமென்று
அன்னை கூறினள் புன்னையது நலனே[94]

என்னும் நற்றிணைப் பாடலானது எடுத்துக்காட்டியுள்ளது.

புன்னைமரம் பக்கமிருந்து தலைவனுடன் களவொழுக்கத்தை மறுத்தத் தலைவியின் மனப்போக்கு தாய் கூறிய கருத்தால் மனதுக்குத் தங்கையாக தோன்றுகிறது.

சங்கப்பாடல்களில் அகத்திணை மாந்தர்களாகிய தோழி, தலைவன், தலைவி ஆகியோரின் எண்ண வெளிப்பாடுகள் உளவியல் திறன்களாக காட்சியளிக்கின்றன. இத்தகைய நோக்கில் சோழநாட்டுப் புலவர்கள் பாடிய பாடல்களின் வழி உளவியல் திறன்களைக் காணலாம்.

**தோழி**

சங்க இலக்கியப் பாடல்களில் தோழியின் பங்கு போற்றற்குரியது. தலைவன் தலைவியின் வாழ்வுநிலைக்கு ஆதாரமாகத் திகழ்பவள் தோழி. தோழியின் எண்ணவோட்டங்கள் முழுவதும் தலைவியின் நலனைச் சார்ந்தே அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. களவொழுக்கத்திலும் கற்பொழுக்கத்திலும் தோழியின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. வரைவுகடாதல், அலர் அறிவுறுத்தல், சிறைப்புறம் அறிவுறுத்தல், பிரிவிடை வேறுபட்ட தலைவியை வற்புறுத்தல், தலைவனைச் செலவழுங்கச் செய்தல், பருவ வரவினை ஆற்றுவித்தல் போன்ற நிலைகளில் தோழியின் உளவியல் திறன் நன்கு விளங்குவதை அறியமுடிகிறது.

**வரைவு கடாதல்**

தலைவன் இரவுக்குறியின்கண் வந்துவந்து களவின்பத்தையே விரும்பி தலைவியைப் பார்த்துச் செல்கிறான். இதனை உணர்ந்த தோழி, ஒருநாள் இரவு தலைவனைக் கண்டு வழியின் கொடுமையினை எடுத்துக் கூறி தலைவியை மணந்துகொள்ளுமாறு கூறுகிறாள்.

தலைவனே! நடுஇரவில் அச்சம் தரக்கூடிய கடுமையான வழியில் தலைவியைக் காண வருகின்றாய். அவ்வாறு வரும் உன்னிடத்து நினைவைச் செலுத்திப் பொறுத்தற்கு அரியதான நினைவாகிய உள்ளத் துன்பத்தை அடைவோர் எம்மையன்றி யாருமில்லை. ஆதலால் தலைவியை விரைவாக மணந்து அவளின் துன்பத்தை நீக்கவேண்டும் என்ற தோழியின் எண்ணவோட்டம் இப்பாடலில் அமைந்து வருவதை,

கனை இருள் பரந்த கல்அதர்ச் சிறுநெறி
தேராது வரூஉம் நின்வயின்
ஆர் அஞர் அரும்படர் நீந்துவோரே[95]

என்னும் அடிகள் விளக்குகிறது.

## அலர் அறிவுறுத்தல்

தலைவனும் தலைவியும் பழகும் களவொழுக்கம் ஊராருக்குத் தெரிந்தது. இந்நிகழ்வினை அறிவுறுத்தும் நோக்கில் தோழி, தலைவனே 'கானவன் காவல் மறந்த நிலை அறிந்து குரங்கு பலாப்பழத்தை உண்டது. அதன் செயலால் அப்பழத்தின் மணம் எல்லோராலும் அறியப்படுவதாயிற்று. ஆதலால் கானவன் மரந்தோறும் பெரிய வலைகளை மாட்டிவைத்தான். அதுபோல் நீ களவில் தலைவியின் நலனை நுகர்ந்து செல்ல, அதனால் தலைவியின் உடலில் தோன்றிய வேறுபாடுகளால் ஊரார் அறியும் நிலை ஏற்பட்டு தலைவியை இற்செறிப்பதற்கு உன் செயல் காரணமாயிற்று'[96] என்று கூறினாள். கானவன் பலாமரத்தில் வலைகளை மாட்டிவைப்பது குரங்கைப் பிடிப்பதற்கல்ல. பலாப்பழங்களை அதனிடமிருந்து காப்பதற்காகவே. அதுபோல் தலைவி இற்செறிப்பதன் நோக்கம் தலைவியைக் காப்பதற்காகவே. தலைவனை அகப்படுத்தும் நோக்கம் அல்ல. எனவே இத்தகைய நிலையில் தலைவன் தலைவியை விரைவாக மணந்து கொள்வதே அவள் நலத்திற்கு நல்லது என்று தோழி கூறும் உளப்பாங்கினை இப்பாடல் எடுத்துரைக்கிறது.

## சிறைப்புறம் அறிவுறுத்தல்

தலைவன் இரவுக்குறி, பகற்குறியின் கண் தலைவியிடம் பழகுவதற்குத் தக்க சமயம் பார்த்து அவர்கள் இருக்கின்ற இடத்திற்கு அருகாமையில் மறைந்து நின்று கொண்டிருந்தான். இதனையறிந்த தோழி அவன் செவியில் விழும் வண்ணம் தலைவியை நோக்கி 'புன்னைமலர் உதிர்ந்து கிடக்கும் வெண்மணல் பரப்பைக் காட்டி என்னிடம் தலைவன் இயற்கைப் புணர்ச்சி உற்ற சோலை என்றாய்; அலைகள் வீசும் கடலைக் கண்டு நம்மொடு நீராடிய துறை என்றாய்; இவ்வாறு தலைவனிடம் பழகிய நாட்களையும் இடங்களையும் உள்ளத்தில் நினைத்து நினைத்து உள்ளம் உருகி பசலைநோயினை மேற்கொண்டாய். ஆதலால் இந்நிலையிலிருந்து உன்னை மீட்டெடுப்பதற்கு தலைவனின் வரைவின்றி வேறு வழியில்லை'[97] என்பதைத் தலைவனுக்கு உணர்த்தும் பாங்கு உளத்திறனுக்குச் சிறந்தொரு சான்றாகும்.

மற்றொரு பாடலில் சிறைப்புறமாக நிற்கும் தலைவனிடம் கூறும் பாங்கில், தலைவியிடம் தோழி தினைப்புனம் காக்காமல் எங்குச் சென்றாய் என்று தாய் கேட்டதற்கு, அதற்குத் தக்கவாறு மறுத்துக் கூறாது தலைவனைக் கண்டறியவும் இல்லை; சுனையாடவும் இல்லை என்று அவனது நினைவில் உன்னை மறந்து உண்மை கூறிவிட்டாய். இனி தாயின் சினம் என்ன செய்யுமோ? என்று கூறி, இவ்வளவு அறியாமை பூண்ட தலைவி எங்ஙனம் குடிமை கொண்டு ஒழுகுவாய் என யாவரும், தலைவியைக் கண்டு இரங்கும் நிலையிலே தலைவியின் செயல் இருந்தது என்று கூறுவதனை,

> அன்னை ஆனாள் கழற, முன் நின்று
> அருவி ஆர்க்கும் பெருவரை நாடனை
> அறியலும் அறியேன்; காண்டலும் இலனே
> வெதிர்புனை தட்டையேன் மலர் பூக்கொய்து
> சுனை பாய்ந்து ஆடிற்றும் இலன்? என நினைவிலை
> பொய்யல் அந்தோ! வாய்த்தனை?[98]

என்னும் நற்றிணைப் பாடல் குறிப்பிடுகிறது. இத்தகைய தலைவியின் செயலைக் கூறும் நோக்கம், தலைவன் தலைவியை விரைவாக மணந்து கொள்ளவேண்டும் என்ற உள்ள வெளிப்பாடே ஆகும்.

**பிரிவிடை வேறுபட்ட தலைவியை வற்புறுத்தல்**

சங்க இலக்கியங்களில் தலைவன், தலைவியின் அன்பு வாழ்க்கை மிகுதியாகக் கூறப்பட்டாலும், அவர்கள் வாழ்வதற்கும், சமுதாயக் கடன் ஆற்றுவதற்கும் பொருள் தேவை இருந்தது. ஆதலால் தலைவன் பொருள் தேடப் பிரிகிறான். இதனைக் குறிப்பால் அறிந்த தலைவி ஐயுற்று, பொருளை ஈட்டி அவன் குறித்த காலத்திற்குள் வராமல் இருந்துவிடுவானோ என ஐயுறுகிறாள். இதனைக் கண்ட தோழி ‘அறல் போன்ற கூந்தலை உடைய தலைவியோடு பொருந்துதலை மறந்து தேவரது பெறற்கரிய விண்ணுலகை ஆங்குள்ள அமிழ்தத்துடன் பெறுவதாயினும் நம் தலைவர் காலம் தாழ்த்தாது விரைந்து வருவார். அவர் வருமளவும் தலைவியை ஆற்றியிருத்தல் வேண்டும்’[99] என்கிறாள்.

இக்கருத்தினையே கூறும் மற்றொரு பாடலிலும் தோழி தலைவியிடம், நல்ல வளம் பொருந்திய உறையூரைப் பெறுவதாயினும், உன் வெண்மையான பற்களிடத்து

ஊறிய நீரினை, தலைவர் பொருள் ஈட்டும் வினை காரணமாகப் பருகாது சென்றவிடத்து தங்குவார் அல்லர். விரைந்து வருவார் என்பதை,

> புனல்பொரு புதவின் உறந்தை எய்தினும்
> வினை பொருளாகத் தவிரலர் - கடைசிவந்து
> ஐய அமர்த்த உண்கண் நின்
> வைஏர் வால் எயிறு ஊறிய நீரே[100]

என்று அகநானூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது.

இவ்வாறு பிரிவிடை வேறுபட்ட தலைவியைத் தோழி வற்புறுத்துவதன் நோக்கம், தலைவன் தலைவியின் மீது மிகுதியாக உள்ளன்பு கொண்டவன் என்பதையும், அவன் கடமையாற்றச் செல்வதற்கு இத்தகைய துன்ப நிலையை உள்ளம் ஏற்று, அவர் வரும் வரை பிரிவை ஆற்றியிருப்பது தலைவியின் கடமை என்பதையும் வலியுறுத்தும் வாயிலாகத் தோழியின் உளவியல் திறன் வெளிப்படுவதை அறியமுடிகிறது.

**செலவழுங்கல்**

தலைவன் பொருள் ஈட்ட எண்ணித் தலைவியைப் பிரியக்கருதி தன் கருத்தைத் தோழிக்குக் கூறுகிறான். அது கேட்டத் தோழி தலைவியின் பருவ அழகினையும், குணப்பண்புகளையும் அவனுக்கு எடுத்துக்கூறி தலைவியை இப்பொழுதே பிரிந்தால் அவள் இறந்துவிடுவாள் என்பதைக் குறிப்பால் உணர்த்தி செலவழுங்கும் உளப்பாங்கினை,

> பிரிந்தனர் அகறல் சூழின், அரும்பொருள்
> எய்துக மாதோ நுமக்கே; கொய் தழைத்
> தளிர்ஏர் அன்ன, தாங்கு அரு மதுகையள்
> மெல்லியர் இளையள், நனிபேர் அன்பினள்
> செல்வேம் என்னும் நும் எதிர்
> ஒழிவேம் என்னும் ஒண்மையோ இலளே[101]

என்னும் பாடல் விளக்குகிறது. தலைவியின் உளப்பாங்கை அறிந்த தோழி தலைவனிடம் தங்களைப் பிரிந்து வாழும் வாழ்க்கையினைத் தாங்கும் வலிமையற்றவளாகத் தலைவி காட்சியளிக்கிறாள் என்பதை உணர்த்துகிறாள்.

**பருவ வரவினை ஆற்றுவித்தல்**

காா்காலத்திற்கு முன் வருவதாகச் சொன்ன தலைவன் காா்காலம் வந்தும் வரவில்லை. இதனை உணா்ந்த தோழி தலைவியிடம், மாாிக்காலத்து எஞ்சிய நீரைப் புதுநீா்போல வானம் பொழிகிறது. காா்காலம் வருவதற்கு முன்னரே காலமற்ற காலத்தில் வந்த புதுமழையைக் காரென மதித்து ஆடும் மயில்களும் பூத்தமலா்களும் மடமை உடையன எனக் கூறித் தலைவியை ஆற்றுவிக்கிறாள். இதனை,

மடவ வாழி மஞ்ஞை மா இனம்
காலமாரி பெய்தென, அதன் எதிர்
ஆலலும் ஆலின பிடவும் பூத்தன[102]

என்னும் குறுந்தொகைப் பாடல் எடுத்துரைக்கிறது. இது உண்மையான காா்காலம் என்று அறிந்தும், தோழி தலைவியின் உளப்பாங்கினை ஆற்றுவிப்பதற்கு பொய் கூறுகிறாள்.

இவ்வாறு தலைவன் தலைவியின் வாழ்வில் நடைபெறும் சிக்கல்களைத் தீா்க்கும் தோழி சமயோசிதப் புத்தி உடையவளாகக் காட்சியளிப்பதையும், தலைவன் தலைவியின் உள்ளப்போராட்டங்களை அறிந்து கொள்ளும் திறன் உடையவளாக இருப்பதையும் உணரமுடிகிறது.

**தலைவன்**

பிாிவின் போது தலைவன் தன் உள்ளப்போராட்டத்தினைத் தன் நெஞ்சிடமே கூறிக் கொள்ளுதல், சமயம் அறிந்து பிாிவிடை விலக்குதல், பரத்தையா் பிாிந்து மீண்டு வாயில் வேண்டுதல் போன்ற நிலையில் தலைவனின் உளப்போராட்டத்தினைக் காணலாம்.

தலைவன் பாலைநிலத்து வழியே சென்று கொண்டிருந்தான். அப்பொழுது 'திரண்ட காலினை உடைய பெண்மானின் வெப்பத்தினைத் தணிக்கும் பொருட்டு ஆண்மான் பெண்மானின் முதுகினை நக்குகிறது.'[103] இக்காட்சியைக் கண்ட தலைவனுக்கு உள்ளப் போராட்டம் வருகிறது. இந்நிலையில் தன் நெஞ்சிடம் செல்லத் தொலையாத இந்த நெடுவழியில் யாம் தனித்து வருந்துகின்றேன். தலைவியோ, என்னை நினைத்துத் தெய்வம் வேண்டி விரதங்கொண்ட நெஞ்சோடு தனித்து இருப்பாள். அவள் இரங்கத்தக்கவள் என்று கூறும் நிலையை நோக்கும் பொழுது

விரைந்து வினைமுடித்துச் செல்ல வேண்டும் என்ற தலைவனின் எண்ண வெளிப்பாட்டினை அறிந்து கொள்ளமுடிகின்றது.

## பிரிவிடை விலக்குதல்

சில சமயங்களில் தலைவன் பொருள்வயின் பிரிவதற்கு முன்னரே தன் உளப்பாங்கால் பிரிவிடை விலக்குதலும் உண்டு. 'ஓயாது மழைத்துளிகள் பெய்யும் நடுயாமத்தில் ஊரில் உள்ள அனைவரும் தூங்க, தலைவி மட்டும் வாடையும், மழையும் வருத்த நலிந்து அழகு குறைந்து சினம் பொருந்தியவளாக ஆற்றியிருப்பாள். குவளைமலர் மணம் வீசுகின்ற கூந்தலையும் இனிய மொழிகளையும் உடைய தலைவியின் அரிய இன்பத்தினும், இல்லாமையால் வரும் இழிவு அரிதாகுமோ? ஆகாது'[104] என்று கூறி பிரிவிடை விலக்கியதைக் காணமுடிகிறது.

மேலும் இக்கருத்திற்கு,

> **அரிதுசெய் விழுப்பொருள் எளிதினின் பெறினும்**
> **வாரேன் - வாழி! என் நெஞ்சே![105]**

என்னும் அடிகளும் சான்று பகர்கின்றன.

## பரத்தையர் பிரிவிடத்து வாயில் வேண்டுதல்

மனிதனுக்குத் துன்பம் ஏற்படும் பொழுது, தன் வாழ்நாளில் முன்னாள் நடந்த நிகழ்வுகளைத் தன் மனதில் எண்ணவோட்டங்களாக வரச் செய்து தன் துன்பத்தைக் குறைத்துக் கொள்வது மனித மனத்தின் இயல்பு. இந்நோக்கில் உறையூர்க் கதுவாய் சாத்தனார் என்னும் புலவர் பாடிய பாடலில், தலைவன் ஒருவன் பரத்தையர் பிரிந்து வந்து தலைவியிடம் வாயில் வேண்டுகிறான். அவளோ மறுத்துவிடுகிறாள். அப்பொழுது தலைவன், பாணனிடம் 'முன்னாளில் தலைவி முதல்குழந்தையைப் பெற்றெடுத்து சோர்வுடன் படுக்கையில் கிடந்த பொழுது அவள் அருகே சென்று நான் பெறற்கரிய புதல்வனைப் பெற்றதால் 'தாய்' என்ற பெயரை அடைந்து உறங்குகிறாயோ என்று வினவினேன். அதற்கு அவள் புன்னகைத்து மலர்போன்ற தம் கண்களைக் கையால் மறைத்துக் கொண்டு மகிழ்ந்தாள்'[106] என்று எடுத்துக்கூறி தலைவன் தன் துன்பம் குறைய பழைய நிகழ்ச்சிகளை நினைவுப்படுத்தும் உளவியல் கூறு காணப்படுவதை அறியமுடிகிறது.

**தலைவி**

*தலைவிக்கு ஏற்படும் நொதுமலர் வரைவு, தலைவன் வரும் வழிகண்டு கவலை அடைதல், பிரிவுக் காலத்து தன்னை ஆற்றிக் கொள்ளுதல், களவு வெளிப்பட்ட இடத்து அச்சமுற்று விலகுதல் போன்ற நிலைகளில் தலைவியின் உளத்திறன் வெளிப்படுகிறது.*

**நொதுமலர் வரைவு**

*தலைவியின் உள்ளங்கவர் தலைவன் ஒருவன் இருக்க அதனை அறியாமல் அயலார் தலைவியை மணம் பேசி வருவதுண்டு. அந்நிலையில் தலைவிக்கு உள்ளம் துன்பம் அடைந்து வருத்தம் ஏற்படும். இதனை,*

**கடும் புனல் அடைகரை நெடுங்கயத்து இட்ட**
**மீன் வலை மாப் பட்டாங்கு**
**இது மற்று எவனோ, நொதுமலர் தலையே?**[107]

*என்னும் குறுந்தொகைப் பாடல் உணர்த்துகிறது. மீனுக்கென விரித்த வலையில் வேறு ஒரு விலங்கு வந்து மாட்டிக் கொள்வது போல, அயலார் வரைவு முயல்வதைத் தலைவி குறிக்கிறாள். தான் விரும்பும் தலைவனை வரைந்து கொண்டு வாழ முடியாமல் அயலாரைத் திருமணம் செய்து கொள்ளும்நிலை ஏற்படுமோ என்று அஞ்சும் நிலையில் அவளுக்கு உள்ளம் குலைந்து அமைதி சிதைவது தலைவியின் உளநலத்தினைக் குறித்து நிற்கிறது.*

**கவலை அடை தல்**

*இரவுக்குறியில் தலைவன் வந்து சென்று மீளும் வரை தலைவியின் அச்சம் கலந்த உளப்போராட்டத்தினை ஐயூர் முடவனாரின் நற்றிணைப் பாடல் எடுத்துரைக்கிறது. 'மழைநாள் நள்ளிரவில் மின்னல் ஒளியைத் துணையாகக் கொண்டு தலைவன் வருதல் தலைவியின் உயிரைக் கலங்கச் செய்கிறது'*[108] *என்னும் தலைவியின் மனப்போக்கினைக் காணமுடிகிறது.*

**பிரிவினை ஆற்றுதல்**

*தலைவனின் பிரிவினை ஆற்றுவதற்குத் தலைவி, தலைவனுடன் கூடியிருந்த நாட்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளை மனதில் கொண்டு ஆற்றியிருக்கும் உளநிலையை அரிசில் கிழாரின் பாடல் தெரிவிக்கின்றது.*

*தலைவன் முன்பு அணைத்திருந்த தோள்களில் பிரிவுக்காலத்தும் அவன்மேனி மணமாகிய முல்லை மணம் நின்று மணத்தலால் பிரிவாற்றியதாகத் தலைவி கூறுவதனை,*

**தொல்லைத் திங்கள் நெடுவெண் நிலவின்**
**மணந்தனன் மன்னெடுந் தோளே**
**இன்று முல்லை முகை நாறும்மே**[109]

*என்னும் பாடல் விளக்குகிறது.*

**அச்ச முற்று விலகுதல்**

*களவுக்காலத்து தலைவன் கொடுத்த முல்லைப் பூவினைத் தலைவி கூந்தலில் முடித்திருந்தாள். அதனை மறந்து எண்ணெயிட்டுத் தேய்க்கத் தலைவி கூந்தலை விரித்தபோது அன்னையின் முன் வீழ்ந்தது அப்பூ. அப்போது அன்னை அதனைப் பற்றி எதுவும் பேசாமல் புறங்கடைப்பக்கம் சென்றதை,*

**அதனை வினவலுஞ் செய்யாள், சினவலுஞ் செய்யாள்**
**நெருப்புக் கை தொட்டவர் போல விதிர்த்திட்டு**
**நீங்கிப் புறங்கடைப் போயினாள்**[110]

*என்னும் பாடல் விளக்குகிறது. இவ்வாறு தன் தாய் சென்றதைக் கண்ட தலைவி தன்கூந்தலை முடித்துத் தாழ உடுத்திய என் ஆடையைக் கையாலே சிறிது பற்றிக் கொண்டு அச்சத்தால் தளர்ந்து மெல்ல நடந்து பக்கத்தில் உள்ள கானிடத்தில் சென்று ஒளிந்தேன் என்று தலைவி தோழியிடம் கூறினாள்.*

*அன்னைக்கு அவள் களவொழுக்கம் தெரிந்ததுக் கண்டு அவ்விடத்தை விட்டு விலகிச் செல்வது நல்லது என்னும் உளவியல் திறனைத் தலைவி பயன்படுத்தியமையை அறியமுடிகிறது.*

*மனித உள்ளம் பற்றிய தனி அறிவியல் துறை இந்நூற்றாண்டில் தோன்றியது என்பது உண்மையே. ஆயினும் உள்ளத்தின் போக்குகளும் இயல்புகளும் மனிதன் தோன்றிய காலந்தொட்டு மெல்ல மெல்ல உருவாகி நிலைப்பெற்றன. ஆகையால் புதிய அறிவுத் துறையாகிய உளவியலின் கூறுகள் பெருமளவில் பழம்பெருமை மிக்க சங்க இலக்கிய மாந்தர்களின் நடத்தைக்குப் பொருந்தி இருப்பதனைக் காணமுடிகிறது.*

**தொகுப்புரை**

சங்க இலக்கியப் பாடல்கள் சிறந்து விளங்குவதற்கு இலக்கியத் திறன்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

சோழ நாட்டுப் புலவர்கள் தம் பாடல்களில் உவமை, உள்ளுறை, இறைச்சி, உளவியல் திறன் போன்ற இலக்கிய உத்திகளைக் கையாண்டுள்ளனர்.

இலக்கியத்தை அழகுபடுத்துவது உவமையாகும். சோழநாட்டுப் புலவர்களின் பாடல்களில் காணப்படும் உவமைகள் கவிதையை அழகு செய்வதோடு இடத்திற்கேற்ற நயத்தினையும் விளக்குவதாக அமைந்துள்ளன.

கருப்பொருளின் வாயிலாக புலவர்கள் தாம் கூறவந்த கருத்திலிருந்து கூறாத கருத்தைக் குறிப்பாக வெளிப்படுத்துவது உள்ளுறையாகும். சோழநாட்டுப் புலவர்களின் உள்ளுறை நயங்கள் சிறப்பாகவும் சூழ்நிலையைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகவும் விளங்கியுள்ளன.

குறிப்புப் பொருளை மறைத்துப் புலப்படுத்துவது இறைச்சி. விடியலில் தோன்றும் ஆம்பல் மலர் வெள்ளி ஆகாது. அதுபோல் பரத்தை தலைவியாகாள் என்ற இறைச்சி நயமானது புலவர்களின் இலக்கியத்திறனுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவதை உணரமுடிகிறது.

மாயோன், சிவன், சுவர்க்கம், கூற்றுவன் ஆகியவை பற்றிய தொன்மங்கள் இடம்பெற்றுள்ளன.

உளவியலின் பல்வேறு உத்திகள் சங்க இலக்கியத்தில் பயின்று வந்து அக்கால மக்களின் நுட்பமான உணர்வுகளையும், அதனால் ஏற்படும் மனப் போராட்டங்களையும் நன்கு படம்பிடித்துக் காட்டுகின்றன.

## அடிக்குறிப்புகள்

1. தொல்.பொருள்.உவமையியல், நூ.291.
2. மேலது., நூ.274.
3. மேலது., நூ.275.
4. அ.ச.ஞானசம்பந்தன், இலக்கியக்கலை, ப.243.
5. தொல். பொருள். உவமையியல், நூ.272.
6. புறம்., பா.331:3-5.
7. பதிற்றுப்பத்து, பா.75:1-3.
8. புறம்., பா.170:15-17.
9. மேலது., பா.32:8-10.
10. மேலது., பா.169:9-12.
11. மேலது., பா.26:1-3.
12. மேலது., பா.331:6-9.
13. மேலது., பா.230:5-9.
14. மேலது., பா.397:14-17.
15. மேலது., பா.133:6-7.
16. நற்றிணை, பா.264:3-5.
17. மேலது., பா.230:1-2.
18. அகம்., பா.284:1-2.
19. மேலது., பா.133:1-2.
20. புறம்., பா.321:4-5.
21. மேலது., பா.342:1-2.
22. காண்க, நற்றிணை, பா.221:1-4.
23. அகம்., பா.304:6.
24. மேலது., பா.304:12-13.
25. மேலது., பா.374:13-14.
26. ரா.சீனிவாசன், சங்க இலக்கியத்தில் உவமைகள், பா.163.
27. மேலது., ப.165.
28. புறம்., பா.51:1-4.

29. காண்க, புறம்., பா.30:1-6.

30. மேலது., பா.41:16-17.

31. அகம்., பா.202:5-7.

32. மேலது., பா.188:12.

33. மேலது., பா.13:18-19.

34. மேலது., பா.106:1.

35. புறம்., பா.399:30-12.

36. நற்றிணை., பா.237:7-10.

37. அகம்., பா.374:3-4.

38. குறுந்தொகை, பா.129:3-5.

39. புறம்., பா.60:1.

40. நற்றிணை, பா.141:11-12.

41. மேலது., பா.200:3.

42. காண்க, அகம்., பா.123:1-4.

43. புறம்., பா.38:1-2.

44. அகம்., பா.194:6-7.

45. புறம்., பா.382:18-22.

46. மேலது., பா.308:1-2.

47. அகம்., பா.374:7-8.

48. புறம்., பா.33:17.

49. அகம்., பா.137:9-12.

50. காண்க, மேலது., பா.137:14-16.

51. மேலது., பா.60:7-8.

52. மேலது., பா.213:15-16.

53. காண்க, நற்றிணை, பா.379:7-9.

54. ரா.சீனிவாசன், சங்க இலக்கியத்தில் உவமைகள், ப.210.

55. புறம்., பா.29:22-24.

56. மேலது., பா.31:1-3.

57. காண்க, கலித்தொகை, முல்லைக்கலி, பா.104:8-14.

58. தொல்.பொருள்.அகத்திணையியல், நூ.51.

59. அர.சிங்காரவேலன், சங்க இலக்கியத்தில் உள்ளுறையும் இறைச்சியும், ப.48.

60. தொல்.பொருள்.அகத்திணையியல், நூ.49.

61. மேலது., நூ.50.

62. சோ.ந.கந்தசாமி, குறுந்தொகை திறனாய்வு, ப.106.

63. தொல்.பொருள்.உவமையியல், நூ.296.

64. காண்க, அகம்., பா.202:3-8.

65. மேலது., பா.60:3-6.

66. மேலது., பா.119:2-6.

67. காண்க, மேலது., பா.159:1-7.

68. காண்க, நற்றிணை, பா.330:1-6.

69. மேலது., பா.390:5-7.

70. தொல்.பொருள்.பொருளியல், நூ.225.

71. மேலது., நூ.226.

72. மு.வரதராசன், இலக்கியத்திறன், ப.235.

73. தொல்.பொருள்.பொருளியல், நூ.227.

74. இரா.ச.பாலசுந்தரம், இறைச்சி, வாழ்வியற் களஞ்சியம், தொ.4, ப.503.

75. நற்றிணை, பா.212:1-4.

76. காண்க, மேலது., பா.219:39.

77. காண்க, மேலது., பா.230.

78. காண்க, மேலது., பா.102:5-6.

79. காண்க, மேலது., பா.389:8-11.

80. புறம்., பா.57:2-3.

81. மதுரைக்காஞ்சி, அடி.591.

82. புறம்., பா.58:14-17.

83. மதுரைக்காஞ்சி, அடிகள்.453-455.

84. புறம்., பா.228:10-11.

85. மேலது., பா.241.

86. மேலது., பா.134.

87. மேலது., பா.75:1.

88. மேலது., பா.41:12.

89. பெ.மாதையன், வரலாற்றுநோக்கில் சங்க இலக்கிய பழமரபுக் கதைகளும் தொன்மங்களும், ப.158.

90. குறுந்தொகை, பா.309:4-8.

91. நற்றிணை, பா.28:1-4.

92. குறுந்தொகை, பா.133.

93. மேலது., பா.193:1-3.

94. நற்றிணை, பா.172:4-5.

95. அகம்., பா.202:13-15.

96. காண்க, குறுந்தொகை, பா.342.

97. காண்க, நற்றிணை, பா.96.

98. மேலது., பா.147:5-10.

99. காண்க, அகம்., பா.213:17-19.

100. மேலது., பா.237:14-17.

101. மேலது., பா.319:11-16.

102. குறுந்தொகை, பா.251:1-3.

103. காண்க, அகம்., பா.287:10.

104. காண்க, நற்றிணை, பா.262:7-10.

105. மேலது., பா.149:6-7.

106. காண்க, நற்றிணை, பா.370.

107. குறுந்தொகை, பா.171:2-4.

108. காண்க, நற்றிணை, பா.334:6-9.

109. குறுந்தொகை, பா.193:4-6.

110. கலித்தொகை, முல்லைக்கலி, பா.115:9-12.

# முடிவுரை

# முடிவுரை

சங்க காலச் சோழநாட்டுப் புலவர்கள் என்னும் ஆய்வின் மூலம் கண்டறிந்த முடிவுகள்:

சங்க காலச் சோழநாடு இன்றைய தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, தென்னார்க்காடு மாவட்டங்களை உள்ளடக்கிய நிலப்பரப்பாக அமைந்திருந்தது. சோழ மன்னர்கள் கிள்ளி, சென்னி என இரு மரபினராக விளங்கி உறையூரையும், காவிரிப்பூம்பட்டினத்தையும் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்துள்ளனர். காவிரிப்பூம்பட்டினமும் பெருந்துறையும் சோழநாட்டின் துறைமுகங்களாக இருந்தன. காவிரிப்பூம்பட்டினத்தில் வாணிகம் சிறப்பாக நடந்துள்ளது. ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் பண்ட மூட்டைகளில் புலிச்சின்னம் பொறிக்கப்பட்டது. சோழ அரசர்கள் போர்த்திறம், கொடைத்திறம் மிக்கவர்களாக விளங்கியுள்ளனர்.

சங்கப் புலவர்களில் சோழநாட்டுப் புலவர்களாக அறுபத்தொரு பேர் சுட்டப்பட்டுள்ளனர். இப்புலவர்கள் ஆவூர், உறையூர், ஐயூர், காவிரிப்பூம்பட்டினம், கிடங்கில் முதலான ஊர்களில் வாழ்ந்துள்ளனர். இவர்களில் தந்தை-மகன் உறவு முறையினராக ஆவூர்கிழார், அவர் மகனார் கண்ணனார், ஆவூர்மூலங்கிழார், அவர் மகனார் பெருந்தலைச் சாத்தனார் ஆகியோரும் அண்ணன்-தம்பி உறவு முறையினராக சோழன் நலங்கிள்ளியும் அவர் தம்பி மாவளத்தனும், பெண்பாற்புலவர்களாக ஆதிமந்தியார், கழார்க்கீரன் எயிற்றியார், தாயங்கண்ணியார், பூங்கணுத்திரையார், வெண்ணிக் குயத்தியார் ஆகிய ஐவரும், ஆண்பாற் புலவர்களாக ஐம்பத்தாறு பேரும் இருந்துள்ளனர். இவர்களில் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், நல்லுருத்திரன், கோப்பெருஞ்சோழன், மாவளத்தன், வீரை வெளியன் தித்தனார் ஆகியோர் அரசப் புலவர்களாகவர்.

சோழ நாட்டுப் புலவர்கள் தாங்கள் வாழ்ந்த காலத்தில் அமைந்திருந்த மலைகள், ஆறுகள், ஊர்கள், துறைமுகங்கள் போன்றவற்றின் அமைப்பினையும், அக்காலத்தே ஆட்சி செய்த குறுநிலமன்னர்கள், படைத்தலைவர்கள் ஆகியோரின் வாழ்வினையும் தம் பாடல்களில் பாடியுள்ளனர். இவர்தம் பாடல்கள்வழி சோழநாட்டில் மலைத்தொடர்கள் இருந்தமைக்கான குறிப்புகள் காணப்படவில்லை. அம்பர், அழும்பில், உறையூர், குடவாயில் போன்ற சோழநாட்டு ஊர்களும்

ஒல்லையூர், கானப்பேரெயில், கூடல் போன்ற பிறநாட்டு ஊர்களும் பற்றிய வரலாற்றுப் பழமையினை உணர்ந்து கொள்ள முடிகின்றது. சேரநாட்டு முசிறித் துறைமுகத்தில் கடல் வாணிகம் சிறப்பாக நடைபெற்றுள்ளது. சிறுகுடி கிழான் பண்ணன், மல்லி காரியாதி ஆகியோர் வீரத்திலும் கொடையிலும் சிறந்து விளங்கியுள்ளனர். சோழநாட்டுப் புலவர்களின் பெயரோடு அரிசில், ஆடுதுறை, ஆர்க்காடு என இருபத்தெட்டு ஊர்கள் இணைத்து வழங்கப்பெற்றுள்ளன.

சங்க கால இல்லறக் கடமைகளில் விருந்தோம்பல் பண்பாடு தலையாயதாக இருந்துள்ளது. பரத்தையர் பிரிவு இழிவாகக் கருதப்பட்டாலும் அவ்வொழுக்கம் அக்கால சமுதாயத்தில் ஒதுக்கப்படவில்லை. சங்க கால மக்கள் சிலம்புகழி நோன்பு, நடுகல்வழிபாடு, சூளுரைத்தல் போன்ற பழக்க வழக்கங்களை மேற்கொண்டுள்ளனர். விரிச்சிக்கேட்டல், நாள்கோள் பார்த்தல் போன்ற நிமித்தக் கூறுகள் சங்க கால மக்களால் கடைப்பிடிக்கப்பட்டன. திருமணத்தில் தாலிகட்டும் சடங்கு இல்லை. முதுபெண்டிர் நால்வர் கூடி வாழ்த்துவது திருமணமுறையாக இருந்துள்ளது. அரசர்களால் புலவரும், புலவர்களால் அரசரும் சிறப்படைந்துள்ளனர். உழவு, மட்பாண்டம் செய்தல் போன்ற தொழில்கள் நடந்துள்ளன.

சோழநாட்டுப் புலவர்கள் உவமை, உள்ளுறை, இறைச்சி, உளவியல் திறன் போன்ற இலக்கிய உத்திகளைக் கையாண்டுள்ளனர். புலவர்களின் பாடல்களில் காணப்படும் உவமைகள் இடத்திற்கேற்ற பொருள் நயத்தினை வெளிப்படுத்துகிறது. பரத்தையை ஆம்பல் மலருக்கும், வெள்ளியைத் தலைவிக்கும் உணர்த்தும் இறைச்சி நயம் போற்றற்குரியது. மாயோன், சிவன் ஆகிய கடவுளர்களைப் பற்றிய தொன்மக் கூறுகள் இடம்பெற்றுள்ளன. சங்க கால மக்களின் நுட்பமான உணர்வுகளும் அதனால் ஏற்படும் மனப்போராட்டங்களும் புலவர்களின் பாடலில் உளவியல் திறன்களாக அமைந்துள்ளன.

சமூகவியல், உளவியல், பாடுபொருள் முதலான நோக்கில் சங்க காலச் சோழநாட்டுப் புலவர்கள், பெண்ணியப் பார்வையில் சங்க காலச் சோழநாட்டுப் புலவர்கள், சங்க காலச் சோழநாட்டுப் புலவர் பாடல்களில் மெய்ப்பாடுகள் முதலான பொருண்மைகளில் ஆய்வு செய்வதற்குரிய நிலைக்களன்கள் பரிந்துரையாக எதிர்கால ஆய்வாளர்களுக்கு கூறப்பெறுகின்றன.

# துணைநூற் பட்டியல்

# துணைநூற் பட்டியல்

## முதன்மை ஆதாரங்கள்


*சஞ்சீவி, டாக்டர் ந.,* **சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள்,** *சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு, மு.ப., 1973.*

*பரிமணம், முனைவர் அ.மா., பாலசுப்பிரமணியன், முனைவர் கு.வெ. (ப.ஆ.)* **அகநானூறு மூலமும் உரையும், தொகுதி I & தொகுதி II,** *நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.*

---. **கலித்தொகை மூலமும் உரையும், தொகுதி I & தொகுதி II,** *நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.*

---. **குறுந்தொகை மூலமும் உரையும், தொகுதி I & தொகுதி II,** *நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.*

---. **நற்றிணை மூலமும் உரையும்,** *நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.*

---. **பதிற்றுப்பத்து மூலமும் உரையும், தொகுதி I & தொகுதி II,** *நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.*

---. **பத்துப்பாட்டு மூலமும் உரையும், தொகுதி I & தொகுதி II,** *நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.*

*பரிமணம், முனைவர் அ.மா.,*
*பாலசுப்பிரமணியன், முனைவர் கு.வெ.*
*(ப.ஆ.)*
**புறநானூறு மூலமும் உரையும்,**
**தொகுதி I & தொகுதி II,**
*நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,*
*சென்னை,*
*2004.*

**துணைமை ஆதாரங்கள்**

*ஆளவந்தார், ஆர்.,*
**இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்,**
**தொகுதி I,**
*உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,*
*சென்னை,*
*1984.*

*இராசமாணிக்கனார், டாக்டர் மா.,*
**சோழர் வரலாறு,**
*நாம் தமிழர் பதிப்பகம்,*
*சென்னை,*
*மு.ப., 2009.*

*இராமகிருஷ்ணன், எஸ்.,*
**இந்தியப் பண்பாடும் தமிழரும்,**
*மீனாட்சி புத்தக நிலையம்,*
*மதுரை,*
*இ.ப., 1982.*

*இராமலிங்கம், டாக்டர் அரங்க.,*
**சங்க இலக்கியத்தில் வேந்தர்,**
*ஐந்திணைப் பதிப்பகம்,*
*சென்னை,*
*மு.ப., 1987.*

*இளம்பூரணர்*
*(உ.ஆ.)*
**தொல்காப்பியம் பொருளதிகாரம்,**
*சாரதா பதிப்பகம்,*
*சென்னை,*
*மு.ப., 2005.*

*உலகநாதன், முனைவர் செ.*
*(உ.ஆ.)*
**முத்தொள்ளாயிரம்,**
*முல்லை நிலையம்,*
*சென்னை,*
*2000.*

*ஒட்டக்கூத்தர்,*
**தக்கயாகப்பரணி,**
*டாக்டர் உ.வே.சா. நூல் நிலையம்,*
*சென்னை,*
*1960.*

ஒட்டக்கூத்தர், **மூவருலா (விக்கிரமசோழனுலா)**,
*முல்லை நிலையம்,*
*சென்னை,*
*2000.*

கந்தசாமி, சோ.ந., **குறுந்தொகைத் திறனாய்வு**,
*அமராவதி பதிப்பகம்,*
*சிதம்பரம்,*
*1978.*

கந்தையா பிள்ளை, ந.சி., **தமிழகம்**,
*சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,*
*சென்னை,*
*2010.*

---. **தமிழ்ப் புலவர் அகராதி**,
*ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்,*
*சென்னை,*
*1952.*

காந்தி, கா., **தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்**,
*உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,*
*மு.ப., 1980.*

குமரகுருபர சுவாமிகள், **நீதிநெறி விளக்கம்**,
*காசித்திருமடம்,*
*திருப்பனந்தாள்,*
*மூ.ப., 2003.*

குருநாதன், வ., **சங்க கால அரச வரலாறு**,
*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர்,*
*மு.ப., 2001.*

குழந்தை, புலவர், **தமிழக வரலாறு**,
*அமிழ்தம் பதிப்பகம்,*
*சென்னை,*
*2008.*

கோபாலன், பா.வே., **புலவர் அகராதி**,
*துரைசாமி & கம்பெனி,*
*சென்னை,*
*மு.ப., 1957.*

கோவிந்தன், புலவர் கா., **சங்கதமிழ் புலவர் வரிசை-5 (பெண்பாற் புலவர்கள்),** *சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1953.*

---, **சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை-8 (கிழார் பெயர் பெற்றோர்),** *சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1954.*

---, **சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை-9 (வணிகரிற் புலவர்கள்),** *சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1954.*

---, **சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை-10 (மாநகர்ப் புலவர்கள்-1),** *சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1954.*

---, **சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை-11 (மாநகர்ப் புலவர்கள்-2),** *சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1954.*

---, **சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை-12 (மாநகர்ப் புலவர்கள்-3),** *சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1954.*

---, **சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை-13 உறுப்பாலும் சிறப்பாலும் பெயர் பெற்றோர்,** *சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1954.*

*சதாசிவப் பண்டாரத்தார், தி.வை.,* **இலக்கியமும் கல்வெட்டுகளும்,** *மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1977.*

*சாமிநாத ஐயர், டாக்டர் உ.வே.* (உ.ஆ.)
**குறுந்தொகை மூலமும் உரையும்**,
*தியாகராச விலாச வெளியீடு,*
*சென்னை,*
*ம.ப., 2000.*

---.
**புறநானூறு மூலமும் உரையும்**,
*தியாகராச விலாச வெளியீடு,*
*சென்னை,*
*ம.ப., 1963.*

*சிங்காரவடிவேலன், அர.,*
**சங்க இலக்கியத்தில் உள்ளுறையும் இறைச்சியும்**,
**இரண்டாம் கருத்தரங்கு ஆய்வுக்கோவை (தொகுதி I)**,
*அனைத்திந்தியத் தமிழ் இலக்கியக் கழகம்,*
*தஞ்சாவூர், 1988.*

*சீத்தலைச்சாத்தனார்,*
**ஐம்பெருங்காப்பியங்கள் (மணிமேகலை)**,
*வர்த்தமானன் பதிப்பகம்,*
*சென்னை,*
*இ.ப., 1988.*

*சீனிவாசன், டாக்டர் ரா.,*
**சங்க இலக்கியத்தில் உவமைகள்**,
*அணியகம்,*
*சென்னை,*
*மு.ப., 1973.*

*சுந்தரமூர்த்தி, கு.* (உ.ஆ.)
**தொல். சொல். (ஆராய்ச்சிவுரை)**,
*அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,*
*அண்ணாமலை நகர்,*
*சிதம்பரம்,*
*மு.ப., 1981.*

*சுப்ரமணியப்பிள்ளை, கா.* (உ.ஆ.)
**தனிப்பாடல் திரட்டு**,
*சாந்தா பதிப்பகம்,*
*சென்னை,*
*மு.ப., 2008.*

*சுப்ரமணியன், ச.வே.* (ப.ஆ.)
**பன்னிரு திருமுறை**,
*மணிவாசகர் பதிப்பகம்,*
*சென்னை,*
*2009.*

சுவாமிநாதன், டாக்டர் A., — **தமிழக வரலாறு 1987 வரை**, *தீபா பதிப்பகம், சென்னை, 15வது பதிப்பு, 1988.*

ஞானசம்பந்தன், அ.ச., — **அகமும் புறமும்**, *சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1991.*

---. — **இலக்கியக்கலை**, *சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, ம.ப., 2004.*

தாயம்மாள் அறவாணன், டாக்டர், — **மகடூஉ முன்னிலை, பெண்புலவர் களஞ்சியம் ஆதிமந்தி முதல் ஆண்டாள் வரை**, *தமிழ்க்கோட்டம், சென்னை, 2011.*

திருஞானசம்பந்தம், முனைவர் ச. (ப.ஆ.) — **பவணந்தி முனிவரின் நன்னூல்-சொல்லதிகாரம் (காண்டிகை உரை)**, *கதிர் பதிப்பகம், திருவையாறு, மு.ப., 2008.*

திருநாவுக்கரசு, க.த. (க.ஆ.) — *நாகரிகமும் பண்பாடும்,* **தமிழ்நாடு, சங்க காலம் - வாழ்வியல்**, *இலக்கிய நிலையம், சென்னை, மூ.ப., 1973.*

திலகவதி, முனைவர் க., — **சங்க கால மகளிர் வாழ்வியல்**, *இறையருள் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி, 2001.*

துரை அரங்கசாமி, டாக்டர் மொ., — **சங்க கால சிறப்புப் பெயர்கள்**, *பாரி நிலையம், சென்னை, 1960.*

*துரைசாமிப்பிள்ளை, ஔவை சு.*
*(உ.ஆ.)*
**புறநானூறு மூலமும் உரையும்**
**(தொகுதி I & தொகுதி II)**,
*சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,*
*திருநெல்வேலி,*
*ம.ப., 2002.*

*---.*
**பதிற்றுப்பத்து மூலமும் உரையும்**,
*சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,*
*திருநெல்வேலி,*
*1968.*

*பத்மஜா ரமேஷ்,*
*புருஷோத்தமன், வி.பி.,*
**சங்க கால மன்னர்களின் காலநிலை**
**(தொகுதி I & தொகுதி II)**,
*உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,*
*சென்னை.*

*பாலசாரநாதன், சு.*
*(ப.ஆ.)*
**சங்க காலப் புலவர்கள்**,
*டாக்டர் உ.வே.சா.நூல் நிலையம்,*
*சென்னை,*
*மு.ப., 1986.*

*பாலசுந்தரம், இரா.ச.,*
**வாழ்வியற் களஞ்சியம்**,
**தொகுதி 4**,
*இறைச்சி,*
*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர்,*
*1989.*

*பாஸ்கல் கிஸ்பர்ட், எஸ்.ஜே.*
*(தமிழாக்கம்: ஜெ.நாராயணன்),*
**சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள்**,
*தமிழ் வெளியீட்டுக் கழகம்,*
*தமிழ்நாடு,*
*1964.*

*பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்*
*(உ.ஆ.)*
**நற்றிணை நானூறு மூலமும் உரையும்**,
*சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,*
*திருநெல்வேலி,*
*ம.ப., 2001.*

*புருடோத்தமன், பொறிஞர்,*
**தமிழ்கூறும் நல்லுலகம்**,
*தனா பப்ளிகேசன்ஸ்,*
*கோயமுத்தூர்,*
*மு.ப., 1990.*

*புலவர் அரசு, திரு.,* — **திருவிளையாடல் வசனம்,**
*சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,*
*திருநெல்வேலி,*
*மு.ப., 1960.*

*பூவராகமூர்த்தி, வி.,* — **அலைகடலுக்கு அப்பால் இந்தியப் பண்பாடு,**
*SIT பப்ளிகேஷன்ஸ் லிட்.,*
*சென்னை,*
*1966.*

*மாணிக்கம், வ.சுப.,* — **தமிழ்க்காதல்,**
*பாரி நிலையம்,*
*சென்னை,*
*இ.ப., 1975.*

*மாதையன், பெ.,* — **வரலாற்று நோக்கில் சங்க இலக்கிய பழமரபுக் கதைகளும், தொன்மங்களும்,**
*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர்,*
*மு.ப., 2001.*

*முன்றுரையறையனார்,* — **பதினெண்கீழ்க்கணக்கு (பழமொழி நானூறு),**
*வர்த்தமானன் பதிப்பகம்,*
*சென்னை,*
*1999.*

*வரதராசனார், டாக்டர் மு.* — **இலக்கியத்திறன்,**
*பாரி நிலையம்,*
*சென்னை,*
*மு.ப., 1960.*

*வரதராசனார், டாக்டர் மு. (உ.ஆ.)* — **திருக்குறள்,**
*சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,*
*சென்னை,*
*2008.*

*வேங்கடசாமி நாட்டார், ந.மு. (உ.ஆ.)* — **சிலப்பதிகாரம்,**
*சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,*
*சென்னை,*
*1992.*

*வேங்கடசாமி, மயிலை சீனி.,* — **சங்க காலத் தமிழக வரலாறு,**
*சென்னை,*
*மு.ப., 2003.*

*வேங்கடசாமி, மயிலை சீனி.,* **சேர சோழ பாண்டியன்,** *வ.உ.சி. நூலகம், சென்னை, மு.ப., 1994.*

*வேங்கடசாமி, மயிலை சீனி. (க.ஆ.)* *சங்க காலம் - அரசியல்,* **தமிழ்நாட்டு வரலாறு,** *தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1983.*

வேளூர் ஆத்மநாத தேசிகர், **சோழமண்டல சதகம்,** *தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், மு.ப., 1994.*


ஜம்புலிங்கம், அ., **சங்க கால வேந்தர்களின் சமுதாயப்பணி,** *இந்துமதி பதிப்பகம், சிதம்பரம், மு.ப., 2002.*


**இதழ்**



*சாமி, பி.எல்.,* **சங்க இலக்கியத்தில் கூகையும், குராலும், குடிஞையும், ஊமனும் ஆண்டலையும், செந்தமிழ்ச்செல்வி,** *சிலம்பு 46, 1971-1972.*

# பின்னிணைப்புகள்

பின்னிணைப்பு – 1



## பின்னிணைப்பு–2
## சங்க காலச் சோழர் குலவழித் தோன்றல் – விளக்கப்படம்





*கிள்ளி வழியினான தித்தன் ஆட்சி செய்த காலத்தில் சென்னி வழியில் ஆட்சி செய்த சோழ மன்னனின் பெயர் அறிய இயலவில்லை.

பின்னிணைப்பு–3(அ)


## சங்க காலப் புலவர்கள்

| | | | |
|---|---|---|---|
| சங்க காலப் புலவர்கள் | – | 473 பேர் | (87.32%) |
| சோழநாட்டுப் புலவர்கள் | – | 61 பேர் | (12.68%) |




## பின்னிணைப்பு – 3 (ஆ)

## சங்க காலச் சோழநாட்டுப் புலவர்கள் – வகைப்பாடு




அகம், புறம் பாடிய புலவர்கள் எண்ணிக்கை



## பின்னிணைப்பு–4
## சோழநாட்டுப் புலவர்கள் பாடிய பாடல்களின் எண்ணிக்கை

| வ. எண் | புலவர் பெயர் | நூல் | பாடல் எண் | பாடல் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | அரிசில் கிழார் | குறுந்தொகை | 193 | 1 |
| | | புறநானூறு | 146, 230, 281, 285, 300, 304, 342 | 7 |
| | | பதிற்றுப்பத்து | எட்டாம்பத்து | 10 |
| | | | | 18 |
| 2. | ஆடுதுறை மாசாத்தனார் | புறநானூறு | 227 | 1 |
| 3. | ஆதிமந்தி | குறுந்தொகை | 31 | 1 |
| 4. | ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார் | அகநானூறு | 64 | 1 |
| 5. | ஆலங்குடி வங்கனார் | நற்றிணை | 230, 330, 400 | 3 |
| | | குறுந்தொகை | 8, 45 | 2 |
| | | அகநானூறு | 106 | 1 |
| | | புறநானூறு | 319 | 1 |
| | | | | 7 |
| 6. | ஆலியார் | புறநானூறு | 298 | 1 |
| 7. | ஆவூர்கிழார் | புறநானூறு | 322 | 1 |
| 8. | ஆவூர்கிழார் மகனார் கண்ணனார் | அகநானூறு | 202 | 1 |
| 9. | ஆவூர்க்காவிதிகள் சாதேவனார் | நற்றிணை | 264 | 1 |
| | | அகநானூறு | 159 | 1 |
| | | | | 2 |
| 10. | ஆவூர் மூலங்கிழார் | அகநானூறு | 24, 156, 341 | 3 |
| | | புறநானூறு | 38, 40, 166, 177, 178, 196, 261, 301 | 8 |
| | | | | 11 |
| 11. | இடைக்காடனார் | நற்றிணை | 142, 221, 316 | 3 |
| | | குறுந்தொகை | 251 | 1 |
| | | அகநானூறு | 139, 194, 274, 284, 304, 374 | 6 |
| | | புறநானூறு | 42 | 1 |
| | | | | 11 |
| 12. | இரும்பிடர்த்தலையார் | புறநானூறு | 3 | 1 |
| 13. | உறையூர் இளம்பொன் வணிகனார் | புறநானூறு | 264 | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 14. | உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் | புறநானூறு | 13, 127, 128, 129, 130, 131, 132, 133, 134, 135, 241, 374, 375 | 13 |
| 15. | உறையூர்க் கதுவாய் சாத்தனார் | நற்றிணை | 370 | 1 |
| 16. | உறையூர்ச் சல்லியங்குமரனார் | குறுந்தொகை | 309 | 1 |
| 17. | உறையூர்ச் சிறுகந்தனார் | குறுந்தொகை | 257 | 1 |
| 18. | உறையூர்ப் பல்காயனார் | குறுந்தொகை | 374 | 1 |
| 19. | உறையூர் மருத்துவன் தாமோதரனார் | அகநானூறு | 133, 257 | 2 |
| | | புறநானூறு | 60, 170, 321 | 3 |
| | | | | 5 |
| 20. | உறையூர் முதுகண்ணன் சாத்தனார் | குறுந்தொகை | 133 | 1 |
| | | புறநானூறு | 27, 28, 29, 30, 325 | 5 |
| | | | | 6 |
| 21. | உறையூர் முதுகூத்தனார் | குறுந்தொகை | 221, 390, 353, 371 | 4 |
| | | அகநானூறு | 137, 229 | 2 |
| | | நற்றிணை | 28,58 | 2 |
| | | புறநானூறு | 331 | 1 |
| | | | | 9 |
| 22. | ஐயூர் முடவனார் | புறநானூறு | 51, 228, 314, 399 | 4 |
| | | நற்றிணை | 206, 334 | 2 |
| | | குறுந்தொகை | 123, 206, 322 | 3 |
| | | அகநானூறு | 216 | 1 |
| | | | | 10 |
| 23. | ஐயூர் மூலங்கிழார் | புறநானூறு | 21 | 1 |
| 24. | கடலூரர்ப் பல்கண்ணனார் | நற்றிணை | 200, 380 | 2 |
| 25. | கயத்தூர்கிழார் | குறுந்தொகை | 354 | 1 |
| 26. | கழார்க்கீரன் எயிற்றியார் | அகநானூறு | 168, 217, 235, 294 | 4 |
| | | குறுந்தொகை | 35, 210 | 2 |
| | | நற்றிணை | 281, 312 | 2 |
| | | | | 8 |
| 27. | காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார் | குறுந்தொகை | 342 | 1 |
| 28. | காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் | நற்றிணை | 237 | 1 |
| | | குறுந்தொகை | 297 | 1 |
| | | அகநானூறு | 107, 123, 285 | 3 |
| | | புறநானூறு | 57, 58, 169, 171, 353 | 5 |
| | | | | 10 |

| | | | | |
|---|---|---|---|---|
| 29. | காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார் | நற்றிணை | 389 | 1 |
| | | அகநானூறு | 103, 271 | 2 |
| | | | | 3 |
| 30. | காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தன் கண்ணன் | குறுந்தொகை | 347 | 1 |
| 31. | காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வணிகனார் மகனார் நப்பூதனார் | முல்லைப்பாட்டு | | |
| 32. | கிடங்கில் காவிதிக் கீரங்கண்ணனார் | நற்றிணை | 218 | 1 |
| 33. | கிடங்கில் காவிதிப் பெருங்கொற்றனார் | நற்றிணை | 364 | 1 |
| 34. | கிடங்கில் குலபதி நக்கண்ணனார் | குறுந்தொகை | 252 | 1 |
| 35. | குடவாயில் கீரத்தனார் | நற்றிணை | 27, 42, 212, 379 | 4 |
| | | குறுந்தொகை | 281, 369 | 2 |
| | | அகநானூறு | 44, 60, 79, 119, 129, 287, 315, 345, 366, 385 | 10 |
| | | புறநானூறு | 242 | 1 |
| | | | | 17 |
| 36. | கொள்ளம்பக்கனார் | நற்றிணை | 147 | 1 |
| 37. | கோக்குளமுற்றனார் | நற்றிணை | 96 | 1 |
| | | குறுந்தொகை | 98 | 1 |
| | | | | 2 |
| 38. | கோப்பெருஞ்சோழன் | குறுந்தொகை | 20, 53, 129, 147 | 4 |
| | | புறநானூறு | 214, 215, 216 | 3 |
| | | | | 7 |
| 39. | கோவூர் கிழார் | நற்றிணை | 393 | 1 |
| | | குறுந்தொகை | 65 | 1 |
| | | புறநானூறு | 31, 32, 33, 41, 44, 45, 46, 47, 68, 70, 308, 373, 382, 386, 400 | 15 |
| | | | | 17 |
| 40. | சல்லியங்குமரனார் | நற்றிணை | 141 | 1 |
| 41. | செம்பியனார் | நற்றிணை | 102 | 1 |
| 42. | செல்லூர்கிழார் மகனார் பெரும்பூதங்கொற்றனார் | நற்றிணை | 30 | 1 |
| | | குறுந்தொகை | 218, 358, 363 | 3 |
| | | அகநானூறு | 250 | 1 |
| | | | | 5 |

| | | | | |
|---|---|---|---|---|
| 43. | செல்லூர்க் கோசிகன் கண்ணனார் | அகநானூறு | 66 | 1 |
| 44. | சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார் | புறநானூறு | 181, 265 | 2 |
| 45. | சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் | புறநானூறு | 173 | 1 |
| 46. | சோழன் நலங்கிள்ளி | புறநானூறு | 73, 75 | 2 |
| 47. | சோழன் நல்லுருத்திரன் | முல்லைக்கலி | | 17 |
| | | புறநானூறு | 1 | 1 |
| | | | | 18 |
| 48. | தாயங்கண்ணனார் | நற்றிணை | 219 | 1 |
| | | குறுந்தொகை | 319 | 1 |
| | | அகநானூறு | 105, 132, 149, 213, 237, 319, 357 | 7 |
| | | புறநானூறு | 356, 397 | 2 |
| | | | | 11 |
| 49. | தாயங்கண்ணியார் | புறநானூறு | 250 | 1 |
| 50. | துறையூர் ஓடைகிழார் | புறநானூறு | 136 | 1 |
| 51. | நல்லாவூர் கிழார் | அகநானூறு | 86 | 1 |
| | | நற்றிணை | 154 | 1 |
| | | | | 2 |
| 52. | நெய்தல் சாய்த்துய்த்த ஆவூர்கிழார் | அகநானூறு | 112 | 1 |
| 53. | பூங்கணுத்திரையார் | குறுந்தொகை | 48, 171 | 2 |
| | | புறநானூறு | 277 | 1 |
| | | | | 3 |
| 54. | பெருந்தலைச் சாத்தனார் | நற்றிணை | 262 | 1 |
| | | அகநானூறு | 13, 224 | 2 |
| | | புறநானூறு | 151, 164, 165, 205, 209, 294 | 6 |
| | | | | 9 |
| 55. | பேரெயின் முறுவலார் | குறுந்தொகை | 17 | 1 |
| | | புறநானூறு | 239 | 1 |
| | | | | 2 |
| 56. | பொத்தியார் | புறநானூறு | 217, 220, 221, 222, 223 | 5 |

| | | | | |
|---|---|---|---|---|
| 57. | மாங்குடி மருதனார் | நற்றிணை | 120, 123 | 2 |
| | | குறுந்தொகை | 164, 173, 302 | 3 |
| | | அகநானூறு | 89 | 1 |
| | | புறநானூறு | 24, 26, 313, 335, 372, 396 | 6 |
| | | மதுரைக்காஞ்சி | | 12 |
| 58. | மாவளத்தன் | குறுந்தொகை | 348 | 1 |
| 59. | வீரை வெளியன் தித்தனார் | அகநானூறு | 188 | 1 |
| 60. | வெண்ணிக் குயத்தியார் | புறநானூறு | 66 | 1 |
| 61. | வெள்ளைக்குடி நாகனார் | நற்றிணை | 158, 196 | 2 |
| | | புறநானூறு | 35 | 1 |
| | | | | 3 |

குறிப்பு:

* சோழநாட்டுப் புலவர்கள் பாடிய பாடல்கள் எட்டுத்தொகையில் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய நூல்களில் மட்டும் இடம்பெற்றுள்ளன.
* சோழநாட்டுப் புலவர்கள் பத்துப்பாட்டுத் தொகுப்பில் மதுரைக்காஞ்சியும் முல்லைப் பாட்டு மட்டும் பாடியுள்ளனர்.

## பின்னிணைப்பு–5

# அகம் பாடியோர்

| வ. எண் | புலவர் பெயர் | திணை | கூற்று | பாடல் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | ஆதிமந்தி | குறிஞ்சி | தலைவி | 1 |
| 2. | ஆர்க்காடுகிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தார் | முல்லை | தலைவன் | 1 |
| 3. | ஆவூர்கிழார்மகனார் கண்ணனார் | குறிஞ்சி | தோழி | 1 |
| 4. | ஆவூர்க் காவிதிகள் சாதேவனார் | பாலை | தலைவன்<br>தோழி | 2 |
| 5. | உறையூர்க் கதுவாய் சாத்தனார் | மருதம் | தலைவன் | 1 |
| 6. | உறையூர்ச் சல்லியங்குமரனார் | மருதம் | தோழி | 1 |
| 7. | உறையூர்ச் சிறுகந்தனார் | குறிஞ்சி | தலைவி | 1 |
| 8. | உறையூர்ப் பல்காயனார் | குறிஞ்சி | தோழி | 1 |
| 9. | கடலூரர்ப் பல்கண்ணனார் | மருதம் | தோழி | 2 |
| 10. | கயத்தூர் கிழார் | மருதம் | தோழி | 1 |
| 11. | கழார்க்கீரன் எயிற்றியார் | பாலை (5)<br>முல்லை (1)<br>மருதம் (1)<br>குறிஞ்சி (1) | தலைவி (7)<br>தலைவன் (1) | 8 |
| 12. | காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார் | குறிஞ்சி (1) | தோழி | 1 |
| 13. | காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார் | குறிஞ்சி (1)<br>பாலை (2) | தோழி<br>தலைவி (2) | 3 |
| 14. | காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தன் கண்ணன் | பாலை | தலைவன் | 1 |
| 15. | காவிரிப்பூம்பட்டினத்து பொன்வணிகனார் மகனார் நப்பூதனார் | முல்லைப்பாட்டு | | |
| 16. | கிடங்கில் காவிதிக் கீரங்கண்ணனார் | நெய்தல் | தலைவி | 1 |
| 17. | கிடங்கில் காவிதிப் பெருங்கொற்றனார் | முல்லை | தலைவி | 1 |
| 18. | கிடங்கில் குலபதி நக்கண்ணனார் | குறிஞ்சி | தலைவி | 1 |
| 19. | கொள்ளம்பக்கனார் | குறிஞ்சி | தோழி | 1 |
| 20. | கோக்குளமுற்றனார் | முல்லை<br>நெய்தல் | தலைவி<br>தோழி | 2 |
| 21. | சல்லியங்குமரனார் | பாலை | தலைவன் | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 22. | செம்பியனார் | குறிஞ்சி | தோழி | 1 |
| 23. | செல்லூர்கிழார் மகனார் பெரும்பூதங்கொற்றனார் | மருதம்<br>நெய்தல்<br>முல்லை<br>பாலை (2) | தோழி (4)<br>தலைவி (1) | 5 |
| 24. | செல்லூர்க் கோசிகன் கண்ணனார் | மருதம் | தலைவி | 1 |
| 25. | நல்லாவூர் கிழார் | குறிஞ்சி<br>மருதம் | தோழி<br>தலைவன் | 2 |
| 26. | நெய்தல் சாய்த்துய்த்த ஆவூர்கிழார் | குறிஞ்சி | தோழி | 1 |
| 27. | மாவளத்தன் | பாலை | தோழி | 1 |
| 28. | வீரை வெளியன் தித்தனார் | குறிஞ்சி | தோழி | 1 |

குறிப்பு:

* அடைப்புக்குறிக்குள் உள்ள எண் மொத்தப் பாடலைக் குறிக்கும்.
* மேற்கண்ட இருபத்தெட்டு புலவர்களும் அகம் சார்ந்த ஐந்திணைகளை மட்டும் பாடியோர் ஆவார்.
* இவர்கள் பாடிய கூற்றுகள், தலைவன், தலைவி, தோழி கூற்றிலேயே அமைந்துள்ளதை அறியமுடிகிறது.

## பின்னிணைப்பு–6

## புறம் பாடியோர்

| வ. எண். | புலவர் பெயர் | திணை | துறை | பாடல் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | ஆடுதுறை மாசாத்தனார் | பொதுவியல் | கையறுநிலை | 1 |
| 2. | ஆலியார் | கரந்தை | நெடுமொழி | 1 |
| 3. | ஆவூர்கிழார் | வாகை | வல்லாண்முல்லை | 1 |
| 4. | இரும்பிடர்த்தலையார் | பாடாண் | செவியறிவுறூஉ | 1 |
| 5. | உறையூர் இளம்பொன் வணிகனார் | கரந்தை | கையறுநிலை | 1 |
| 6. | உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் | பாடாண் (12)<br>பொதுவியல் (1) | வாழ்த்தியல்<br>கடைநிலை<br>இயன்மொழி<br>விறலியாற்றுப்படை<br>பரிசில்துறை<br>பூவைநிலை<br>கையறுநிலை | 13 |
| 7. | ஐயூர் மூலங்கிழார் | வாகை | வல்லாண்முல்லை | 1 |
| 8. | சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார் | வாகை | வல்லாண்முல்லை | 2 |
| 9. | சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் | பாடாண் | இயன்மொழி | 1 |
| 10. | சோழன் நலங்கிள்ளி | காஞ்சி | பொருண்மொழிக் காஞ்சி | 2 |
| | | பொதுவியல் | வஞ்சினக்காஞ்சி | |
| 11. | தாயங்கண்ணியார் | பொதுவியல் | தாபதநிலைத் துறை | 1 |
| 12. | துறையூர் ஓடைகிழார் | பாடாண் | பரிசில்கடாநிலை | 1 |
| 13. | பொத்தியார் | பொதுவியல் (5) | கையறுநிலை | 5 |
| 14. | வெண்ணிக் குயத்தியார் | வாகை | அரசவாகை | 1 |

குறிப்பு:

* உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் மட்டும் பதின்மூன்றுப் பாடல்களைப் பாடியுள்ளார். இப்பதின்மூன்று பாடல்களில் பன்னிரெண்டு பாடல்கள் பாடாண்திணையிலும், ஒருபாடல் பொதுவியல் திணையிலும் அமைந்துள்ளது.
* பொத்தியார் பாடிய ஐந்து பாடல்களும், பொதுவியல்திணை, கையறுநிலைத் துறையில் மட்டும் அமைந்துள்ளது.

# பின்னிணைப்பு–7
## அகமும் புறமும் பாடியோர்

| வ. எண் | புலவர் பெயர் | அகத்திணை | கூற்று | புறத்திணை | துறை | பாடல் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1. | அரிசில் கிழார் | முல்லை (1) | தோழி | பெருந்திணை (1)<br>பொதுவியல் (1)<br>வாகை (1)<br>காஞ்சி (2)<br>தும்பை (2)<br>எட்டாம் பத்து (10) | குறுங்கலி, தாபத நிலை, கையறு நிலை, பேய்க் காஞ்சி, மகட்பாற் காஞ்சி, தானை மறம், குதிரை மறம் | 18<br>அகம் (1), புறம் (17) = 18 |
| 2. | ஆலங்குடி வங்கனார் | மருதம் (6) | பரத்தை | தும்பை (1) | வல்லாண் முல்லை | அகம் (6), புறம் (1) = 7 |
| 3. | ஆவூர் மூலங்கிழார் | முல்லை, மருதம், பாலை | தலைவன், தோழி, தலைவி | பாடாண் (4)<br>வாகை (2)<br>தும்பை (1)<br>கரந்தை (1) | இயன்மொழி, செவியறிவுறூஉ, பார்ப்பன வாகை, வல்லாண் முல்லை, பரிசில்கடாநிலை, கையறுநிலை, தானைமறம் | அகம் (3), புறம் (8) = 11 |
| 4. | இடைக்காடனார் | முல்லை (9)<br>பாலை (1) | தலைவன், தலைவி, தோழி | வாகை (1) | அரசவாகைத்துறை | அகம் (10), புறம் (1) = 11 |
| 5. | உறையூர் மருத்துவன் தாமோதரனார் | பாலை (2) | தலைவன், தலைவி | பாடாண்<br>வாகை<br>தும்பை | குடைமங்கலம், வல்லாண்முல்லை | அகம் (2), புறம் (3) = 5 |
| 6. | உறையூர் முதுகண்ணன் சாத்தனார் | குறிஞ்சி | தலைவி | பொதுவியல் (3)<br>பாடாண் (1)<br>தும்பை (1) | முதுமொழிக் காஞ்சி, வல்லாண் முல்லை, இயன்மொழி, | அகம் (1), புறம் (5) = 6 |
| 7. | ஐயூர் முடவனார் | மருதம்<br>நெய்தல்<br>குறிஞ்சி | தலைவன், தலைவி, தோழி, பரத்தை | பாடாண்<br>வாகை<br>தும்பை | அரசவாகை, ஆனந்தப் பையுள், வல்லாண்முல்லை, பரிசில் விடை | அகம் (6), புறம் (4) = 10 |
| 8. | காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணார் | பாலை (4)<br>குறிஞ்சி (1) | தோழி<br>தலைவன் | பாடாண் (3)<br>வஞ்சி (1)<br>காஞ்சி (1) | உடனிலை, பரிசில் கடாநிலை, துணைவஞ்சி, மகட்பாற் காஞ்சி, இயன்மொழி | அகம் (5), புறம் (5) = 10 |

| வ. எண் | புலவர் பெயர் | அகத்திணை | கூற்று | புறத்திணை | துறை | பாடல் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 9. | குடவாயில் கீரத்தனார் | முல்லை, நெய்தல், பாலை, குறிஞ்சி, மருதம் (16) | தலைவன், தலைவி, தோழி, நற்றாய், செவிலி | பாடாண் திணை | கையறுநிலைத் துறை | அகம் (16), புறம் (1) = 17 |
| 10. | கோப்பெருஞ்சோழன் | மருதம் குறிஞ்சி (4) பாலை | தலைவன், தலைவி, தோழி | பொதுவியல் பாடாண் (3) | பொருண்மொழிக் காஞ்சி, இயன்மொழி, | அகம் (4), புறம் (3) = 7 |
| 11. | சோழன் நல்லுருத்திரன் | முல்லைக்கலி (17) | – | பொதுவியல் (1) | பொருண்மொழிக் காஞ்சி | அகம் (17), புறம் (1) = 18 |
| 12. | கோவூர் கிழார் | குறிஞ்சி, முல்லை (2) | தோழி, தலைவி | வாகை, பாடாண், வஞ்சி (15) | இயன்மொழி, அரசவாகை, கொற்றவள்ளை, துணைவஞ்சி, பாணாற்றுப் படை, மூதின்முல்லை, மறக்களவழி, கடைநிலை, வாழ்த்தியல் | அகம் (2), புறம் (15)= 17 |
| 13. | தாயங்கண்ணனார் | முல்லை, நெய்தல், பாலை (9) | தலைவன், தலைவி, நற்றாய், செவிலி | காஞ்சி, பாடாண் (2) | காடுவாழ்த்து, பரிசில் விடை | அகம் (9), புறம் (2) = 11 |
| 14. | பூங்கணுத்திரையார் | பாலை மருதம் (2) | தோழி, தலைவி | தும்பை (1) | உவகைக் கலுழ்ச்சி | அகம் (2), புறம் (1) = 3 |
| 15. | பெருந்தலைச் சாத்தனார் | பாலை, முல்லை (3) | தலைவி, தோழி | பாடாண், தும்பை (3) | பரிசில்கடா நிலை, பரிசில் விடை, தானை மறம் | அகம் (3), புறம் (3) = 6 |
| 16. | பேரெயின் முறுவலார் | குறிஞ்சி (1) | தோழி | பொதுவியல் | கையறுநிலை | அகம் (1), புறம் (1) = 2 |
| 17. | மாங்குடி மருதனார் | மரும், நெய்தல், குறிஞ்சி, பாலை (6) | தலைவன், தலைவி, தோழி, செவிலி, காதற்பரத்தை | பொதுவியல், தும்பை, வாகை, பாடாண் (6) | பொருண்மொழிக்கஞ்சி, வல்லாண் முல்லை, மூதின் முல்லை, மறக்களவேள்வி, கடைநிலை, மதுரைக்காஞ்சி – நூல் | அகம் (6), புறம் (6) = 12 |
| 18. | உறையூர் முதுகூத்தனார் | முல்லை, பாலை, குறிஞ்சி, நெய்தல் (8) | தலைவி, தோழி, கண்டோர் | வாகைத்திணை | மூதின்முல்லை | அகம் (8), புறம் (1) = 9 |
| 19. | வெள்ளைக்குடி நாகனார் | குறிஞ்சி, நெய்தல் (2) | தோழி, தலைவி | பாடாண்திணை (1) | செவியறிவுறூஉ | அகம் (2), புறம் (1) = 3 |

குறிப்பு:

* மேற்கண்ட அகம், புறம் பாடிய புலவர்களுள், ஆலங்குடி வங்கனார் பாடிய அகப்பாடல்கள் அனைத்தும் மருதத்திணையில், பரத்தை கூற்றாக அமைந்துள்ளன.
* குடவாயில் கீரத்தனார் பாடல்கள் ஐந்து திணையிலும் இடம்பெற்றுள்ளன.

# பின்னிணைப்பு -8

## புலவர்களால் பாடப்பட்ட அரசர்கள்

| வ. எண் | பாடிய புலவர் | பாடப்பட்ட அரசர் |
|---|---|---|
| 1. | அரிசில்கிழார் | தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, செல்வக்கடுங்கோ வாழியாதன், பொறையன், வேளாவிக்கோமான் பதுமண், அதிகமான், வையாவிக் கோப்பெரும் பேகன், எழினி, கழுவுள், கொங்கர், பூழியர், வேளிர். |
| 2. | ஆடுதுறை மாசாத்தனார் | சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் |
| 3. | ஆலங்குடி வங்கனார் | கொற்றச் செழியன், சோழர் |
| 4. | ஆவூர்க்காவிதிகள் சாதேவனார் | கொடுமுடி |
| 5. | ஆவூர் மூலங்கிழார் | சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன், பாண்டியன் இலவந்திகைப் பள்ளி துஞ்சிய நன்மாறன், பாண்டியன் கீரஞ்சாத்தன், மல்லிகிழான் காரியாதி, சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான், கௌணியன் விண்ணந்தாயன். |
| 6. | இடைக்காடனார் | சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் |
| 7. | இரும்பிடர்த் தலையார் | கருங்கையொள்வாட் பெரும்பெயர் வழுதி |
| 8. | உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் | சேரமான் அந்துவஞ்சேரல் இரும்பொறை, சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி, ஆய் அண்டிரன், வேளிர், கொங்கர் |
| 9. | உறையூர் மருத்துவன் தாமோதரனார் | சோழன் குராப்பள்ளித் துஞ்சிய திருமாவளவன், பிட்டங் கொற்றன் |
| 10. | உறையூர் முதுகண்ணனன் சாத்தனார் | சேட்சென்னி நலங்கிள்ளி |
| 11. | ஐயூர் முடவனார் | சோழன் குளமுற்றத்துஞ்சிய கிள்ளிவளவன், பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி, ஆதன் எழினி, தாமான் தோன்றிக்கோன் |
| 12. | ஐயூர் மூலங்கிழார் | கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி |
| 13. | காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் | சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன், பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி, அண்டிரன், பிட்டங் கொற்றன், இளம்பல்கோசர், வடுகர். |
| 14. | காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார் | அவியன் |

| | | |
|---|---|---|
| 15. | குடவாயில் கீரத்தனார் | பொறையன், பெரும்பூட்சென்னி, சோழர், வழுதி, அத்தி, எவ்வி, ஏற்றை, ஓல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன், கங்கன், கட்டி, கணையன், நன்னன், பழையன், கொங்கர், மழவர், வடுகர். |
| 16. | கோப்பெருஞ்சோழன் | பிசிராந்தையார் |
| 17. | கோவூர் கிழார் | சோழன் குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவன், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், சோழன் நலங்கிள்ளி, சோழன் நெடுங்கிள்ளி, மலையமான் மக்கள், இளந்தத்தன். |
| 18. | சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார் | வல்லார்கிழான் பண்ணன் |
| 19. | சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் | *(சிறுகுடிகிழான்) பண்ணன்* |
| 20. | தாயங்கண்ணனார் | வானவன், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், செழியன், எழினி, எயினர், தொண்டையர், யவனர், வடுகர். |
| 21. | துறையூர் ஓடைகிழார் | ஆய் அண்டிரன் |
| 22. | பெருந்தலைச் சாத்தனார் | இளங்கண்டீரக்கோ, இளங்குமணன், இளவிச்சிக்கோ, கடியநெடுவேட்டுவன், குமணன், நன்னன், பண்ணி, மூவன் |
| 22. | பேரெயின் முறுவலார் | நம்பி நெடுஞ்செழியன் |
| 24. | பொத்தியார் | கோப்பெருஞ்சோழன் |
| 25. | மாங்குடி மருதனார் | தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், நிலந்தரு திருவின் நெடியோன், எவ்வி, நன்னன், பழையன், மாறன், மானவிறல்வேள், வாட்டாற்று எழினியாதன், கோசர், தென்பரதவர், மழவர், வேளிர். |
| 26. | வெண்ணிக் குயத்தியார் | கரிகால் வளவன் |
| 27. | வெள்ளைக்குடி நாகனார் | சோழன்குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் |

## 'இலக்கியக்கட்டுரைகள்' படைப்புகள்

### சங்க கால சோழநாட்டு ஊர்கள்

26 Mar, 2012 | | No Comments »

ப.செந்தில்குமாரி முனைவர்ப் பட்ட ஆய்வாளர், அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி) கும்பகோணம் சங்க காலத்தமிழகம் அரசியலால் சேர, சோழ, பாண்டிய vஎன மூவேந்தர்களின் பெருநாடுகளாகவும், சிறு குறுநிலங்களாகவும், பிளவுண்டு கிடந்தது. ஆனால் மொழியாலும், பண்பாட்டாலும் தமிழர்கள் ஒன்றுபட்டிருந்தனர். இந்த மூன்று பெருநாடுகளிலும் வாழ்ந்த புலவர்கள், மூவேந்தர்களையும் பாடிப் பரிசில் பெற்று [Read More]

# சங்க கால சோழநாட்டு ஊர்கள்

ப.செந்தில்குமாரி
முனைவர்ப் பட்ட ஆய்வாளர்,
அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி)
கும்பகோணம்

சங்க காலத்தமிழகம் அரசியலால் சேர, சோழ, பாண்டிய vஎன மூவேந்தர்களின் பெருநாடுகளாகவும், சிறு குறுநிலங்களாகவும், பிளவுண்டு கிடந்தது. ஆனால் மொழியாலும், பண்பாட்டாலும் தமிழர்கள் ஒன்றுபட்டிருந்தனர். இந்த மூன்று பெருநாடுகளிலும் வாழ்ந்த புலவர்கள், மூவேந்தர்களையும் பாடிப் பரிசில் பெற்று வாழ்ந்ததை சங்க இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன.

சங்க இலக்கியம் பாடியவர்களில் பெயர் தெரிந்த புலவர்களாக 473 பேர் காணப்படுகின்றனர். இவர்களுடன் சேர, சோழ, பாண்டிய, தொண்டை நாட்டைச் சேர்ந்த புலவர்களும், புலவர்களுக்கு உரிய நாடு மற்றும் பெயர் தெரியாத புலவர்களும் அடங்குவர். சேரநாட்டுப் புலவர்கள் 24பேர்; சோழநாட்டுப் புலவர்கள் 57பேர்; பாண்டியநாட்டுப் புலவர்கள் 90 பேர்; தொண்டைநாட்டுப் புலவர்கள் 9 பேர்; எனக் காணக்கிடக்கின்றனர். இப்புலவர்களின் பெயர் தோற்றத்தினை ஆராயும் பொழுது அப்பெயர்கள் இயற்பெயர், ஊர்ப்பெயர், குடிப்பெயர், தொழில் பெயர், உறுப்பால் பெற்ற பெயர், சிறப்புப் பெயர் எனப் பலவாறாக பெயர் பெற்றுள்ளமையை அறிய முடிகிறது. இவ்வகையில் சங்க கால சோழநாட்டுப் புலவர்களின் பெயரால் அறியப்படும் சோழநாட்டு ஊர்களான அரிசிலூர், ஆடுதுறை, ஆர்க்காடு, ஆலங்குடி, ஆவூர், உறையூர், ஐயூர், கடலூர், காவிரிபூம்பட்டினம், கிடங்கில், குடவாயில், கோவூர், செல்லூர், முகையலூர், துறையூர், நல்லாவூர், மாங்குடி, வெள்ளைக்குடி ஆகிய ஊர்கள் பற்றிய வரலாறுகளை ஆய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

**அரிசில்**

அரிசில் என்னும் இவ்வூரைச் சேர்ந்த அரிசில் கிழார் என்ற புலவர் சங்க காலத்தில் வாழ்ந்துள்ளார். தமிழகத்து ஊர்கள் ஒவ்வொன்றும் பெரும்பாலும் ஏதோ ஒரு காரணம் பற்றியே பெயர் பெற்றிருக்கும். பொதுவாகத் தம்மைச் சார்ந்துள்ள மலை, காடு, ஆறு என்று இவற்றின் பெயர் அமைந்திருப்பது பெரு வழக்கமாகும். ஆற்றின்

பெயரைத் தன்பெயராகக் கொண்டு ஊர்கள் பல நம் தமிழகத்தில் காணப்படுகின்றன. இவ்வாறு ஆற்றின் பெயரைப் பெயரெனக் கொண்ட ஊர்களுள் அரிசிலூரும் ஒன்றாகும். காவிரியில் பிரிந்து பாயும் ஆறுகளுள் அரிசிலாறும் இடம் பெறுகின்றது. அரிசிலாற்றங்கரையில் அரிசில் என்று பெயர் பெற்ற ஊர் இருந்ததாக பழந்தமிழ்ப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன. அரிசிலாற்றைப் பற்றிய குறிப்பு சோழநாட்டுப்புலவர் பாடிய பாடலில் காணப்படுகின்றது என்பதை,

"ஏந்து கோட்டு யானை இசை வெங்கிள்ளி
வம்பு அணி உயர்கொடி அம்பர் சூழ்ந்த

அரிசில்" 1

என்ற பாடலின் வழி அறியலாம். இப்பொழுது அம்பர் என்ற ஊர் திருவாரூர் மாவட்டத்தில் பூந்தோட்டத்திற்குக் கிழக்கே அரிசிலாற்றின் கரையில் அமைந்துள்ளது. சங்க காலத்தில் அம்பர் நகரம் கிள்ளி வளவனுக்குரியதாக இருந்துள்ளது. இவ்வூரைச் சூழ்ந்தே அரிசிலாறு அமைந்துள்ளது. பிற்காலத்தில் சுந்தரரால் தேவராம் பாடப்பெற்ற சைவத்தலங்களில் இந்த அரிசிலூர் 'அரிசிற்கரைப்புத்தூர்' என்று பாடப்பட்டுள்ளது. அது இப்பொழுது 'அழகாபுத்தூர்' என்றழைக்கப்படுகிறது. 'அரிசிலாறு' என்பது 'அரசலாறு' என்று இப்பொழுது வழங்கப்பட்டு வருவதனைக் காணலாம்.

## ஆடுதுறை

ஆடுதுறை என்ற பெயருடைய ஊர்கள் பல தமிழகத்தில் உள்ளன. அவை, தென்குரங்காடுதுறை, வடகுரங்காடுதுறை, ஆவடுதுறை என்பனவாகும். ஆவடுதுறை என்ற பெயரே ஆடுதுறை என மாறி வந்துள்ளது. 'திருவாவடுதுறைக்குச் சாத்தனூர் என்னும் பழம் பெயர் இருந்ததாக கல்வெட்டுகளும், திருத்தொண்டர் புராணமும் கூறுகின்றன. சாத்தனூர் என்பது ஊர்ப்பெயர் ஆவடுதுறை என்பது அவ்வூர்க் கோயிலுக்குப் பெயர். நாளடைவில் சாத்தனூர் என்பது மறைந்து போகவே கோயில் பெயரே ஊருக்கும் பெயராகிவிட்டது என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இவ்வாடுதுறையைச் சார்ந்தவராக ஆடுதுறை மாசாத்தனார் என்னும் புலவர் காணப்படுகிறார். இப்பொழுதுள்ள ஆடுதுறைக்கு அருகே, சாத்தனூர், திருவாவடுதுறை ஆகிய இரு ஊர்களும் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாம்.

## ஆர்க்காடு

சோழ மன்னனுக்குரிய ஆத்தியைக் குறிக்கும் 'ஆர்' என்ற மரத்தால் பெயர் பெற்ற ஊர் ஆர்க்காடு ஆகும். ஆர்க்காடு என்ற ஊர்ப்பெயரே இன்று மாவட்டத்திற்கும் பெயராக வழங்கி வருகிறது. சங்க இலக்கியம் குறிக்கும் ஆர்க்காடு 'அழிசில்' என்ற குறுநில மன்னனுக்கு உரியதாய் இருந்துள்ளது. இப்பொழுது வடவார்க்காடு மாவட்டத்தில் பாலாற்றங்கரையில் இவ்வூர் காணப்படுகிறது.

"படுமணி யானைப் பசும்பூட் சோழர்
கொடி நுடங்கு மறுகின் ஆர்க்காட்டு ஆங்கண்" 2

என்னும் அடிகள் ஆர்க்காடு சோழர்களின் நகரமாக இருந்ததைக் குறிப்பிடுகிறது. இவ்வூரைச் சேர்ந்தவராக 'ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார்' என்னும் புலவர் காணப்படுகின்றார்.

## ஆலங்குடி

ஆலங்குடி என்னும் பெயர் தாங்கிய ஊர்கள் பல நம் தமிழகத்தில் உள்ளன. இவ்வூரைச் சேர்ந்தவராக ஆலங்குடி வங்கனார் என்னும் புலவர் காணப்படுகிறார். இவர் பாடிய அகத்திணைப் பாடல்கள் யாவும் மருதத்திணையில் அமைந்த பாடல்களாக இருப்பது குறிப்பிடத்தக்கது. தொன்மைச் சிறப்புடைய ஆலங்குடி சோழநாட்டில் இரண்டு இருந்துள்ளன. அவை தஞ்சை மாவட்டத்து மேலைப்பெரும் -பள்ளத்துக் கல்வெட்டில் காணப்படும் ஆலங்குடியும், புதுக்கோட்டை ஆலங்குடியும் ஆகும். மேலைப்பெரும்பள்ளத்து ஆலங்குடி திருஞானசம்பந்தர் காலத்தில் 'திரிவிரும்பூளை' என்று வழங்கி வந்திருக்கின்றது. அவர்க்குப்பின் தோன்றிய சோழர்காலத்தில் அது சுத்தமல்லி வளநாட்டு முடிச்சோணாட்டு ஆலங்குடியான சனநாதச் சதுர்வேதமங்கலம் என வழங்கப்பட்டுள்ளது. பிறிதொரு கல்வெட்டில் இந்த ஆலங்குடியே சோழ வளநாட்டு வேளாநாட்டு ஆலங்குடி என்று கூறப்படுகிறது. மற்றதொரு ஆலங்குடி இராசராச வளநாட்டுப்புன்றிற் கூற்றத்து ஆலங்குடி என கல்வெட்டுகள் குறிக்கின்றன.

இந்த இரண்டு ஆலங்குடியுள்ளும், புன்றிற் கூற்றத்து ஆலங்குடியே 'ஆலங்குடி' என்ற பெயரளவில் தொன்மையுடையதாகத் தெரிதலால் இதுவே வங்கனார் புலவர் வாழ்ந்த ஊராகும் என்று கொள்வதற்கு இடமிருக்கிறது. வலங்கைமானுக்கு அருகில் அமைந்த ஆலங்குடி தேவராப்பாடல் பெற்றதும் சோழர் கால கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் இடம் பெற்ற பழமைச்சிறப்புடையதாகும்.

ஆவூர்

ஆவூர் எனப் பெயருடைய ஊர்கள் தொண்டைநாட்டிலும் சோழநாட்டிலும் உண்டு. பிற்காலச்சோழர், பாண்டியர் காலம் வரையில் சோழநாட்டு ஆவூர், 'ஆவூர்க்கூற்றத்து ஆவூர்' என்று விளங்கியிருந்தது. அது பிற்காலத்தே பசுபதி கோயில் என்ற பெயரை மேற்கொண்டமையால் ஆவூர் என்ற பழம் பெயர் மறைந்தொழிந்தது. ரா.பி. சேதுப்பிள்ளை இந்த ஆவூர் பற்றிய கருத்தைக் கூறுகிறார். பசுபதீச்சுரம் தான் ஆவூர் என்பது அவருடைய முடிவு. 'அங்கிணர்க்கிடமாகிய ஆவூர்' என்று சேக்கிழாரால் சிறப்பிக்கப் பெற்ற ஊரில் அமைந்துள்ளது பசுபதி என்று கூறுவதோடு 'பத்திமைப்பாடல் ஆறாத ஆவூர்ப் பசுபதீச்சுரம் பாடு நாவே' என்று அத்திருக்கோயிலைத் திருஞானசம்பந்தரும் பாடியருளியதை எடுத்துக்காட்டுகிறார். இவ்வூரைச் சேர்ந்தவர்களாக, ஆவூர் மூலங்கிழார், ஆவூர்கிழார் மகனார் கண்ணனார், ஆவூர்க்காவிதிகள் சாதேவனார் ஆகிய நால்வரும் காணப்படுவதை அறிய முடிகிறது.

உறையூ''ர'

சோழர்களின் தலைநகரமாக இவ்வூர் விளங்கியுள்ளது. இவ்வூருக்குக் கோழியூர் என்ற பெயருமுண்டு. கோப்பெருஞ்சோழனைப் புறப்பாடல் குறிப்பிடும் பொழுது 'கோழியோனே கோப்பெருஞ்சோழன்' என்று சுட்டுகிறது. உறையூரானது காவிரி நதிக்கரையில் அமைந்த செய்தியை,"

"காவிரிப்படப்பை உறந்தை அன்ன" 3

என்ற அகப்பாடலானது குறித்துள்து. உறையூரின் கிழக்கே திருச்சிராப்பள்ளியும், பிடவூரும் அமைந்துள்ளது. இவ்வூறையூரைச் சோழமன்னர்களுக்கே உரியதாக 'மறம் கெழு சோழர் உறந்தை', 'வளம்கெழு சோழர் உறந்தை' சோழர் அறம் கெழு நல் அவை உறந்தை என்று சங்க இலக்கியங்கள் பாடுகின்றன. உறையூரைச் சார்நதவர்களாக ஒன்பது புலவர்கள் காணப்படுகின்றனர்.

ஐயூர்

ஐ என்றால் அழகு. எனவே அழகிய ஊர் என்ற பொருளில் அமைந்து ஐயூர் எனப் பெயர் பெற்றிருக்கலாம். தலைவன் என்ற பொருளும் இருப்பதால் தலைவனின் ஊர் என்று பொருளிலும் அமைந்திருக்கலாம். ஐயூர் என்பது சோழநாட்டில் உள்ள ஊர் என்று குறிப்பிடுகிறார் ஆளவந்தார். இவ்வூரினை ஔவை

சு.துரைசாமிப்பிள்ளை, பாண்டி நாட்டில் உள்ள ஊர் என்று சுட்டுகிறார். இவ்வூரைச் சேர்ந்தவர்களாக ஐயூர் முடவனார், ஐயூர் மூலங்கிழார் என இரு புலவர்கள் காணப்படுகிறார்கள்.

### காவிரிப்பூம்பட்டினம்

சங்க கால சோழர்களின் தலைநகரமாகவும், துறைமுகமாகவும் இவ்வூர் இருந்துள்ளது. உருவப் பல்தேர் இளஞ்சேட் சென்னியின் தலைநகரமாகக் காவிரிப்பூம்பட்டினம் விளங்கியதை,

"பூவிரி நெடுஞ்சுழி நாப்பண், பெரும் பெயர்க்
காவிரிப் படப்பைப் பட்டினத்தன்ன

செழுநகர்" 4

என்ற அகப்பாடலில் நக்கீரர் சுட்டியுள்ளார். கரிகால் பெருவளத்தான் காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் சிறந்த துறைமுகமாக விளங்கியதைப் பட்டினப்பாலையும், பொருநராற்றுப்படையும் எடுத்துரைக்கின்றன. காவிரிப்பூம்பட்டினம், 'காவிரி படப்பைப் பட்டினம்' எனச் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படுகிறது. இவ்வூரைச் சேர்ந்தவர்களாக ஐந்து புலவர்கள் காணப்படுகின்றனர்.

### கிடங்கில்

ஒய்மா நாட்டு நல்லியக்கோடன் ஆட்சி செய்த இவ்வூர் தென்னார்க்காடு மாவட்டம் திண்டிவனம் நகரத்தில் பள்ளமான இடத்தில் அமைந்துள்ளது. அங்கே சிவன்கோவில் ஒன்று அமைந்துள்ளது. அதைச்சுற்றிலும் இடிந்த மதிற்சுவர்கள் காணப்படுகின்றன. அக்கோவிலில் கி.பி.11 முதல் 15-ம் நூற்றாண்டில் ஆட்சி செய்த சோழர், சம்புவராயர், விசயநகர வேந்தர் கால கல்வெட்டுகள் காணக்கிடைத்துள்ளன. அக்கல்வெட்டுகளில் 'ஒய்மானாட்டு கிடங்கை நாட்டுக்கிடங்கில்' எனும் ஊரில் அக்கோயில் இருப்பதாக கூறுகின்றன. இவ்வூருக்கு ஒரு கிலோ மீட்டர் வடக்கில் அமைந்த திண்டிவனத்தில் ஒரு சிவன் கோயிலுள்ளது. அக்கோயிலில் உள்ள சோழர்காலக் கல்வெட்டுகள் கி.பி.1300ம் காலத்தவையாம். அக்கல்வெட்டுகளும் 'ஒய்மானாட்டு கிடக்கை நாட்டுக் கிடங்கிலான இராஜேந்திர சோழ நல்லூர்த் திண்டீசுரம்' என்று குறித்துள்ளன. இச்சான்றுகளின் படி இன்றைய திண்டிவனம் நகரத்தின் பெரும்பகுதி கிடங்கிலே ஆகும். இக்கிடங்கில் நகரைச் சேர்ந்தவர்களாக மூன்று சங்கப்புலவர்கள் காணப்படுகின்றனர்.

குடவாயில்

சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் குடந்தை, குடவாயில் ஆகிய யாவும் இன்றைய குடவாசலே என்று உ.வே.சா, பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், பெருமழைப்புலவர்சோமசுந்தரனார் ஆகியோர் குறிக்கின்றனர். இக்குடவாயிலைப்பற்றி,

"தண் குடவாயில் அன்னோள்" (அகம் – 44)

"தேர் வண் சோழர் குடந்தை வாயில்" (நற்றிணை – 379)

"கொற்றச்சோழர் குடந்தை வைத்த நாடுதரு நிதி" (அகம் – 60)

என்று சங்க இலக்கிய அடிகள் குடவாயிலின் பெருமையினை பேசுகின்றன.

கூடலூர்

தென்னார்க்காடு மாவட்டத்தில் கடலோரத் தாலுக்காவாக இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூரில் தென்பெண்ணை, கெடிலம், வெள்ளாறு என மூன்று ஆறுகள் ஓடுகின்றன. இவை கூடுமிடத்தால் கூடலூர் எனப் பெயர்பெற்று. பின் அப்பெயரே மருவி கடலூர் என அமைந்திருக்க வேண்டும். சங்க காலப் பல்கண்ணனார் என்னும் புலவர் இவ்வூரினராகக் கருதப்படுகிறார்.

கோவூர்

கோவூர் கிழாரின் பெயரால் அறியப்படும் இவ்வூர் சோழ நாட்டு ஊர்களுள் ஒன்று. நாகைக்கு அருகில் 'கோகூர்' என்று அறியப்படும் ஊரே சங்க காலத்தைச் சேர்ந்த கோவூராக இருக்கலாம் என்பது ஆய்வாளரின் கருத்தாகும்.

செல்லூர்

செல்லிக்கோமான் என்றழைக்கப்பட்ட ஆதன் எழினி என்னும் குறுநில மன்னனால் செல்லூர் ஆட்சி செய்யப்பட்டது. சோழநாட்டின் கீழைக்கடலோரம் இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூரின் கிழக்கே நியமம் என்ற ஊர் உள்ளது. இவ்வூரில் இளங்கோசர்கள் வாழ்ந்துள்ளமையை.

"அருந்திறற் கடவுட் செல்லூர்க் குணா அது
பெருங்கடல் முழக்கிற்று ஆகி யாணர்,
இரும்பு இடம் படுத்த வடுவுடை முகத்தர்
கருங்கட் கோசர் நியமம் ஆயினும்". 5

என்னும் அடிகள் உணர்த்துகின்றன. இன்றும் காரைக்கால் அருகெ செல்லூர் என்ற ஊர் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

துறையூர்

தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் முசிறித் தாலுக்காவில் இவ்வூர் காணப்படுகிறது. இவ்வூரைச் சேர்ந்தவராக 'ஓடைகிழார்' என்னும் புலவர் காணப்படுகிறார். இப்புலவர் வேள் ஆய் அண்டிரனைப்பாடும் பொழுது

"தண்புனல் வாயிற் றுறையூர் முன்றுரை" 6

என்று சிறப்பித்துப் பாடுகிறார்.

நல்லாவூர்

நல்லாவூர் சோழநாட்டைச் சேர்ந்த ஊராகும். இவ்வூரில் நல்லாவூர் கிழார் என்னும் புலவர் வாழ்ந்துள்ளார். இவ்வூரைப் பற்றி வேறொன்றும் அறிய இயலவில்லை. காரைக்கால் செல்லும் வழியில் எஸ்.புதூர் என்னும் ஊருக்கு அருகே நல்லாவூர் என்னும் ஒரு சிற்றூர் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாம்.

மாங்குடி

மாங்குடி என்ற பெயரில் தமிழகத்தில் பல ஊர்கள் உள்ளன. திருத்துறைப்பூண்டிக்கு அருகே மாங்குடி, மருதவனம் என இரண்டு ஊர்கள் உள்ளன. இவ்வூர்களைச் சேர்ந்தவராக மாங்குடி மருதனார் அறியலாகிறார்.

முகையலூர்

முகையலூர் என்பது சோழநாட்டைச் சார்ந்த ஓர் ஊராக இருந்துள்ளது. ஔவை.சு.துரைசாமிப்பிள்ளை .முகையலூர் இடைக்காலத்தில் 'முகலாறு' என வழங்கி இப்பொழுது 'மொகலாறென' வழங்குகிறது என்கிறார். இவ்வூரைச் சேர்ந்தவராக சோணாட்டு முகையலூர் சிறுகருந்தும்பியார் என்னும் புலவர் காணப்படுகிறார்.

வெள்ளைக்குடி

வேங்கைமரம் எனப்பொருளுடைய சொல் 'வெள்ளை' என்பதாம். வேங்கை மரங்கள் அடர்ந்த குடியிருப்புகள் அமைந்த ஊர் வெள்ளைக்குடி எனப்பெயர் பெற்றிருக்கலாம் என்கிறார் ஆளவந்தார். இவ்வூரும் சோழ நாட்டைச் சேர்ந்த ஊராகும். நாகனார் என்னும் புலவர் இவ்வூரினார் ஆவார்.

இதுகாறும் சோழநாட்டு ஊர்களை ஆயுமிடத்து, அவை வரலாற்றுத்தொன்மை மிக்க சிறப்பு உடையதாகத் திகழ்ந்தமையை அறிய முடிகிறது. மேலும் ஊரின் அமைப்பும், அவ்வூரில் வாழ்ந்த

புலவர்களும், அப்புலவர்களின் வழி அவ்வூரின் பெருமையினையும் உணர்ந்து கொள்ள முடிகிறது.

பயன்பட்ட ஆதாரங்கள்

1. நற்றிணை, பா. 141 : 9-11
2. அகம், பா. 227 : 5-6
3. மேலது பா.385 : 4.
4. மேலது பா.205 : 11-13
5. மேலது பா.90 : 9-12
6. புறம், பா.136 : 25.
7. டாக்டர். வேனிலா ஸ்டாலின், உரைவேந்தர் புலமையில் நற்றிணை
8. ஆர். ஆளவந்தார் இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள், தொகுதி– I
9. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை (உ.ஆ.), புறநானூறு மூலமும் உரைiuiuயும்.

---------

# சங்க கால சோழநாட்டு அரச புலவர்கள்

- Friday, March 16, 2012, 14:37
- Featured, இலக்கியம், கட்டுரைகள்
- Add a comment

ப.செந்தில்குமாரி



தமிழ்மொழியின்கண் உள்ள மிகப் பழமையான நூல் தொகுதி சங்க இலக்கியம். இது சொற்செறிவும் பொருட்செறிவும் நிறைந்த கவிதைக் களஞ்சியம். பண்டைத் தமிழர் தம் காதல், வீரம், கொடை, நட்பு ஆகிய பெரும் பண்புகளை எடுத்துக்காட்டும் கருத்துக் கருவூலமாக இது திகழ்கிறது. இத்தகைய சிறப்புகளைப் பெற்ற சங்க நூல்களைப் பாடிய புலவர்கள் பற்பல காலத்தவராகவும், மரபினராகவும், தொழிலினராகவும் விளங்கியுள்ளனர். புலவர்கள் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற நோக்கிலேயே வாழ்ந்து, குறுகிய மனமின்றிப் பரந்த உள்ளத்தோடு முப்பெரும் நாடுகளுக்கும் சென்று மூவேந்தர்களையும் பாடி மகிழ்ந்துள்ளனர். இத்தகைய புலவர்களை, சங்ககால வேந்தர்களும் நன்கு மதித்து, அவர்களின் புலமைத் திறத்தினைப் பாராட்டி, பொன், பொருள், உடை, உணவு போன்றவற்றை வழங்கி, தமிழ்மொழியை வளர்த்துள்ளனர்.

இம்மன்னர்களை உயிரென மதித்து மக்கள் வாழ்ந்தமையைச் சங்க இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. மக்களிடையே மன்னவன் 'இறை' என்று அழைக்கப்பட்டான். முறையான ஆட்சியைச் செய்த மன்னவர்கள், மக்களுக்கும், புலவர்களுக்கும், நல்ல பாதுகாவலராய் விளங்கியதோடு மட்டுமல்லாமல் தங்கள் புலமைத் திறத்தால் பாடும் இயல்பினராகவும் வாழ்ந்துள்ளனர். அவ்வகையில் மூன்று நாடுகளையும் சேர்ந்த சங்க அரசப் புலவர்கள் காணப்படுகின்றனர். அவர்களில் சிறப்பு மிக்க நல்லாட்சியை நடத்தி, நாட்டை வளப்படுத்திய சோழர்களில் பாவலராக விளங்கிய அரசப் புலவர்களையும், அவர்தம் பாடல்களின்

வழி வெளிப்படுத்திய சிந்தனைகளையும் வெளிக் கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

சோழ நாட்டின் பெருமை சங்க காலச் சோழநாடு கிழக்குக் கடல், மேற்குக் கோட்டைக்கரை, வடக்கு ஏணாடு, தெற்கு வெள்ளாறு ஆகிய எல்லைகளைக் கொண்டு இருபத்து நான்கு காதம் விரிந்து சங்க காலத்தில் புகழ்மிக்கதாய் விளங்கியுள்ளது. சங்க இலக்கியத்துள் சோழ நாடு 'தண்சோழநாடு' 'சோழநல்நாடு' 'நெடுஞ்சோழநாடு' என்றெல்லாம் சிறப்பிக்கப் பெறுகிறது. பிற்காலத்தில் எழுந்த சோழ மண்டல சதகம் சோழநாட்டின் பெருமையினை,

"எந்த நதியைப் புகழ்ந்தாலும் இது காவேரிக்கு இணையென்பார்
எந்த அரசைப் புகழ்ந்தாலும் இவனே சோழற்கு இணையென்பார்
எந்த நாட்டைப் புகழ்ந்தாலும் இதுவே சோணாடு என இயம்ப
வந்த விசிட்டம் ஓங்கியது வளம் சேர் சோழ மண்டலமே" 1
என்று குறிப்பிடுகின்றது.

அரசப் புலவர்களின் பண்புகள்:

சங்க காலத்தில் தமிழரசர்களும் அறிவு நிறைந்த புலவர் பெருமக்களாய் உலகம் போற்ற நாட்டை ஆண்டனர். கல்வியின் பெருமை உணர்ந்த அவர்கள் அதனைப் போற்றி வளர்த்தனர். பொருளின் சிறப்புணர்ந்து அதை நல்வழியில் ஈட்டி அறவழியில் செலவழிக்க வேண்டும் என்பதை உணர்ந்திருந்தனர். மானம் அழிந்த பின் வாழ்வதை இழிவாகக் கருதி அரசாட்சி நடத்தினர். சுருங்கக் கூறின் எல்லாப் பண்புகளிலும் தலைசிறந்தவராய் விளங்கியுள்ளமையை அறிய முடிகிறது. இத்தகைய பண்புகளைப் பெற்ற அரசர்கள் பாடல் புனைந்து பாவலராயும் விளங்கினார்கள்.

சோழ அரசப் புலவர்கள் 'சோழ வளநாடு சோறுடைத்து' என்ற பெருமைக்குரிய சோழநாட்டை ஆட்சி செய்த சங்க காலச் சோழ மன்னர்களில் கோப்பெருஞ்சோழன், சோழன் குளமுற்றத்து துஞ்சிய கிள்ளிவளவன், சோழன் நலங்கிள்ளி, சோழன் நல்லுருத்திரன், மாவளத்தான், வீரைவெளியன் தித்தன் ஆகிய அறுவரும் அரசப் புலவர்களாக காணப்படுகின்றனர்.

கோப்பெருஞ்சோழன்:

உறையூரைத் தலைநகராகக் கொண்டு உலகோர் போற்ற நாடாண்ட சோழ அரசர்களுள் கோப்பெருஞ்சோழனும் ஒருவன். நட்பின் இலக்கணத்திற்குச் சிகரமாக விளங்கிய இவன் பிசிராந்தையார், பொத்தியார் ஆகிய இருவருக்கும் உயிர் நண்பன். இவன் தன்பிள்ளைகள் இருவரோடு கருத்து வேறுபாடு தோன்ற பகைமை ஏற்பட்டுப் போர்செய்ய முற்படும்பொழுது புல்லாற்றூர் எயிற்றியனாரால் சமாதானம் செய்யப்பட்டான். இவ்வரசன் செய்யுள் இயற்றுவதில் வல்லவன். இவன் பாடியதாக ஏழு பாடல்கள் கிடைக்கின்றன. (குறுந்.20,53,129,147,
புறம். 214,215,216)

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சி தான்
நட்பாம் கிழமை தரும்."

என்னும் குறளுக்கு இலக்கணமாய் விளங்கிய கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்த பொழுது பிசிராந்தையாருக்கு இடம் ஒதுக்கி வைக்கக் கூறினான். அப்பொழுது பிசிராந்தையார் வாரார் என்று கூறிய சான்றோரிடம் பிசிர் என்ற ஊரில் வாழும் என் நண்பன் என் உயிரைப் பாதுகாப்பவன் அவன் என்னிடத்து செல்வம் உள்ள காலத்து வராமல் இருப்பினும், எனக்குத் துன்பம் வந்த காலத்து வராமல் இருக்கமாட்டான் என்று நட்பின் ஆழத்தை

"செல்வக் காலை நிற்பஅல்லற் காலை நில்லலன் மன்னே"

என்ற புறப்பாடல் விளக்குகின்றது. மேலும் அவன் தன் பெயரைக் கூறும் பொழுது என் பெயர் பேதைமை கொண்ட சோழன் என்று என் பெயரையே தன் பெயராகக் கூறும் நெருங்கிய அன்புரிமை கொண்டவன் என்பதை,

"தன்பெயர் கிளக்கும் காலை, 'என் பெயர்பேதைச் சோழன்' என்றும், சிறந்த காதற்கிழமையும் உடையன"

என்று பிசிராந்தையாரைப் பாராட்டுகிறான். இத்துடன் இவன் தம் பாடல்வழி, நல்வினை செய்வதற்கு நெஞ்சத் துணிவு வேண்டும். உயர்ந்த குறிக்கோளில் மனதைச் செலுத்துவது நல்லது. நல்வினை செய்தால்

வானுலக வாழ்க்கைக் கிட்டும் என்று மனித வாழ்க்கைக்குத் தேவையான அறச்சிந்தனைகளையும் எடுத்துரைத்துள்ளான்.

**சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்**

கிள்ளி வளவன் புலவர் போற்றும் புகழ்மிக்கோனாவான். ஆலத்தூர் கிழார், ஆடுதுறை மாசாத்தனார், ஆவூர் மூலங்கிழார் முதலிய பத்துப் புலவர்கள் இவனின் பண்பு நலன்கள் குறித்துப் பாடியுள்ளனர். 'பொன்மலை சார்ந்த காகமும் பொன்னிறம் பெறும்' என்னும் தொடருக்கேற்ப பதின்மர் போற்ற அவரிடையே வாழ்ந்த கிள்ளி வளவனும் ஒரு புலவராய் விளங்கியுள்ளான். அவன் பாடியது புறம் 173 மட்டுமேயாகும். வள்ளல் ஒருவனை அவனைப் போன்ற பிறிதோர் பெருவள்ளல் பாராட்டுவதே உண்மைச் சிறப்பாம். அத்தகைய பெருஞ்சிறப்புடைய சிறுகிழான் பண்ணனின் கொடைத்திறனைப் பெருங்கொடை வள்ளலாகிய கிள்ளிவளவன் பாராட்டுவதனை

**"பசிப்பிணி மருத்துவன் இல்லம்**
**அணித்தோ? சேய்த்தோ? கூறுமின் எமக்கே"**

என்று பாடியுள்ளதை நோக்கும் பொழுது தன்னை ஒத்தவனை தன்னினும் மிக்கோனைப் பாராட்ட வேண்டும் என்னும் சிந்தனையைத் தூண்டுகிறது.

சோழன் நலங்கிள்ளி புகாரைத் தலைநகராகக் கொண்டு சோணாடு ஆண்ட அரசர்களுள் சிறந்தோன் நலங்கிள்ளி எனும் நல்லோன் ஆவான். இவனை ஆலத்தூர்கிழார் உறையூர் முதுகண்ணன் சாத்தனார், கோவூர் கிழார் ஆகிய மூவரும் பாராட்டியுள்ளனர். இவன் பகைவரை அஞ்சாது வெல்லும் ஆற்றல் உடையவன். இரப்போர்க்கு எவற்றையும் வரையாது கொடுக்கும் வள்ளல் என்று அவனுடைய குணநலன்களைப் புலவர்கள் பாடிய பாடல்கள் தெரிவிக்கின்றன. இம்மன்னன் பாடியது இரண்டு பாடல்கள் (புறம்73, 75) மட்டுமேயாகும். இவன் தம்பாடலில் அரசுரிமையைப் பெரும் போர்க்கண்டு கலங்காத பேருள்ளம் உடையவனே பெறவேண்டும். அரச குடியின்கண் பிறந்த முன்னோர் பெறக்கூடாது என்பதனை,

"மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தெனப்
பால்தர வந்த பழ விறல் தாயம்
எய்தினமாயின் எய்தினம் சிறப்பு எனக்

குடிபுரவு இரக்கும் கூரில் ஆண்மைச்
சிறியோன் பெறின், அது சிறந்தன்று மன்னே
மண்டமர்ப் பரிக்கும் மதனுடை நோன்தாள்
விழுமியோன் பெறுகுவாயின்"

என்ற பாடல் வரிகள் விளக்கும்.

சோழன் நல்லுருத்திரன்:

இச்சோழனின் பெயர் 'நல்லுத்தரன்', 'நல்லுருத்திரன்', 'உருத்திரன்' என பிரதிகளில் வேறுபட்டுள்ளதை அறியமுடிகிறது. இவன் கலித்தொகையில் முல்லைக் கலியையும், புறத்தில் 190-வது பாடலையும் பாடியுள்ளான். 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்னும் தொடருக்கேற்ப முயற்சிடையவனே வாழ்வில் வெற்றி பெறுவான் என்பதைத் தம் பாடலில் வலியுறுத்தியுள்ளான். எலி போன்று முயற்சி இல்லாதவரிடம் நட்புக் கூடாது, புலிபோன்று முயற்சி கொண்டவரிடம் நட்புக் கொள்ள வேண்டும் என்று கூறுவதனை,

புலி பசித்தன்ன மெலிவில் உள்ளத்து
உரனுடையாளர் கேண்மையொடு
இயைந்த வைகல் உளவாகியரோ"7
என்னும் புறப்பாடல் விளக்கும்.

மாவளத்தான்

புலவர் போற்றும் பெருமகனாய் விளங்கிய நலங்கிள்ளியின் தம்பி மாவளத்தானும் ஒரு புலவன். புலவர்களோடு கலந்து பழகும் பண்பு உடையவன். இவன் குறுந்தொகையில் 348-வது பாடலைப் பாடியுள்ளான்.

வீரை வெளியன் தித்தன்:

சங்க காலத்தில் உறையூரிலிருந்து ஆட்சி புரிந்த சோழவேந்தருள் முதல்வனாகக் கருதத்தக்கவன் தித்தன் ஆவான். இவன் அகப்பாடல் மற்றும் புறப்பாடல்களில் பேசப்படுகிறான். போர்வன்மை, கைவண்மைகளோடு சிறப்பு வாய்ந்தவனாகக் காணப்படுகிறான். இம்மன்னன் ஆட்சி புரிந்த உறந்தை நகரத்தின் சிறப்பை,

"மாவண் தித்தன் வெண்ணெல் வேலி உறந்தையன்ன வுரை சால்"

என்று புறப்பாடல் விளக்குகின்றது. இவன் பாடியது அகம்- 188வது பாடலாகும். இவன் மழையைப் போன்ற கொடை நலம் உடையவன் என்பதை,
"மழைவளம் தரூஉம் மாவண்தித்தன்" என்று அகநானூற்றுத் தொடர் விளக்கும்.

சங்ககால சோழஅரசர்கள், நல்லாட்சி செய்ததோடு நல்ல புலமை வாய்ந்தவராகவும் காணப்பட்டுள்ளனர். அவர்தம் பாடல்கள் வழி சமுதாயத்திற்குத் தேவையான உயரிய அறக்கருத்துக்களை எடுத்துக் கூறியுள்ளதை நோக்கும் பொழுது அத்தகு கருத்துக்கள் இக்கால மனித வாழ்வியலுக்கு நல்ல அடிப்படை ஆதாரமாக விளங்குவதை உய்த்துணர முடிகிறது.

பயன்பட்ட ஆதாரங்கள்;

1. சோழ மண்டல சதகம், ப.8
2. திருக்குறள், 782
3. புறம், 215 : 8-9
4. மேலது. 216 : 8-10
5. மேலது. 173 : 11-12
6. மேலது. 75 : 1 – 7
7. மேலது. 190 : 10- 12
8. மேலது. 352 : 9 -10
9. அகம். 6 : 4.

ப.செந்தில்குமாரி
முனைவர் பட்ட ஆய்வாளர்,
அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி)
கும்பகோணம்

படத்திற்கு நன்றி :

http://www.thinakaran.lk/vaaramanjari/2009/08/02/?fn=k0908021